


KOVILOOR ANDAVAR MADALAYAM

KOVILOOR ANDAVAR MADALAYAM

KOVILOOR MUTT
Koviloor - 630 307
Near Karaikudi
Sivagangai Dist. Tamil Nadu

© Kalakshetra Publications
84, Kalakshetra Road
Thiruvanmiyur
Chennai - 600 041

2008 MAY

Designed by
Koviloor Swamigal

24-6


பொருளடக்கம்

1. எறும்பூர் – ஸ்ரீ தத்துவராய சுவாமிகள் மடாலயம்
2. பொருள்வைத்தசேரி – உகந்தலிங்க சுவாமிகள் மடாலயம்
3. கோவிலூர் – முக்திராமலிங்க ஆண்டவர் மடாலயம்

    கோயில்
    மடாலயம் (ஆதீனம்)

4. திருவண்ணாமலை – ஈசான்ய மடாலயம்
5. மதுரை – குட்டைய சுவாமி மடாலயம்
6. சிதம்பரம் – பொன்னம்பல சுவாமிகள் மடாலயம்
7. திருக்களர் – திருக்களர் ஆண்டவர் மடாலயம் (கோ.ஆ.வீர. மடாலயம்)
8. வளவனூர் – ஸ்ரீமத் சண்முக சுவாமிகள் மடாலயம்
9. மேட்டுப்பாளையம் – ஸ்ரீமத் நாராயண சுவாமிகள் மடாலயம்
10. மானாமதுரை – ஸ்ரீமத் நாராயண சுவாமிகள் மடாலயம்
11. திருப்புவனம் – ஸ்ரீமத் காசிகாநந்த சுவாமிகள் மடாலயம்
12. காளையார் கோவில் – செல்லப்ப சுவாமிகள் மடாலயம்
13. மதுரை – பிரம்மானந்த சுவாமி மடாலயம்
14. சென்னை – வீர. சுப்பைய சுவாமி மடாலயம்
15. சாக்கோட்டை (புதுவயல்) – வீரப்ப சுவாமி மடாலயம்
16. கர்நாடகம் மூன்று மடங்கள் –
17. மேற்கு மாம்பலம் கோவிலூர் மடாலயம் – சென்னை
18. ரிஷிகேஷ் – கோவிலூர் வேதாந்த மடாலயம்
19. யு.எஸ்.ஏ. – நியூயார்க் மடாலயம்

24-6



கோவிலூர் சுவாமிகள் ஹவாய் தீவில் இறைவன் கோவில் லிங்கத்திற்கு
தன் கையால் அபிஷேகம் செய்கிறார்கள்

தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் ஆதீனத்தின் வேதாந்தப் பரம்பரையில் பன்னிரெண்டாவது பட்டத்தில் அருளாட்சி செலுத்தும் தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் உலக வரைபடத்தில் கோவிலூருக்கு உயர்ந்த இடத்தைப் பெற்றுத்தந்த உத்தமராவார்கள். வேதாந்தத்தை யாவருக்கும் பொதுவுடைமையாக்கிய புதுமைச் சித்தரான கோவிலூர் ஆண்டவரின் மகன் வழியில் ஆறாவது தலைமுறைப் பேரனான நாச்சியப்ப சுவாமிகள் உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய பெருமான் புகழை உலகெலாம் பரப்பும் உறுதிபூண்டவர், வேகமும் விவேகமும் கொண்ட சுவாமிகள் வாழ்க்கை வியக்கத்தக்க நிகழ்ச்சிகளின் தொகுப்பாக விளங்குகிறது.

காரைக்குடிக்கு அருகில் உள்ள மானகிரி என்ற சிற்றூரில் 29–5–1923 இல் கோவிலூர் ஆண்டவரின் குடும்பத்தில் மகன் வழியில் ஆறாவது தலைமுறையில் பேரனாகத் தோன்றினார் நாச்சியப்பர். மானகிரியில் திண்ணைப் பள்ளிக்கூடத்திலும் காரைக்குடியில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப்பள்ளியிலும் கல்வி கற்றார். அடையாறு பெசன்ட் நினைவு பள்ளியில் படித்துப் பள்ளி இறுதித் தேர்வை முடித்து. மாநிலக் கல்லூரியில் இன்டர்மீடியட் படிப்பை முடித்தார். அப்பொழுது கிடைத்த அறிவியல் அறிவு அவர் வாழ்க்கை சிறக்க உதவி செய்தது. உலகம் போற்றும் கலாக்ஷேத்ரா நிறுவனத்தை 1936ல் தொடங்கி நடனக் கலைக்கும் இசைக்கலைக்கும் பெருந்தொண்டாற்றிப் பாரத நாட்டின் கலை வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற அன்னை ருக்மிணி அருண்டேல் அவர்களின் பேராதரவால் சென்னையில் பள்ளிப் படிப்பையும் கல்லூரிப் படிப்பையும் பெற்ற நாச்சியப்பர் மேலைநாடுகளுக்குச் சென்று கற்று அச்சுக்கலையிலும் நிழற்படக் கலையிலும் நிகரற்றவரானார். 1957இல் நியூயார்க்கில் நிழற்படக் கலையைக் கற்று 1963இல் உலகப் புகழ்பெற்ற கோடாக் கம்பெனியில் பணியாற்றினார். ஜெர்மனியிலும் லண்டனிலும் நிழற்பட நுட்பங்களைக் கற்றார். லண்டன், நியூயார்க், டெட்ராய்ட் ஆகிய நகரங்களில் மேடைக்கலை – அரங்க ஒளியமைப்பு ஆகியவை கற்றுத் தேர்ந்தார்.

1944இல் கலாக்ஷேத்ராவில் தம்மை வளர்த்த ருக்மிணி அருண்டேல் அம்மையாரிடம் நேர்முக உதவியாளராகச் சேர்ந்தார். 1946இல் கலாக்ஷேத்ரா பதிப்பகம் தொடங்கி மரியா மாண்டிசோரி அம்மையாரின் குழந்தைக் கல்வித் திட்டத்துக்கான புத்தகங்களை வெளியிடத் தொடங்கினார். 1947இல் கலாக்ஷேத்ராவில் அரங்கநிர்வாகப் பொறுப்பேற்றார். ஒளியமைப்பில் புதுமை செய்து புகழ்பெற்றார். 1953இல் தம்முடைய 30வது வயதில் வண்ணப் புகைப்படங்கள் சம்பந்தப்பட்ட பெரிய சோதனைச்சாலையை உருவாக்கிப் புகைப்படக் கலையின் மூலம் விளம்பரக் கலையும் வளர உதவினார். 1955 முதல் 1972 முடிய கலாக்ஷேத்ராவின் நிர்வாகக் குழுவில் பெரும்பணி ஆற்றினார். குவாலியரில் குற்றாலக் குறவஞ்சி நாட்டிய நாடகம், தில்லியில் குமாரசம்பவம், அயல்நாடுகளில் பரதநாட்டியம் என்று உலகம் முழுவதும் கலைப்பணியாற்றச் சென்ற ருக்மிணி அருண்டேல் அவர்கள் குழுவுடன் மேடை நிர்வாகியாகவும், பயண அமைப்பாளராகவும், ஒளியமைப்பு வல்லுநராகவும் சென்று பணியாற்றினார். கிழக்கு ஐரோப்பா, இந்தோனேஷியா, காம்போடியா, ஜாவா, பெல்ஜியம், இத்தாலி, சுவிட்சர்லாந்து, ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின் என்று உலகநாடுகளில் இவர் கால்படாத இடமில்லை என்று கூறுமாறு கலாக்ஷேத்ராப் பணிசெய்தார். 1979 முதல் 1984 முடிய நியூயார்க்கில், அச்சுக்கலை நிழற்படக்கலை ஆகியவற்றில் வல்லுநர்களாகத் திகழ்ந்த திறமையாளர்களுடன் இணைந்து பணியாற்றி உலகப் புகழ்பெற்றார். கலாக்ஷேத்ராவின் மதிப்பு மிக்க தூண்களில் குறிப்பிடத்தக்கவராக விளங்கி, அங்கே மாணவராகவும், உதவியாளராகவும், கலைஞராகவும், அச்சக உரிமையாளராகவும், மேடை நிர்வாகியாகவும், அறக்கட்டளைச் செயலாளராகவும், ஒல்லும்வாறெல்லாம் அறவினை ஓவாது சொல்லும் வாயெல்லாம் செயவல்லவராகத் திகழ்ந்து, அந்த நிறுவனத்தில் புகழ்க்கொடி பட்டொளி வீசிப்பறக்கச் செய்தார்.

இவ்வாறு சேர்த்த திறமையும் அதிகம், சேர்ந்த செல்வமும் அதிகம், தேடிவந்த புகழும் அதிகம் என்று வாழ்ந்து வந்த சித. நாச்சியப்பரை தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிகராக்கிக் கோவிலூர் ஆதீனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று அன்னை திருநெல்லையம்மை திருவுள்ளம் கொண்டாள். இது இவருடைய வாழ்க்கையின் இரண்டாம் பாகம். பொன்னைக் கொடுத்த இறைவன் மெய்ப்பொருளும் கொடுக்க நினைத்தான். இந்த ஞான வாழ்க்கைக்குப் பன்றிமலை சுவாமிகள் குறிப்புக் காட்டினார்.

1975.ஆம் ஆண்டில் ஆன்மிகச் செல்வர் டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள் நாச்சியப்பரைக் காஞ்சி மாமுனிவரிடம் அறிமுகப்படுத்தினார். காஞ்சி முனிவர் "நீ நகரத்தார் இல்லையோ! கோவிலூரார் குடும்பம் என்கிறாய். கோவிலூர் மடத்துடன் சம்பந்தம் வைத்துக்கொள்" என்றார். அந்த வாக்கு இருபதாண்டுகளில் பலித்தது.

கல்கியின் திருமகளார் ஆனந்தி ராமச்சந்திரன் அவர்கள் கூறியதுபோல விதி மாற்றியமைக்கப்பட்டுவிட்டது. கோபாலகிருஷ்ண பாரதி பாடிய படி

விதியின் எழுத்தைக் கிழித்தாச்சு – முன்னம்

விட்ட குறை வந்து தொட்டாச்சு

அன்று நந்தனுக்கு நடந்தது இன்று நாச்சியப்பருக்கு நடந்துவிட்டது. அதனால் தானே நாச்சியப்ப சுவாமிகள் அமெரிக்காவில் நடராசருக்குக் கோயில் கட்ட எண்ணினார்?

மக்கள் பிணிதீர்க்கும் இயற்கை மருத்துவராகவும் சிலகாலம் பணியாற்றிய நாச்சியப்பர் மனப்பிணி தீர்க்கும் மருத்துவரானார்.

ஆண்டவர் மரபில் பிறந்த புண்ணியத்தால் மீண்டும் பிரம்ம சபையில் ஆண்டவரே வந்து உட்கார்ந்து விட்டார்.

1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் நாள் சிதம்பர செட்டியார் சீதாலெட்சுமி ஆச்சியின் திருமகன், ஆண்டவரின் அருட்பேரனாக, வேதாந்த பீடத்தில் வித்தகத் தலைமையேற்று தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிகராக, மக்கள் போற்ற மனத்துறவும் தவத்துறவும் கொண்டார். கோவிலூர் மடத்தின் பொற்காலம் கொற்றவாளீசரால் எழுதப்பட்டு விட்டது.

"எதிலும் விருப்பமின்றி எவரிடத்தும் பகையில்லாமல், சமநோக்குடன் இருந்துவரும் மகாத்மாவின் பின்னே, அவருடைய பாதத்தின் தூசி என்மீது விழுந்து நான் உய்யமாட்டேனா என்று ஆவலில் நான் போய்க்கொண்டிருக்கிறேன்" என்று பாகவதத்தில் கண்ணன் கூறியபடி பாரதநாட்டுக்கு இன்னொரு துறவு – தமிழகத்துக்கு ஒரு விவேகானந்தர் – கிடைத்துவிட்டார் சனாதன தர்ம உலகப் பல்கலைக் கழகம் தமிழகத்தில் நிறுவப்பட வேண்டும் என்று இறைவன் தீர்மானித்துவிட்டான். கோவிலூர் ஆண்டவர் நிகர்நிலைப் பல்கலைக் கழகம் (Koviloor Andavar Deemed University) தமிழகக் கோயிற்கலைகளையும் பண்பாட்டையும் சிவநெறியையும் செந்தமிழையும் வளர்க்கும் வகையில் தோன்ற இருக்கிறது.

இவர்கள் ஆற்றிவரும் பணிகள் விளக்கமாக எழுதப்பட்டுள்ளன.

கோவிலூர் ஆதீனம் குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் நாச்சியப்ப ஞானதேசிகர் தெளிவான சிந்தனை யோடும் தொலைநோக்குடனும் திடடங்களை வகுத்துச் செய்துவருகிறார்கள்

தாம் பட்டத்திற்கு வந்ததும் முதற் காரியமாக, குழந்தைகள் பள்ளி தொடங்கினார்கள். சிறு வயது முதலே குழந்தைகள் நல்ல கல்வி கற்க வேண்டும். குழந்தைகளே சமுதாயத்தின் பெருமைக்குரிய சொத்து – மூலதனம் – தூண்கள் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கையும் குழந்தைகள் பால் பேரன்பும் கொண்டவர்கள். ஆதலால் கல்விப் பணியைத் தலையாய பணியாகக் கருதுகிறார்கள். ஆகவேதான் இளைஞர்கள் உயர்கல்விபெற்று உயர்ந்தால் சமூகமும் தானாக உயர்ந்து நன்னிலை அடையும் என்பதனால் பெரும் தொகை ஒதுக்கி உதவுகிறார்கள்.

எந்த நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் அது சார்ந்து நிற்கும் மரபுகளும் கோவில்களும்தான் அடிப்படை. எல்லா அறங்களும் கலைகளும் கோவிலிற்தான் நடத்தப்பட்டன. எனவே கோவிலைக் காப்பாற்ற வேண்டும். அதுசார்ந்த கலைகளைக் காப்பாற்றவேண்டும். கோவில்கள் நடைபெற வேண்டும் எனில் அதற்குரிய சிப்பந்திகளும் சடங்குகளை நிறைவேற்றுகிற கலைஞர்களும் தேவை என்பதால். நசிந்து வரும் அனைத்துக் கலைகட்கும் புத்துயிர் ஊட்டி வளர்ப்பதற்காகவே கோவிலூரில் கலைகளுக்கான கல்லூரிகள், பெரும் பொருட்செலவில் நடத்திவருகிறார்கள். அவற்றை ஒருங்கிணைத்து ஒரு பல்கலைக்கழகமாக நிறுவவேண்டும் என்ற கனவும் சாமிகட்கு உண்டு. அது நிறைவேறும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

உணவின்றி யாரும் துயர்படக்கூடாது என்ற மனித நேய உள்ளத்தால் ஆதரவில்லாத அனைவர்க்கும் உதவி வருகிறார்கள். நமது பெண்கள் திருமணம் ஆகாமல் இருந்தால் சமுதாயமே நசிந்துவிடும் என்ற உணர்வால் பெண்கள் திருமணத்திற்கு தாராளமாக உதவுகிறார்கள்.

கோவிலூர் சார்ந்த எல்லா மடங்களும் தற்சார்புடையதாக, சொந்தக்காலில் நிற்கக்கூடியதாக காலகாலத்திற்கும் வளர்ந்து உயரக்கூடிய நிலையில் இருக்கவேண்டும் என்ற உறுதியான எண்ணத்தினால் எல்லா மடங்களிலும் திருமணமண்டபமோ, கடைகளோ கட்டி நிரந்தர வருவாய்க்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

எல்லா மடங்கட்கும் வருகின்ற அன்பர்கள் தங்கித் தரிசிக்கவும், உணவு உண்ணவும் வசதியான தங்கும் அறைகள் கட்டி எல்லா மடங்களிலும் அன்னதானம் நடைபெறவும் ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

மடத்தைச் சார்ந்த, மடத்தின் பொறுப்பில் உள்ள கோவில்கள், அதிஷ்டானங்கள் யாவற்றையும் ஒவ்வொன்றாகச் செப்பனிட்டு புதிய மெருகுடன் வசதிகளையும் கூட்டிக் கும்பாபிஷேகங்கள் செய்து வருகிறார்கள். ஒவ்வொரு கோவிலும் பனிரெண்டு ஆண்டுகட்கு ஒருமுறை பழுது நீக்கவும் கும்பாபிஷேகங்கள் நடத்தவும் வேண்டுமென அருள் ஆணை இட்டுள்ளார்கள்.

கோவிலூரை ஒரு கல்வி நகரமாக ஆக்கப் பெரிதும் விருப்பம் கொண்டுள்ளார்கள். செய்யும் எதனையும் செம்மையாகச் செய்யவேண்டும் என்பதில் மிக உறுதியாக உள்ளவர்கள் ஆதலால், தரமான கல்வி தந்து இளைஞர்கட்கு ஏற்றம் தரவேண்டும் என்பதில் மிகவும் குறியாக உள்ளார்கள். அவர்கள் கனவுகள் மிகவும் பெரியவை, சிறந்தவை. அவையாவும் நிறைவேற ஆண்டவர் அருள்பாலிக்க வேண்டும்.

சீர் வளர் சீர் நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் பொருள் உதவியால் நடைபெற்று வரும் பணிகள் தொடர்ந்து தரப்பட்டுள்ளன.

கோயிற் திருப்பணிகள்

குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் பட்டத்திற்கு வந்தபின் அவர்களுடைய பொருள் உதவியாலும் அருள் ஆசியாலும் ஏராளமான அறப்பணிகள் எல்லாத்துறைகளிலும் செய்யப்பட்டுள்ளன.

அவற்றுள் முதலிற் கோயிற் திருப்பணிகளைப் பார்ப்போம்.

திருவண்ணாமலை – ஈசான்ய மடம்

1. 1997 ஆம் ஆண்டு டிசம்பர் 4ம் தேதி திருவண்ணாமலை – ஈசான்ய மடத்தில் உள்ள ஈசான்ய ஞானதேசிக சுவாமிகளின் ஜீவ சமாதியைப் பழுதுநீக்கி வண்ணமுறப் புதுப்பித்து குடமுழுக்கு விழா நடைபெற்றது. தற்போது ஈசான்ய ஞானதேசிகரின் சமாதி முன்னுள்ள முன்மண்டபத்தை கான்கிரிட் தளம் அமைத்து (தற்போது ஆஸ்பெஸ்டாஸ் கூரை உள்ளது) 2008–2009இல் மறு கும்பாபிஷேகம் நடத்துமாறு அருள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

பொருள்வைத்த சேரி – கோவிலூர் ஆதீனம் [கோ. ஆ. பொ. மடம்]

2. பொருள்வைத்தசேரி மடம் (கோ. ஆ. பொ. மடம்) 2002ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் தேதி அருள்மிகு சௌந்தரவல்லி உடனாய சுவர்ணபுரீஸ்வரர் திருக்கோயில் ஏறக்குறைய ரூபாய் பதினைந்துலட்சம் செலவில் திருப்பணி செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

3. அதே நன்னாளில் ஸ்ரீமத் உகந்தலிங்க ஞானதேசிக சுவாமிகளின் திருக்கோயிற் திருப்பணி செய்யப்பெற்றது. புதிய முன்மண்டபமும் கட்டப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருக்களர் – கோவிலூர் ஆதீனம், வீரசேகர ஞான தேசிகர் மடாலயம் [கோ.ஆ.வீர. மடம்]

4. திருக்களர் மடத்தின் பொறுப்பில் இருப்பதும், நம்முடைய கிராமமுமான மருதவனம் அருள்மிகு பாலாம்பாள் உடனாய மருதவனேஸ்வரர் திருக்கோவில் ஏறக்குறைய பத்து லட்சம் ரூபாய் செலவில் திருப்பணி செய்யப்பெற்றுப் புதிய துர்க்கை சந்நிதியும் உருவாக்கப்பெற்று 26.1.2004இல் கும்பாபிஷேகம் மிக விமரிசையாக நடைபெற்றது.

5. 2004 மே மாதம் 24ம் தேதி கோவிலூர் ஆதீனம் ஐந்தாவது பட்டம் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளின் அதிஷ்டானக் கோவில் சுமார் 5 லட்சம் செலவில் திருப்பணி செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

கோ. ஆ. (பொன்னம்பல அவர்)

சிதம்பரம் – கோவிலூர் ஆதீனம் சிதம்பர சுவாமி மடம் [கோ.சித.மடம்]

6. 2005ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் தேதி ஆறு லட்சம் செலவில் திருப்பணி செய்யப்பெற்றுச் சுவர்ச் சித்திரங்கள் புதிப்பிக்கப்பெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மேட்டுப்பாளையம் சபாபதி சுவாமிகள் மடம்

7. திருவண்ணாமலைக்கருகில் உள்ள மேட்டுப் பாளையத்தில் ஸ்ரீமத் சபாபதி சுவாமிகளின் அதிஷ்டானம் திருப்பணி செய்யப்பெற்று முன்மண்டபம் கான்கிரிட் கட்டிடமாகக் கட்டப்பெற்று – 8.6.2006 அன்று கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

எறும்பூர்
[கோ.சித. மடம்]

8. ஸ்ரீமத் தத்துவராய சுவாமிகளின் அதிஷ்டானம் மீண்டும் முழுக்கக் கற்திருப்பணியாக ஏறக்குறைய 28 லட்சம் செலவில் புதிய இராஜ கோபுரத்துடன் திருப்பணி செய்யப்பெற்று 4–5–2007 அன்று மிக விமரிசையாக பூஜ்யஸ்ரீ சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் முன்னிலையில் நம் குருமகா சந்நிதானம் தலைமையில் சிதம்பரம் தீட்சிதர்களால் கும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றது.

ஸ்ரீமத் தத்துவராய சுவாமிகளின் வேதாந்த நூல்களின் பெருமை, முக்கியத்துவம் கருதி வேதாந்த சொற்பொழிவு, இன்னிசைக் கச்சேரிகளுடன் மிக மிக விமரிசையாக கும்பாபிஷேகம் நடத்தப்பெற்றது.

தற்சமயம் நடைபெற்று வரும் திருப்பணிகள்

1. திருஞான சம்பந்தர் பாடல் பெற்ற திருத்தலமான, திருக்களர் கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு அமிர்தவல்லி உடனாய பாரிஜாதவனேஸ்வரர் திருக்கோவிற் – திருப்பணி நடந்துவருகிறது. நம் சுவாமிகளின் பொருள் உதவியால் பெரும்பாலான திருப்பணிகளும், கோயம்புத்தூர் திருப்பணிச் செல்வர் உயர்திரு வசந்த குமார் பொருள் உதவியால் ராஜகோபுரத்திருப்பணியும், இந்து சமய அறநிலைத்துறை சார்பாக சில திருப்பணிகளும் நடைபெற்று வருகின்றன சர்வதாரி வரும் ஆண்டு ஆனிமாதம் 30ஆம் தேதிக்கு 2008ம் ஆண்டு ஜூலை மாதம் 14ம் தேதி, குட நீராட்டு விழா விற்குத் தேதி குறித்துள்ளது.

2. திருக்களர் பாரிஜாத வனேஸ்வரர் திருக்கோவிலுக்குப் புதிய திருத்தேர் ஒன்று இந்து சமய அறநிலைத் துறையின் பொருள் உதவியுடனும் நம் சுவாமிகளின் பொருள் உதவியுடனும் செய்யப்பட்டு வருகின்றது.

3 வளவனூர் சண்முக சுவாமி மடத்தை சீரமைத்து செய்து புதுபிக்க வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

அடுத்து வரும் உடனடித் திருப்பணிகள்

1. வரும் ஆண்டு ஆவணி மாதம் கோவிலூரில் அருள்பாலித்து வரும் அருள்மிகு திருநெல்லை அம்மன் உடனாய கொற்றவாளீசர் திருக்கோவில் கும்பாபிஷேகத் திருப்பணி தொடங்கப்பெறும்.

2. திருவண்ணாமலை ஈசான்ய ஞானதேசிகர் அதிஷ்டான முன்மண்டபத்தை கான்கிரீட் தளமாக மாற்றி அமைத்துக் கும்பாபிஷேகம் செய்வதற்கான வேலைகள் வரும் வைகாசி மாதம் தொடங்கப்பெறும்.

கல்விப் பணிகள்

தற்போது நடந்துவரும் கல்வி நிலையங்கள்

1. ஸ்ரீ முக்திராமலிங்க ஆண்டவர் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி

2. திருமுறைக் கல்லூரி

3. வேத ஆகமக் கல்லூரி:

(கோவிலூரில் நடைபெறும் வேத ஆகமக் கல்லூரி தவிர, நம் குருமகா சந்நிதானம் மேலும் பதினொரு வேத ஆகமப் பள்ளிகட்கு ஏறக்குறைய 200 மாணவர்களுக்கு பொருள் உதவி செய்து வருகிறார்கள்.)

4. நாதஸ்வரக் கல்லூரி

5. தவில் கல்லூரி

6. கோவில் நிர்மாணம் மற்றும் சிற்பக் கல்லூரி

7. பஞ்ச லோகக் கல்லூரி

8. தேர் வாகனக் கல்லூரி

9. 2007 ம் ஆண்டு முதல் – கோவிலூர் ஆண்டவர் உடற்பயிற்சிக் கல்வியியற் கல்லூரி தொடங்கப்பெற்றுள்ளது.

அடுத்த திட்டங்கள்

1. சித்த மருத்துவக் கல்லூரி

2. கலை – அறிவியற் கல்லூரி

3 மருத்துவம் / மருந்தியல் சார்ந்த கல்விகள்

கோவிலூர் திருமடத்தின் ஆதரவுடன் நடைபெற்றுவரும் மாண்டிசோரிப் பள்ளிகள்

1. மாதிரி மாண்டிசோரிப் பள்ளி – சென்னை

2. முக்தி ராமலிங்க ஆண்டவர் மாண்டிசோரி – கோவிலூர்

3. கம்பன் அறநிலை–மாண்டிசோரி – காரைக்குடி

4. கோவிலூர் ஆண்டவர் மாண்டிசோரி – ரிஷிகேஷ்

5. வள்ளியம்மை ஆச்சி டிரஸ்ட்–மாண்டிசோரி – புதுவயல்

6. வள்ளியம்மை ஆச்சி டிரஸ்ட்–மாண்டிசோரி – புதுவயல்

7. என். எஸ். எம். வி. பி. எஸ். –மாண்டிசோரி – தேவகோட்டை

8. கோவிலூர் ஆண்டவர் மாண்டிசோரி – அரியக்குடி

சமுதாயப் பணிகள்

கோவிலூர் ஆதீனம் குருமகா சந்நிதானம் சீர்வளர் சீர் நாச்சியப்ப ஞான தேசிகர் அவர்களின் பொருள் உதவியுடன் நடந்துவரும் சமுதாய அறப்பணிகள்

1. கடந்த பனிரெண்டு ஆண்டுகளாக ஆதரவற்ற முதியோர்க்கு உதவித்தொகையாக மாதம் ரூ.250/– வழங்கிவருகிறார்கள். தற்போது ஏறக்குறை 650 முதியோர்கள் பயன் பெறுகிறார்கள். தொகை ரூ. 350 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும் இதனை 1000 நபர்கள் வரை வழங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள்.

2. கடந்த பனிரெண்டு ஆண்டுகளாக, கோவில் சார்ந்த கலைகள் கற்கும் மாணவர்கள் 150பேருக்கு உண்டி உடை உறையுள் தந்து இலவசக் கல்வியும் தந்து உதவுகிறார்கள்.

3. நம் திருமடங்களில் ஏறக்குறைய 50 மாணவர்கள் தங்கிப் பள்ளிகட்கு சென்று படித்து வருகிறார்கள்.

4. கடந்த ஆறு ஆண்டுகளாக, ஆண்டு ஒன்றிற்கு ஏறக்குறைய அறுபது லெட்சம் ரூபாய் வரையில் மாணவர்களின் மேற்படிப்பிற்காக திருப்பித்தரும் வட்டியில்லாக் கடன் உதவி செய்து வருகிறார்கள். இதுவரை மூவாயிரத்திற்கும் மேலான மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

5. ஆறு ஆண்டுகளாக ஆண்டிற்கு 300 க்கும் மேலான ஏழைப்பெண்கள் திருமணத்திற்கு ரூ. 5000/– வீதம் உதவி வருகிறார்கள்.

குருமகா சந்நிதானம் சீர்வளர் சீர் நாச்சிப்ப ஞான தேசிக சுவாமிகள் அருள் ஆசியாலும் பொருள் உதவியாலும் நடந்துள்ள கட்டிடப்பணிகளின் விபரம்

1999	–	திருவண்ணாமலையில் ஆறு அறைகளும் – 60 பேர் தங்கக்கூடிய ஒருபெரிய ஹாலும்கொண்ட விருந்தினர் மாளிகை. (15 லட்சம்)
2001	–	அக்டோபர் மாதம்: கோவிலூர் – 18 அறைகள் கொண்ட விருந்தினர் மாளிகை (32 லட்சம்)
	–	தியான மண்டபம் + மேல்தளத்தில் உள்ள இரு சிறப்பு விருந்தினர் அறைகள் (6 லட்சம்)
	–	16 வீடுகள் கொண்ட சிப்பந்திகள் குடியிருப்பு (19 லட்சம்)
2002 ஏப்ரல்	–	கிழக்குரத வீதியில் இரண்டு ஹால்கள் (தற்போது உடற்பயிற்சிக் கல்லூரியின் உடற்பயிற்சித்தளமும் (Multi Gym) நூலகமும் – சிற்பக் கல்லூரியும் உள்ளன) (30 லட்சம்)
2002 மே	–	கோவிலூர் ஆண்டவர் திருமண மண்டபம் (65 லட்சம்)
2002 அக்டோபர்	–	கோவிலூர் வடக்கு ரதவீதியில் 2 ஹால்கள் (தற்போது உடற்பயிற்சிக்கல்லூரியின் ஆய்வுக் கூடங்களும். கேட்டரிங் கல்லூரியும் உள்ளன. (Cattering College) (35 லட்சம்)
2003 ஏப்ரல்	–	கோவிலூர் கிழக்குரத வீதியில் தற்போது கோவிலூர் ஆண்டவர் உடற்பயிற்சிக் கல்லூரி உள்ள கட்டிடம் (22 லட்சம்)
2003 ஜூன்	–	சிதம்பரம் கல்யாண மண்டப உணவு மண்டபம் (29லட்சம்)
2003 அக்டோபர்	–	கோவிலூர் மேற்கு ரத வீதியில் உள்ள 2 ஹால்கள் (தற்போது ஸ்ரீலஸ்ரீ முக்திராமலிங்க ஆண்டவர் பள்ளி உள்ளது) (35 லட்சம்)
2004 ஏப்ரல்	–	கோவிலூர் முதன்மை சாலையில் இருந்து கோவிலைச் சுற்றி கான்கிரீட் சாலை (18 லட்சம்)
2004 மே	–	திருக்களர் மடம் – (6 அறைகள், 4 சிறிய ஹால்கள், உணவு மண்டபம் போன்ற வசதிகளுடன் புதிதாகக் கட்டித் திறக்கப்பட்டது) (45 லட்சம்)
2004	–	திருவண்ணாமலையில் 8 கடைகள் (6 லட்சம்)
2005 ஏப்ரல்	–	சிதம்பரம் பொன்னம்பல சாமி திருமண மண்டபம் உணவுச் சாலைக்கு மேல் 12 அறைகளும் + 30 பேர் தங்கக்கூடிய ஒரு ஹாலும் கட்டப்பெற்றது. (30 லட்சம்)

கோவிலூர் ஆண்டவர் உடற்பயிற்சிக் கல்லூரி

2007 ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் கோவிலூர் ஆண்டவர் உடற்பயிற்சிக் கல்லூரி கோவிலூரில், தேவையான அனைத்து அரசு + பல்கலைக்கழக அனுமதிகளுடன் தொடங்கப்பெற்று நடந்து வருகிறது. இது தற்போதுள்ள கட்டிடங்களில் நடைபெற்று வருகிறது. 12.5 ஏக்கர் பரப்பளவில் இதற்கான விளையாட்டுத் திடல்களும் ஓடு களமும் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளன.

முனைவர் ஏ. எம் மூர்த்தியை (முன்னாள் கல்வித்துறைத் தலைவர், அழகப்பா பல்கலைக்கழகம்) முதல்வராகக் கொண்டு ஐந்து ஆசிரியர்களுடன் முப்பத்துதொரு மாணவர்களுடனும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

தேவையான அனைத்து ஆய்வுக்கருவிகளும், உபகரணங்களும், நூலகமும் அமைக்கப் பெற்றுள்ளன.

2007ம் ஆண்டு டிசம்பர் 15, 16ம் தேதிகளில் தமிழ்நாடு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டியற் பல்கலைக் கழகத்தின் சார்பில் கல்லூரிகட்கு இடையேயான தடகள போட்டி கோவிலூரில் நடைபெற்றது.

குருமகா சந்நிதானம் தலைமை ஏற்க அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. முனைவர் பி. இராமசாமி அவர்கள் போட்டிகளைத் துவக்கிவைத்தார்கள். தமிழகத்தில் உள்ள பதினொரு உடற்பயிற்சிக் கல்லூரிகளில் இருந்து ஏறக்குறைய இருநூறு மாணவ மாணவிகள் கலந்து கொண்டு திறமையை வெளிப்படுத்தினார்கள்.

கல்லூரி முதல்வர் பேராசிரியர் முனைவர் மூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார். சுவாமிகள் ஆசி வழங்க, அழகப்பா பல்கலைக்கழகத் துணை வேந்தர் தொடக்க உரை நிகழ்த்தினார். 16ம் தேதி தவத்திரு சுவாமிகள் தலைமை தாங்கி ஆசி வழங்கினார்கள். தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வியற் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் பேராசிரியர் திருமலை சாமி அவர்கள் பரிசு வழங்கி வாழ்த்தினார்கள். அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் முனைவர் தண்டபாணி அவர்கள் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்திப் பேசினார்கள்.

அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தின் கல்வியியற் தலைவர் பேராசிரியர் முனைவர் வைத்தியநாதன் அவர்கள் வெற்றியாளர்களைப் பாரட்டி வாழ்த்தினார்கள். கல்லூரியின் தாளாளர் மெய்யப்பன் நன்றி கூறினார்கள்.

விழாவும் போட்டிகளும் மிகச் சிறப்பாகவும் திறமையாகவும் நடைப்பெற்றதாக எல்லாராலும் பாராட்டப்பெற்றன.

குருமகா சந்நிதானம் அவர்களின் 80 ஆண்டு நிறைவு விழா

16-5-2003 அன்று சுவாமிகளின் பிறந்த நட்சத்திரமான வைகாசி விசாக நட்சத்திரத்தன்று காலை ஆயுசு ஹோமம் கணபதி ஹோமம், நவக்ரஹசாந்தி ஹோமம் ஆகியவற்றுடன் அருள்மிகு திருநெல்லை கொற்றவாளீசர் திருமூர்த்தங்களுக்கு அபிஷேக ஆராதனையுடன் வெகு விமரிசையாக நிறைவேறி சுவாமிகட்கு புனித நீராட்டும் நடைபெற்றது. பெங்களூர் கைலாச ஆஸ்ரமம் திருச்சி மஹா சுவாமிகள், பூஜ்யஸ்ரீ ஸ்வாமி தயானந்த சரஸ்வதி ஆகியோர் வந்திருந்து சிறப்பித்தார்கள். பெங்களூர் நித்தியானந்த கிரி சுவாமிகளும் மரியாதை செய்து சுவாமியிடம் ஆசி பெற்றார்கள். ஏறக்குறைய பத்தாயிரம் அன்பர்கள் கூடி குருமகா சந்நிதானத்தின் ஆசி பெற்றார்கள். யாவர்க்கும் அன்னம் பாலிக்கப்பட்டது.

மாலை வாழ்த்தரங்கம் நடைபெற்றது. திருச்சி மஹா சுவாமிகள், பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி தயானந்த சரஸ்வதி, குன்றக்குடி அடிகளார் தவப்பெருந்திரு பொன்னம்பல சுவாமிகள், பேரூர் ஆதீனம் இளையவட்டம் மருதாசல அடிகள் ஆகியோர் குருமகா சந்நிதானம் நாச்சியப்ப சுவாமிகளின் குணநலன்களையும் செய்துவரும் பல்வேறு அறப்பணிகளையும் பாராட்டிப்பேசி வாழ்த்தினார்கள். மிகப்பெருவாரியான தமிழறிஞர்களும், சாதுக்களும பிரமுகர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

வித்வத் சதஸ் (2004)

சுவாமிகள் பட்டம் ஏற்பதற்கு முன்னரே இரண்டு பெரிய கருத்தரங்கள் – வேத ஆகமம் பற்றி நடத்தி உள்ளார்கள். பின்னர் 1996, 1998, 2000 ஆகிய ஆண்டுகளில் வேதஆகம சதஸ் நடத்தினார்கள். பட்டம் ஏற்ற பின்னர் 1997ல் சிலப்பதிகார விழாவும் 2001ல் திருக்குறள் மாநாடும் நடத்தினார்கள்.

2004 மே மாதம் நான்காவது வேத ஆகம திருமுறை சிற்ப நாதஸ்வர விதவத் சதஸ் ஒன்று கோவிலூரில் கூட்டினார்கள். தமிழகத்தின் மிகச் சிறந்த வேத விற்பன்னர்களும், தலைசிறந்த சிவாசாரியர்களும் பங்கேற்றனர். சிற்ப அரங்கத்தில் பத்மஸ்ரீ முத்தையா ஸ்தபதி, மாலைகண்டான் லெக்ஷ்மணஸ்தபதி பங்கேற்றார்கள். நாதசுவர கருத்தரங்கில் மதுரை எம்.பி. என். பொன்னுசாமி, கீழ்வேளூர் கணேசபிள்ளை, பொறையார் வேணுகோபால பிள்ளை போன்றோர் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

திருமுறை அரங்கில் சுவாமிகளின் வெளியீடான தேவார ஒலிப் பேழைகள் ஒன்பதும் – சுவாமிகள் வெளியிட மதுரை கயிலைமணி மு. கண்ணப்ப செட்டியார் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். ஒலிப்பேழைகளில் பாடியுள்ள தமிழகத்தின் தலைசிறந்த பனிரெண்டு ஓதுவார்களும் கௌரவிக்கப்பட்டார்கள்.

சுதர்ஸன ஹோமம்

2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 முதல் 11ம் நாள் வரை மூன்று நாட்கள் மஹா சுதர்ஸன ஹோமம் நடைபெற்றது. இதற்கான பட்டாச்சாரியர்கள் திருப்பதியில் இருந்து வந்திருந்தார்கள். ஸ்ரீதேவி, பூதேவியுடன் உடனாய பெருமாள் திருமூர்த்தங்களும் விஷேசமாகத் திருப்பதியில் இருந்து கொண்டுவரப்பெற்று அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

பெங்களூர் கைலாச ஆஸ்ரமம் திருச்சி மஹா சுவாமிகள் வந்திருந்து சுதர்ஸன ஹோமத்தை முன்னிருந்து நடத்தித் தந்தார்கள். மூன்று நாட்களும் பல்லாயிரக் கணக்கான அன்பர்கள் வந்து தரிசனம் செய்து திருவருள் பெற்றார்கள். மூன்று நாட்களும் அனைவர்க்கும் அன்னம் பாலிக்கப்பட்டது.

ஆயிரத்தெட்டுக் கலசாபிஷேகத்துடன் கூடிய அதிருத்ர ஹோமம்

2005ம் ஆண்டு நவம்பர் மாதம் 18 முதல் 20ம் தேதி வரை ஆறுகால பூஜையுடன் – 1008 கலசங்கள் தாபித்து, 150 சிவாசாரியார்கள் 250 மாணவர்கள் வேதமந்திரம் ஓத மூன்று நாட்கள் அதிருத்ர ஹோமம் நடைபெற்றது. பிள்ளையார்பட்டி டாக்டர் பிச்சைக் குருக்களும் மாயவரம் சபேசக்குருக்களும் தலைமைக் குருக்கள்களாக இருந்து நடத்தித் தந்தார்கள். மஹா மண்டபமாக யாகசாலை அமைந்திருந்தது கண்கொள்ளாக் காடசி. வேதாந்தத்தின் தலையாய குருவாகத் திகழ்கின்ற பூஜ்யஸ்ரீ ஸ்வாமி தயானந்த சரஸ்வதி அவர்கள், மேலை நாடுகளில் ஆன்மிகத்தைப் பரப்புகிற திருத்தொண்டை மிகச் செம்மையாகச் செய்து வருகிற ஜெர்மனி அன்னை மீரா அவர்கள், கைலாச ஆசிரமத்தின் தற்போதைய மடாதிபதி ஜெயேந்திரபுரி சுவாமிகள் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

ஹோமம் பூர்த்தியானவுடன் புனிதக்கலசங்களின் நீரால் அருள்மிகு திருநெல்லை அம்மனுக்கும் அருள்மிகு கொற்றவாளீசருக்கும் அபிஷேகம் செய்யப்பெற்றது.

எல்லா நாட்களும் பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் தரிசித்துக் குருவருளும் திருவருளும் பெற்றார்கள்.

புனித நீராட்டு நடந்து முடிந்த உடனே இதுவரை இப்பகுதி காணாத அளவில் மழை பொழிந்து விண்ணோர்கள் ஆசியினைத் தெரிவித்தது நெகிழ்வான, மறக்கமுடியாத அனுபவம்.

ஆன்மிக வேதாந்த கருத்தரங்கு

2005 நவம்பர் 20 முதல் 22 வரை அதிருத்ர ஹோமத்தைத் தொடர்ந்து ஆன்மீகக் (20–11–05 மதியம் ஹோமம் நிறைவுற்றது–மாலை முதல் கருத்தரங்கம் நடைபெற்றது), கருத்தரங்கு 22ம் தேதி மாலை வரை நடைபெற்றது. 20ம் தேதி மாலை குருமகா சந்நிதானம் அருட்தலைமையில் ஜெர்மனி மதர் மீரா அவர்கள் புதிதாகக் கட்டிய நூலகக் கட்டிடத்தில் 'கோவிலூர் ஆண்டவர் நூலகத்தைக் குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்தார்கள். தமிழ்ச்செம்மல் பேராசிரியர் முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் நூலகங்களின் சிறப்புபற்றியும் தேவை பற்றியும், ஆண்டவர் பெருமானின் அருட்செயல்கள், வேதாந்த நுண்ணறிவு, தமிழ்ப் புலமை பற்றியும் பாராட்டிப் பேசினார்கள். 'பயன்மிகு வாழ்விற்கு வேதாந்தம்' என்னும் தலைப்பில் ஜெயேந்திரபுரி சுவாமிகளும், பூஜ்யஸ்ரீ சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் 'கர்ம யோகம்' தொடர்சொற்பொழிவை ஆறாவது வேளையாகச் சிறப்புரை ஆற்றினார்கள்.

மறுநாள் 21ம் தேதி காலை – மதுரை ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி கமலாத்மானந்தா மஹராஜ், கோயம்புத்தூர் ஸ்வாமி சுதீரானந்தா சரஸ்வதி அவர்கள் 'கைவல்ய நவநீதம்' பற்றியும், பூஜ்யஸ்ரீ தயானந்த சுவாமி அவர்கள் 'கர்ம யோகம்' பற்றித் தொடர்ந்து சொற்பொழிவு ஆற்றினார்கள்.

மாலை குருமகா சந்நிதானம் அருட்தலைமையில் பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமிகள் தயானந்த 'கர்மயோகம்' தொடர் சொற்பொழிவாற்றினார்கள்.

அடுத்த நாள் 22 காலை – திருவேடகம் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் ஸ்வாமி பரானந்தா அவர்கள் "தாயுமானவரும் வேதாந்தமும்" பற்றி உரை நிகழ்த்தினார்கள். பின்னர் தொடர்ந்து பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி தயானந்தா கர்மயோக உரை ஆற்றினார்கள். மாலை பேரூர் ஆதினம் இளையபட்டம் மருதாசல அடிகள் தலைமை ஏற்க, நம் குருமகாசந்நிதானம் கோவிலூர் மரபு வேதாந்த நூல்களை வெளியிட்டார்கள். முதற்படியைப் பெற்றுக்கொண்டு, கோவிலூர் மரபு வேதாந்த ஆசானும் நம் எட்டாவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர

ஞானதேசிகர் மாணாக்கரும், குமாரபாளையம், ஆனந்தாஸ்ரமக் குருமுதல்வரும், ஆன சோம. சச்சிதானந்த ஸ்வாமிகள் (சோம. கோபால ஸ்வாமிகள்) கோவிலூரர் வேதாந்த மரபு பற்றி மிக அருமையான சொற்பொழிவு வொன்று நிகழ்த்தி அனைவரையும் மகிழ்ச்சிப் பரவசத்தில் ஆழ்த்தினார்கள்.

ஆன்மிக கருத்தரங்கு நடைபெற்ற மூன்று நாட்களும் இடையறாத கனத்த மழை வெள்ளம்போல் பொழிந்தும் தயானந்தாவின் கர்மயோகச் சொற்பொழிவைக் கேட்கத் தவறாது நூற்றுக்கணக்கானோர் வந்தது மிக ஆச்சரியம். கோவிலூரர் வேதாந்த மரபு நூல்கள் வெளியிட்ட அன்று குமாரபாளையம் ஆனந்தாஸ்ரமச் சீடர்கள் வந்திருந்து சிறப்பித்தார்கள். கன மழையிலும் அரங்கம் நிரம்பியிருந்தது, மிக மகிழ்வாக இருந்தது.

அதி ருத்ர ஹோமம் மற்றும் கருத்தரங்கம் நடைபெற்ற ஐந்து நாட்களும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதல் மூன்று நாட்கள் கல்லிடைக் குறிச்சியைச் சேர்ந்த ஸ்ரீ துக்காராம் கணபதி மஹராஜ் அவர்கள் வாரக்கரீ சம்ப்ரதாய அபங்க நாம சங்கீர்த்தன ஹரிகதை நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக அனைவரும் பக்திப்பரவசம் அடையும் வண்ணம் நிகழ்த்தினார்கள். நான்காம் நாள் ஓதுவாமூர்த்திகள் திருக்களர் இரத்தின சபாபதி ஓதுவார், (கோவிலூரர்) சிதம்பரம் ஞானப்பிரகாச ஓதுவார் மற்றும் திருத்தணி சுவாமி நாத ஓதுவார் திருமுறை இன்னிசை அளித்தனர். கடைசி நாளாக 22.11.2005 அன்று கர்நாடக இன்னிசை நிகழ்ச்சியுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

2002	–	தொண்ணூற்று ஆறு ஊர் நகரத்தார் மாநாடு
2003	–	ஸ்ரீ ல ஸ்ரீ நாச்சியப்ப சுவாமிகள் 80வது பிறந்தநாள்
2004	–	சுதர்சனஹோமம் – வித்வத் சதஸ்
2005	–	1008 கலசாபிஷேகம் – வேதாந்தக் கருத்தரங்கு
2006	–	இந்திய ஜனாதிபதி ஏ. பி. ஜெ. அப்துல்கலாம் வருகை
2007	–	உடற்பயிற்சிக் கல்லூரி
2008	–	ஓவியர்கள் முகாம்

புதிய மடங்கள்

சென்னை	–	1998
ரிஷிகேஷ்	–	2000
அமெரிக்கா	–	2006
பண்டரிபுரம்	–	2008/2009

கோவிலூர் சுவாமிகளின் ஆதரவுடன் நடைபெறும் வேத ஆகமப் பாடசாலைகள்

1. Kanchi Mahaswamigal Sadapathi,
Vedha Sivagama Padasalai Trust,
No.66, Sannathi Streetï Tirupparankundram

2. Sri. A. V. Swaminatha Sivachariyar,
Sivapuram Vedha Sivagama Padasalai Trust,
No.32, Mayuranathar South Street, Myladuthurai

3. S. Hariharan
S/o, Sri. M. Sundara Gurukkal,
HR & CE Vedhagama Paritchatrikari,
Kandamangalam (Via) Thirukkattupalli.

4. B. Sarveswara Gurukkal M.A./ M.Phill.,
Srimath Srikanta Sivacharya Trust,
No.11, Nitheeswarar Agraharam, Karaikkal

5. Sri Dhakshinamurthy Gurukkal,
Sri Brahma Vidyambai Divine Trust,
Sannathi Street, Thiruvengadu, (Sirkali TK)

6. Secretary, M.C. Padasalai,
Krishnankoil Street, Kottaiyur,

7. Principal,
Sri Sankara Gurukulam Acharyal Vidhya Peedam
No.79, Perumal Koil Street, Melattur (Thanjavur Dt.)

8. Sri Naganatha Agora Sivachariyar
Vedha Sivagama Padasalai,
No.4, Vellalar Single Street, Myladuthurai

9. Thindandi Venkata Ramanuja Jeet,
B.E.M.L. Layout, H.V. Halli,
Raja Rajewari Nagar, Bangalore-560 098

10. M. Ramiah @ Lakshmanan
Tenkasi

கோவிலூரில் தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார்களும் கூடிய எழுச்சிமிகு மாநாடு!

சித்ரபானு ஆண்டு சித்திரைத் திங்கள் 20ம் தேதி முதல் 22ஆம் தேதி (3–5–02 முதல் 5–5–02) வரை மூன்று நாள் நடைபெற்ற எழுச்சிமிகு மாநாட்டினைக் காணக் கண்கோடி வேண்டும்...

இது மாநாட்டு விழாவிற்கு வந்தவர்கள் வராதவர்களிடம் சொல்லிச் சொல்லி மகிழும் அளவிற்கு மாநாடு சிறந்தோங்கியது.

முதல் நாள் மாநாடு: முதல் நாள் நிகழ்ச்சி மாலை 6–00 மணிக்குத் துவங்க வேண்டும் என்பது ஏற்பாடு... அன்று காலை 10–00 மணியிலிருந்தே நகரத்தார் பெருமக்கள் திருவிழாவிற்குச் செல்லும் மகிழ்ச்சியோடு ஆச்சிகளும், குழந்தைகளும் ஆர்வத்தோடு கூடத் தொடங்கினர்.

பிரமாண்டமான பந்தல்: மண்டபத்தில் தான் மாநாட்டு அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது என்றாலும் அரங்கத்திற்கு வெளியே சுமார் 10 ஆயிரம் பேர் அமரும் வகையில் மாபெரும் அலங்காரப் பந்தலை எழிலோடு நிர்மாணித்திருந்தனர். பந்தலில் உள்ள நாற்காலிகளில் அமர்ந்தபடியே நிகழ்ச்சிகளைக் காணும் வண்ணம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அதிக அளவில் அலங்காரப் பந்தலில் தயாராக இருந்தன...

குடும்பம் குடும்பமாக: பேருந்துகளிலும், சிற்றுந்துகளிலும், இரண்டு சக்கர வாகனங்களிலும், அலை அலையாய்.... அணி அணியாய்... குடும்பம் குடும்பமாய் கோவிலூரில் திரளத் தொடங்கியது நகரத்தார் வெள்ளம். அனைத்துச சாலைகளும் கோவிலூர் நோக்கியே பயணப்பட்டன.

விழா நாயகர்: அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் விழாக் குழுவினருடன் துறவுக் கூட்டத்திலிருந்து காவியுடை தரித்த நகரத்தாரின் மண்டேலா சீர்வளர் சீர் நாச்சியப்ப சுவாமிகள் அழைத்து வரப்பட்டார். அருள்மிகு நெல்லை அம்மன் உடனாகிய கொற்றவாளீஸ்வரர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு நடத்தப் பெற்றது. இறையருளோடு மாநாட்டு அரங்கத்திற்கு வருகை தந்தனர். கூட்டத்தினரின் பலத்த கரவொலிகளின் நடுவே விழாநாயகர் மேடையில் ஆசி வழங்கியவாறு அமர்ந்தார். முக்கியப் பிரமுகர்களும் மேடையில் இருக்கையில் அமர்ந்தனர். இறைவாழ்த்துப் பாடலுடன் நிகழ்ச்சித் தொடங்கியது...

ஆன்மிக குருவின் அருளுரை: கோவிலூர் ஆதீனத்தின் 12வது குரு மகா சன்னிதானம் சீர்வளர்சீர் நாச்சியப்ப அடிகள் ஆற்றிய அருளுரையில், ''தென்னாட்டில் கோவிலூர் மடம்' ஒன்றுதான் வேதத்தைத் தமிழில் கற்றுத் தருகிறது. 'வேதாந்தம்' எனப்படுவது ஒரு மதம் என நினைக்கிறார்கள்... தமிழகத்தில் ஓதுவார்கள் பற்றாக்குறை உள்ளது. காரணம் சம்பளம் குறைவாக இருப்பதாலும் அப்பாவின் தொழிலுக்கு மகன் வர வேண்டாம் என நினைத்து இளைஞர்கள் கம்ப்யூட்டர் கல்விக்குச் சென்று விடுகிறார்கள். கோவிலூர் ஆதீனத்தில் பயின்ற 100 ஓதுவார்கள் தற்போது நல்ல வேலைகளில் உள்ளனர். 80 பேருக்கு நாதஸ்வரம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. சிற்பக் கலைப்பயிற்சியும் பயிற்றுவிக்கப்படுறிது.

நிகர் நிலைப் பல்கலைக்கழகம் ஒன்றைத் துவங்கி சுமார் 10 கலைகளில் பாடமும், பயிற்சியும் வழங்கப்படவுள்ளது. நகரத்தார் சமுதாய வளர்ச்சிக்காக 'நகரத்தார் நல்வாழ்வு அறநிலை' (Nagarathar Welfare Trust) துவங்கப் படவுள்ளது. இந்த அறநிலைக்கு ரூபாய் 7 கோடி நிதி சேர்த்திடும் திட்டமும் உள்ளது! எனக் கூறிய சுவாமிகள் இந்த அறநிலைக்குத் தனது சார்பில் ரூபாய் ஒரு கோடி ரூபாய் வழங்கப்படுகிறது என்று கூறியதும் கூட்டத்தினரின் மகிழ்ச்சி ஆரவாரம் அடங்க வெகுநேரமாயிற்று. மேலும் சுவாமிகள் தனது அருளுரையில்... நகரத்தார் சமுதாய மக்களில் ஒருபக்கம் வசதிபடைத்தவர்கள், மற்றொரு

பக்கம் வசதியற்றவர்கள் என்ற நிலையில் தான் வாழ்ந்து வருகிறார்கள். அந்த வசதியில்லாதவர்களைக் கவனிக்க வேண்டும் என்பதே நோக்கம். பணக்காரன்.. ஏழை என்ற பாகுபாட்டை மாற்ற வேண்டும் என்பதே என்னுடைய முக்கியத் திட்டம். நகரத்தாரில் உள்ள சுமார் 35000 புள்ளிகளில் புள்ளி ஒருவருக்கு குறைந்தபட்சம் ரூ 1000/ வீதம் அறநிலைக்கு வழங்க வேண்டும். வசதியுள்ளவர்கள் அதிகமாகத் தரலாம். கட்டாயம் கிடையாது. ஏழுகோடி ரூபாய் சேர்ந்தால் இளைஞர்களின் உயர்கல்விக்கு நிச்சயமாக உதவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இப்போது வசதியற்ற 600 முதியோர்களுக்கு மாதந்தோறும் கோவிலூர் ஆதீனம் உதவி வருகிறது.

நம்மை வளர்த்து ஆளாக்கியப் பெற்றோர்களை முதியோர் இல்லங்களில் தள்ளிவிடக்கூடாது... அவர்களுக்கு உதவுவது நமது தலையாய கடமை என்ற எண்ணம் வளர வேண்டும். உண்மையிலேயே பெற்றோர்களை வைத்துக் காப்பாற்ற முடியாது கஷ்டப்படும் பிள்ளைகள் முதியோர் இல்லங்களுக்கு அனுப்பலாம். அப்படிப்பட்ட முதியோர்களுக்குத் தான் உதவிடும் திட்டம் உள்ளது. இந்தத் திட்டத்திற்கு வெளி நாடுகளில் உள்ள நம்மவர்கள் எல்லாம் அள்ளித்தருவதாக உறுதி கூறியிருக்கிறார்கள்.

நம் சமுதாயத்தில் மூன்று நாள் நடைபெற்ற திருமணங்கள் இப்போது ஒருநாள் மட்டும் நடைபெறுவதாக மாறியிருக்கிறது எனும் இந்த மாற்றம் வரவேற்கக் கூடியதே.. என்னுடைய சம்பாத்தியத்தில் நிறைய வட்டி வருகிறது. அந்த வட்டியை நல்ல காரியங்களுக்கும் நகரத்தார் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் அந்த வட்டியைச் செலவு செய்ய முடிவெடுத்திருக்கிறேன்.

கோவிலூர் ஆதீனம் என்றும் உதவிடும் ஒரு ஆலயமாக சாசுவதமாக இருக்கும் என்பதை மட்டும் நிச்சயமாக கூறிக் கொள்கிறேன்! என்று சுவாமிகள் கூறியதும்... சமூகச்சிந்தனையும், ஏழை, பணக்காரர் என்ற பாகுபாட்டை மாற்ற வேண்டும் இளைஞர்களின் கல்விக்கும், முதியோர்களின் அந்த கடைசி வாழ்க்கைக்கும் உதவவேண்டும் என்ற சிந்தனை கொண்டவராக மடாலயத்திலிருந்து மறுமலர்ச்சி கொண்ட ஒரு மகா புருஷர் நகரத்தாருக்குக் கிடைத்திருக்கிறார் என்பதை கூட்டத்தினரின் முகத்தில் தோன்றிய நம்பிக்கை ஒளியில் காண முடிந்தது.

மேலும் அருளுரையாற்றிய அருளாளர், "சமூகப் பணிகளோடு நின்றுவிடாமல் இலக்கியப் பணியையும் ஆற்றப்போகிறேன். சங்க இலக்கியங்களான தொல்காப்பியம், மணிமேகலை, சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு இன்னும் பிற இலக்கியங்களையும் சாதாரண மக்களும் படிக்கக்கூடிய அளவிற்கு எளிய தமிழாக வடித்து, நூலாக அச்சிட்டு மக்கள் பதிப்பாக வெளியிடப்படும் என்றபோது.. மெல்லத் தமிழ் இனி வாழும்". என்று நம்மவர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமுதாயமே பெருமைப் படக்கூடிய அளவிற்கு அனைவரின் கண்களுக்கும் மடாலயத்திலிருந்து ஒரு சீர்த்திருத்தத் தூதுவராக, தமிழன்னையின் மைந்தராகத் தரிசனம் தந்தார்.

சங்க இலக்கியங்களை மக்கள் பதிப்பாக வெளிவருவதற்கு முனைவர் தமிழண்ணல் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படவுள்ளது என பலத்த கரவொலிகளில் அதிரத் அரங்கத்தில் இவ்வாறு அருளுரை நிகழ்த்தினார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்: காலை 9–30 மணிக்கு ஆன்மீக அரங்கம் தொடங்கியது.

நிகழ்ச்சிக்கு வி.என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையேற்றிருந்தார். அன்று தான் அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாள் ஆனால்... அன்று முழுவதும் அடைமழை பொழியத் தொடங்கியது வெயிலின் வெப்பத்திற்குப் பதிலாக.. குற்றாலத்தில் நடைபெறும் சாரல் விழாவைப் போன்று இரண்டாம் நாள் நிகழ்ச்சி துவங்கியது. ஆன்மீக அரங்கத் தலைமையுரையாற்றிய வி.என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் "நகரத்தார்

மாநாட்டை அந்த வருண பகவானே நேரில் வந்து வாழ்த்துவதாக நினைக்கிறேன்" கொளுத்தும் அக்னி வெயிலுக்குப் பதிலாகக் குளிரில் நனைந்த படியே நடைபெறும் இவ்விழாவிற்கு வருணன் வந்ததால் தான் கோவிலூர் மாநகரமே குளிர் நகரமாக மாறிவிட்டது.

கோவிலூர் ஆதினம் அவர்கள் சன்னிதானத்தில் எல்லோரும் சமம்தான். தலையாய மக்களைத் தந்த தலையாய சமூகம் எனும் பொருளில் பேராசிரியப் பெருமக்கள் உரையாற்ற விருக்கிறார்கள். படித்தவர்கள் நிறைந்த இந்தச் சபையில் படிக்காதவனாகிய நான் பேசுகிறேன் என்றால் படித்தவனும், பாமரனும் சுவாமிகள் சன்னிதானத்தில் ஒன்று என்பதற்கு நானே உதாரணம்.

நான் படிக்கவில்லையே தவிர படிப்பதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கிறேன். அனுபவங்களால் பட்டறிவு.. பட்டப்படிப்பு அறிவுக்கு சமம் என்பார்கள்.. நான் நிறையவே அனுபவப் பட்டவன் தான். ஆகவே, நான் தலைப்புக்குள் போகவில்லை.

தலையாய சமூகம் என்பதற்கு உதாரணமாக ஒருசில நிகழ்வுகளைக் குறிப்பிட விரும்புகிறேன். இக்காலத்தில் வருமானவரி, சொத்துவரி என்று அரசாங்கத்தால் விதிக்கப்படுகிறதென்றால் இந்த வழக்கத்தை ஆதியிலே கண்டவர்கள் நகரத்தார்கள்தான். தான் ஈட்டிய பொருளைக் காத்து சேமித்து, வகுத்து, பகுத்துக் கொடுத்தவர்கள். ஒரு குறிப்பிட்டத் தொகையை தர்ம வட்டிக்குக் கொடுத்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் குறிப்பிட்ட சதவீதத்தை தர்மகாரியங்களுக்கு, ஆலயப் பணிக்கு என ஆக்கபூர்வமாகப் பகுத்து வழங்கியவர்கள்தான் நகரத்தார்கள். வட்டி என்றதும் அநியாய வட்டி, ரன் வட்டி, மீட்டர் வட்டி என்று கூறப்படும் வட்டிகளல்ல.. நியாயமான வட்டி, அதைத்தான் தர்மவட்டி என்றேன், இந்தத் தர்ம வட்டி சதவீதம் தான் அரசுக்கு இன்றைய வரிவிதிப்புக் காரணமான மூலம்.

கோவிலூர் சுவாமிகள் அமெரிக்காவில் புகைப்படக் கலையிலும், அச்சகத் துறையிலும் கொடிகட்டிப் பறந்தவர்கள். இந்தத் துறைகளில் உலகத்தில் மிகச் சிறந்தவர்கள் வரிசையில் நமது சுவாமிகளும் ஒருவர். அப்படித் தன் சுய உழைப்பால் ஈட்டிய செல்வத்தையெல்லாம் கோவிலூர் மடத்துக்குக் கொண்டு வந்தார். கொண்டு வந்த செல்வத்தை நலிந்தோருக்குப் பயன்படவேண்டும் என்று விரும்புகிறார்.

பட்டினத்தடிகளும் தன் செல்வங்களையெல்லாம் தனது கணக்காளரிடம் கொடுத்து "ஏழை எளியோருக்குக் கொடுத்துவிடு" என்று கூறி துறவறம் மேற்கொண்டார். ஆனால் நமது நாச்சியப்ப அடிகளோ.. தான் ஈட்டிய செல்வங்களைத் தானே முன்னின்று ஏழை, எளியோர் மற்றும் அறப்பணிகளுக்கு வாரி வழங்குகிறார் என்றால் வாழும் பட்டினத்தடிகளாக நான் சுவாமிகளைப் பார்க்கிறேன் என்று குறிப்பிட்டார்.

அடுத்து தலையாய மக்களைத் தந்த தலையாய சமூகம் என்ற பொருளில் கண்ணகியைப் பற்றி நா. மீனவன் அவர்களும், காரைக்கால் அம்மையாரைப் பற்றி இராம. சௌந்திரவல்லி அவர்களும், பட்டினத்தாரைப் பற்றி முனைவர் அர. சிங்கார வடிவேலன் அவர்களும், பாடுவார் முத்தப்பர் பற்றி பழ. முத்தப்பன் அவர்களும் சிறப்புரையாற்றினார்கள். கோவிலைச் சார்ந்த குடிகள் என்ற பொருளில் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்களும் உரையாற்றிய பின்னர், மதிய உணவுக்குப் பிறகு 2–30 மணிக்கு குழு விவாத அரங்கம் நடைபெற்றது. மாநாட்டில் பங்கேற்றோர் தங்களுக்குள் தனித்தனிக் குழுவாக அமைத்துக்கொண்டு எந்த வகையில் உதவிடலாம் என்று கீழ்க்கண்ட பொருள்களில் விவாதித்தனர்.

1. கல்வி மேம்பாட்டு உதவிகள்; 2. வேலை வாய்ப்புகள்; 3. மணமுறிவைத் தவிர்த்தல் ; 4. முதியோருக்கு உதவுதல்; 5. நலிவடைந்த நகர விடுதிகளின் சீரமைப்பு; 6. மகளிர் மேம்பாடு; 7. திருமண நடைமுறைகள்

ஆகிய பொருள்களில் விவாதம் நடத்தி ஆக்கப் பூர்வமான அறிக்கைகளைத் தயார் செய்தனர்.

மாலை 6–00 அளவில் "மாறி வரும் காலத்தில் நகரத்தார் மாறியது, மாறாதது, மாறக்கூடாதது" என்ற பொருளில் சமூக அரங்கம் நடைபெற்றது.

முனைவர் சுப. அண்ணாமலை தலைமையில் முனைவர் தமிழண்ணல், விசாலாட்சி சுப்பிரமணியன், ச. மெய்யப்பன், பழ. கருப்பையா ஆகியோர் பங்கேற்றுப் பேசினர். இரவு 8–00 மணிக்கு "நகரத்தார் இதழ்"களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. தனவணிகன், நகரத்தார் மலர், நகரத்தார் இதழ், ஆச்சி வந்தாச்சு ஆகிய இதழ்களின் ஆசிரிபர்களுக்குப் பொன்னாடை அணிவித்து சுவாமிகள் ஆசி கூறினார்கள். இதழ்களின் ஆசிரியர்களைப் பாராட்டி கவிஞர் செல்லகணபதி உரை நிகழ்த்தினார். அன்றைய நிகழ்ச்சி நிறைவுற்று இரவு உணவுக்கு அனைவரும் சென்றனர்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள்: நீதியரசர் டாக்டர். அரு. லெட்சுமணன் அவர்கள் தலைமையில் தொடங்கியது.

குழு விவாதம் நடத்தி ஆக்கப் பூர்வமான அறிக்கைகளைத் தயாரித்த குழுவின் தலைவர்கள் அறிக்கையினைச் சமர்ப்பித்து உரையாற்றினர். அவர்கள் சமர்ப்பித்த அறிக்கை பற்றி அறிஞர்களின் கருத்துரையும் நடைபெற்றது. தீர்மானங்களை நிறைவேற்றி நகரத்தார் நல்வாழ்வு அறநிலை துவங்குதலும் ஏகமனதாக நிறைவேற்றப் பெற்றது.

நாச்சியப்ப சுவாமிகள் நிறைவுரையாற்றினார். செயலாளர் நா. நாராயணன் நன்றியுரையாற்றினார். கூடிக்கலைந்தோம் என்றில்லாமல் நம் நிறைகுறைகளைக் கூட்டிக் கழித்ததாகவும், கூடிக்களித்தோம் என்ற உணர்வோடு மாநாடு நிறைவுற்றது. இறை வணக்கம் பாடி முடிந்ததும் தேசிய கீதம் முழங்கியது. இறைப்பற்றும், தேசப்பற்றும் மிக்கவர்கள் நகரத்தார்கள் என்பதை உலகுக்கு உரக்கச் சொல்வதாக அமைந்தது. மூன்று நாள் மாநாட்டில் சுமார் 5000 பேர் கலந்து கொண்டனர். இனிவரும் ஆண்டுதோறும் 96 ஊர் நகரத்தார் மாநாடு நடத்த வேண்டும் என்ற உறுதியோடு மாநாட்டுத் திருவிழா மகிழ்ச்சியுடனும், நம்பிக்கையுடனும், எதிர்காலத்தில் வரும் சந்ததியினருக்கும் உதவவேண்டும் என்ற சுவாமிகளின் தொலை நோக்குத் திட்டமும் நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு ஒருவருக்கொருவர் விடை பெற்றுக்கொண்டும், சுவாமிகளிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டும் தங்கள் இல்லங்களுக்குப் புறப்பட்டனர்.

– தொகுப்பு: திருநாகேஷ்

நகரத்தார் ரத்தினங்கள்..

நகரத்தார் ஒவ்வொருவரும் ஒரு ரத்தினம்தான் என்றாலும் தாங்கள் ஏற்றுக்கொண்ட துறைகளில் சாதனை நிகழ்த்தியதற்காகவும், நிகழ்த்திக்கொண்டிருப்பதற்காகவும் நகரத்தாரில் நால்வருக்கு நகரத்தார் ரத்தினங்கள் என்ற பட்டமும தங்கப்பதக்கமும் பெற்று பாராட்டுப் பெற்றனர். நீதித்துறைச் சாதனை நாயகர் ஆந்திர மாநில உயர் நீதிமன்ற தலைமை நீதியரசர் டாக்டர் அரு. லெட்சுமணன் அவர்களும், வாழும் தமிழாம் முனைவர் தமிழண்ணல் அவர்களும், பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் முத்துக்கருப்பன் அவர்களும், நகரத்தாரில் இரண்டாவது ஐ.ஏ.எஸ். என்ற பெருமையுடன் கர்நாடக மாநிலம் பெங்களூரில் இந்திய விண்வெளித்துறைக் கூடுதல் செயலாளராகப் பணியாற்றி வருபவருமான சொ. சொ. மீனாட்சி சுந்தரம் ஐ.ஏ.எஸ் அவர்களுமாகிய நால்வரும் 'அருந்தவச் செல்வர்கள்' என்று சுவாமிகள் பாராட்டுத் தெரிவித்தார்கள். ரத்தினங்கள் நால்வரும் ஏற்புரை நிகழ்த்தினர்.



கோவிலூரில் தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார்களும் கூடிய எழுச்சிமிகு மாநாடு!

கோவிலூர்ப் புராணம்

கி. வா. ஜகந்நாதன்

சிவபெருமான் பாரத நாட்டில் எழுந்தருளியுள்ள தலங்கள் ஆயிரத்தெட்டு என்று பொதுவாக ஒரு கணக்குச் சொல்வதுண்டு. ஆனால் அவற்றைத் திட்டமாக இன்னவை தாம் என்று சுட்டிச் சொல்ல முடியாது. என்றாலும் காசி, கேதாரம் முதலிய வட நாடடுத் தலங்களும், தில்லை, மதுரை முதலிய தென்னாட்டுத் தலங்களும் யாவராலும் போற்றப் பெறும் திருப்பதிகள்.

தென்னாட்டில்தான் சிவ வழிபாடும் சிவத்தலங்களும் மிகுதி. தேவாரம் பெற்ற தலங்கள் சிவத்தலங்களில் சிறப்புடையவை. திரு நொடித்தான் மலை முதல் திருக்குற்றாலம் வரையில் பல தலங்கள் மூவரால் பாடப் பெற்றவை. அவை 274. அவற்றைப் பாடல் பெற்ற தலங்கள் என்று சொல்வது வழக்கு.

அவற்றில் சிலவற்றிற்குப் புராணங்களும் பிரபந்தங்களும் இருக்கின்றன. பாடல் பெற்ற தலங்களுக்கு அடுத்தபடியாகச் சிறப்பைப் பெற்று விளங்குபவை புராணம் பெற்ற தலங்கள். பல தலங்களுக்கு மூவர் பாடல்கள் இல்லாவிட்டாலும் புராணங்கள் இருக்கின்றன. காசி அத்தகையவற்றுள் ஒன்று. மேலைச் சிதம்பரம் என்று சிறப்பிக்கப் பெறும் பேரூருக்குத் தேவாரப் பதிகம் இல்லை; என்றாலும் அதற்கு ஓர் அழகிய புராணம் இருக்கிறது.

அந்த அந்தத் தலங்களில் வாழ்ந்த வடமொழி வாணர்கள் தல புராணங்களை இயற்றினர். பிறகு அவற்றைத் தமிழ்ப் புலவர்கள் தமிழ்ச் செய்யுள் வடிவத்தில் மொழி பெயர்த்தார்கள். வட மொழியில் உள்ள தலபுராணங்களுக்கு இலக்கிய மதிப்பு இருப்பதில்லை. ஆனால் தமிழில் உள்ள தல புராணங்கள் பல, சிறந்த இலக்கியங்களாக நிலவுகின்றன. பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. சுருக்கமான முறையில் பல தமிழ்ப் புராணங்கள் இருந்தாலும், திரிகூடராசப்பக் கவிராயர், சைவ எல்லப்ப நாவலர். சிவப் பிரகாச சுவாமிகள், சிவக்கொழுந்து தேசிகர், சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர், உமாபதி சிவசாரியார், புராணத் திருமலை நாதர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை முதலிய பெரும் புலவர்கள் பாடிய புராணங்கள் இலக்கியச் சுவை மிகுந்தனவாய், நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, சைவ சமயச் சிறப்பு முதலியவற்றைக் கூறுவனவாய் விளங்குகின்றன. ஒரே தலத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட புராணங்கள் உள்ளன. மதுரை, சிதம்பரம், மாயூரம், திருப்பெருந்துறை போன்ற தலங்களுக்கு வெவ்வேறு கவிஞர்கள் இயற்றிய வேறு வேறு புராணங்கள் இருக்கின்றன.

புராணம் பாடிய கவிஞர்களுள் அதிகமான புராணங்களைப் பாடியவர் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. அவர் இருபத்திரண்டு புராணங்களைப் பாடியிருக்கிறார். தலங்களுக்குப் பழைய புராணங்கள் இருந்தாலும் பிள்ளையவர்களைக் கொண்டு புதிய புராணம் பாடச் செய்வதில் அக்காலத்துத் தமிழ் மக்கள் ஆர்வங் காட்டினர். நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, துதிகள், வருணனைகள், சைவ சமயக் கருத்துக்கள் ஆகியவற்றை அப்புலவர் அமைத்துப் பாடுவதில் வல்லவராக இருந்தமையால் அவரைக் கொண்டு புராணங்களை இயற்றுவித்தனர். மாயூரம், திருப்பெருந்துறை முதலிய தலங்களுக்குப் பழைய புராணங்கள் இருந்தாலும் புதிய புராணங்களைப் பிள்ளையவர்கள் இயற்றினார். அவரை, "புராணம் பாடும் புலவன்" என்று ஒருவர் பாராட்டியிருக்கிறார்.

பிள்ளையவர்கள் பாடிய புராணங்களுள் ஒன்று கோயிலூர்ப் புராணம். செட்டி நாட்டிலுள்ள பல தலங்களுக்கு அவர் புராணம் பாடியிருக்கிறார்; அப்படிப் பாடியதால் அவருக்குப் பொருள் வருவாய் கிடைத்தது.

கோயிலூரில் உள்ள வேதாந்த மடத்தை நிறுவியவரும் முதல் ஞானாசிரியருமாகிய முத்திராமலிங்க தேசிகர் அத்தலத்துத் திருக்கோயிலைப் புதுப்பித்துத் திருப்பணி செய்து விரிவாக அமைத்தார்; அதுமுதல் அவ்வாலயம் செவ்வனே பரிபாலிக்கப்பட்டு வருகிறது. அவருக்குப்பின் ஆதீனத் தலைவராக எழுந்தருளியிருந்தவர் அருணாசல தேசிகர். அவருக்குப்பின் ஞானாசிரியராக வந்தவர் சிதம்பர தேசிகர். அவர் காலத்தில்தான் கோயிலூர்ப் புராணம் இயற்றி அரங்கேற்றப் பெற்றது.

மகாமகோ பாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் தாம் எழுதிய "மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரத்தில் இந்தத் தலத்தின் புராணம் தோன்றிய வரலாற்றை எழுதியிருக்கிறார்கள். அது வருமாறு:

'அடிக்கடி நேரும் பொருள் முட்டுப்பாட்டினால் இவர் வருந்துவதை இவரிடம் பாடம் கேட்டு வந்த தேவிகோட்டை நாராயண செட்டியாரென்பவர் அறிந்து, இவருக்கு எவ்வண்ணமேனும் பொருள் வருவாய் செய்விக்க வேண்டுமென எண்ணினார். பாண்டிய நாட்டில் நகர வட்டகையிலுள்ள சிவஸ்தலங்கள் சிலவற்றிற்கு இவரைக் கொண்டு புராணம் இயற்றுவிக்கலாமென்றும், அங்கங்கேயுள்ள பிரபுக்கள் மூலம் அவை காரணமாக இவருக்குத் தக்க பரிசில்கள் கொடுக்கச் செய்யலாமென்றும் நிச்சயித்து, அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து வருவாயிராயினர். நகர வைசியப் பிரபுக்கள் இக்கவிஞர் கோமானது பெரும் புகழை அறிந்திருந்தவர்களாதலின், நாராயண செட்டியாருடைய முயற்சிகள் பயனுற்றன. கோயிலூர் வேதாந்த மடத்துத் தலைவராக இருந்த ஸ்ரீ சிதம்பர ஐயாவின் விருப்பப்படி கோயிலூர்ப் புராணம் இவராற் பாடப்பெற்றது. இவரைக் கோயிலூருக்கு வருவித்துத் தக்கவர்கள் கூடிய சபையில் அந்நூலை அரங்கேற்றுவித்து ஸ்ரீ சிதம்பர ஐயா இவருக்கு உயர்ந்த சம்மானம் செய்ததன்றிப் பல வகையான உதவிகளும் செய்வித்தார்.... சிதம்பர ஐயாவின் விருப்பத்தின்படி வட மொழியில் உள்ளவாறே அந்நூலுள் வேதாந்த விஷயங்கள் அங்கங்கே பலவகையில் அமைக்கப்பெற்றன."

கோயிலூர், காரைக்குடிக்கு அருகில் உள்ளது. அங்குள்ள வேதாந்த மடாலயம் மிகச்சிறப்புற்றது; வேதாந்த நூல்களை முறைப்படி பாடம் சொல்லி வந்தமையால், அங்கே பயின்ற பல துறவிகள் தமிழ் நாடு முழுவதும் அக்காலத்தில் இருந்தார்கள்.

கோயிலூர்ப் புராணம் பாயிரம், திருநாட்டுப் படலம், திருநகரப் படலம், நைமிசப் படலம், தல விசேடப் படலம், வீர பாண்டியன் சமிவனம் அடைந்த படலம் மாயப்புலி நீங்கிய படலம், கொற்ற வாளீசப் படலம், உபநிடதப் பொருளுரைத்த படலம், மதுப் பிரியர் துதியுரைத்த படலம் சுவேதராசப் படலம், அன்னதான மகிமை உரைத்த படலம், சுதன்மை அருள் பெறு படலம் ,தீர்த்த மகிமைப் படலம் சாபவிமோசனப் படலம் ஆகிய பதினைந்து படலங்களையும் 849 செய்யுள்களையும் உடையது.

கோயிலூருக்கு இந்தப் புராண வாயிலாக சமிவனம், வன்னிவனம், சாலிவாடிபுரம், கழனி ஸ்ரீ வல்லபம் என்ற பெயர்கள் உண்டென்று தெரியவருகிறது. வரலாற்றின் மூலமாக, கழனி வாயில் , ஏழகப் பெருந்திரு, வீரபாண்டியபுரம், மருதேந்திரபுரம் என்ற பெயர்கள் இத்தலத்திற்கு அமைந்தன என்பதை அறிகிறோம்.

கோயிலூர்ப் புராணத்தில் வரும் வரலாறுகளின் சுருக்கம் வருமாறு:

பாண்டி நாட்டில் உள் திருக்கானப் பேராகிய காளையார் கோயிலில் வீர பாண்டியன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவன் அத்தலத்தில் எழுந்தருளிய காளீசரை வழிபட்டு ஒரு வாளைப் பெற்றான். அந்த வாளைக் கொண்டு போரில் பகைவரை வென்றான். அதனால் அது கொற்றவாள் என்ற சிறப்புடன் விளங்கியது.

ஒரு நாள் வீரபாண்டியன் வேட்டையாடும் பொருட்டு வடக்கே உள்ள காட்டுக்குப் போய்ப் பல விலங்குகளை வேட்டையாடினான். அப்போது அவன் முன் ஒரு மான் எதிர்ப்பட்டது. அது அவன் கைக்கு அகப்படாமல்

தப்பியோட, அரசன் தன் கைவாளோடு அதைத் துரத்திக்கொண்டு சென்றான். அது சமிவனம் என்ற இடத்திற்குச் சென்று மறைந்து விட்டது.

பாண்டியன் அங்கிருந்த பொய்கையில் நீராடிக் கனிகளை உண்டு ஒரு மரத்தின் நிழலில் படுத்து உறங்கலானான், அங்கே ஓரிடத்தில் சிவலிங்க வடிவில் எழுந்தருளியிருந்த திரிபுவனேசன் அரசனுடைய வடிவாளைக் கவந்தருளினான். ஒரு புலியையும் அது உண்பதற்காகத் துரத்திவரும் மறையவன் ஒருவனையும் இறைவன் தோற்றுவித்தான். மறையவன் புலிக்குப் பயந்து பாண்டியனுக் கருகில் வந்து, 'அபயம்! அபயம்!'' என்று கூக்குரலிட்டான்.

பாண்டியன் துயிலுணர்ந்து தன் வாளைப் பார்த்தான். காணவில்லை. அதைத் தேடுவதை விட்டு மறையவனைக் காப்பாற்றப் புகுந்தான். புலியைப் பார்த்து, ''இந்த மறையவன் உணவின்றி எலும்பும் தோலுமாக இருக்கிறான். இவனை உண்டால் உன் பசி தீராது. இவன் எலும்புகளைக் கடித்தால் உன் பல்தான் நொறுங்கும். நான் நன்றாக உணவு உண்டு கொழுத்திருக்கிறேன். இவனை விட்டுவிட்டு என்னை உண்டு பசியாறு'' என்றான் பாண்டியன். ''நீ பலரைக் காப்பாற்றுகிறவன். உன்னை நம்பிப் பலர் வாழ்கிறார்கள். இவனுக்கோ யாரும் இல்லை. ஆகையால் இவனையே உண்பேன்' என்று அந்தப் மாயப் புலி கூறிற்று. ''என் வாள் இருந்தால் உன்னோடு பொருது வென்று இம்மறையவனை மீட்பேன். அது கிடைக்கவில்லை. இந்த மாய உடம்பினால் ஒரு பயனும் இல்லை, நீ மறுக்காமல் உண்' என்று மறுபடியும் அரசன் வற்புறுத்தினான். புலி அவன் சொன்னதைக் கேட்கவில்லை.

வேறு வழி ஒன்றும் தெரியாமல், பாண்டியன் திறந்திருந்த புலிவாயில் தன் தலையைக் கொடுத்தான். அந்தக் கணத்தில் புலி மறைய மறையவனும் மறைந்தான். பாண்டியன் தனியே நின்றான். புலியும் மறையவனும் மறைந்தது கண்டு வியப்படைந்து மயங்கி நின்றான்.

அரசன் போன இடம் தெரியாமல், அவனுடன் வந்தவர்கள் அவனைத் தேடிக்கொண்டு சமிவனத்தையடைந்து அவன் தனியே நிற்பதைக் கண்டார்கள். அவனோடு உரையாடி மகிழ்ந்தார்கள்.

அப்போது அரசன், ''இந்த வனத்தைச் சுற்றிப் பார்த்து ஏதேனும் அதிசயம் இருந்தால் அறிந்து வாருங்கள்' என்று அவர்களை விடுத்தான். அவர்கள் அவ்வாறே சென்றபோது ஒரு வன்னி மரத்தடியில் ஒரு சுயம்புலிங்கத்தையும் அதனருகில் வாளையும் கண்டனர். அங்கே கீழ்ப்பக்கத்தில் ஒரு பொய்கையும் இருந்தது, அவற்றைப் பார்த்துவிட்டு அரசனிடம் சென்று தாம் கண்டதைச் சொன்னார்கள், வீரர்கள்.

பாண்டியன் அவ்விடம் சென்று சிவலிங்கப் பெருமானைத் தரிசித்துப் போற்றினான். இறைவன் இடபாரூடனாக அவனுக்குக் காட்சி கொடுத்தருளினான். ''நாமே உனக்கு அகப்படாமல் வந்த மானையும் புலியையும் மறையவனையும் தோற்றுவித்தோம். உன் வாளைக் கவர்ந்தோம். அதை நீ எடுத்துக்கொள்' என்று இறைவன் அருளினான். பாண்டியன் அந்தக் கொற்ற வாளை எடுத்துக்கொண்டு இறைவனைப் பணிந்தான். ''இந்தத் தலத்துக்கு வன்னிவனம் என்ற பெயரும், தேவரீருக்குக் கொற்றவாளீசர் என்ற திருநாமமும் இனி வழங்கவேண்டும், தேவரீரைப் பணிந்து வழிபடுபவர்கள் தாம் வேண்டும் வரங்களையும் பெறவேண்டும்' என்று அரசன் வேண்டிக்கொள்ள இறைவன் ''அவ்வாறே ஆகுக!'' என்று அருள்புரிந்து இலிங்கத்துள் மறைந்தான்.

வீரபாண்டியன் அந்தக் காட்டை அழித்து ஆலயம் உண்டாக்கி, அதில் எல்லா வகையான சந்நிதிகளையும் அமைத்து, பூசை, விழாக்கள் நடத்த ஏற்பாடு செய்தான். அங்கே ஒரு நகரத்தையமைத்துப பல வகையினரையும் குடியேற்றி வாழச் செய்தான்.

ஒரு சமயம் அகத்திய முனிவர் அங்கே எழுந்தருளினார். அவர் பாண்டியனுக்கு இந்தத் தலப்பெருமையை மிக விரிவாக எடுத்துரைத்தார்.

மதுப்பிரியன் என்ற முனிவர் இங்குள்ள பொய்கையில மூழ்கித் தவம் செய்தான். அவன் தவத்தைக் கெடுக்க எண்ணிய இந்திரன் பெருமழை பொழியும்படி செய்தான். முனிவன் கலங்காமல் தவம் செய்துகொண்டே இருந்தான். இந்திரன் பிரமதேவனிடம சென்று முனிவன் தவம் செய்வதைச் சொன்னான். பிரமன், "அவன் எந்தப் பதவியையும் எண்ணித் தவம் செய்யவில்லை. நிட்காமியமாகவே அதைச் செய்கிறான்" என்று கூறிவிட்டு திருமாலினிடமும், உருத்திரனிடமும் சென்று அவர்களை அழைத்துக்கொண்டு சமிவனம் வந்தான். அம் மூவரும் மதுப் பிரிய முனிவனை அணுகி, "உனக்கு வேண்டிய வரங்களை நாங்கள் கொடுப்போம்" என்றார்கள். முனிவனோ, "பரமசிவனை அறிவது தான் என் கருத்து. வேறு எதையும் வேண்டிலேன்' என்றான். மூவருமம அங்கிருந்து அகல, முனிவன் மீண்டும் தவத்தில் ஆழ்ந்தான்.

அந்தத் தவக் கனல் எங்கும் பரவித் தகித்தது. அதனைப் பொறாத இந்திரன் பிரம தேவனிடம் சொல்ல, நான்முகன் சமிவனத்தை அடைந்து சிவலிங்கப் பெருமானைப் பணிந்து, "முனிவன் கருத்தை நிறைவேற்றியருள வேண்டும்" என்று வேண்டினான். அப்போது இறைவன் "நீயே சென்று அவனுக்குப் பிரம ஞானத்தைப் போதி" என்று பணித்தார்.

அப்படியே பிரமன் முனிவனை அணுகிச் சிவபெருமானுடைய கட்டளையைத் தெரிவித்து அவனுக்கு உபநிடதப் பொருளை விரிவாக உபதேசித்துத் தன்னுடைய இருப்பிடம் சென்றான்.

முனிவன் சிவபெருமானைப் பணிந்து வழிபட, அப்பெருமான் அவன்முன் தோன்றினான். இறைவனைத் தரிசித்த மதுப்பிரிய முனிவன் அப்பெருமானைத் துதி செய்யத் தொடங்கினான்.

அருள் சிற்கன சொரூபதே சோமபஅமல
அருள்க யாவைக்கும் சாட்சியாய் அமர் அகளங்க
அருள்க யாரும்சொல் எவைக்கும் மேலாகிய அமர
அருள்க பற்பல மூர்த்தியாய் அமரும்மா தேவ!
போற்றி சந்திர சேகர, புனற்சடா டவியாய்,
போற்றி முக்கண் நாற் புயம்பொலிபூரண புராண
போற்றி மான்மழு எந்துபொற் றாமரைக் கரத்தாய்
போற்றி பத்தர்குற் றமும்குண மாய்க்கொண்டு பொறுப்போய்

முனிவன் துதித்ததைக் கேட்ட சிவபெருமான் திருவுள்ளம் மகிழ்ந்து, "உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றான். 'எப்போதும் எனக்குத் தேவரீர் அருள்வேண்டும். சமிவனத்தில் பஞ்சாக்கர விமானத்தில் திரிபுவனேசன் என்னும் பெயரோடு தேவரீர் விளங்கவேண்டும். அம்மை திரிபுவனேசை என்னும் திருநாமத்தோடு எழுந்தருளியிருக்கவேண்டும். தெற்கே ஓடும் நதிக்கு மதுநதி என்ற பெயரும் நதிக்குக் கிழக்கே உள்ள தீர்த்தத்துககு மதுபுட்கரிணி என்ற பெயரும் வழங்கவேண்டும். இத்தலத்திற்கு வந்து வழிபட்டவர்கள் விருப்பமெல்லாம் நிறைவேறவேண்டும்' என்று முனிவன் வேண்டினான். இறைவன் அவன் கேட்டவரங்களை அருளி லிங்கத்துக்குள் மறைந்தான்.

❖❖❖❖❖❖

சுதேவன் என்னும் அரசனுடைய புத்திரன் சுவேதன், சோதிடர்கள், "நீ அற்ப ஆயுளை உடையவன்' என்று சொன்னதைக் கேட்டுத் தன் மகனுக்கு முடிசூட்டிவிட்டு வனத்துக்குச் சென்றான். தண்டகவனத்தில் தவம் செய்து அதன் பயனாகப் பிரமனுடைய சத்தியவுலகம் சென்றான். அங்கே சென்ற அவனுக்கு மிகுதியான பசியெடுத்தது. அதனால் வாடியவன் தன் வருத்தத்தை நான்முகனிடம கூறினான். "நீ செய்த தவத்தால் இவ்வுலகத்துக்கு வந்தாய். ஆயினும் உன் உடம்பைப் பேணினாயேயன்றி அன்னதானம் செய்யவில்லை. அதனால் இந்தப் பசிப்பிணி வந்தது. நீ இறந்தபோது காட்டில் விட்ட உடம்பு அங்கே இருக்கிறது. அதைப்

போய் உண்ணுக'' என்று பிரமன் பணித்தான். அப்படியே சுவேதன் அங்கே சென்று தன் பிணத்தையே உண்டான். அது குறையாமல் வீங்கியது. பசித்தபோதெல்லாம் தண்டகவனம் சென்று அதை உண்டு வந்தான்.

அங்கே வாழ்ந்த தண்டகன் என்னும் அரக்கன் அங்கிருந்த பிருகுமுனிவரின் மகளை விரும்பினான். அதையறிந்த முனிவன் சாபமிட அந்த வனம் எரிந்து பாலையாகிவிட்டது. அங்கே அகத்திய முனிவர் சென்று மீண்டும் காடு ஆக்கினார்.

அப்போது சுவேதன் பிணத்தை உண்ண வந்தான். "ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று அகத்திய முனிவர் கேட்க, அவன் நிகழ்ந்தவற்றைச் சொல்லி, அம் முனிவரைப் பணிந்து போற்றினான். பிறகு தன் கழுத்திலிருந்த முத்து மாலையை முனிவருக்குக் கொடுத்தான் அகத்தியர் அதைக் கையில் வாங்கினவுடனே சுவேதனுடைய பாவமும் பசியும் போயின; பிரேதமும் அழிந்தது.

அந்தச் சுவேதனுடைய மகனுக்கும் சுவேதனென்றே பெயர். அவன் அகத்திய முனிவர் ஆசிரமத்தை அடைந்து அவரைப் பணிந்து எழுந்தான் முனிவர், "உன் தந்தை அன்னதானம் செய்யாமையால் துன்புற்றான்' என்று கூற, அரசன், "எந்தத் தலத்தில் அன்னதானம் செய்வது சிறப்பு?" என்று கேட்க, "சமிவனமே சிறந்தது" என்று அகத்தியர் கூறி அத்தலத்தின் சிறப்பையும் அன்னதானத்தின் பெருமையையும் எடுத்துரைத்தார்.

அந்த அரசன் வன்னிவனம் (சமிவன்னி) சென்று வன்னி விநாயகரைத் தரிசித்துத் திரிபுவனேசனையும் வணங்கினான். அங்கே விரிவாக நெல்வயல்களை அமைத்து, ஏரி, கால்வாய் ஆகியவற்றை உண்டாக்கினான். நெல் நன்றாக வளர்ந்தது. அதனால் அத்தலம் சாலிவாடி என்ற பெயரைப் பெற்றது. அரசன் அங்கே இருந்து அன்னதானம் செய்து, இறுதியில் சிவபதம் பெற்றான். அது முதல் அத்தலத்துக்கு வன்னிவனம், சமிவனம் என்ற பெயர்களோடு, சாலிவாடி, கழனி என்ற பெயர்களும் உண்டாயின.

சிவகுப்தன் என்னும் வணிகன் சாலிவாடியில் வாழ்ந்தான். திருநீறும் உருத்திராக்கமும் பூண்டு திருவைந்தெழுத்தை ஓதி இறைவனிடம் இடையீடில்லாத பக்திசெய்து வந்தான். அவன் மனைவி சுதன்மை திரிபுனேசையிடம் அன்பு பூண்டு வழிபட்டு வந்தாள். அவர்களுக்கு ஒரு மகள் பிறக்க, அவளுக்கு அரதன வல்லி என்று பெயரிட்டு வளர்த்து வந்தார்கள். சிவகுப்தன் அம்பிகையின் திருக்கோயிலுக்குமுன் ஒரு பெரிய கழனியை உண்டாக்கி வேலியிடாமல் வளர்த்து வந்தான். அங்கே காவல் காக்கும் பொருட்டுத் தன் மகளாகிய அரதனவல்லியை ஏவினான். அவள் தோழிகளுடன் புறப்பட்டுச் சென்றாள். ஆனால் கழனியைக் காவாமல் சோலைகளிலும் பொய்கையிலும் சென்று விளையாடிப் பொழுதைக் கழித்தாள்.

கழனிக்குக் காவலின்மையை உணர்ந்த திரிபுவனேசை, சுதன்மையின் பக்தியைக் கண்டு திருவுள்ளம் இரங்கி, தானே அரதன வல்லியைப் போலக் கோலங்கொண்டு அந்தக் கழனிக்குச் சென்று காவல் புரியலானாள் கரும்பின் அடியில் வரப்பில் அமர்ந்து காவல் புரிந்தாள்.

தன் மகள் பசியோடிருப்பாள் என்று எண்ணி சுதன்மை உணவு கொண்டு வந்து அம்மைக்குப் பரிமாறினாள். அம்மையும் அவ்வுணவைச் சுவைத்து உண்டாள். சுதன்மை இல்லம் சென்றாள். அம்பிகை பிறகு கோயில் சென்று நிகழ்ந்தவற்றை இறைவனிடம் கூறி மகிழ்ந்து தன் சந்நிதிக்குச் சென்றாள்.

விளையாடிக் கொண்டிருந்த அரதனவல்லி வீட்டுக்கு வந்து, "பசிக்கிறது" சோறு போடு" என்று அன்னையிடம் கூறினாள். அன்னை, "இப்போதுதானே சோறு உண்பித்து வந்தேன்?" என்று கூற, மகள் தான் கழனிக்குச் செல்லாமல் விளையாடிவிட்டு வந்ததைச் சொன்னாள் சுதன்மை இறைவியே இந்தத் திருவிளையாட்டைச்செய்தாள் என்று உணர்ந்து வியந்து உருகினாள் யாவரும் இந்த அற்புதத்தை அறிந்து அம்மையைத் துதித்தார்கள். சுதன்மை அம்பிகையைப் பரவலானாள்.

"மெய்யறி வின்ப ரூபம்
மேயபூரணியே போற்றி,
பொய்யகல் சிவத்தின் நீங்காப்
புண்ணியப் பொருளே போற்றி,
ஐயமில் சக்தி ஆகி
அடியாரைக் காப்பாய் போற்றி,
மையகல் அடியார் எண்ணம்
முடித்திட வல்லாய் போற்றி!"

"காமரு கூந்தல் போற்,
கவின்மொழி வதனம் போற்றி,
மாமரு விழிகள் போற்றி,
வண்தொடிக் கரங்கள் போற்றி,
தேமரு கொங்கை போற்றி,
சிறுகிய மருங்குல் போற்றி,
நாமரு புகழ்சால் நெல்லை
நாயகி திருத்தாள் போற்றி!"

நெல்லைக் காத்ததனால் அம்பிகைக்கு நெல்லைநாயகி என்ற திருநாம் உண்டாயிற்று. சிவகுப்தனும் சுதன்மையும் இறுதியில் சிவபதம் அடைந்தார்கள்.

❖❖❖❖❖❖❖

மதுராபுரியை ஆண்ட சூரதன்மா என்பவனுடைய மனைவி சுகுணை என்பவள். சமண சமயத்தினர் அங்கே வந்து அரசனைச் சமணன் ஆக்கினார் அவன் சைவத்தைப் புறக்கணித்துச் சமண சமயத்தைப் பரப்பலானான்; சமணர்களுக்கே ஆதரவு தந்தான். அதுகண்டு வருந்திய சுகுணை அவனுக்குப் பலவகையில் அறிவுரை புகன்றும் அவன் கேட்கவில்லை. அரசன் இறந்தான்; அவனுடன் சுகுணையும் உயிர் நீத்தாள்.

சுகுணை அகளங்கபுரத்து மன்னன் மகளாகப் பிறந்தாள். சூரதன்மா சாகலபுரத்து மன்னன் மகனாகப் பிறந்தான். அவனுக்கு முற்பிறவியிற் செய்த பாவத்தால் குட்ட நோய் வந்தது. மன்னன் மகளாகப் பிறந்த சுகுணைக்கு மணப் பருவம் வந்ததும், சுயம்வரம் நடைபெற்றது, பல தேசத்து அரச குமாரர்களும் வந்திருந்தனர். சாகலபுரத்து மன்னன் மகனாகப் பிறந்து குட்ட நோயால் வருந்திய சூரதன்மாவும் வந்தான். அவன் தன் முற்பிறவியில் கணவனாக இருந்தவன் என்பதை உணர்ந்த மன்னன் மகள் யாவரும் நகைக்கவும் மன்னன் வருந்தவும் அவனுக்கே மாலையிட்டாள். அவனும் அவளும் சாகல புரத்தை அடைந்தார்கள்.மருந்துகளால் அவனுடைய நோய் தீரவில்லை அந்தப் பெண்மணி அவனுடன் தலயாத்திரையாகப் புறப்பட்டுக் காசி முதலிய ஊர்களுக்குச் சென்றும் நோய் தீரவில்லை. இறுதியில் சமிவனம் அடைந்து மதுபுஷ்கரிணியில் நீராடவே, அவனுடைய நோய் தீர்ந்தது.

காளிபுரத்தில் இருந்த வீரசேனன் என்னும் பாண்டியன் வேட்டையாடக் கானகம் சென்றான். அங்கே கண்வ முனிவர் ஆசிரமத்துக் கருகில் ஒரு கவரி மானைக் கண்டு அதன்மேல் அம்புவிட அது இறந்து போயிற்று. கண்வர் வளர்த்த மான் ஆதலால், முனிவர் அது இறந்ததை அறிந்து வருந்தி மன்னனைப் பார்த்துக் கோபத்துடன், "நீ வேடனாகித் திரிக' என்று சாப மிட்டார். உடனே அவன் வேடனாகி மிருகங்களை வேட்டையாடிக் கொண்டு காட்டில் திரிந்தான்.

மந்திரி முதலியோர் அரசன் வராததை அறிந்து அவன் மகனாகிய இராசசேகரனை மன்னனாக்கினார்.

வேடனான அரசன் பல இடங்களில் திரிந்து சமிவனம் வந்தான். மது தீர்த்தத்துக்கு அருகில் ஒரு மர நிழலில் தங்கினான். அந்தத் தீர்த்தத்தில் இருந்த மீன்கள், "இவன் நம்மைக் கொடியாகக் கொண்ட பாண்டியன்; இவன் பாவத்தைப் போக்குவோம்' என்று தம்மில் பேசிக்கொண்டு, துள்ளிக் குதித்தன; அப்போது அந்த நீர் மேலே பட்டது ம் அவனுக்குக் கொலை புரியும் எண்ணம் நீங்கியது; புண்ணிய நினைவு உண்டாயிற்று. அந்தத் தீர்த்தத்தில் மூழ்கி வேட்டுருவம் நீங்கி இறைவனையும் இறைவியையும் இறைஞ்சினான்.

காளிமா புரத்திலிலுள்ளவர்கள் இதனை அறிந்து அவனை வந்து கண்டு தம் நகருக்கு அழைத்து ஏகினர். மகன் அரசாள, அவன் யோகம் துய்த்து வாழ்ந்தான். பிறகு சிவபதம் அடைந்தான். அன்று முதல் மதுபுட்கரிணிக்குச் சாபவிமோசனம் என்ற பெயரும் அமைந்தது.

❖❖❖❖❖❖

இந்த வரலாறுகளையெல்லாம் அகத்திய முனிவர் வாயிலாகக் கேட்ட வீரபாண்டியன் திரிபுவனேசனை வழிபட்டான். அகத்தியர் அவனுக்குப் பிரம ஞானம் உபதேசித்தார். அவன் இறுதியில் விதேக முக்தியை அடைந்தான்.

சொற்சுவை, பொருட் சுவை மலிய இந்தப் புராணத்தை இயற்றியிருக்கிறார், பிள்ளை அவர்கள். வேதாந்த மடத்தைச் சார்ந்த கோயிலாதலின் அத்துவித வேதாந்தக் கருத்துக்களையும் பரிபாஷைகளையும் அங்கங்கே அமைத்திருக்கிறார். வருணனைகளும் ஐந்திணை இயல்புகளும் இருதுக்களின் இயல்பும், துதிகளும் இப்புராணத்தில் வருகின்றன.

பாயிரத்தில் கோயிலூர் வேதாந்த மடத்தின் முதல் ஞானாசிரியரைப் போற்றுகிறார்.

மேயபெருங் கழனிநகர் கோயிலூர் எனும்பேர்
மேவஇறை ஆலயத்தை விரித்த அருட் பெரியோன்,
பாயபுனல் திரண்டாலி ஆயதெனச் சுத்த
பரப்பிரமம் இவ்வுருக்கொண் டுற்ற தெனும் புரணன்,
ஆயபுகழ் வேதாந்த சிரவணம்செய் துலகில்
அளவிலர்சை தன்னியமா கப்புரிந்த அறவோன்
தூயமுத்தி ராமலிங்க தேசிகன் என் றுரைக்கும்
சோதிலிங்க சொரூப னென்னும் சோதியை ஏத்தெடுப்பாம்

இந்த நூலைச் செய்வித்த சிதம்பரதேசிகரைப்பற்றி ஒரு செய்யுளில் சொல்கிறார்

மேலாய துறவினுக்கோர் துணையாகி உள்ளான்,
விரிந்துபல புவனமும்காண் றிடுசோற்றிற் கண்டோன்,
நாலாய மறைமுடிவின் பொருள்விளங்க எடுத்து
நல்மாண வர்க்கருளித் தன்மயமாக் கிடுவோன்;
பாலாய சிவதருமம் பற்றப்பா லிப்போன்,
பரப்பிரம சுவாநு பூதியிற் சிறந்த மேலோன்,
நூலாய யாவும்உணர்ந்த தவர்மனுவின் எடுத்து
நுவலுமொரு சிதம்பரதே சிகனெனும்மா பெரியோன்

வேதாந்தக் கருத்துக்களை இவர் ஆளுவதற்குச் சில உதாரணங்கள்:

'பளிங்குப் பாறையில் யானையின் வடிவத்தைக் கண்டு வேடர்கள் யானையென்றெண்ணி வேலை எறிந்து, பிறகு உண்மையை உணர்ந்து நாணுவார்கள். அவித்தையையுடையவர்கள் கற்பிதப் பிரபஞ்சத்தை உண்மையென்று' கருதி அழலிலிட்ட மெழுகு போல் உருகி, பின் உண்மை தெரிந்து அவா அற்று நாணுதல் போல இருக்கிறது இந்தக் காட்சி?'' (நாட்டுப் படலம் 23)

'தத்துவமசி என்பதிலுள்ள மூன்று பதங்களின் உண்மையை முறையாக விசாரம் செய்து பிறகு நிஷ்டை கூடி, எல்லாவற்றையும் தாமாகக் கண்டு இரப்பவர்கள் பலர். அவர்களுக்குப் பணி செய்வதை மேற்கொண்டு நிற்கும் குழாங்கள் ஒருசார் இருக்கும். (திருநகரம். 70)

சூதமுனிவனைச் சொல்லும்போது:

"சத்திய ஞான வனந்தநிட் களமாய்த்
தற்பர சொரூபமாய் விபுவாய்
நித்திய நிமல நிரஞ்சன முதலாய்
நிறைவுறு பேரொளிப் பிழம்பாய்
மெத்திய உயிரின் அபேதமாய் என்றும்
விளங்கிடும் ஒருபர சிவமே
பொத்திய தான்என் றுணர்தரு துணிபோன்
புகழ்மிகு சூதமா முனிவன்"

என்று பாராட்டுகிறார். சிவமே தான் என்றுணர்ந்தவன் என்பதில் அத்வைதக் கருத்து அமைந்திருக்கிறது.

உபநிடதப் பொருள் உரைத்த படலத்தால் முழுக்க முழுக்க அத்வைத வேதாந்தக் கருத்துக்களையே சொல்கிறார்.

பிரமத்தை உணரும் உபாயம் எதுவோ அதுவே பிரமவித்தை, அதைப்பற்றிய விரிவான கருத்துக்கள் இப்படலத்தில் வருகின்றன. பரிபூரணமாய், சச்சிதானந்த சொரூபமாய், பரம அத்துவிதப் பிரத்தியக பின்னமாய் ஒளிரும் பிரமத்தை உணர்தர முக்கியமாகச் சொல்லப்பட்ட உபாயமே பிரமவித்தை' (52) என்பது ஒருபாட்டின் பொருள்.

'கும்பம் முதலிய காரியங்கள் காரணமாகிய மண்ணே ஆவது போலவும், அரவு மாலை தடி முதலிய தோற்றங்கள் கடைசியில் கயிறாக முடிவது போலவும் ஜீவேசுவரஜகத்தாய்த் தோன்றும் நானாவித நாம ரூபஜகத்தென்பதுவும் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சுத்த பரமாத்துவித பரமசிவ சொரூபமேயாம்' (73) என்று ஒரு பாட்டுச் சொல்கிறது.

இவ்வாறு கோயிலூர்ப் புராணம், மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றின் பெருமையையும், இறைவனுக்கும் இறைவிக்கும் பல திருநாமங்கள் உண்டான வரலாற்றையும், இங்கே வழிபட்டுப் பேறு பெற்றவர் கதைகளையும் சொல்கிறது. இடையே சிவபெருமான் துதியும், அம்பிகை துதியும் வருகின்றன. நாடு, நகரம் ஆகியவற்றின் சிறப்பு, ஐந்திணைகளின் வருணனை முதலிய இலக்கிய அமைதியுள்ள பகுதிகளையும் இதில்காணலாம்.

வரலாற்றில் கோவிலூர்

**பல நூற்றாண்டுகளுக்கு முன்:
கோவிலூரில் ஒரு சிவன் கோயில், மிகச் சிறு அளவில் காட்டுக்குள் செம்பூரான் கல்லில் இருந்தது.**

கி. பி.

1761 சிருங்கேரி சங்கராச்சரிய சுவாமிகள் வேதாந்த மரபில் வந்த உகந்த லிங்க ஞான தேசிக சுவாமிகள் அவதாரம்

1791 காரைக்குடியில் நகரத்தார் மரபில் ஆண்டவர் முக்திராமலிங்கம் அவதாரம்

1810 காரைக்குடி முக்திராமலிங்கம் பொருள் வைத்த சேரியில் உகந்த குரு சுவாமிகளிடம் வேதாந்த பாடம் பயின்று வாசிட்டம் வரை பாட சமாப்தி செய்தார்

1818 கழனிவாசல் கொற்றவாள் ஈசுவரர் – திருநெல்லை நாயகி அம்மன் கோயிலை ஆண்டவர் கல்திருப்பணியாக்கினார். கோவிலைச் சுற்றி அமைந்துள்ள ஊருக்கு கோவிலூர் என்று பெயர் வழங்குவதாயிற்று. மடம் நிறுவ அடிகோலப் பெற்று, வேதாந்த நூல்களையும் ஞான வாசிட்டம் முதலியவற்றையும் கற்பிக்கத் தொடங்கினர்.

1819 உகந்தலிங்க சுவாமிகள் பரிபூரணம்

1819 உகந்தலிங்க சுவாமிகள் அதிஷ்டானம் : ஈசான்ய ஞானதேசிக அதிஷ்டானம் மடம்.

1847 கோவிலூர் ஆண்டவர் பரிபூரணம்

1847 கோவிலூரில் இரண்டாவது பட்டமாக துறவு ஆண்டவர் என்ற அருணாசல ஞான தேசிக சுவாமிகள் அருள் ஆட்சி ஏற்றனர்.

1847 யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் தொடர்பு

1849 துறவு ஆண்டவர் பரிபூரணம்

1849 மூன்றாவது பட்டமாக கருணாநிதி சுவாமிகள் என்ற சிதம்பர ஐயா, சிதம்பர ஞான தேசிகர் என்னும் பெயருடன் அருள் ஆட்சி ஏற்றனர்.

1850 முத்துராமலிங்க ஆண்டவரை மகாலிங்க மூர்த்தியாகவும், துறவு ஆண்டவரை நந்தியாகவும் அமைத்து, இருவருக்கும் ஒன்றாய்க் கருவறை முதலியனவற்றைக் கருங்கல் திருப்பணியாக அமைத்து, கருணாநிதி சுவாமிகள் குடநீராட்டுச் செய்தனர்.

1850 மதுரையில் குட்டைய சுவாமிகள் மடம் நிறுவப் பெற்றது.

1850 மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை கோவிலூர்ப் புராணம் பாடினார்கள்.

1858 சிதம்பரம் மூலட்டான ஈசுவரர் கோவிலில் சுவர்ண பந்தன மஹா கும்பாபிஷேகம் செய்வித்தது (காளயுக்தி – ஆனி 14)

1865 மதுரை மீனாட்சி அம்மன் கோயில் திருப்பணியை முடித்து, குடநீராட்டு விழாவைக் கருணாநிதி சுவாமிகள் நடத்தி வைத்தார்கள்.

1876 கருணாநிதி சுவாமிகள் பரிபூரணம்.

1876 நான்காவது பட்டமாக இராமசாமி ஞான தேசிக சுவாமிகள் அருளாட்சி ஏற்றார்கள். அஷ்ட லெட்சுமி மண்டபமும், கோவிலைச் சுற்றிப் புதிதாகத் திருமதிலும், கோவிலூரில் கட்டினார்கள்.

1883 இராமசாமி ஞான தேசிக சுவாமிகள் பரிபூரணம்.

1883 ஐந்தாவது பட்டமாக, திருக்களர் ஆண்டவர் என்று பெரும் புகழ் பெற்ற வீரப்ப சுவாமிகள் வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் என்ற திருநாமத்துடன் கோவிலூரில் அருள் ஆட்சி ஏற்றார்கள்.

அடுத்த பத்து ஆண்டுகளில் கோவிலூர் விரிவடைந்தது.

1890 திருங்கேரியில் கல் திருப்பணிகள்

1890–1910 திருக்களரில் கல் திருப்பணிகள் – திருக்களர் ஸ்ரீ பாரிஜானவனேஸ்வரர் கும்பாபிஷேகம்

1908 திருநெல்லை நாயகி அம்மனுடன் கூடிய கொற்றவாள் ஈசுவரர் கோயில் குட நீராட்டு விழா (கீலக சித்திரை 11)

1910 பொருள்வைத்தசேரியில் சொர்ணபுரீசுவரர் சௌந்தரநாயகி அம்மன் கோயில் திருப்பணி (அந்நாளில்) ஒன்றே கால் லட்சம் ரூபாய்ச் செலவில் நிறைவேறியது.

1911 திருக்களர் ஆண்டவர் பரிபூரணம்.

1911 அண்ணாமலை ஞான தேசிகர் ஆறாவது பட்டமாக எழுந்தருளினார்கள்.

1918 அண்ணாமலை ஞான தேசிகர் பரிபூரணம்.

1918 ஏழாவது பட்டமாக மகாதேவ ஞான தேசிகர் அருளாட்சி ஏற்றார்கள்.

1927 செப்டம்பர் 11–ல் கோவிலூர் ஆதீனத்தைச் சேர்ந்த சிதம்பரம் கோ. சித. மடாலயத்துக்கு மகாத்மா காந்தியடிகள் வந்து இங்கு ஒரு நாள் தங்கியிருந்தார்கள். காந்தி மகானுக்கு மடாலயத்தின் சார்பில் பரஞ்சோதி சுவாமிகள் பண முடிப்பும் வரவேற்பும் கொடுத்தார்கள்.

1929 ஏப்ரல் 6–ம் நாளில் கானாடுகாத்தான் சா. ராம. மு. அ. அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கு ஆங்கிலேய அரசாங்கத்தாரால் 'செட்டி நாட்டரசர்' என்ற பட்டம் வழங்கப் பெற்றமைக்கு நகரத்தார்கள் கோவிலூரில் பாராட்டு விழா நடத்தினார்கள்.

1929 நகரத்தார்களில் பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பதற்கு, பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாரிடம் பணம் பெற்றுக் கொள்ளும் பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி

வைக்க, திரு. சொ. முருகப்பா அவர்களின் முயற்சியால் 96 ஊர்க் கூட்டம் கோவிலூரில் நடைபெற்றது.

1947 ஏழாவது பட்டம் மகாதேவ ஞான தேசிகர் பரிபூரணம். எட்டாவது பட்டமாக சோமசுந்தர ஞான தேசிகர் சுவாமிகள் அருளாட்சி ஏற்றார்கள்.

1948 எறும்பூரில் தத்துவராய சுவாமிகள் சமாதிக்கோயில் குடநீராட்டு விழா.

1954 கோவிலூர் ஆதீனம், இந்து சமய அறநிலையத்துறையின் ஆட்சிக்கு உட்பட்டதில்லை என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்தது.

1961 பொருள்வைத்தசேரி சௌந்தரிய நாயகி அம்மனுடன் கூடிய சொர்ணபுரி ஈஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம்

1969 ஸ்ரீகாசி முதலிய நகரச் சத்திரங்களின் நிர்வாகம் பர்மாவில் இருந்ததை மாற்றி இந்தியாவில் நிர்வாகச் சபை அமைக்க, கோவிலூரில் 96 ஊர்க் கூட்டம் நடைபெற்றது.

1971 சோமசுந்தர ஞான தேசிகர் பரிபூரணம்

1971 ஒன்பதாவது பட்டமாக இராமநாத ஞான தேசிகர் அருளாட்சி ஏற்றார்கள்.

1972 கோவிலூர் நுழைவாயில் முகப்புக் கோபுரங்கள் புதுப்பிக்கப்பெற்றன ஒரு லட்சம் ரூபாய் செலவில் மடம் புதுப்பிக்கப்பெற்றது.

1973 நகரத்தார்களின் திருமணம் முதலிய விசேடச் செலவுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்க, கோவிலூரில் 96–ஊர்க் கூட்டம் ஜுன் 16, 17 இரு நாட்களும் நடைபெற்றது. இதை யொட்டி குழிபிறை பெரி. சின்னக்கருப்பன் செட்டியார் அவர்கள் தலைமையில் நகரத்தார் மாநாடும் அப்போது பாங்க் ஆப் மதுரை சேர்மனாக இருந்த லெ. கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் இளைஞர் மாநாடும் கவியரசு கண்ணதாசன் அவர்கள் தலைமையில் கவியரங்கமும் நாட்டரசன் கோட்டை டாக்டர் மணிமேகலை மாதவன் அவர்கள் தலைமையில் மாதர் மாநாடும் நிகழ்ந்தன.

1974 திருப்புவனம் வேதாந்த மடாலயம் கோவிலூர் ஆதீனத்துடன் இணைக்கப்பெற்றது.

1975 இராமேசுவரம் நகரச் சத்திரத்திற்கு புதிய நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுக்கக் கோவிலூரில் 96–ஊர்க் கூட்டம் நடைபெற்றது.

1976 காளையார் கோவில் மடாதிபதி ஸ்ரீ அரு. இராமநாத சுவாமிகள், கோவிலூர் ஆதீனத்தின் இளவரசாக நியமிக்கப் பெற்றார்கள்.

1977 ஆதீனகர்த்தர் ஸ்ரீ இராமநாத ஞான தேசிக சுவாமிகள் காசியாத்திரை மேற்கொண்டு, அலகாபாத் – பிரயாகைக் கும்பமேளாவுக்கும் சென்று வந்தார்கள்.

1977 கோவிலூரில் சிவன் கோவில் திருப்பணி தொடங்கப் பெற்றது.

1977 காஞ்சி காமகோடிபீடம் புதுப்பெரியவர்கள் ஜெயந்திர சரசுவதி சுவாமிகள் கோவிலூருக்கு வருகை.

1977 கோவிலூரில் ஸ்ரீ சங்கர் குருகுலம் தொடங்கப் பெற்றது.

1978 கொற்றவாள் ஈசுவரர் திருநெல்லை நாயகி அம்மன் கோவில் குட நீராட்டு விழா.

1982 ஒன்பதாம் பட்டம் – ஸ்ரீ ல ஸ்ரீ இராமநாத ஞான தேசிக சுவாமிகள் விதேக முக்தி – அரு. இராமநாத ஞானதேசிக சுவாமிகள் பட்டம் ஏற்றல்.

1986 பதத்தாம் பட்டம் அரு. இராமநாத ஞானதேசிகர் முக்தி. பதினோராம் பட்டம் காசி விசுவநாத சுவாமிகள் பட்டம் ஏற்றல்.

1995 பதினோராம் பட்டம் காசி விசுவநாத சுவாமி முக்தி – ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப ஞானதேசிகர் பட்டம் ஏற்றல்.

கோயிற் திருப்பணிகள்

1977 திருவண்ணாமலை – ஈசான்ய ஞான தேசிகர் கோவில் குடமுழுக்கு.

2002 பொருள்வைத்தசேரி – ஸ்ரீ சௌந்தரவல்லி உடனாய ஸ்ரீ சொர்ணபுரீஸ்வரர் கோவில் குடமுழுக்கு.

ஸ்ரீலஸ்ரீ உகந்தலிங்க ஞானதேசிகர் திருக்கோவில் குடுமுழுக்கு.

2003 மருதவனம் ஸ்ரீ மருதவரீஸ்வரர் திருக்கோவில் குடமுழுக்கு.

2004 திருக்களர் ஆண்டவர் திருக்கோவில் குடமுழுக்கு.

2005 சிதம்பரம் ஸ்ரீமத் பொன்னம்பல சுவாமி திருககோவில் குடமுழுக்கு.

2006 மேட்டுப்பாளையம் (திருவண்ணாமலை) ஸ்ரீமத் சபாபதி சுவாமிகள் திருக்கோவில் குடமுழுக்கு.

2007 எறும்பூர் ஸ்ரீமத் தத்துவராய சுவாமிகள் திருக்கோவில் குடமுழுக்கு.

நடைபெற்றுவரும் திருப்பணிகள்

1. திருக்களர் ஸ்ரீ பாரிஜாதவனேஸ்வரர் திருக்கோவில் திருப்பணி.
2. கோவிலூர் திருநெல்லை திருக்கோவில் திருப்பணி.
3. ஸ்ரீ ஈசான்ய ஞானதேசிகர் திருக்கோவில் திருப்பணி.

கல்விப் பணிகள் பக். 9 பார்க்க

கட்டிடப் பணிகள் பக். 12 பார்க்க

யாழ்ப்பாணம் மகாவித்துவான் ஆறுமுக நாவலர் அவர்களும் கோவிலூர் மடமும்

கோவிலூர் மடத்தில் இரண்டாவது தலைவராகப் பட்டம் ஏற்று விளங்கியவர்கள் அருணாசல ஞான தேசிக சுவாமிகள். இவர்களைத் துறவு ஆண்டவர் என்ற பெயரால் குறிப்பிடுவது வழக்கம்.

அடைமொழி இன்றி, கோவில் என்ற சொல்லால் சுட்டப்படும் தலம் சிதம்பரம். அத்தலத்தில் துறவு ஆண்டவர் மிக்க ஈடுபாடு கொண்டு பல ஆண்டுகள் அங்குள்ள கேணி மடத்தில் தங்கியிருந்தார்கள். சின்னத் துறவு சுவாமிகளும் உடன் இருந்தார்கள்,

யாழ்ப்பாணம் மகாவித்துவான் ஆறுமுக நாவலர் (1822–1872) அப்போது சிதம்பரத்திற்கு தல யாத்திரை வந்திருந்தார். நடராசப் பெருமான் வீதி உலா நிகழ்ந்தபோது கோவிலூர் சுவாமிகள் இருவரும் அடியார் குழுக்களுடன் நின்று நடராசப் பெருமானை வழிபட்டுக் கொண்டிருந்ததை ஆறுமுக நாவலர் கூர்ந்து கவனித்தார். அவர்களைத் தொடர்ந்து அவரும் கேணி மடத்துக்குச் சென்று அங்கு அவர்களை வணங்கினார்.

'தாம் யார்?' என்று துறவு சுவாமிகள் வினவ,

'யான் வசிப்பது யாழ்ப்பாணத்து நல்லூரில். என் பெயர் ஆறுமுகம். நடராசப் பெருமானை வழிபடும் பொருட்டு இங்கு வந்தேன் என்று ஆறுமுக நாவலர் மறுமொழி கூறினார்.

பிறகு இவரைப்பற்றி விவரமாக அறிந்து துறவு ஆண்டவர் தக்க மரியாதை செய்தார்கள். ஆறுமுக நாவலர் நாள்தோறும் கேணி மடத்திற்கு வந்து போகலாயினார். ஒவ்வொரு நாளும் பிற்பகல் 3 மணி முதல் கந்தபுராணத்தை எடுத்துச் சொல்ல ஏற்பாடாயிற்று.

ஒரு நாள் துறவு சுவாமிகள், ஆறுமுகத்திடம் 'இன்று முதல் புராணங்களையே எடுத்துச் சொல்லி மக்களிடம் அதை பரவச் செய்ய வேண்டுமேயன்றிப் பாதிரிமார்களுக்குப் பாடம் சொல்லலாகாது' என்று ஆணையிட்டார்கள்.

அவ்வாறே, பாதிரிமார் தொடர்பை நிறுத்திப் புராணச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதிலும் சைவ, ஆகம நூல்களை இயற்றுவதிலும் ஆறுமுக நாவலர் ஈடுபட்டார்.

சாது சங்கம்

கோவிலூர் மடத்திற்கு சொந்தமான மடங்கள் 108, என ஸ்ரீ ல ஸ்ரீ காசிகானந்த ஞானாச்சாரிய சுவாமிகள் (ஸ்ரீ ல ஸ்ரீ வீரசேகர ஞான தேசிகரின் மாணாக்கர் மும் மொழி வல்லுனர், திருப்புவன மடத்தை தோற்றுவித்தவர்) கணக்கிட்டுள்ளார் அவற்றில் பல மடங்கள் சிதிலமான நிலையிலும் சாதுக்களை ஆதரிப்பதற்கு போதுமான வசதியும் இல்லாமல் இருந்தன.

அவற்றை சரிசெய்யவும் உதவவும் சாது சங்கம் என்ற அமைப்பை 1951ல் சுமார் ரூபாய் ஐம்பதாயிரம் மூல தனத்துடன் தொடங்கி பணி செய்து வந்திருக்கிறார்கள் என்பது மடங்களின் தோற்றமும், தற்போதைய நிலையும் என்ற அறிக்கை மூலமாக தெரிய வருகின்றது.

நூறு மடங்கள் அட்டவணை

1. கோவிலூர், முத்தி ராமலிங்க ஞான தேசி சுவாமிகள் மடம்.
2. திருக்களர், வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் மடம்
3. திருவண்ணாமலை, கந்தப்ப ஞான தேசிக சுவாமிகள் ஈசான்ய மடம்
4. மதுரை, தெற்கு வெளி வீதி, குட்டைய சுவாமிகள் மடம்
5. சிதம்பரம், பொன்னம்பல சுவாமிகள் மடம்
6. சிக்கல், பொருள் வைத்தசேரி, உகந்த லிங்க ஞான தேசிக சுவாமிகள் மடம்
7. மதுரை, தெற்கு வாசல், பிரஹ்மாநந்த சுவாமிகள் மடம்
8. திருவாரூர், மடப்புரம், தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடம்
9. சிதம்பரம், மௌன சாமிகள் மடம்.
10. மதராஸ், சூளை, வீர. சுப்பய்ய ஞான தேசிக சுவாமிகள் மடம்
11. மானா மதுரை நாராயண சுவாமிகள் மடம்
12. கோவில்பட்டி, முக்தானந்த சுவாமிகள் மடம்
13. தஞ்சாவூர், காந்தட்டான் குடி, பால் சுவாமிகள் மடம்
14. திருப்புவணம், காசிகாநந்த ஞானாச்சார்ய சுவாமிகள் மடம்
15. துறையூர், சின்ன மடம்
16. காளையார் கோவில், செல்லப்ப ஞான தேசிக சுவாமிகள் மடம்
17. மழ பாடி, ஸ்வயம்பிரகாச சுவாமிகள் மடம்.
18. சென்னை, வியாசர் பாடி, சிவப் பிரகாச சுவாமிகள் மடம்
19. எறும்பூர், தத்துவ ராய சுவாமிகள் மடம்
20. குடியாத்தம், பிச்சன் ஊர், வேலுச் சாமி மடம்
21. தஞ்சாவூர், சங்கர சாமி மடம்
22. பஞ்ச நதிக் குளம், அரு. வேதாந்த மடம்.
23. வேதாரணியம், கந்த சாமி, சாதுக்கள் மடம்.
24. சாக்கோட்டை, கோ. ராம. வீரப்ப சாமி மடம்.

25. வேப்பஞ்சேரி, நடராஜர் மடம்
26. புனல் வாசல், ராமசாமி சாமி மடம்
27. துறையூர், சிவப் பிரகாச சுவாமிகள் மடம்
28. கோயம்புத்தூர், பேரையூர், சாந்தலிங்க சுவாமிகள் மடம்
29. விருத்தாசலம், குமார தேவர் மடம்
30. திருப்போரூர், சிதம்பர சாமிகள் மடம்.
31. திரு அண்ணாமலை, பவழக் குன்று, அழகாநந்த சாமிகள் மடம்
32. மேட்டுப் பாளையம், சபாபதி சுவாமிகள் மடம்
33. பசுபதி கோவில், ஆறு முக சுவாமிகள் மடம்
34. திரிசிராப்பள்ளி, குன்றி மணிச் சாமி மடம்
35. திருவாரூர், மடப் புரம், சோம நாதன் கோவில் மடம்
36. திருவையாறு, சிங்கப்பூர் சாமி மடம்
37. நொச்சியம், மெய் கண்டார் மடம்
38. ஏகாம்பரக் குப்பம், சிவ சுப்பிரமணிய சாமி மடம்
39. வல்லனாடு, அறிவாநந்த சாமி மடம்
40. திருப்பரங்குன்றம், மகா தேவ சாமி மடம்
41. இடைக்காட்டூர், பரிபூர்ண சாமி மடம்
42. புதுச்சேரி, வேதாநந்த சாமி மடம்
43. இராமநாதபுரம், கைவல்யம், ராமாநந்த சாமி மடம்
44. திருஅண்ணாமலை, பூண்டி, மாணிக்க சுவாமிகள் மடம்
45. தேவனாம் பட்டு, சுப்பிரமணிய சுவாமிகள் மடம்
46. பழங்கோவில், பெரிய சாமி மடம்
47. பார்த்திபனூர், கூடல் அம்மாள் மடம்
48. திரிசிராப்பள்ளி, தாரா நல்லூர், சொக்க லிங்க சுந்தர மூர்த்தி சாமி மடம்
49. திரிசிரப்பள்ளி வரகன் ஏரி, திரிபுரை ஞான ஆசிரமம்
50. நாக லாத புரம் புதூர், அத்வைதாநந்த சாமி மடம்
51. வாணியம் பாடி, பொன்னம்பல சாமி மடம்
52. குடியாத்தம், நல்லூர் பேட்டை, வையாபுரிச் சாமி மடம்
53. கார்க்கூர், ராமாசிரமம், சிவராஜாநந்த சாமி மடம்
54. ஸ்ரீரங்கம், பூசப்படித் துறை, வேதாந்த மடம்
55. ராமேசுவரம், கந்த மாதந பர்வதம், சிவ ஆசிரமம்
56. காஞ்சீபுரம், மாத்தூர் சாமி மடம்
57. போளூர், விடோபா சாமி மடம்
58. திருக்கழுக் குன்றம் கருணாந்தா மடம்
59. பீளைமேடு, தபோவனம், சுந்தராநந்த சாமி மடம்
60. தஞ்சாவூர், களிமங்கலம், நடராஜ மூர்த்தி மடம்
61. பழநி, சாது சாமி ஆசிரமம்
62. பழநி, பட்டினச் சாமி மடம்

63. கரிசல் குளம், ஆறு முக சாமி மடம்
64. சிவகங்கை, மௌன சாமி மடம்
65. செட்டியார் குத்தகை, மொட்டைய சாமி மடம்
66. குன்றக் குடி, நித்தியாநந்த சாமி மேல மடம்
67. வேலூர், தோப்பாச் சாமி மடம்
68. மதுரை, யோகாநந்த சாமி மடம்
69. அகிலாண்டபுரம், சங்கர சாமி மடம்
70. குச்சன் ஊர், சோமசுந்தர சாமி மடம்
71. பொதட்டூர் பேட்டை, செ. அ.வ. மடம்
72. ராமகிருஷ்ண ராஜு பேட்டை, கந்த சாமி மடம்
73. காரியாறூர், தபோ வநம், நடேச சாமி மடம்
74. வளவநூர், ஷண்முக சாமி மடம்
75. ஹரிவெற்றி, சதாசிவ சாமி மடம்
76. விருத்தாசலம், கணபதி சாமி மடம்
77. ஆத்தூர், சங்கர நிலையம்
78. பவானி, ராம சாமி மடம்
79. காஞ்சீபுரம் திரிவேணி கிரி சாமி மடம்
80. மழபாடி, சின்ன மடம்.
81. ஆண்டியப்பன் காடு, பால் சாமி மடம்
82. பிள்ளையார்பட்டி, கோவிந்தாந்த சாமி மடம்
83. மதுரை, பசு மலை விவேகாநந்தா மடம்
84. இளையான் குடி, சிவாநந்த சாமி மடம்
85. கல்லல், சாதுக்கள் மடம்
86. புதுக்குடி, லக்ஷ்மி புரம், சொக்கலிங்க சாமி மடம்
87. பாலூர், சொரூபாநந்த சாமி மடம்
88. பழ முக்கல் (திண்டிவனம் வழி) ஆறுமுக சாமி மடம்
89. சேலம்–குகை, ராமாசிரமம்,
90. தக்கோலம், சொக்க லிங்க சாமி மடம்
91. கிருஷ்ணகிரி, அண்ணாமலைச் சாமி மடம்
92. திருநெல்வேலி, குறுக்குத் துறை, சிவாநந்த சாமிகள் மடம்
93. திரு அண்ணாமலை, ரமண ஆசிரமம்
94. பாடி, சிவப்பிரகாச சாமி மடம்
95. உத்தர கோச மங்கை, வெள்ளைய சாமி மடம்
96. கப்பல் ஊர், மடம்
97. திருப் புரம்பியம், மடம்
98. உள்ளிக் கோட்டை, மடம்
99. கலச பாக்கம், மடம்
100. சுவாமி மலை, மடம்

ஸ்ரீ தத்துவராய சுவாமிகள் மடம், எறும்பூதூர்

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விருத்தாசலத்திற்கும் சேத்தியாத்தோப்புக்கும் இடையே உள்ள சிற்றூர் எறும்பூதூர். இது இப்போது இரும்பூர் என்று மக்கள் வழக்கில் குறிப்பிடப்படுகிறது எறும்பூர் என்றும் சொல்லுகிறார்கள்.

சிதம்பரத்திற்கு மேற்குத் திக்கில் உள்ள இவ்வூரில் சில நூற்றாண்டுகளுக்குமுன் ஸ்ரீ சொரூபானந்த சுவாமிகள், ஸ்ரீ தத்துவராய சுவாமிகள் என்ற பெயர்களைக் கொண்ட இரு பெரும் ஞானிகள் இருந்தனர். அவ்விருவருள் ஸ்ரீ சொரூபானந்த சுவாமிகளிடம் அநுக்கிரகம் பெற்று வடமொழி தென் மொழி இரண்டிலும் வல்லுநராய், சித்தராய், ஞானியாய் விளங்கி விதேககைவல்யம் அடைந்தவர் ஸ்ரீ தத்துவராய ஞான தேசிக சுவாமிகள்.

தத்துவராய சுவாமிகள், ஈசுவர கீதை பிரமகீதை என்னும் நூல்களை வடமொழியிலிருந்து தமிழில் செய்யுள் வடிவாய் இயற்றியும், குருபக்தியின் மிகுதியினால் அடங்கன் முறை (தாலாட்டு முதலிய பதினெட்டுப் பிரபந்தம்) பாடுதுறை என்னும் இரு நூல்களையும் இயற்றியுள்ளார்.

சசிவன்ன போதம், அஞ்ஞவதைப் பரணி, மற்றும் சில வேதாந்த சாத்திரங்களையும், சித்தாந்த நூல்களையும் தத்துவராய சுவாமிகள் தாமாகவே இயற்றியுள்ளார்கள். பல நூல்களிலிருந்து பெருந்திரட்டு குறுந்திரட்டு என்ற பெயர்களில் திரட்டு நூல்கள் இரண்டை உலகுக்கு வழங்கியுள்ளார்கள். இந்நூல்கள் முழுவதையும் படித்துப் பார்த்து இவற்றின் நயங்களைச் சுவைத்து மகிழ்ந்த சிதம்பரம் கோ. சித. மடாலயத்து அதிபர் ஸ்ரீ பொன்னம்பல ஞான தேசிகர், ஸ்ரீ தத்துவராய ஞான தேசிக சுவாமிகளின் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்தார். ஸ்ரீ தத்துவராய ஞானதேசிக சுவாமிகளின் சமாதிக் கோயிலின் முன் மண்டபம் பிரகார மண்டபம், பாவுக்கல் வரிக்கல் முதலியவற்றை வெள்ளாற்றில் அணை கட்டுவதற்கு அக்காலத்தில் ஆங்கிலேயே அரசு எடுத்துக்கொண்டுபோனபோது அதை பொன்னம்பல சுவாமிகள் ஓரளவு தடுத்து நிறுத்தினார்கள். சுவாமிகள் இவ்வாறு தடுக்கும் போது கருநாகம் இருந்து சீற, ஆங்கிலேய ஆட்சியாளர்கள் அந்த முயற்சியை அந்த அளவில் கைவிட்டனர்.

பொன்னம்பல சுவாமிகளுக்கு, தத்துவ ராயரின் நூல்களில் ஈடுபாடு இருந்ததால் அவருடைய சமாதி எங்கு உள்ளது என வினவி, எறும்பூருக்குச் சென்று பார்த்தபோது மேற்கண்டவாறு சமாதிக் கோயில் அழிந்தும், அழிக்கப்பட்டும், இலைக்கள்ளி புதர்களுக்குள் மறைந்தும் இருப்பதைக் கண்டார்.

அதைத் திருப்பணி செய்ய முடிவு செய்தபோது உய்யக்கொண்டான் சிறுவயல் சுப்பிரமணியன் செட்டியார் என்பார் கண் நோய் வாய்ப் பட்டிருந்தார். மருத்துவம் செய்யாமலே பொன்னம்பல சுவாமிகள் அருளால் மேற்படி சுப்பிரமணியன் செட்டியார் மீண்டும் கண்ணொளி பெற்றார். அவர் பர்மாவுக்குச் சென்று தாமே பெரும் பொருள் ஈட்டி அதைப் பொன்னம்பல சுவாமிகளுக்கு அனுப்பினார். சுவாமிகள் இவ்வாறு செட்டியார் பர்மிய நாட்டிலிருந்து அனுப்பிய பணத்தைக் கொண்டு தத்துவராயருக்குக் கருங்கற்கோயில் கட்டி முடித்தார். கோயில் காரியங்கள் முட்டின்றி நடைபெறுவதற்காக, அவ்வூரில் விளை நிலங்களும் வாங்கினார். ஆடி மாதத்துச் சதய நட்சத்திரத்தில் தத்துவராயர் குருபூசை சிறப்பாக நடைபெறுவதற்கு ஏற்பாடுகளையும் செய்தார்.

கர்ப்பக்கிரகம், விமானம், அர்த்த மண்டபம், நந்தி மண்டபம், பிராகார மண்டபம் ஆகியவற்றைக் கட்டி முடித்து ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் கி. பி. 1895 அளவில் ஸ்ரீ தத்துவராய ஞான தேசிக சுவாமிகளின் அதிஷ்டானக் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள் அதன் பிறகு, கோயிலை கோவிலூர் ஆதீனத்தில் ஒப்படைத்தார்கள். அதிஷ்டானத்துக்கு அன்று முதல் நித்திய பூஜை, குருபூஜை முதலியன கோவிலூர் ஆதீனத்தின் வாயிலாக நடைபெற்று வருகின்றன.

மேற்படி கோயிலில் விமானம், முன்மண்டபம், பிரகார மண்டபங்களில் சில பகுதிகள் ஆகியவை பழுதுபட்டிருந்ததைச் சீர்செய்து சர்வதாரி ஆண்டு ஆனித் திங்கள் 11ஆம் நாள் (24–6–1948) கோவிலூர் ஆதீனம் எட்டாவது குருமூர்த்தியான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான தேசிகர் அருளாட்சியில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது.

சிதம்பரம் கோ. சித, மடாலயத்தார் தத்துவராய சுவாமிகள் அருளிச் செய்த பாடுதுறை என்னும் அரிய நூலை 1953ல் வெளியிட்டுள்ளார்கள். இந்நூலில் சுவாமிகளின் சரித்திரச் சுருக்கம் உள்ளது.

கோவிலூர் ஆதீனம் ஒன்பதாவது குருமூர்த்திகளான ஸ்ரீலஸ்ரீ இராமநாத ஞானதேசிகர் அவர்களுடைய அருளாட்சியில், ஸ்ரீ தத்துவராய சுவாமிகளின் அதிஷ்டானம் நன்முறையில் பாதுகாக்கப்பெற்று குருபூசை முதலியன மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வந்தன.

இப்போது கோவிலூர் மடாலயத்தின் நேரடி பார்வையில் உள்ளது. சமீபத்தில் 2007 மே மாதம் 4ம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

எறும்பூர் ஸ்ரீமத் தத்துவராய சுவாமிகள் திருக்கோவில் 2005–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பெற்றுத் திருப்பணி தொடங்கப்பெற்றது.

கர்ப்பக்கிரஹத்தைத்தவிர மற்ற அர்த்தமண்டபம், மஹாமண்டபம் திருமதில் போன்ற எல்லாவற்றையும் முழுதுமாக இடித்துப் புதிய கல் உத்தரங்கள், தூண்கள் செய்து முற்றும் புதிய கல் திருப்பணியாக ஏறக்குறைய 28 லெட்சம் செலவில் இரண்டாண்டுக்கு மேல் திருப்பணி செய்து முடிக்கப்பெற்றது. மேற்படி திருப்பணியை அனுபவம் மிக்க சிற்பக்கலாமணி பத்மஸ்ரீ முத்தையா ஸ்தபதிகளைக் கொண்டு மிக நேர்த்தியாகச் செய்யப்பெற்றுள்ளது.

2007–ஆம் ஆண்டு மே மாதம் 4–ஆம் தேதி ஆறுகால யாக சாலை பூஜைகளுடன் கும்பாபிஷேகம் நடைபெற்றது. சிதம்பரம் நடராஜர் கோவில் தீக்ஷிதர்களால் கும்பாபிஷேகம் நடத்திவைக்கப்பட்டது. வேதாந்த, இலக்கியக் கருத்தரங்குகள் இன்னிசை நிகழ்ச்சிகளுடன் ஏறக்குறைய 6 லெட்சம் செலவில் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. மேற்படி கும்பாபிஷேகத்தினை நம் குருமகா சந்நிதானம், ஜகத்குரு பூஜ்யஸ்ரீ தயானந்த சரஸ்வதி மற்றும் பல ஞானத் துறவிகள் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு திருவருளும் குருவருளும் பெற்றார்கள். தற்போது எறும்பூர் திருக்கோவிலுக்கு பக்தர்கள் வருவது மிக அதிகரித்துள்ளது.





எறும்பூர் மடாலயம்

உகந்தலிங்க ஞானதேசிக சுவாமிகள் மடம்

[கோ. ஆ. பொ. மடம்]

பொருள்வைத்தசேரி – சிக்கல்

காலடியில் தோன்றிய ஆதி சங்கர அத்வைத மரபில் வந்தவர்கள், உகந்தலிங்க ஞான தேசிக சுவாமிகள் அவர்கள், சுவாமிகளின் காலம் 1770–1819. இவர்களிடமே, கோவிலூர் ஆண்டவர் வேதாந்த நூல்களைப் பயின்றார்கள். 1819இல் இம்மடம் கோவிலூர் ஆண்டவரால் கட்டப்பெற்றது. அதன் பின்னர் 42 ஆண்டுகள் வீரபத்திர சுவாமிகள் இந்த மடத்தின் தலைவராக இருந்தார்கள்.

திருக்களர் ஆண்டவரின் மாணவர் மெய்யப்ப ஞான தேசிகர் காலத்தில் சொர்ணபுரீசுவரர் – சௌந்தரிய நாயகி அம்பாள் கோவிலுக்கு ஒன்றே கால் லட்சம் ரூபாய் செலவில் (1910ம் ஆண்டு அளவில்) திருப்பணி செய்தார்கள். மடத்தைப் புதுப்பிக்கவும் விரிவாக்கிக் கட்டவும் ரூ. 50,000/– செலவிட்டார்கள். விளை நிலங்களும் வாங்கினார்கள்.

1910–ல் முடிவுபெற்ற திருப்பணிக்கு கோவிலூர் ஆதீன கர்த்தர் மகாதேவ ஞான தேசிக சுவாமிகள் சொல்லியவாறு காரைக்குடி நா. வ. மெய்யப்பச் செட்டியாரும், நகரத்தார் பலரும் பெரும் பொருள் வழங்கினர். காரைக்குடி சா. நா. அ. சொ. சொக்கலிங்கம் செட்டியார் உதவிய பொருளைக் கொண்டு விநாயகர், துர்க்காம்பாள் கோவில்கள் கட்டப்பெற்றன. மீண்டும் திருப்பணி வேலை நடைபெற்று கும்பாபிஷேகம் 19–5–1929–ல் செய்யப்பெற்றது.

கோ. ஆ. பொ. மடாலயத்தின் பொருளைக் கொண்டு சொர்ணபுரீசுவரர் கோவிலும், உகந்த ஞான தேசிகர் கோவிலும் புதுப்பிக்க பெற்று 1961–ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

இந்த மடத்தின் தலைவராக இருந்திருப்பவர்கள் வருமாறு:

1. வீரபத்திர சுவாமிகள்
2. சிங்காரவேல் சுவாமிகள்
3. முத்தைய சுவாமிகள்
4. சட்டையப்ப சுவாமிகள்
5. மாரிமுத்து சுவாமிகள்
6. மெய்யப்ப சுவாமிகள்
7. கோவிலூர் ஆதீனம் (ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள்)
8. இராமலிங்க சுவாமிகள்

1997ல் சோம. இராமலிங்க சுவாமிகள் பரிபூரணம் அடைந்த பின்னர், கோ. ஆ. பொ. மடம், கோவிலூர் ஆதீனகர்த்தர் நேரடி மேற்பாவையில் இருந்து வருகிறது. 2002ல் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. 2003ல் விருந்தினர் மாளிகை கட்டிச் செயல்பட்டு வருகின்றன. (இவை குறித்துத் தனியே செய்திகள்)





பொருள்வைத்தசேரி மடாலயம்

உ

ஸ்ரீ குருவே துணை

கோவிலூர் கொற்றவாளீசர் திருக்கோயில்

சாலிவாடி என்றும் கழனிவாசல் என்றும் பெயருடைய ஊரில் சிவகுப்தன் என்ற தனவணிகன் இருந்தான். அவன் மனைவி சுதன்மை. இவர்கள் இருவரும் அரன்நாமம் ஓதித் திரிபுவனேசுவரரைப் பக்தி செய்து வந்தார்கள். அவர்களுடைய அருமை மகள் அரதனவல்லி. சுதன்மை திரிபுவனேசையிடம் மிகுந்த பக்தியுடையவள்.

அம்பிகையின் திருக்கோவில் அருகில் சிவகுப்தனுடைய வயல் இருந்தது. உயர்ந்த சாலிவாடி நெல் கதிர் முற்றத் தொடங்கியிருந்தது. அரதனவல்லியைக் காவலுக்கு அனுப்பினார்கள். அவள் விளையாட்டுப் பெண். கழனிக்கே போகாமல் மலர்ச்சோலையில் சென்று விளையாடிக்கொண்டிருந்தாள்.

கோவிலில் குடிகொண்டிருந்த தேவி சுதன்மையின்பால் அன்பு கொண்டு தானே அரதனவல்லியாக வடிவமெடுத்து வயலுக்குக் காவலாக நின்றாள்.

நடுப்பகலில் 'குழந்தைக்குப் பசிக்குமே' என்று தயிர் சாதம் பிசைந்து எடுத்துக்கொண்டு பெண்ணைத் தேடிச் சென்றாள் சுதன்மை. பரப்பின்மீது சமர்த்தாக உட்கார்ந்து கொண்டு கொம்பினால் கிளிகளை ஓட்டிக்கொண்டிருந்த மகளைப் பார்த்து மகிழ்ந்தாள். வெய்யிலில் சிரமப்படுகிறாளே என்ற பரிவோடு கையில் தயிர்சாதம் எடுத்துப் போட அரதனவல்லி ருசித்துச் சாப்பிட்டாள். கொஞ்ச நேரம் கழித்து அரதனவல்லி வந்து 'அம்மா! பசிக்கிறது'' என்றாள். ''என்னடி இது!! இப்போது தானே உனக்குச் சாதம் போட்டுவிட்டு வந்தேன். ஆவலாகச் சாப்பிட்டாயே! அதற்குள் பசியா?'' என்று திகைத்தாள் சுதன்மை.

அரதனவல்லி தான் வயல் பக்கமே போகவில்லை என்று கூறியதும் சுதன்மை அதிசயத்தில் ஆழ்ந்தாள். தேவியின் கருணையே இது என்று உணர்ந்து கொண்டாள். சிவகுப்தனும் சுதன்மையும் அன்னம் உண்டு அருள்புரிந்த தேவியை மனமுருகிப் போற்றினார்கள்.

நெல்லைக்காத்த அம்பிகைக்கு திருநெல்லை நாயகி என்றும் சாலிவாடீச்வரி என்றும் பெயர் வந்தது.

சிறுமணி சம்பாவைச் சமைத்துக் கட்டித் தயிர் விட்டுக் கலந்து மணக்க மணக்கத் தாளித்துக் கொட்டி வாழைக் குருத்தில் சாப்பிட்டால் அன்னை ததியோன்னப் பிரியையாக இருப்பதில் அதிசயமென்னவென்று தோன்றும்.

கோவிலூர்ப் புராணத்தில் உள்ள பல கதைகளில் இதுவும் ஒன்று. காரைக்குடிக்குச் சமீபத்திலுள்ள கோவிலூர். மதுப்ரிய முனிவர் தவம் செய்த தலம். அவருடைய தவச்சிறப்பால் இந்த ஊர்க் குளத்துக்கு மதுபுஷ்கரிணி என்றும் அருகில் ஓடும் ஆற்றுக்குத் தேனாறு என்றும் பெயர் விளங்குகிறது.

கோவிலூர் இன்னும் பல காரணங்களால் பெருமை பெற்றிருக்கிறது. கோவிலை வைத்துத் தோன்றிய ஊர் இது. திரிசிரபுரம் மகாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் தெள்ளு தமிழில் தலபுராணம் பாடிய ஊர். வேதாந்த வடமொழி நூல்களை வடமொழி அறியாதாரும் பயிலத் தமிழாக்கம் செய்து தமிழில் பாடம் சொல்லும் முறையைத் தொடங்கிய ஊர். ஆண்டவர் என்ற மகான் வேதாந்த மடம் நிறுவிய ஊர். ஞான மார்க்கத்தை, ஆதி சங்கர பகவத்பாதருடைய அத்வைத தத்துவத்தை உணர்ந்த ஞானியர் மடத்தலைவர்களாக விளங்கிய ஊர்.

ஞான மார்க்கத்தில் ஈடுபடுவதற்கு மனப்பக்குவமே தகுதி: பிறப்பு ஒரு தடையல்ல என்பதை நிலைநாட்டினார் கோவிலூரர் ஆண்டவர். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு காரைக்குடியில் நகரத்தார் குடியில் தோன்றிய முத்திராமலிங்கம் சிறுவயதில் சிக்கல் க்ஷேத்திரத்தில் பெற்றோருடன் வசித்து வந்தார். அருகில் பொருள்வைத்தசேரி என்ற சிற்றூரில் உகந்தலிங்க சுவாமிகள் என்ற ஞானி இருந்தார். அவர் நெசவுத் தொழில் செய்பவர். சங்கரருடைய வேதாந்த சாரத்தை அறிந்த பெரியார், அவரிடம் முத்துராமலிங்கத்திற்குப் பக்தி உண்டாயிற்று. உகந்தலிங்க சுவாமிகள் அவருக்கு வேதாந்த நூல்களைப் பாடம் கூறி வந்தார்.

ஒரு சமயம் இளைஞனாக இருந்த முத்துராமலிங்கத்தைப் பார்த்த வடநாட்டு யோகி ஒருவர், "இவன் உலகத்துக்கே உபதேசிக்கப் பிறந்தவன்" என்றாராம். அதுமுதல் அனைவரும் அவரை ஆண்டவர் என்று அழைக்கத் தொடங்கினார்கள்.

வேதாந்த நூல்கள் பல கற்றபின் கடைசியாக ஞான வாசிட்டம் படித்துப் பூர்த்தி செய்வது முறை. வசிஷ்ட முனிவர் ஸ்ரீராமபிரானுக்கு உபதேசித்ததன் சாரம் இந்த நூல். வாசிட்டம் படித்த பின்னர் குருவுக்கு தக்ஷிணை கொடுத்து மரியாதை செய்து அவர் அனுக்ரகம் பெறவேண்டும். ஆண்டவர் தம் தந்தையிடம் குரு தக்ஷிணைக்காகப் பொருள் கேட்டார். தகப்பனார் காதில் விழாத மாதிரி இருந்தார். கோபம் கொண்ட ஆண்டவர், "காது செவிடாகி விட்டதா?" என்று கேட்டார். அந்த விநாடி முதல் தந்தைக்குக் காது கேட்கவில்லை. பிறகு உகந்தலிங்க சுவாமிகள் கூறியபடி ஆண்டவர் திருநீறு கொடுக்கவே மறுபடியும் காது கேட்க ஆரம்பித்தது.

இப்படி இறைவன் அருளைப் பெற்ற ஆண்டவர் காரைக்குடியிலிருந்தபோது கழனிவாசல் தலத்திலுள்ள அருள்மிகு நெல்லையம்மை, கொற்றவாளீசர் இருவரையும் வழிபடுவது வழக்கம். ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்தப் பகுதியில் ஏழகப் பெருந்தெரு என்ற வணிகப் பெருமக்களின் குடியிருப்பும் அவர்களுக்குப் பாதுகாப்பாக ஒரு படையும் இருந்தது. இந்தப் பகுதியில் பல ஆலயங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று கொற்றவாளீசர் கோவில். வீரசேகர பாண்டியன் என்ற அரசன் இப்பகுதியில் ஆண்டு வந்தான். வேட்டையாடச் சென்றபோது அவனுடைய வாள் தொலைந்து போய்விட்டது. தேடிப்பார்த்தபோது ஒரு சிவலிங்கத்தின் அருகில் அது கிடைத்தது. மனம் மகிழ்ந்த பாண்டியன் ஈசனுக்குக் கோவில் எழுப்பினான். ராஜகட்கபரமேசுவரர் என்றும் கொற்றவாளீசர் என்றும் அவருக்குப் பெயர் உண்டாயிற்று.

இந்தக் கோவில் நாளாவட்டத்தில் சிதில மடைந்து மக்கிய கீத்துக்களால் கூரை வேயப்பட்டிருந்தது. ஒருநாள் ஆண்டவர் அங்கே இருந்தபோது இடிமழையுடன் காற்று வீசவே கூரை விழுந்து விட்டது. அப்போதே அவர் நெல்லையம்மனுக்கும் கொற்றவாளீசர்க்கும் கருங்கல் திருப்பணி செய்யச் சங்கல்பம் செய்து கொண்டிருக்க வேண்டும். இந்த எண்ணத்தை மிக உன்னதமான முறையில் அவர் நிறைவேற்றினார்.

கோவிலருகிலேயே வேதாந்த மடம் நிறுவி சாதுக்கள் எந்தவித விசாரமும் இன்றி வேதாந்த பாடங்கள் கேட்டுப் பயனடையவும் தமிழ் நாடெங்கும் ஆதி சங்கரரின் அத்வைதக் கொள்கை பரவவும் வகை செய்தார்.

ஒருவருக்குப் பின் ஒருவராகக் கோவிலூர் மடத்துப் பீடாதிபதிகளாக விளங்கிய ஐந்து மடாதிபதிகள் காலத்தில் திருப்பணிகள் நடைபெற்று இந்தக் கோவில் மிகவும் அழகாக விளங்குகிறது. திருக்குளம், நீராழி மண்டபம், மாடவீதிகள், பாடசாலை, குடியிருப்பு வீடுகள் ஆண்டவர் பின் வந்தவர்களுடைய அதிஷ்டான கோவில்கள் என்று விரிவடைந்து பொலிவு பெற்றது கோவிலூர்.

கோவிலூரில் ஐந்தாவது பட்டத்தில் விளங்கிய திருக்களர் ஆண்டவர் காலத்தைப் பொற்காலமென்று பாராட்டிப் புகழ்கிறார்கள். ஆண்டவர் தொடங்கிய திருப்பணிகளை நிறைவேற்றியது இந்த மகானே என்றும் கூறுகிறார்கள். மலாயா நாட்டில் வாழ்ந்த நகரத்தார் பெருமக்கள் இவருடைய காலத்தில் கோவிலுக்குப் பொருளை வாரி வழங்கினார்கள். நித்திய பூஜைகளும், ஆடிப்பூர உற்சவமும் குறைவின்றி நடைபெறச்

செய்ததோடு 1908 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகமும் செய்து வைத்தார். அப்போது சிருங்கேரி பீடத்தை அலங்கரித்த ஜகத்குரு ஸ்ரீஸச்சிதானந்த சிவ அபிநவ நரசிம்ம பாரதி அவர்கள் தாமே நேரில் வந்திருந்தார்கள்.

கோவிலூரை நெருங்கும் போதே இரு உயரமான ரதம் போன்ற மண்டபங்கள் தெரிகின்றன. அங்கிருந்து பார்த்தாலே தூரத்தில் கோபுர தரிசனமாகிறது. அருகில் செல்லச் செல்ல மற்ற கோபுரங்களும் புலனாகின்றன. கோவிலெதிரே எட்டுப்பட்டை வடிவத்துடன் கூடிய நீராழி மண்டபமும் தெப்பக் குளமும். சில சிறுவர்கள் நீந்தி விளையாடுகிறார்கள். குளத்தின் தெற்கு வீதியில் கோவிலூர் மடம். வடக்கில் வீடுகள். கிழக்கில் தென்னை மரங்கள். அமைதி நிலவுகிறது. ஞானத்தேட்டமுடைய தபோதனர் உறையுமிடம் அல்லவா?

சுதன்மையின் மகளாக வந்து தயிர் சாதம் விரும்பி உண்ட பெருமாட்டியான நெல்லையம்மன் சந்நிதியில் நிற்கிறோம். கோவிலூர்ப் புராணம் இந்தத் தேவியை சத்தியஞானானந்த ரூபி என்றும், அத்வைத சொரூபி என்றும், புகழ்கிறது.

பளபளவென்று இழைத்த கருங்கற்களால் கட்டப்பட்ட கருவறைகள். அதைச் சுற்றி நீர் நிரப்புவதற்காக ஓடை. வேனில் காலத்தில் அம்மை அப்பன் இருவருக்கும் குளிர்ச்சியாக இருக்க நீர் நிரப்புவார்களாம். தளத்தில் இத்தாலி தேசத்து மார்பிள் கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன.

ஆடிப்பூர உற்சவத்தின் கடைசி நாள். திருக்கல்யாண மகோத்ஸவம் நடக்கப் போகிறது. தேவிக்கு அலங்காரம் நடைபெறுகிறது. மடத்திலிருந்து மரப்பெட்டியொன்று வருகிறது. திரு. செல்லமணி குருக்கள் அதைத் திறக்கிறார். அம்பாளுடைய கவசம். குமுத மலர்க்கரமும், திருவடிகளும் சாத்தி, கண்டமாலை ஒட்டியாணம் அணிவித்து, புருவத்தில் சந்தனம் இட்டு, மூக்குத்தி புனைந்து, மலர் மாலைகளைச் சூட்டியதும் புதுமணப் பெண்ணாகவே திகழ்கிறாள். குத்து விளக்குச் சுடர்விட அருட்சுடராக அவள் நிற்கும் அழகு இதயத்தை மலரச் செய்கிறது.

உற்சவமூர்த்திகள் மகா மண்டபத்தில் வீற்றிருக்கிறார்கள். முதல் நாள் கைலாஸ வாகனத்தில் தவமிருந்து இறைவன் தரிசனம் பெற்ற ஆடிப்பூர அம்மனுக்கு அலங்காரம் தொடங்குகிறது. நீலப்புடவையும் முழுக்கை ரவிக்கையும் அணிந்து அம்மன் காத்திருக்கிறாள்.

புருவமெழுதி சிரத்தில் முடியமைத்தாயிற்று. முழங்காலை அணைத்துக் கொண்டு அமர்ந்திருக்கும் அம்மன். ஆபரணப் பெட்டி வருகிறது. ஆகா! திவ்ய ஆபரணங்கள் ஜொலிக்கின்றன. மடத்துத் துறவி ஒருவர் ஒவ்வொன்றாக எடுத்துத் தருகிறார். அவற்றை அணிவித்துத் தலை கிரீடம் சூட்டியதும் ஆகா! மணப்பெண் களை வந்துவிட்டது! கடைசியில் பொற்கிளிகளைக் கரத்திலும் புயத்திலும் அமர்த்துகிறார். அடாடா! இந்தக் கிளிகளின் அழகை விவரிக்கவே முடியாது. அலகிலிருந்து மரகத மணி ஊஞ்சலாடுகிறது.

மணவாளரான ஸோமாஸ்கந்தரைப் பார்ப்போம். பொன் இழையால் கரைபோட்ட பட்டு அணிந்த மான் மழுவேந்தி அமர்ந்திருக்கிறார். சிரத்தில் கறுப்புத் துணி சுற்றி, கொம்பினால் இழைத்த திருமுடியைச் சூட்டுகிறார். தேவாதி தேவன் அணியும் மகுடம். என்ன கனம்!

அரிய வேலைப்பாடமைந்த மாங்காய் மாலை. பச்சை மரகதம் ஒளி சிதற பலத்த வைரமிழைத்த பதக்கம். காசு மாலை. பாகம் பிரியாளான உமையும் காசுமாலை பதக்கங்கள் அணிந்த பொன்னாடை புனைந்தவளாய் ரத்தினத்திருமுடி இலங்க மெல்லிய புன்னகையுடன் அருகே அமர்ந்திருக்கிறார்.

சீர்வரிசைகள் வந்தாயிற்று. பருப்புத் தேங்காய் வைத்தாயிற்று. வைரத் திருமாங்கல்யத்தைக் காட்டினார்கள். உலகநாயகி அணியும் மங்கல ஆபரணம் காண இன்று நம் கண்கள் கொடுத்து வைத்திருக்கின்றன!

வேதம் முழங்க, மறையோர் அக்னி வளர்க்க, மணியோசைகள் ஒலிக்க, மேளம் முழங்க திருமாங்கல்ய தாரணம் ஆகிவிட்டது. ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தமே!

சகல கல்யாண குணங்களும் நிரம்பப் பெற்று மஹாதேவனுக்கும், நித்ய கல்யாணிக்கும் நடைபெறும் திருமணம். சகல ஜீவராசிகளுடைய திருக்கல்யாணமும் இதில் அடங்கும்.

இந்த ஆனந்தத்தில் நாம் திக்குமுக்காடிக் கொண்டிருக்கும் போதே தீபாராதனை தொடங்குகிறது. அலங்கார தீபக்கால்கள் கலையழகுடன் செய்யப்பட்டவை. அடுக்குத் தீபமும், நாக தீபமும், ரிஷப தீபமும், கலச தீபமும் – எந்தக் காலத்திலோ வெள்ளியில் கழங்கு கழங்காகச் செய்யப்பட்டவை ஒவ்வொன்றாக ஏற்றித் தீபாராதனை செய்யும் போது இறைவனும், இறைவியும் நேரில் காட்சி தருவதாகவே பிரமை ஏற்படுகிறது.

கேரளத்தில் ஒரு கோவிலுக்குச் சென்றிருந்தபோது அன்பர் ஒருவர் உங்கள் தமிழ்நாட்டுக் கோவில்கள் எல்லாம் பொருட்காட்சி சாலை மாதிரி இருக்கிறது. கலை அம்சங்களில் கவனம் ஈர்க்கப்படுகிறது. எங்கள் கோவில்கள் எளிமையாக இருக்கின்றன. இங்கே சுவாமிதான் முக்கியம். அமைதி தவழும் சூழ்நிலை தியானம் செய்வதற்கு உதவும்' என்றார்.

தமிழ்நாட்டில் கோவிலை அழகு மயமாகச் செய்வதற்கும், தங்கள் கைவண்ணங்களை ஒவ்வொரு துறையிலும் கலைஞர்கள் காட்டுவதற்கும் ஒரு முக்கியமான காரணம் இருப்பதாகப் படுகிறது. கோடிக்கணக்கான அழகுப் பொருள்களைப் படைத்த ஈசுவரனுக்கு, நமது முயற்சியில் எது தலைசிறந்ததோ அதை அர்ப்பணிக்க வேண்டும் என்ற ஆவல் எழுவது இயல்பே அல்லவா? இந்த ஆசையே கலைச் சிறப்பு மிக்கக் கோவில்களைக் கட்டவும், திவ்விய ஆபரணங்களைச் செய்து சாத்தவும், இசையை அர்ப்பணிக்கவும்' நிருத்யம் செய்து காட்டவும் உந்தியிருக்க வேண்டும்.

இறைவனுடைய சிருஷ்டியில் உயர்ந்த நீரையும் நெருப்பையும், மலரையும், மணத்தையும் அவனுக்கே அர்ப்பணிப்பது போல மனிதனின் படைப்பில் தலைசிறந்தவற்றையும் கோவில்களில் ஈசுவரார்ப்பணம் செய்வதில் பெருமிதமடைந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் நாடெங்கிலும் காணப்படும் சிற்பக்கலையழகு மிளிரும் கோவில்களைக் கட்டி விழாக்கள் நடத்தும் வழிமுறைகளை வகுத்திருக்கவே முடியாது.

காரைக்குடியில் மகர் நோன்புத் திடலில் நடக்கும் அம்பு போடும் பெருவிழாவைக் காண இரு கண்கள் போதாது. கோவிலூரிலிருந்து கொற்றவாளீசர் ரிஷபவாகனத்தில் முதல் நாளிரவே புறப்பட்டுக் காரைக்குடி செல்லுவார்.

"பவனி வந்தனரே - மழுவிடை - பவனி வந்தனரே!
தடுப் தொரு கரம் கொடுப்ப தொரு கரம்
தரித்த சடர் மழு விரித்த தொரு கரம்
எடுத்த சிறு மறி பிடித்த தொரு கரம்
இலங்கும் அணி பணிதுவலங்க வே!
அடுத்த ஒரு புல கொடுத்த சோ மனும்
ஆனை கொடுத் தவிதானச் சே லையும்
உடுத்த திரு மருங் கசைய மல ரயன்
கொடுத்த பரி கலம் இசைய வே!
பவனி வந் தன ரே!"

என்ற திரிகூட ராசப்பக் கவிராயரின் திருவுலா வருணனை அப்படியே பொருந்தியிருப்பதைக் காண்கிறோம்.

மறுநாள் தசமியன்று மாலை காரைக்குடி நகரச் சிவன் கோவில் சுவாமி, கொப்புடையம்மன் கோவிலில் குடியிருக்கும் நாயகி, பெருமாள் கோவிலிலிருந்து திருமால் எல்லோரும் தலைப்பாகையும் இடுப்பில் உடைவாளும் அணிந்து கையில் வில்லேந்திப் பகைவர்களை அழிக்கக் குதிரை வாகனத்தில் புறப்படுவார்கள்.

நான்கு சுவாமியும் மகர் நோன்புத் திடலுக்கு வந்ததும் அம்பு போடும் நிகழ்ச்சி நடக்கும். குதிரைகள் சுற்றிச் சுற்றி வருவதும் பெட்ரோமாக்ஸ் விளக்கொளியில் ஜனங்கள் அங்குமிங்கும் ஓடுவதும் யுத்தம் நடப்பது போலவே பிரமை தட்டும். கடைசியாக எல்லா சுவாமியும் வரிசையாக நிற்கும் போது ஒரே சமயத்தில் தீபாராதனை செய்வார்கள். பதினாயிரக் கணக்கான மக்கள் கன்னத்தில் போட்டுக் கொள்வதைப் பார்ப்பதே ஒரு அனுபவம்.

தற்போது கோவிலூர் ஆதீனகர்த்தராக ஸ்ரீலஸ்ரீ ராமநாத ஞானதேசிக சுவாமிகள் இனிய இயல்புகள் அமையப் பெற்றவர். காளையார் கோவில் ஸ்ரீ அருணாசல சுவாமிகளிடம் பயின்றவர். காளையார் கோவில் மடம், சிதம்பரம் கோ. சித. மடாலயம், மதுரை குட்டைய சுவாமிகள் மடாலயம், முதலியவற்றுக்கு ஆதீனகர்த்தாவாக இருந்து நிர்வாகத் திறன் பெற்றவர். காசி யாத்திரை செய்ததோடு பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களையும் தரிசித்தவர். இவர்களுடைய ஆளுகையில் கோவிலூர் இன்னும் பெருமிதமுற்றுத் திகழும் என எதிர்பார்க்கலாம்.

கோவிலூரில் நெல்லையம்மன் சந்நிதி எதிரேயுள்ள மகா மண்டபம் சிற்ப விசித்திரங்களுடன் கூடியது. ஒரே கல்லில் செய்த தூண்களில் அதிசயிக்கும் படியான சிற்பங்களைக் காண்கிறோம்.

ஒரு தூணில் சரஸ்வதி தேவி வீணை வாசிக்க வருகிறாள். இன்னொரு தூணில் சாரதை அலங்கார பூஷிதையாகத் தரிசனம் தருகிறாள். ஊர்த்தாண்டவ நடராஜா. அவர் பாதங்களுக்கருகே காரைக்கால் அம்மையார். குடமுழா வாசித்துக கொண்டே கரங்குவித்த நிலையில் பிரும்மா. மீனாட்சி கல்யாண சிற்பம்.

எல்லாவற்றையும் விட நமது கருத்தைக் கவர்ந்தது, மனத்தை உருக்குவது ஸ்ரீமத் ஆண்டவர் அம்பாளுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யும் நிலையிலுள்ள சிற்பந்தான். வருபவர்களுக்கெல்லாம் சரணாகதி தத்துவத்தை விளக்கும் சிற்பமாக இது விளங்குகிறது. ஞானத்தைவிட பக்தியே எளிது. பக்தி செய்தாலே முக்தி பெறலாம் என்று நம்மைப் போன்றவர்களுக்கு ஊக்கம் தருவதாக அமைந்திருக்கிறது! ஆதிசங்கரர் பகவத் பாதாளும் பக்தியினால் இன்னும் எளிதில் ஈசுவர அனுக்கிரகத்தைப் பெறலாம் என்றுதானே போதித்தார்! சாத்திரங்களையெல்லாம் படித்து ஞானக்கடலாக விளங்கினாலும் பக்தியில் தான் இந்தப் பிறவியிலேயே சுகம் இருக்கிறது என்று கூறாமல் கூறுகிறார் ஆண்டவர்.

ஆனந்தி

சிற்பச் சிறப்புமிக்க திருக்கோயில்

கம்பன் அடிப்பொடி

கோவிலூர் என்பது வனப்பு மிக்க ஒரு சிற்றூர். கட்டிடக் கலையில் துறை போகியவர்கள் எல்லாம் கண்டு மகிழ்ந்து வியந்து பாராட்டும் மேம்பாடு, நோக்கு மிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் அழகும், சிற்பச் செறிவும் நிறைந்த திருக்கோயில், கண்கவர் மைய மண்டபத்துடன் கூடிய, பேரழகு பிலிற்றும் திருக்குளம்; நேர்மையும், செம்மையும் கூடிய மாட வீதிகள்; கட்டிடப் பொலிவின் ஒருமைப்பாட்டை உணர்த்தும வகையில் நாற்புறமும் அமைக்கப் பெற்ற கட்டிடங்கள் அல்லது சுவர்கள். பற்றறகன்ற பண்பினர் தங்கி, ஓதி அவனருள் நாடி, அமைதியுள் ஆழ்ந்து நற்றவம் புரி நன்மடம், இவை எல்லாம் சேர்ந்ததுதான் கோவிலூர்.

இப்பொழுது உள்ள கோவிலூர் என்பது தமிழ் நாட்டில் 10வது நூற்றாண்டில் மிகப் பிரபலமாக இருந்த கழனிவாயில் என்ற ஏழகப் பெருந் தெருவின் ஒரு பகுதியாகும். இந்த ஏழகப் பெருந்தெருவில் பல ஆலயங்கள் அன்று பிரபலமாக விளங்கின அவற்றுள் கொற்றவாள் ஈசர் கோயில் என்னும் ஆலயமும் ஒன்று மற்றொன்று ஏழகப் பெருமாள் விண்ணகரம்.

இவை அல்லாமல் கொற்றவை கோயில்கள் சிலவும் இங்கு இருந்தன. இன்றைய தினம் பிரபலமாக உள்ள காரைக்குடி நகரம் இதனுடைய ஒரு பகுதியே ஆகும்.

இன்று வரலாற்றுப் பெருமை மிக்கதும், மிக்க வீரம் செறிந்ததுமான ஏழகப் பெரும்படை இங்குதான் இருந்தது. அந்தப் பெரும் படைதான் மூன்றாம் குலோத்துங்க சோழனுக்கும் குலசேகர பாண்டியனுக்கும் நடைபெற்ற பெரும் போரில் சதுர்வேதமங்கலம் என்று இன்று வழங்கும் மட்டியூருக்குப் பக்கத்தில் பொருதி சோழப் படைக்கு பெருஞ்சேதத்தை உண்டாக்கியதாகும். இந்தப் படை அக்காலத்து முறைப்படி தனவணிகர்களைச் சார்ந்து அவர்களால் பேணிப் பரிபாலிக்கப்பட்ட படையாகும்.

இவ்வாறு வரலாற்றுப் பெருமைமிக்க ஊரில் ஏற்கெனவே இருந்த சிவபெருமானுக்குப் பத்தாம் நூற்றாண்டில் இருந்த வீர பாண்டியன் என்னும் மாவீரம் மிக்க மன்னன் தன்னுடைய கொற்றவாள் தொலைந்து போனது பிறகு கிடைக்க அருள் புரிந்ததற்காக ஓர் ஆலயம் எடுப்பித்து அந்தப் பெருமானுக்குக் கொற்றவாள் ஈசர் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தான்.

அந்தச் சிறு ஆலயம் பலவகையில் பழுது பட்டிருந்ததை எண்ணி மனம் வருந்திய கோவிலூர் ஆண்டவர் என்று புகழ் பெற்ற ஸ்ரீ ல ஸ்ரீ முத்துராமலிங்க ஞான தேசிக சுவாமிகள் மிக்க சிரத்தை எடுத்துக்கொண்டு அற்புதமான இந்த ஆலயத்தை அமைப்பதற்கு அடிக்கோலி ஏராளமான பொருட் செலவில் ஒரு பகுதியை நிறைவேற்றி முற்றிலும் நிறைவேறுமுன் அவர்கள் விதேக முக்தி அடைந்தார்கள்.

அவர்களுக்குப் பிறகு பீடாதிபதிகாளக வந்த ஸ்ரீ ல ஸ்ரீ துறவு சுவாமிகளும் ஸ்ரீ ல ஸ்ரீ கருணாநிதி சுவாமிகளும் தொடர்ந்து திருப்பணியை நடத்தி வந்தார்கள்.

திருக்களர் ஆண்டவர் என்று பாராட்டப்பெறும் ஸ்ரீ ல ஸ்ரீ வீரப்ப ஞான தேசிக சுவாமிகள் மேலும் திருப்பணியை விரித்துத் திருக்குளம், மைய மண்டபம், திருவீதிகள், ரதமேருக்கள், ரத கூடங்கள் ஆகியவற்றையும் அமைத்து பிற்காலத் திருப்பணிக்கு ஓர் எடுத்துக் காட்டாக இக்கோவிலை நிர்மாணித்தார்கள். அவர்கள் காலத்தில் அதாவது 1908ல் மிகக் கோலாகலமாகத் திருக்குட நீராட்டு விழா நடைபெற்றது.

வேதம், உபநிடதம் முதலான வைதீக சமய நூல்களை எல்லாம் சிக்கறத் தெளிந்து, அத்துவித உண்மைகளை அற்புதமாக உணர்த்தும் வேதாந்த சாத்திரங்களில் எல்லாம் மேதா விலாசம் பெற்று, தேவாராதி தோத்திரப் பனுவல்களில் தோய்ந்து, அன்பும் அறிவும் செறிந்து குளிர்ச்சி மிக்க ஒளியான தண்கதிர் பரப்பிய ஞான பானுவாகத் திகழ்ந்தவர்கள் திருக்களர் ஆண்டவர் அவர்கள்.

தத்துவ, சாத்திர, தோத்திரக் கடலில் மட்டுமின்றி பயிர்கலை, தொழிற்கலை, கட்டிடக் கலை, சிற்பக் கலை முதலான பிற பல கலைகளில் எல்லாம் தோய்ந்து, முக்குளித்து, முத்தெடுக்கும் பேராற்றல் பெற்றுப் பல்கலைச் செம்மலாக ஒளிர்ந்த பெருமை திருக்களர் ஆண்டவர் அவர்களுக்கே உரியது. அந்த அறிவின் விளக்கமே கோவிலூரின் அமைப்பு.

திருக்களர் ஆண்டவருக்குப் பிறகு, தற்பொழுது பீடாதிபதியாக விளங்கும் ஸ்ரீ ல ஸ்ரீ இராமநாத ஞானதேசிக சுவாமிகளின் பெருமுயற்சியால் இக்கோயிலின் ஜீரணோத்தாரணத் திருப்பணி தொடங்கப் பெற்றது. தனவணிகர்கள் தாராளமாக அளித்த லட்சக்கணக்கான அறக்கொடையின் மூலமாக, கோயில், திருக்குளம் முதலிய அனைத்தும் முற்றிலும் பழுது பார்க்ப் பெற்று வண்ணம் பூசப் பெற்றுள்ளது. ஆகம சாஸ்திர ரீதியாக, சிறந்த சிவசாரியார்கள் பலர் கூடி நான்கு நாள் ஆறுவேளை ஆகம பூஜை செய்து 21–04–1978 வெள்ளிக் கிழமை காலை சுமார் 10 மணிக்கு திருக்குட நீராட்டு விழா சம்பிரமமாக நடைபெற்றது.

பிற்காலக் கோயில்களில் இந்தக் கோயில் அமைப்பைப் போன்ற கோயில் தமிழகத்திலேயே கிடையாது. கோயிலுக்கு முன்னேயுள்ள திருக்குளத்தின் பொலிவும், அதிலுள்ள மைய மண்டபமும் இதற்கு நிகர் இதுவே என்று சொல்லத் தக்கவை.

அம்மன் திருவுண்ணாழியும் திருக்கல்யாண மண்டமும் பூரண சிற்பங்கள் அடங்கியனவாய் முழுதும் பாலிஷ் செய்யப்பட்டிருக்கின்றன. வரலாற்றுப் பெருமைமிக்க கொற்றவாள் ஈசரும், கயிலாசநாதரும் திருநெல்லை அம்மனும் நித்திய கல்யாணி அம்மனும் உள்ளம் கவரும் மூர்த்திகளாகும்.

பிராகாரங்களுடன் திருமாளிகைப் பத்திகளும் கோயில் மண்டபங்களும் முற்றிலும் மயன்மதநூல் அடிப்படையில் அமைக்கப்பெற்றவை.

ராஜகோபுரங்கள் நாயக்கர் பாணியைச் சார்ந்தவை. தூண்களில் உள்ள போதிகை முதலியவை நகரத்தார் பாணியைச் சார்ந்தவை. ஒவ்வொரு தூணிலும் விநாயகர், சுப்பிரமணியர், மீனாட்சி திருக்கல்யாணம் நடராச தாண்டவம், காளி நர்த்தனம் முதலிய பல சிற்பங்கள் இங்கு உள்ளன. அத்துடன் முன்னாளில் கோயில் எழுப்பிய வீரபாண்டியன் உருநாட்டும், பிற்காலத்தில் இதை இவ்வளவு விரிவாக ஆக்கிய மகான் கோவிலூர் ஆண்டவர் உருநாட்டும் திருநெல்லை அம்மன் சந்நிதியில் தூண்களில் காணப் பெறுகின்றன.

ஒவ்வொரு கோட்டமும், கோட்டத்ரிதல் உள்ள மாடங்கள், கூடுகள், பஞ்சரங்கள், கும்ப பஞ்சரங்கள் முதலியவையும் வேலைப்பாடுகள் மிக்கவை. அதிஷ்டானத்திலிருந்து கிழீவம் வரையிலும் மிக அழகிய நுணுக்கமான சிற்பத் திறனுடன் விளங்குகின்றன. இவற்றையெல்லாம் ஆற அமர்ந்து சென்று பார்த்தால் இக் கோயிலின் மதிப்பை இன்று இரண்டு கோடிக்கு மேல் கணிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

வேறு எந்தச் சிவன்கோயிலிலும் இல்லாத முறையில் ஆடவல்லான் என்னும் நடராசப் பெருமான் சந்நிதி சுமார் 200 அடி நீளமுள்ள மண்டபம் உடையதாகப் பெரு வீதியிலிருந்து முற்றும் காணத்தக்கவாறு அமைக்கப் பெற்றுள்ளது. திருமதிலுக்கு வெளியே முகசாலையுடன் அமைந்ததும் வண்ணச்சுதையுடன் கூடியது மான அழகுமிக்க ராஜகோபுரத்துடனும் கூடிய அமைப்பை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

கோவிலூர் திருக்கோயிலின் அமைப்பு

வை. ஜானகிராம ஸ்தபதி, மாமல்லபுரம்

நாட்டுக்கோட்டை நகரத்தாரின் திருத்தலங்களில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவற்றுள் கோவிலூர் திருத்தலமும் ஒன்றாகும்.

இங்கு அமைந்துள்ள ஸ்ரீ திருநெல்லை அம்பாள் உடனமர் கொற்ற வாளீசர் ஆலயம் சுவாமி சந்நிதி கருவறை நாட்டுக்கோட்டை நகர திருத்தலங்களில் மற்றெங்கும் இல்லாச் சிறப்புடையதாகும். கருவறை, முகமண்டபம் மஹா மண்டபம் இவை பிற்காலச் சோழர் பாணியை ஒத்த கட்டிடச் சிற்ப அமைப்பை உடையனவாகும்.

அதிஷ்டானம், பாதம், பிரதஸ்தரம் இவைகளின் வர்க்கங்கள் மிகுந்த வேலைப்பாடுடன், சகல விதமான அலங்கார பூஷணங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

கருவறை பிரஸ்தரமட்டம் வரை கருங்கற்களாலும், அதன்மேல் அமையப்பட்ட விமானம் செங்கல், சுண்ணாம்பினால் கட்டப்பெற்று 3 தளங்களுடன் கூடிய விமானம் அமைக்கப்பட்டு உன்னதமான தோற்றத்துடன் உள்ளது.

இரண்டு கருவறைகளைச் சுற்றிலும் நீராளிபத்தியுடன் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. கோடைகாலத்தில் இறைவன் இறைவியர்க்குக் குளிர்ச்சியூட்டுவதற்காக இந்த ஏற்பாடு உள்ளது.

திருநெல்லை அம்பாள் ஆலயம், சோமாஸ்கந்தர் ஆலயம், இவற்றின் கருவறை மேல்மட்டமான பிரஸ்தரம் வரை கருங்கற்களினால் பூரண வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டு முழு அளவு மெருகு ஏற்றப்பட்டுள்ளது. இவ்வாலயத்துச் சிறப்புகளில் இது குறிப்பிடத்தக்கது.

சுவாமி உள்ள கருவறையின் முன்புறமுள்ள மகாமண்டபத்தின் வடக்குப் பகுதியில் தெற்கு நோக்கிய வண்ணம் ஆடல் வல்லானின் திருவுருவம் அமையப் பெற்றுள்ளது. அதன் எதிரே தெற்கு நோக்கிய வண்ணம் 18 அணி ஒட்டித் தூண்களுடன் கூடிய மண்டபம் உள்ளது. இந்த 18 தூண்களிலும் சுண்டு பாதத்தின் முன்னே யாழிகளுடன் கூடிய தோற்றம் கண்ணையும் கருத்தையும் கவரவல்லது.

அம்பாள் சந்நிதியில் மகாமண்டபத்தின் முன்னே பிராகாரபத்தியின் அருகில் 10 தூண்கள் உள்ளன. இவற்றில் அமைக்கப்பட்ட சிற்பங்களாவன.

வடக்கே உள்ள தூண்களில்

1. மார்க்கண்டேயர்
2. கங்காளநாதர்
3. வீரபத்திரர்
4. ஊர்த்துவதாண்டவ மூர்த்தி
5. உமையுடன் ரிஷபத்தின் மீதமர்ந்த சிவன்
6. மயில் மீது அமர்ந்த வடிவத்தில் ஷண்முகம்
7. வீர சேகரபாண்டியரின் திருஉருவம்

தெற்கே உள்ள தூண்களில்

1. மூஷிக வாகனத்தில் லக்ஷ்மி வினாயகர்
2. கோவிலூர் ஆண்டவர் தரையில் படுத்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்வது.
3. மீனாக்ஷி கல்யாணத் தோற்றம்
4. தில்லைக் காளியின் சிற்பம்
5. மீனாக்ஷி திக்விஜய சிற்பம்
6. சாரதாம்பாள், திருஉருவம்
7. சரஸ்வதி சிற்பம்

இந்த விக்ரகங்கள் சப்த சுவரம் (ஏழு வகை ஓசைகள்) எழுப்பக் கூடிய கற்களைக் கொண்டு வடிக்கப்பட்டவை. மேற்குறிப்பிட்ட 14 சிற்பங்களும் மிகுந்த வேலைப்பாடுகளுடன் திருவுருவ அங்கங்களின் பரிமாணங்கள் மிகச் சிறப்பான முறையில் செதுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் நாயக்கர் பாணியில் உள்ளது இவ்வாலயத்தின் சிற்பச் சிறப்புக்கு எடுத்துக் காட்டாகும்.

நான்கு பக்கங்களிலும் அமைந்துள்ள நீண்ட பிரகாரங்களில் இரண்டு பக்கங்களிலும் அணி ஒட்டித் தூண்கள் உன்னத தோற்றத்துடன் உள்ளன.

மூலத்தானங்களுக்கும் பரிவார தேவதைகளுக்கும் 11 விமானங்களும், 2 சாலா ஹாரமும், கயிலாசநாதர் சந்நிதி மீது சாலாகோபுரமும், நடராசர் சந்நிதி, அம்மன் சந்நிதி, சுவாமி சந்நிதி மூன்றின் மீதும் கோபுரங்களும் அமைந்துள்ளன.

தெற்குப் பிரகாரத்தின் திருமதில் உட்புறத்தில் 63 நாயன்மார்கள் வண்ண ஓவியமாக தீட்டப்பட்டுள்ளனர்.

கோயிலின் முன்புறம் கிழக்குத் திக்கில் சதுரவடிவான தெப்பம் உள்ளது. அதன் மையப் பகுதியில் நீராளி மண்டபம் 8 பட்ட வடிவில் 16 தூண்களுடன் அமைக்கப்பட்டு அதன்மீது 3 அடுக்குகளுடன் கூடிய விமானம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபம் பண்டிகை விருத்த வடிவில் அமையப் பெற்றுள்ளது. மண்டபத்தின் சுற்றளவு 120 அடி இருக்கும். நீர் மட்டத்திற்கு மேல் மண்டபத்தின் உயரம் 45 அடி உளது. தெப்பக் குளத்தை வெளிப்புறமாகச் சுற்றி வந்தால் ஒரு கிலோ மீட்டர் நடந்ததற்குச் சமமாகும்.

நாட்டுக்கோட்டை நகர திருத்தலங்களிலே இங்கே ஊருணி நடுவே நீராளி மண்டபம் கவின்மிகு தோற்றத்துடன் அமைந்திருப்பது இவ்வாலய அழகுகளில் சிறப்புடையதாகும்.

ஆலயத்தின் வெளியே சுவாமி கோயிலின் முன்பு கிழக்கேயும் நடராஜர் சந்ததியின் முன்பு தெற்கேயும் மண்டபங்கள் அமைத்து அதன்மீது சாலாஹாரம் அமைத்திருப்பது சிறந்த வேலைப்பாட்டை எடுத்துககாட்டுவதாகும்.

விமானங்களிலும், கோபுரங்களிலும், சாலாஹாரங்களிலும், சிவமூர்த்தங்களும் சிவபுராணச் சிற்பங்களும் அமைக்கப்பட்டுள்ளது.

நடராசர் சந்நிதி மீதுள்ள வண்ணக் கோபுரம் தெற்குப் பார்த்து, காரைக்குடி குன்றக்குடிச் சாலையில் செல்லுவோர் கவனத்தை ஈர்க்கிறது. தட்சணாமூர்த்தி, கோபுரம் தாங்கிகள், புதுமையான வேலைப்பாடுடன் செய்யப்பட்டுள்ள–வாலி சுக்கிரீவன் போர்க்காட்சிகள் ஆகியவை கம்பீரமாக உள்ளன. கண்ணனின் லீலைகள் கவர்ச்சியான சுதைவேலைகளாக உள்ளன.

சாலாஹாரம் அமைக்கப்பட்டுள்ள மண்டபம் 26 தூண்களை உடையது. தூணின் உயரம் 12 அடி கொடுங்கை, கோபிகை முதலியவற்றின் உயரம் 2 அடிஇருக்கும். மண்டபத்தின் பரப்பளவு 750 சதுர அடி. சாலஹாரத்தில் நடராசர், காளி, ரதி, மன்மதன் முதலிய சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் ஈர்ப்பன.

ஏனைய கோபுரங்களுக்குச் சுனோசெம்பெயிண்டு செய்யப்பட்டுள்ளது.

சிவ தருமம் பாலிப்போர்

சொக்கு சுப்பிரமணியன்

கோவிலூர்; கோமேவு வன்னிவனக் கொற்றவாளீசர் வாழும் தலம்; நேரறிவு மயமான நெல்லைநாயகி வளரும் திருக்கோயில்; ஞாலம் போற்றிடும் ஞானியர்கள் அருள்பாலித்த ஞானபீடம்; வெய்யவினை தீர்த்து அடியவர்கள் ஐயம் திரிபை அகற்றிய மெய்த்தவ நல்லாசிரியர்கள் நடம் பயின்ற கலைக்கோயில்; மேலாய துறவினுயர்ந்தோர் துணையாகி நின்ற மேன்மக்கள் வாழ்ந்த புண்ணிய பீமி. நூல் யாவும் உணர்ந்த நுண்ணறிவுமிக்க மெய்யன்பர் மால் அயனும் காணா மறைமுதல்வன் புகழ்பாடும் இசை வளரும் நிலையம்; அறவொழுக்கம் வளர்த்திடவே துற வொழுக்கம் கடைப்பிடித்த தூயவர்கள் மறவொழுக்கம் கடிந்து நல்லறவொழுக்கம் வளர்த்த தமிழ்ப் பேரூர்; பாலாய சிவதருமம் பற்றறப்பாலிப்போர் இத்திருத்தலத்தில் அருள் பாலித்தார்கள்.

கோவிலூர்த் தலம் 'சமிவன க்ஷேத்திரம்' என்று அழைக்கப்பட்டது. தமிழில், 'வன்னிவனம்' என்பர். இந்த 'வன்னிவனத்' தலத்தின் வரலாற்றை வட மொழியில் ஸ்காந்த புராணத்திலிருந்து மொழிபெயர்த்து சமிவன க்ஷேத்திர மான்மிய வசனம் என்னும் நூல் ஒன்று வெளியாகி உள்ளது. கி. பி. 1928–இல் சுதான விபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள் வெளியான இந்த நூலைத் திருவிடைமருதூரைச் சேர்ந்த பிச்சு சாஸ்திரி சுவாமிகள் என்பவர் மொழி பெயர்த்திருக்கிறார். காரைக்குடி மேல மடத்தைச் சேர்ந்த சேவு. பழ. பழநியப்பய்யா குடும்பத்தார் சென்னையில் சூளையில் இருந்த ஸ்ரீ பாரதி அச்சியந்திர சாலையில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள்.

தலங்களுக்குள் தலையான இந்தக் கோவிலூர்த் தலத்திற்குப் பல பெயர்கள் உண்டு என்பதும், கழனிவாசல் சாலிவாடி ஸ்ரீ வல்லபம் வன்னிவனம் என்பவை அவை என்பதும் இந்நூல் தெரிவிக்கும் முக்கிய செய்தியாகும். ஜீவர்களின் பஞ்சமா பாதகங்களைப் போக்கி நன்னெறி உய்விக்கும் ஆண்டவர் அருட்கோயில் கொண்டிருப்பதால் இத்தலம் மானுடப் பிறப்பெடுத்தோருக்கு எல்லாம் மறைமுதல்வனின் நற்பேற்றைப் பெற்றுத் தருவதாக அமைந்திருக்கிறது. இங்குள்ள மது புஷ்கரணி தீர்த்தம் வேண்டுவோர்க்கு வேண்டியதை அளிக்கும் வல்லமை பெற்றது என்பதையும் கோயிலூர்ப் புராணம் வெளிப்படுத்துகிறது.

சத்திய ஞானானந்தராய், சர்வ பரிபூரணராய், சர்வ சொரூபராய், சர்வ சக்தியுள்ளவராய், ஜனப் பிரியராய், சர்வ பலன் கொடுப்பவராய், சந்திரசேகரராய், மான் மழுதாரியாய் இத்தலத்தில் கோயில் கொண்டிருக்கும் திரிபுவனேசுவரர் தயா சமுத்திரம் என்று இந்த நூல் வருணிக்கிறது.

இந்தத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் நெல்லையம்மை சத்திய ஞானானந்த ரூபி என்றும், சர்வாத்ம சொரூபி என்றும், சமரச வடிவு என்றும், சர்வபூரணி என்றும், நிரஞ்சனை என்றும், நித்திய சுத்த புத்தமுத்த அகண்ட அத்துவித சொரூபி என்றும் இந்தக் கோயிலூர்ப் புராணம் குறிப்பிடுகிறது. நேரறிவு மயமான நெல்லை நாயகி அருளைச் சிறப்பிக்கின்றது.

கோவிலூர்த் தலத்தின் சிறப்பை விளக்கும் இந்நூல் ஒரு நல்ல புத்தகம் என்பதில் ஐயமில்லை. இதுபோன்ற நூல்கள் மக்கள் மன்றத்தில் பரவ அன்னையின் அருளைப் பாலிக்கும் அனைவரும் முயல வேண்டும்.

– 1978 கும்பாபிஷேகம் மலர்

கோவிலூர் ஆதீனமும் நகரத்தார் கடமையும்

மிகத் தொன்மையான காலத்திலிருந்தே நகரத்தார்கள் ஞான மார்க்கத்தில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். பட்டினத்தடிகள், காரைக்கால் அம்மையார் ஆகியோரது வாழ்க்கை வரலாறுகள் இவ்வகையில் நமக்குப் பெருமை தருவன.

இக்காலத்தில் இவ்வாறு ஞானமார்க்கத்தில் ஈடுபட்டு நகரத்தார்களை நல்வழிப்படுத்தும் பணியைச் செய்து வருவது கோவிலூர் ஆதீனம் ஆகும்.

இந்த ஆதீனம், இந்தியாவிலும் இலங்கையிலும் புகழ் பரப்பியிருக்கிறது. இதனுடைய குருபரம்பரை, புலமையும் சீலமும் செயல்திறனும் மிக்கது. இந்த ஆதீனத்தின் தலைமை இடம் செட்டிநாட்டின் நடுநாயகமான நகரான காரைக்குடிக்கு அருகே உள்ளது. கோவிலூர் என்னும் ஊர்ப்பெயரே கேட்கும் தொறும் இன்பம் பயப்பது.

இவ்வளவு புகழ்மிக்க ஓர் ஆதீனத்தைப் பற்றி நம்மவர் இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்நோக்கத்தை நிறைவேற்றவே இந்த மலர் வெளியிடப்பெறுகிறது. நகரத்தார்கள் தங்களுடைய முன்னேற்றம் கருதியும், வாழ்க்கை முறையில் மாறுதல்கள் குறித்தும் முடிவுசெய்ய 96 ஊர் நகரக்கூட்டங்களைக் கோவிலூரில் கூட்டுவது மரபு.

கோவிலூரில் ஆதீன கர்த்தர்களாகப் பட்டம் ஏற்று, அருளாட்சி செலுத்திவரும் ஞானாசிரியர்கள், நம்மவர்க்கு நல்வழி காட்டி வந்திருக்கிறார்கள். இன்றைய நிலையும் இதுவே யாகும். இந்த அருளாளர்களின் அறிவுரைகளை மதித்தும், இப்பெரியவர்களுடைய வேண்டுகோள்களுக்குச் செவிசாய்த்தும் வருபவர்கள் எல்லா நலமும் பெற்றுச் சிறந்து செல்வாக்கோடும் வாழ்ந்து வருவது கண்கூடு. மாறுபட்டு நடந்துகொள்பவர் நிலை பற்றி எதையும் இங்கே குறிப்பிடத் தேவையில்லை.

தனிப்பட்ட அன்பர்களைப் பற்றி மேலே சொல்லியது நகரத்தார்கள் வாழும் ஊர்களுக்கும் பொருந்தும்.

ஒவ்வொரு நகரத்தாரும் கோவிலூர் ஆதீன கர்த்தரிடம் மரியாதை காட்டுவதும், அவர்களுடைய அறிவுரைக்குப் பணிந்து நடப்பதும் அவர்களுக்கு நன்மை தரும். இது போலவே ஒவ்வொரு ஊர் நகரத்தாரும் தேவையானபோது கோவிலூர் ஆதீனத்தோடு தொடர்புகொள்வது அறிவுடைமை ஆகும். பிராமணர்கள் தங்கள் இனத்து நலன் கருதி, ஆச்சாரியர்களாகவிருக்கும் சுவாமிகள் பலரிடத்திலும் எவ்வளவு ஈடுபாடு வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்ப்பது நலம்.

ஒன்பது நகரக் கோவிலாரும் காரைக்குடி மேலமடத்தில் கூடி, கோவிலூர் ஆதீனத்துக்கு நன்கொடை எழுதும் பழக்கம் 1930 வரை இருந்து வந்தது. இதைப் புதுப்பிக்கவேண்டும்.

நகரத்தார்கள் தங்களுடைய ஊர்களில் நடைபெறும் பொது நிகழ்ச்சிகளுக்கும், கும்பாபிஷேகம் முதலியவற்றிற்கும் கோவிலூர் ஆதீனகர்த்தர்களை அழைத்து, நகரக் கோயிலில் பூரண கும்பத்துடன் வரவேற்றுப் பாத காணிக்கை முதலியன வைத்து மரியாதை செய்யவேண்டும். உலகியல் ஈடுபாடும் போலி நாகரிக முதிர்ச்சியும் நம்மை மயக்கியிருப்பதால், நாம் நமது பண்பாடுகளை, நல்ல மரபுகளை அடியோடு மறந்துவிட்டோம்.

மேற்கண்டவாறு நாம் நடந்துகொள்வது நம் நன்மைக்காகவே ஆகும். ஞானச் செல்வர்களை மதிப்பதாலும் போற்றுவதாலும் அவர்கள் ஒரு பயனும் பெறப் போவதில்லை. கங்கை புனிதமாக இருப்பதால்தான் நாம் போய் அதில் ஆடுகிறோம்.

வயதான காலத்தில் ஓர் ஊன்றுகோல் தேவைப்படுகிறது ஓர் ஊன்றுகோல் தனி ஒருவனுக்குச் செய்யும் உதவிகளை, அருளாளர்கள் சமுதாயம் முழுமைக்கும் செய்கிறார்கள்.

இந்தியாவின் பல பகுதிகளிலும் இன்று நம்மவர் உள்ளனர். கடல் கடந்த மலேசியா முதலிய நாடுகளிலேயே பிறந்து வளர்ந்து, அந்த நாட்டுக் குடிமக்களாக உரிமை பெற்றும் நகரத்தார் பலர் உள்ளனர் எனவே முன்போல நாம் செட்டிநாட்டில் மிகுதியான எண்ணிக்கையிலோ, மிகுதியான நாட்களிலோ காணப்படுவதில்லை. ஒவ்வொருவரும் குடும்பத்தோடு அவரவர் வசதிப்படி இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கோவிலூர்க்குச் செல்வதை ஒரு கடமையாகக் கொள்ளவேண்டும். அவ்வாறு செல்லும்போது அங்குள்ள சிவன் கோயிலிலும், கோவிலூர் ஆண்டவர் முதலியவர்களின் சமாதிக் கோயில்களிலும் வழிபடுவதும், ஆதீனகர்த்தரை கண்டு வணங்குவதும், நமது கடமையாகும்.

ஆதீனங்களுக்கு அளவுகடந்த சொத்தும் வருமானமும் இருப்பதாகவும், எனவே அவற்றிற்குப் பணம் தேவையில்லை என்றும் ஓர் எண்ணம் நிலவி வருகிறது. இது முற்றிலும் தவறு. செய்யப்படும் அறங்கட்கு நாம் தரும் நன்கொடை பெரிதும் உதவும். வளர்க்கப் பயன்படும்.

அரசின் சட்டங்களால் இனாம் நிலங்கள் ஒழிக்கப்பட்டுவிட்டதால், கோவிலூர் ஆதீனம் தன் சொத்துக்களின் வருமானத்தை இழந்து விட்டது. மலேசியா, பர்மா முதலிய நாடுகளிலிருந்து நன்கொடையாகக் கோவிலூர் மடத்துக்கு பணம் அனுப்பும் வழக்கமும் இப்போது நின்றுவிட்டது.

தற்போது மடத்திற்கென வருவாய் மிகக் குறைந்து விட்டது. நடந்து வரும் தர்மங்கள் யாவும், குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் நாச்சியப்ப சுவாமிகளின் பொருள் உதவியால் தான் நடைபெற்று வருகின்றன. அந்த அறங்களில் நம் நகரத்தார் பங்கும் சேரவேண்டும். அறங்கள் வளர்ந்து பயன் யாவர்க்கும் கிட்ட நம்முடைய உதவியும் ஒத்துழைப்பும் மிக மிக அவசியம்.

நகரத்தார்கள் தாங்கள் வாழும் ஊர்களுக்கும் கோவிலூர் ஆதீன கர்த்தர்களை அழைத்து, அவர்களுடைய அருளுரைப்படி நடப்பது, அவர்களுக்கு நன்மை தரும் குறிப்பாக இளைஞர்கள் இந்த ஆதீனத்தைப் பற்றி எல்லா விவரங்களையும் தெரிந்து கொள்ளவும் இந்த ஆதீனத்துடன் தொடர்பு கொள்ளவும் வேண்டும்.

ஆன்மீக ஈடுபாடு உடையவர்கள் துறவு பூண விரும்பினால், அவர்களை ஒருவரும் தடுக்க வேண்டுவதில்லை. அறிவும் ஆற்றலும் பண்பும் சீலமும் உடைய நகரத்தார்கள் ஒரு சிலராவது துறவு நிலையை மேற்கொண்டால்தான், கோவிலூர் ஆதீனம் சீருடனும் சிறப்புடனும் வாழையடி வாழையாக வளர்ந்துவர வாய்ப்பு இருக்கும். கோவிலூரில் நகரத்தார்கள் மட்டுமே பட்டத்திற்கு வர உரிமையுடையவர்கள் என்பது நம் சிந்தனைக்கு உரியது.

புதிய வரலாறு படைப்போம்

கோவிலூருடன் நம் உறவைப் புதுப்பித்துக்கொள்வோம். ஆதீன கர்த்தர்களின் அருமையையும் பெருமையையும் போற்றி வாழ்த்துவோம். வாழ்த்துவது நாம் வாழ்வதற்கே.

கோவிலூர் ஆதீன வரலாறு

இன்றைக்கு ஏறக்குறைய இருநூறு ஆண்டுகட்கு முன்னர் செட்டிமார் நாட்டின் திலகமெனத் திகழும் காரைக்குடி நகரத்தில் நகரத்தார்களின் தவப்பயனாக அவதரித்தார், "கோவிலூர் ஆண்டவர்" எனக் குவலயம் போற்றும் ஸ்ரீ முக்திராமலிங்க ஞான தேசிகர். இவர் கருவிலே திருவுடையாராக இருந்தமையின் தமது பால பருவமான பதின்மூன்றாம் ஆண்டளவிலேயே சிக்கல் பொருள்வைத்த சேரியில் சென்று ஞானசிரியரை அடைந்து, முறைப்படி குருமுகமாக ஞான நூல்களைக் கற்று, பதினாறு வயது பூர்த்தியாகு முன்னே ஞானாநுபூதிச் செல்வராகப் பல அற்புதச் செயல்கள் நிகழ்த்தலானார். அக்காலம் "நாட்டுக் கோட்டை நகரத்தார்" என வழங்கும் தனவணிகப் பெருமக்கள் கடல் கடந்து சென்று தங்கள் வாணிபத்தை வளமுறப் பெருக்கிய காலமாகும்.

"திரை கடலோடியும் திரவியம்" சேர்ப்பதிலேயே கருத்தூன்றிய நகரத்தார் சமூகம், தேடிச் சென்று திருத்தலங்களில் திருப்பணிகள் செய்யவும், அறக்கட்டளைகள் அமைக்கவும், என்றும் அழியா வரலாற்றுப் புகழ் மிகுந்து வளமுடன் வாழவும் வழிவகுத்த சிறப்பு, ஸ்ரீ சற்குரு முத்துராமலிங்க ஞானதேசிகருக்கு, உண்டு.

ஸ்ரீ முக்திராமலிங்க ஞான வள்ளல் காரைக்குடியை அடுத்த கோவிலூரில் திருக்கோவில் கொண்டு விளங்கும் அம்பிகை திருநெல்லையிடம் ஈடுபாடு கொண்டிருந்து அடிக்கடி அம்பிகையின் அருட்காட்சி காணபெறும், பெரும்பேறு அவர் பெற்றிருந்தார். அம்பிகை அருள்பாலித்த வண்ணம் ஆலயத்தை நகரத்தார்களின் உதவி கொண்டு பெரும் அளவில் கலைத்திறன் பொதிந்த கருங்கல் திருப்பணியாகச் செய்யத் திருவுளம் கொண்டார்.

ஞானப் பேரொளியாக விளங்கும் சற்குரு முக்திராமலிங்க வள்ளலின் அருட்செயல்கள் நாடெங்கிலும் பரவலாயிற்று. பூர்வ ஜன்ம புண்ணிய வசத்தால் ஞானவேட்கை மிக்க நல்லறிஞர் பலரும் நாடி வந்து, ஞான நூல் கற்பாராயினர். தம்மைச் சரணாக வந்தடைந்த பக்குவர்க்கட்கு "அஞ்சலென அபயம் கொடுத்தருளி' பரமார்த்திகப் பேருண்மைகளைப் பலவாறாகத் தெளிய உணர்த்திப் பரமானந்தப் பேற்றை அருள் புரிந்தார் சற்குரு முத்துராமலிங்கர்.

நாளுக்கு நாள் பெருகிவரும் ஜாதி, இன வேறுபாடற்ற அடியார் குழாம் உணவுக்கும் உடைக்கும் இருக்கைக்கும் அலைந்து திரியாமல் அவர்கள் ஓரிடத்தில் தங்கி அமைதியாகத் தத்துவ விசாரம் செய்யவும், ஜபம், தபம், தியானம் முதலான ஆத்ம சாதனைகள் செய்து வரவும், திருமடம் ஒன்று அமைக்கத் திருவுளம் கொண்டு, அதற்கான ஏற்பாடுகள் செய்த வேளையில் அம்பிகை திருநெல்லையே காட்சி தந்து அருள் பிரசாதம் வழங்கியருளினாள்.

வடமொழியில் உள்ள வேதாந்த சித்தாந்த உண்மைகளை வடமொழிப் பயிற்சியில்லாத தமிழ்ப் பெருமக்களும் உணர்ந்து, உய்யும்நெறி நிற்கும் வகையில் தமிழில் "நாநாஜீவ வாதக் கட்டளை" தொடங்கி "ஞாநவாசிட்டம்" ஈறான பதினாறு நூல்கள் கிரமப் பாடமாக வகுத்தது, கோவிலூர் திருமடாலயத்தின் சிறப்பான பணியாகும்.

ஞானப் பேரொளியாக விளங்கிய ஸ்ரீ ஆண்டவரை அடைக்கலமாக அடைந்து குருபரன் குற்றேவேல் செய்து ஞான அநுபூதி பெற்ற அடியார்கள் அனந்தம். அவர்களில் பலர் ஆங்காங்கு தமக்குற்ற தலங்களில் திருமடம் அமைத்துக் கொண்டு கோவிலூர் மரபினை விளங்கச் செய்து வருகின்றனர். கோவிலூர் மரபின்

வழிவழியாக அமைந்துள்ள திருமடங்கள் தற்போது தமிழகத்திலும் அண்டை மாநிலங்களிலும் சுமார் 100க்கு மேல் உள்ளன.

ஸ்ரீ ஆண்டவரின் வியத்தகு மாண்பினை.

கார்கொண்ட புயல்வண்ணன் மலரயன் வருந்தியும்
காணாதபெரு வாழ்வெனும்
கறைமிடற் றிறைராச கம்பீர மேசுரன்
கருணையுருவோ டமர்ந்து
கனவெழில்கொள் மணிமாட நிலவுசமி வனமெனக்
கழறுமுயர் பதியில்வாசன்
கனதமறு சீர்தம(து) அகவிருள் துரத்தவரு
கருதரிய ஞானதபனன்
போர்கொண்ட காமக் குரோதலோ பாதியாம்
புகல்குற்றம் நீங்குபுனிதன்
பொறையறி(வு) அடக்கம் அருள் முதலநற் குணமொடு
பொருந்திவளர் உற்ற முதல்வன்
புவனம்மூன் றிலும்இவன் புகழ்சென் றிடற்கிடம்
போதா(து) எனச் சிறந்தோன்
பொருளிலர்(கு) உயர்சுத்த வேதாந்த சாத்திரம்
போதம்மிக்கு உன்நிபுணன்
போர்கொண்ட நிர்மல சமாதி சாட்சாத்கார
பிரதாப மிகுசிரேஷ்டன்
பெருமைநிறை தருமுத்து ராமலிங்கக்குரு"

என்று சைவப் பெரியார், யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பெருமான் போற்றிப் பாராட்டுவார்.

வடமொழி தெரியாதவர்கள் வேதாந்தம் படிப்பதற்கு வகை செய்த மடம் என்ற அளவில் கோவிலூர் ஆதீனம், வேதாந்த தத்துவ வரலாற்றில் தனி இடம் பெற்று மிளிர்கிறது. கலயத்தில் கஞ்சி ஏந்திக்கொண்டு கோவிலூருக்கு வந்து மாணாக்கர் பலர் வேதாந்தம் படித்தனர் என்பதிலிருந்து படித்தவர்களுடைய ஆர்வமும் படிப்பித்தவர் களுடைய தனிச் சிறப்பும் புலனாகும். இந்த ஆதீனத்தில் பயின்ற மாணாக்கர் பட்டியல் இவ்வெளியீட்டில் கொடுக்கப் பெற்றிருக்கிறது. இதை ஊன்றி ஆராய்ந்தால், ஆண்டவர் முத்திராமலிங்க ஞானதேசிகர் கோவிலூரில் வேதாந்தப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவியுள்ளார் என்ற உண்மை உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெரியவரும். கோவிலூர் மண்டலி என்று கூறிக் கொண்டு, துறவிகள் வடநாட்டு யாத்திரை சென்று, மரியாதையுடன் எங்கும் வரவேற்கப்படுவது மரபு.

கோவிலூர் திருமடத்தின் கிளை மடங்கள்

குறிப்பு: கோவிலூர் என்னும் பெயரில் தஞ்சை மாவட்டத்தில் இரு ஊர்களும் மதுரை மாவட்டத்தில் ஓர் ஊரும் சேலம் மாவட்டத்தில் ஓர் ஊரும் உள்ளன. பிற மாவட்டங்களிலும் கோவிலூர்கள் இருக்கக் கூடும். எனவே காரைக்குடியை அடுத்த கோவிலூர் என்று குறிப்பிடுவது, ஐயப்பாட்டைத் தவிர்க்க உதவும். அஞ்சல்களில், கோவிலூர்–630 307. காரைக்குடி (அருகில்) என்று குறிப்பிட வேண்டும்.

1. **கோவிலூர் மடாலயம்**
கோவிலூர் – 630 307
காரைக்குடி வட்டம்
சிவகங்கை மாவட்டம்
தொடர்பு:
திரு. மெ. மெ. மெய்யப்பன் / திரு. நா. நாராயணன்
தொலைபேசி : 04565–236846

2. **ஈசான்ய மடம்**
புதிய பேருந்து நிலையம் அருகில்
திருவண்ணாமலை – 606 601
தொலைபேசி : 04175–252649
பொறுப்பாளர் :
திரு. இராம. அண்ணாமலை @ மீனாட்சி சுந்தரம்
(விருந்தினர் அறைகள் வசதி உண்டு)

3. **சண்முக சுவாமி மடம்**
விழுப்புரம் – பாண்டி சாலை
வளவனூர் – 605 108
பொறுப்பாளர் :
தவத்திரு. சண்முக சுவாமிகள்

4. **சபாபதி சுவாமிகள் மடம்**
தென்பள்ளிப்பாட்டு
மேட்டுப்பாளையம்
கலசப்பாக்கம் – 606 751
திருவண்ணாமலை மாவட்டம்
பொறுப்பாளர் :
தவத்திரு. முருகானந்த சுவாமிகள்

5. **கோ. சித மடாலயம்**
(பொன்னம்பல சுவாமி மடம்)
50, மன்னார்குடி சாலை
சிதம்பரம் – 608 001
தொலைபேசி : 04144–220030
பொறுப்பாளர் : திரு. சிவ. இராமனாதன்
(விருந்தினர் அறை வசதி உண்டு)

6. **கோ. சித. மடாலயம்**
(தத்துவராய சுவாமிகள் மடம்)
விருத்தாசலம் சாலை
எறும்பூர் – 608 704
(சேத்தியா தோப்பு அருகில்)
பொறுப்பாளர் : திரு. சிவ. இராமநாதன்

7. **கோ. வீர. மடாலயம்**
(திருக்களர் ஆண்டவர் மடம்)
திருக்களர் – 614 710
நடுவக்களப்பால் வழி
மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்
தொலைபேசி : 04367–204354
பொறுப்பாளர் : திரு. சக்தி மெய்யப்பன்
(விருந்தினர் அறை வசதி உண்டு)

8. **கோ. ஆ. பொ. மடாலயம்**
பொருள் வைத்த சேரி (புறவச்சேரி)
சிக்கல் அருகில் – 611 108
தொலைபேசி : 04365–245753
பொறுப்பாளர் : திரு. ஆர். சோமசுந்தரம்
(விருந்தினர் அறை வசதி உண்டு)

9. **நாராயண சுவாமி மடம்**
முதன்மைச் சாலை
அண்ணா சிலை அருகில்
மானாமதுரை – 630 606
சிவகங்கை மாவட்டம்
பொறுப்பாளர் : மேளாளர் கோவிலூர் மடாலயம்

10. **காசிகாநந்த சுவாமி மடம்**
மதுரை முதன்மைச் சாலை
திருப்புவனம் – 630 611
சிவகங்கை மாவட்டம்
தொலைபேசி : 04575–265684
பொறுப்பாளர் : திரு. இராமநாதன் செட்டியார்

11. **குட்டைய சுவாமி மடம்**
164, தெற்கு வெளி வீதி
மதுரை – 625 001
தொலைபேசி : 0452–230017
பொறுப்பாளர் :
திரு. அ. வெ. சொக்கலிங்கம் செட்டியார்

12. **கா. செ. வேதாந்த மடம்**
தெற்கு ரத வீதி
காளையார் கோவில் – 623 551
சிவகங்கை மாவட்டம்
தொலைபேசி : 04575–232108
பொறுப்பாளர் :
திரு. அ. வெ. சொக்கலிங்கம் செட்டியார்

13. **கோவிலூர் மடாலயம்**
50-52, குப்பையா செட்டி தெரு
(மாம்பலம் இரயில் நிலையம், மேட்லி சாலை பாலம் அருகில்)
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
தொலைபேசி : 044-24719122
பொறுப்பாளர் : திரு. க.லெ. கண்ணப்பன்
(விருந்தினர் அறை வசதி உண்டு)

14. **சுவாமிகளின் சென்னை அலுவலகம்:**
கலாக்ஷேத்ரா பப்ளிகேஷன்ஸ்
84, கலாக்ஷேத்ரா சாலை
திருவான்மியூர், சென்னை - 600 041
தொலைபேசி : 044-24521390
பொறுப்பாளர் : திரு. மு. பழநி

15. **கோவிலூர் வேதாந்த மடம்**
(சுவாமி தயானந்த ஆஸ்ரமம் அருகில்)
அ.பெ.எண்.20, புராணி ஜாடி
ரிஷிகேஷ் - 249 201
உத்தராஞ்சல்
தொலைபேசி : 0135-2436968
பொறுப்பாளர் : திருமதி. விசாலாட்சி மெய்யப்பன்
(விருந்தினர் அறை வசதி உண்டு)

16. **கோவிலூர் வேதாந்த மடம்**
20, தெற்கு படேல் நகர்,
படேல் நகர் மெட்ரோ ஸ்டேஷன் அருகில்
புது தில்லி - 110 008
பொறுப்பாளர் : திருமதி. விசாலாட்சி மெய்யப்பன்
(விருந்தினர் அறை வசதி உண்டு)

17. **கோவிலூர் ஆதீனம் வேதாந்த சென்டர் இன்க்.**
சுவாமி தயானந்த ஆஸ்ரமம் அருகில்
அ.பெ. எண். 953145, ரூட் 31 என்
பெனிங்டன், நியு ஜெர்சி 08534
தொலைபேசி : 001-609-4662000
001-609-4662622
பொறுப்பாளர் : திரு. ராமு வீரப்பன்

கோவிலூர் மரபில் பாடத்திட்டமாக உள்ள
16 வேதாந்த சாஸ்திரங்கள்

1. நாநாசீவ வாதக் கட்டளை
(சேஷாத்திரி சிவனார் இயற்றியது)

2. கீதாசாரத் தாலாட்டு
(திருவேங்கட நாதர் இயற்றியது)

3. சசிவன்ன போதம்
(எறும்பூர் தத்துவராய சுவாமிகள் இயற்றியது)

4. மகாராஜத் துறவு
(விருத்தாசலம் குமார தேவர் இயற்றியது)

5. வைராக்கிய சதகம்
(பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் இயற்றியது)

6. வைராக்கிய தீபம்
(பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் இயற்றியது)

7. இலட்சணா விருத்தி
(கருணாநிதி என்னும் சிதம்பர ஞான தேசிகர் இயற்றியது)

8. வேதாந்த சூடாமணி
(துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியது)

9. கைவல்ய நவநீதம்
(நன்னிலம் தாண்டவராய சுவாமிகள் இயற்றியது)

10. விவேக சூடாமணி
(திருவிடைமருதூர் உலகநாத சுவாமிகள்,
இயற்றியது)

11. அஞ்ஞுவதைப் பரணி
(எறும்பூர், தத்துவராய சுவாமிகள் இயற்றியது)

12. பஞ்ச தசி
(நித்தியானந்த சுவாமிகள் வீர. சுப்பையா சுவாமிகள்
இயற்றியது)

13. ஈசுவர கீதை
(எறும்பூர், தத்துவராய சுவாமிகள் இயற்றியது)

14. பிரம்ம கீதை
(எறும்பூர், தத்துவராய சுவாமிகள் இயற்றியது)

15. பகவத் கீதை
(பாட்டனார் இயற்றியது)

16. ஞான வாசிட்டம்
(வீரை. ஆளவந்தார் இயற்றியது)

குறிப்பு : வீர சைவ மடங்களான பேரூர் சாந்தலிங்க சுவாமிகள்மடம் விருத்தாசலம் குமாரதேவர் மடம், ஆகியவற்றில் வெளியிடப்பெற்றுள்ள மூன்று நூல்கள் கோவிலூரில் பாடமாகக் கற்பிக்கப் பெறுகின்றன. இவற்றின் எண்கள் 4, 5, 6.

கோவிலூர் ஆதீனகர்த்தர்கள்

எந்நாட்டவர்க்கும் இறைவனாம் தென்னாடுடைய சிவபெருமான் அருள்மிகு உமையோடு அமர்ந்து அருள் காக்கும் ஆலயங்கள் ஆயிரமாயிரம் இருப்பினும் சிவபெருமான் தன் நாடு எனக் கொண்டது தென்பாண்டிநாடே!

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வீரசேகரபாண்டியன் ஈசனிடம் ஏற்பட்ட ஈடில்லா நேசத்தின் காரணமாக சிவனுக்கு ஸ்தலம் அமைக்க எண்ணி "ராஜ கட்க பரமேசுவரர்" என்னும் கொற்றவாளீசுவரர் திருநெல்லையம்மன் சமேதராக காரைக்குடிக்கு மேற்கே கோவிலூரில் அமைத்தார்.

இத்திருத்தலம் கிழக்கே திருப்பெருந்துறையும், தெற்கே திருக்கானப்பேரும், மேற்கே திருப்பத்தூரும் வடக்கே திருமெய்யரும் ஆன பாடல்பெற்ற திருத்தலங்கள் சூழ அமைந்துள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க புராணப்பெருமையுடன் விளங்கும் இப்புனிதப்பதி "ஸ்ரீவல்லபம்", "சமிவனசேஷத்திரம்", "வன்னிவனம்' என்னும் சிறப்புப் பெயர்களுடன் "கழனிவாயில்", "ரசத் பெருந்தெரு", "வீரபாண்டியபுரம்", "மருகேந்திரபுரம்", என்னும் வேறு பெயர்களாலும் புகழ்ந்து பல ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. இவ்வூரில் மதுப்பிரிய முனிவர் என்னும் மகான் தவம் செய்த காரணத்தால் இவ்வூர்க் குளத்துக்கு மதுபுஷ்கரணி என்றும் இவ்வூரில் ஓடும் நதிக்குத் தேனாறு என்றும் வேறு பெயர்களும் உண்டு. இத்தெய்வீகத் திருத்தலத்தை திரிசிபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் கோவிலூர்ப் புராணம் என தெள்ளு தமிழில் புகழ்ந்து தலபுராணம் பாடியுள்ளார்.

இன்றைக்கு சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன் காரைக்குடி நகரத்தார் வழியில் தோன்றிய முத்திராமலிங்கம் தன் பெற்றோருடன் நாகப்பட்டினம் அருகில் உள்ள சிக்கலில் வசித்து வந்தார். தன் தந்தையுடன் ஒரு நாள் அருகில் உள்ள சிற்றூரான பொருள்வைத்த சேரிக்குச் சென்றார். அவ்வூரில் நெசவுத் தொழிலை ஜீவனத்தொழிலாகக் கொண்டு ஸ்ரீ உகந்தலிங்க சுவாமிகள் திருவள்ளுவரைப் போல நெசவுத் தொழிலில் கிடைக்கும் வருமானத்தை மூன்று பங்குகளாகப் பிரித்து முதல் பகுதியை மறுநாள் நெய்வதற்கு நூல் வாங்கவும், இரண்டாம் பகுதியை வீட்டுச் செலவுக்கும் மூன்றாம் பகுதியை அடியார்களுக்கு அமுது அளிக்கவும் பயன்படுத்தி வந்தார். வேதாந்த நூல்களைக் கற்பித்துப் பலருக்கும் வேதாந்த ஞான உபதேசகராகவும் விளங்கினார். இவர் சிருங்கேரி பீடத்தின் அருளாளர்களை குருஸ்தானமாகக்கொண்டு ஞானமார்கத்தை உபதேசித்து வந்தார்.

முத்திராமலிங்கத்துக்கு ஸ்ரீ உகந்தலிங்க சுவாமிகளிடம் அளவிட முடியாத பக்தியும், பாசமும் ஏற்பட்டது. அன்றுமுதல் அவரும் ஒரு மாணவராகப் பாடம் கேட்டு வந்தார். ஒரு சமயம் வடநாட்டு சாது இவரை சந்தித்தபொழுது இவரிடம் உள்ள தெய்வீக உள்ளுணர்வை உணர்ந்து "இவன் உலகத்துக்கே உபதேசிக்க பிறந்தவன்" என வாழ்த்தி அனுப்பினார். அன்றுமுதல் முத்துராமலிங்கத்தை எல்லோரும் "ஆண்டவர் என அழைக்கத் தொடங்கினார். வேதாந்த ஞான நூல்களான "நாநாஜீவ வாதக்கட்டளை", "கீதாசாரத் தாலாட்டு", "சசிவன்னபோதம்", "மஹாராஜத் துறவு", "அஞ்ஞவதைப்பரணி", "வேதாந்த சூடாமணி", "விவேக சூடாமணி", "பஞ்சதசி", "கைவல்யநவநீதம்", ஈசுரகீதை", "பகவத்கீதை", "ப்ரம்மகீதை", "ஞான வாசிட்டம் என்னும் பனினாறு நூல்களாகும். இந்த பதினாறாவது நூலான ஞான வாசிட்டத்துடன் பாடம் பூர்த்தி செய்வது முறை, வசிட்ட முனிவர் ஸ்ரீராமபிரானுக்கு உபதேசித்த வேத நூலின் சாரமே இப்பதினாறாவது நூலாகும்.

ஸ்ரீ ஆண்டவர் சுவாமிகள் தன்குருநாதரைப் போலவே சிருங்கேரி ஆதிசங்கராச்சாரியாரின் மரபில் வந்த

அருளாளர்களின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றி வந்தார். ஞானமார்க்கத்தில் ஈடுபட மனப்பக்குவ தகுதி தேவை எனவும், வேதாந்தத்தில் பூர்ணத்துவம் பெற மதம், குலம், ஜாதி, சம்பிரதாயங்கள் தடையில்லை என்றும், பக்தியே முக்திக்கு வழி, எனவும் உபதேசித்தார். கோவிலூரில் வேதாந்த மடத்தை நிறுவியவர் ஸ்ரீ ஆண்டவர் சுவாமிகளேயாகும். வேதாந்த வடமொழி நூல்கள் அனைத்தையும் எல்லோரும் எளிதாகப் படித்து பக்குவம் பெற தமிழிலேயே மொழிமாற்றம் செய்து எளிய தமிழில் பாடங்களைச் சொல்லும் முறையையும் ஏற்படுத்தினார். வேதாந்த மடங்களை நிறுவி சாதுக்கள் எவ்வித விசாரமுமின்றி வேதாந்த பாடம் கற்க ஏற்பாடு செய்தார்.

ஒரு சமயம் ஸ்ரீ ஆண்டவர் சுவாமிகள் திருநெல்லை அம்மன் சமேத கொற்றவாளீசுவரர் கோவிலுக்குத் தரிசனம் செய்ய சென்றார். அங்கு செம்பூரான் கல்லினால் கட்டப்பட்ட அக்கோவில் சுவர்கள் சேதமடைந்து மேல் கீற்று கூரையும் காற்றினால் சரிந்து கிடந்ததை கண்ணுற்றார். மிகவும் மனம் கலங்கிய நிலையில் எவ்வாறேனும் இவ்வாலயத்தை புதுப்பித்து திருப்பணி செய்ய முடிவுசெய்தார். ஸ்ரீமத் ஆண்டவரின் எண்ணம் ஈடேற நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் தாராளமாக பொருள் உதவி செய்தனர். ஸ்ரீமத் ஆண்டவரின் திருக்கரத்தால் வரையப்பெற்று அடிகோலப் பெற்றதான இத்திருக்கோவில் அடுத்து வந்த ஸ்ரீலஸ்ரீ சிதம்பர ஞான தேசிகராலும், திருக்களர் ஆண்டவர் என போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞான தேசிகராலும், ஸ்ரீலஸ்ரீ இராமநாத ஞான தேசிகராலும் திருப்பணி செய்யப்பட்டு, குடநீராட்டு விழா நடத்தி, சீரும் சிறப்பும், வனப்பும் மிக்க ஒப்புயர்வு பெற்ற பெரும் திருக்கோவிலாக எல்லா அங்க அமைப்புகளுடன் நிறைசெய்து, சுற்றுவீதிகள், திருக்குளம், மையமண்டபம் நுழைவாயில், ரதக்கூடங்கள், வளைவுடன் கூடிய ரதமேருகள் அனைத்தையும் நிறுவி, புதுப்பித்து, வேதபாடசாலை குடியிருப்புகள் ஆகிய நற்பணிகளையும் நகரத்தார் பலரும் பொருள் உதவி செய்யச் செவ்வனே செய்து முடித்தார்கள். அரசர்கள் காலத்து கோவில் திருப்பணிக்களுக்கு பின்பு முதல்முதலாக கோவில் திருப்பணி செய்தவர் ஆண்டவரே. நாட்டுக்கோட்டை நகரத்தார்களை கோவில் திருப்பணியில் முழுமையாக ஈடுபடச்செய்த பெருமை ஸ்ரீமத் ஆண்டவர் சுவாமிகளையே சாரும். கோவிலூர் மடத்தில் ஸ்ரீ குட்டைய சுவாமிகள் ஸ்ரீ ஆண்டவரின் சிஷியராக விளங்கினார். அவர் தேவகோட்டை நகரத்தார் வழியில் ஐந்து வீட்டார் என்னும் குடும்பத்தில் பிறந்தவர். ஸ்ரீ ஆண்டவர் இவரை சிவரகசியம் என்னும் நூலில் 25 மூர்த்தம் வைப்பது சிவப்பணி என கூறி மதுரைக்கு அனுப்பி வைத்தார். அதை ஸ்ரீகுட்டைய சுவாமிகள் சிறப்பாக நிறைவேற்றி வைத்தார்கள்.

இவர் ஸ்ரீ மீனாட்சி அம்மனுக்கு நாள்தோறும் நிகழும் அர்த்தசாம கட்டளையில் மூக்குத்திமாலை அனுப்பி கட்டளை நிறைவேற்றி வைப்பது வழக்கம். இவ்வழக்கு இன்றும் நடைபெற்று வருகிறது.

இரண்டாவது மடாதிபதியாக தேவகோட்டை ஸ்ரீலஸ்ரீ அருணாசல ஞான தேசிகர் பரிபாலனம் செய்தார்கள். மடத்தின் நிர்வாகத்தை கவனித்து வந்த அவர் ஒன்றரை ஆண்டு காலத்துக்குப் பின் தன் உடன்பிறந்த தம்பி கருணாநிதி என வழங்கும் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர ஞான தேசிகரிடம் ஒப்படைத்தார். இவர் ஸ்ரீமத் ஆண்டவர் விட்டுச்சென்ற ஆன்மீக பணிகளை திறம்படச் செய்து சிதம்பரம் – ஈஸ்வரன் கோவில், மதுரையில் சொக்கநாதர் மீனாட்சி அம்மனின் கும்பாபிஷேகம், கோவிலூரில் திருக்குளமும், மையமண்டபமும் அமைத்தார்கள். லட்சணாவிருத்தி, பிரும்ம நாமாவளி, குரு ஸ்துதி குசுமாஞ்சலி, என்ற நூல்களையும் வெளியிட்டார்கள். மடத்துக்கு விளை நிலங்கள். தென்னை தோப்புகள் வாங்கி விஸ்தரித்தார். இவரிடம் புகழ்பெற்ற யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் வேதாந்த பாடம் பயின்றார்கள். 96 ஊர் நகரத்தார்களின் கூட்டம் நடைபெற பெரும் கல்யாண மண்டபத்தை கோவிலூரில் நிறுவினார்கள்.

இவருக்குப்பின் நான்காவது மடாதிபதியாக காரைக்குடி ஸ்ரீலஸ்ரீ ராமசாமி ஞானதேசிகர் பட்டத்துக்கு வந்தார். சுமார் ஏழு ஆண்டுகள் இவர் அருளாட்சி செய்தார். கோவிலூரில் ஸ்ரீ ஆண்டவர் கோவிலை சுற்றி

மதில் சுவர் கட்டி, அஷ்டலட்சுமி மண்டபமும் மடத்துக்கு உணவு படைக்கும் கூடமும் கட்டினார்கள்.

ஐந்தாவது மடாதிபதியான திருக்களர் ஆண்டவர் என பெயர்பெற்ற ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞான தேசிகர் அவர்கள் தஞ்சை ஜில்லா மன்னார்குடியை அடுத்து திருக்களரில் அமிர்தவல்லி சமேத பாரிஜாதவனேசுவரர் திருக்கோவிலையும், வேதாந்த மடம், பிரும்மசபை, நெற்களஞ்சியம், மலர்மிகு நந்தவனம், பசுமடம், ஆகிய திருப்பணிகளைச் செய்தார்.

1908–ம் ஆண்டு சிருங்கேரி மடத்தை அலங்கரித்த ஜகத்குரு ஸ்ரீ சச்சிதானந்த சிவ அபிநய நரசிம்ம பாரதி முன்னிலையில் திருநெல்லை அம்மன் சமேத கொற்றவாளீசுவரர் குட நீராட்டு விழாவை சிறப்பாக செய்தார்கள். சிருங்கேரியில் சாரதாம்பாள் கோவிலையும் கருங்கற்களால் நிர்மாணித்து இத்திருப்பணிச் செலவு முழுவதும் கோவிலூரர் மடத்தின் மூலமாகவே செலவு செய்தார்கள். இன்றும் சாரதாம்பாள் கோவிலும் திருநெல்லையம்மன் ஆலயமும் ஒரே மாதிரிதோற்ற அமைப்பில் உள்ளதை காணலாம். திருக்களரில் பஞ்சமூர்த்திகளுக்கு ஐந்து தேர்கள் செய்து வைத்தார்கள். இவருக்கு ராஜரிஷி என்ற பட்டமும் உண்டு. சிருங்கேரி பீடத்துக்கும் கோவிலூரர் மடத்துக்கும் இவர்காலத்தில் மிக்க நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

திருநெல்லையம்மன் சந்நிதியில் எதிரே உள்ள மகாமண்டபம், சிற்ப விசித்திர வேலைப்பாடுகளுடன் கூடியது. ஒரே கல்லினால் செய்த தூண்களில் அதிசயிக்கும்படியான சிற்ப வடிவமைப்புகளை காணலாம். ஒரு தூணில் ஸ்ரீ சாரதாதேவி அலங்கார பூஷிதையாக தரிசனம்தர, மற்றொன்றில் ஊர்த்தவதாண்டவராஜாவின் பாதங்களுக்கு அருகில் காரைக்கால் அம்மையார், வேறு தூணில் குடமுழா வாசித்துக் கொண்டே கரம் குவித்தநிலையில் பிரும்மா, மீனாட்சி கல்யாணசிற்பம், எல்லாவற்றையும் ஸ்ரீமத் ஆண்டவர் அம்பாளுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து சரணாகதி தத்துவத்தை விளக்கி, ஞானத்தைவிட பக்தியே சிறந்தது. பக்தி செய்தாலே முக்தி என்னும் பிறவிப்பயனை அடையலாம் என்ற தத்துவத்தை இச்சிற்பம் வலியுறுத்துகிறது.)

நான்காவது பட்டம் வரை மடாதிபதிகள் முழங்கால்வரை வெண்மையான வஸ்திரமும், சுழுத்தில் வெண்மையான ரிப்பன் போன்ற துணியில் உத்திராட்சம் அணியும் வழக்கம் இருந்து வந்தது. ஐந்தாவது மடாதிபதியான ஸ்ரீதிருக்களர் ஆண்டவர் சிருங்கேரி குரு பீடத்தின் முறையைப் பின்பற்றி காவி உடையே அணியலானார். இன்றுவரை அப்பழக்கம் கோவிலூரர் மடாதிபதிகளால் அனுசரித்து வரப்படுகிறது. இவரிடம் உள்ள வாக்குபலித்ததால் எல்லோரும் இவரை மிகவும் போற்றி மதித்தனர். கோவிலூரர் மடம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு திருவண்ணாமலை, பொருள் வைத்தசேரி, திருக்களர், சிதம்பரம், திருப்புவனம் ஆகிய ஊர்களிலும், கிளைமடங்களாக வளவனூர் மேட்டுப்பாளையம், எறும்பூர், தத்துவராய சுவாமிகள் மடம் காரியனூர், மதுரை, போன்ற ஊர்களிலும் பரவியது.

இவர் அருளாட்சி செய்த காலத்தைப் பொற்கால ஆட்சி என மக்களால் புகழப்படுகிறது. கல்கி பத்திரிகையில் காஞ்சி பரமாச்சாரியார் இவரை துர்வாச முனிவரின் மறு அவதாரம் என புகழ்ந்து எழுதியுள்ளார்கள்.

அதன்பின் ஆறாவது மடாதிபதியாக தேவகோட்டை ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞான தேசிகர் பட்டத்துக்கு வந்தவுடன் திருக்களர் ஆண்டவர் விட்டுச் சென்ற தெய்வீக திருப்பணிகளை நிறைவு செய்தார்கள். சிருங்கேரியில் நரசிம்ம பாரதி சுவாமிகளின் சமாதிக்கு கோவில் எழுப்பினார். இவர் காசியில் இருந்த பொழுது இருவருக்கும் நெருங்கிய ஆன்மீக தொடர்பு உண்டு. சிருங்கேரியில் ஸ்ரீ சாரதாதேவிக்கு கும்பாபிஷேகம் நடக்க ஏற்பாடு செய்தார். மைசூர் மஹாராஜா கிருட்டின இராஜேந்திரர் இவரை தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று கௌரவித்துள்ளார்கள்.

ஏழாவது மடாதிபதியாக தேவகோட்டை ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிகர் தன்குரு திருக்களர் ஆண்டவர் ஊரான திருக்களரில் மடாலயத்தையும் ஆண்டவர் சமாதி கோவிலையும் சிறப்பித்து இரண்டிலும் அமுதுபடி

செலவும் நடத்தி வந்தார்கள். விளை நிலங்கள் சுமார் நானூறு ஏக்கருக்குமேல் இவர்காலத்தில் வாங்கப்பெற்றது. நானூறு மாணவர்கள் இவர்களிடம் வேதாந்த பாடம் கற்று பல கிளை மடங்களை உருவாக்கியுள்ளார்கள். அந்நாளில் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளும், ஸ்ரீரமண மகரிஷிகளும் திருவண்ணாமலை மடத்தில் தினமும் இவரிடம் சம்பாஷித்து மடத்தில் தினமும் உணவு அருந்தி சென்றுள்ளார்கள். மூலிகைகளைக் கொண்டு மருந்துகள் தயாரித்து ஏழைகளுக்கு தர்மமாக கொடுத்து குணப்படுத்தி வந்துள்ளார்கள். இவர் காலத்தில் கோவிலூர் மடம் சீரும் சிறப்புமாக ஆன்மீக பொலிவுடன் சிறந்து விளங்கியது.

அதன்பின் எட்டாவது மடாதிபதியாக காரைக்குடி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிகர் பட்டத்துக்கு வந்தார்கள்.

இவர் கோவிலூர் சிதம்பரம், எறும்பூர், திருக்களர், பொருள் வைத்தசேரி மானா மதுரை அகிய பல மடங்களுக்கும் தாமே ஏக மடாதிபதியாக இருந்து பரிபாலனம் செய்தார்கள். சிருங்கேரி மடாதிபதி ஒரு சமயம் இவரிடம் எல்லா திருப்பணி செலவுகளையும் கோவிலூர் மடத்தின் மூலமாகவே சிருங்கேரியில் செலவிடுகிறீர்கள். உங்கள் மடத்தையும் கவனிக்க வேண்டாமா என கனிவுடன் கூறியுள்ளார்.

பின் ஒன்பதாவது மடாதிபதியாக பட்டத்துக்கு வந்த ஸ்ரீலஸ்ரீ ராமனாதஞான தேசிகர் கோவிலூர் மடத்தை தற்கால வசதிக்கேற்ப நவீன முறையில் புதுப்பித்து, இருமுறை மலாய் நாடு சென்று பொருள் ஈட்டிவந்து திருவண்ணாமலை அம்பாள் கோவிலுக்கு தேர் செய்து வைத்தார்கள். திருவண்ணாமலையில் சேவாஸ்ரம் நிறுவி ஏழை, மாணவர்களுக்கு கல்வியும் உறைவிடம், உணவு, சீருடை அளித்து ஆங்கிலமொழி பயிற்சியும் அளித்து வந்தார்கள். இன்று அப்பள்ளி மிகவும் வளர்ச்சியடைந்து சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். இளமையிலிருந்தே சுவாமிகளுக்கு அருணகிரிநாதரிடம் ஈடுபாடு அதிகம். முதன் முதலில் திருவண்ணாமலையில் அருணகிரிநாதருக்கு விழா துவக்கியதோடு, ஆண்டு தோறும் அவ்விழா சிறப்புற நடத்த பேராதரவும் கொடுத்து வந்தார்கள். கோவிலூரில் இவர் காலத்தில் முகப்பு தேர் மண்டபங்கள் பழுது பார்க்கப்பட்டன.

கோவிலூர் ஸ்ரீ ஆண்டவர் மடத்துக்கு பத்தாவது மடாதிபதியாக ஸ்ரீலஸ்ரீ அரு. ராமனாத ஞான தேசிகர் பரிபாலனம் செய்தார். அதன்பின் 1986–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ஆம் நாள் ஸ்ரீ காசி விஸ்வநாத ஞான தேசிகர் அவர்கள் பட்டத்துக்கு வந்தவுடன் எல்லா மடங்களையும் கோவிலூர் மடத்தின் மேற்பார்வையில் கொண்டுவந்து, அந்தந்த மடங்களின் வரவு செலவுகளை சீர் செய்து அந்தந்த மடமே செலவிட உத்தரவிட்டார். மாதந்தோறும் சிந்தனைப் பூங்கா நடத்த ஏற்பாடு செய்தார். சிதைந்து போன தேர்களை புதுப்பிக்க ஏற்பாடு செய்துள்ளார். வேதாந்த வகுப்புகள், மக்கள் சேவை, ஏழை மாணவர்களுக்கு கல்வியுடன் உணவு, உடை, மருத்துவச் செலவு, அகிய எல்லா உதவிகளையும் செய்தார்.

திருமந்திரம், சித்தர்பாடல் ஆகியவற்றில் எந்நேரமும் ஆழ்ந்த பற்றும், கற்பதும் கேட்பதும் முருகனின் அற்புதம் என கந்தனின் திருமந்திரத்தை எல்லோருக்கும் உபசரிப்பார். தேவி, தேவி என ஆசீர்வதித்து திருநீறு இட்டு மனமுருக வாழ்த்துவார். குழந்தைகளிடம் ஆன்மீக உணர்வு வளர தம்பி பாப்பா படித்து பாரு என புத்தகங்கள் இன்னும் பல ஆன்மீக உணர்வு கொண்ட புத்தகங்களும் வெளியிட்டுள்ளார்கள்.

தற்போது பன்னிரண்டாவது மடாதிபதியாகப் பொறுப்பேற்று இருப்பவர் ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள்.

நம் நகரத்தார் பெருமக்களை, மன்னர் பின்னோராக ஆலயத்திருப்பணிகளில் ஈடுபடச் செய்தவர்களும் உலகம் முழுவதும் வேதாந்தத்தை பரப்பிய கோவிலூர் திருமடத்தை உருவாக்கியவர்களுமான, ''கோவிலூர் ஆண்டவர்' என வழங்கும் ஸ்ரீல ஸ்ரீ முத்திராமலிங்க ஞான தேசிக சுவாமிகளின் மகன் வழி 6வது தலைமுறைப்

பேரன் ஆவார்கள் நமது நாச்சியப்ப சுவாமிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

காரைக்குடியில் பிறந்த பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த நாச்சியப்ப சுவாமிகள், தமது 15 ஆவது வயதில், காரைக்குடிக்கு இனி வருவது இல்லை என்ற வைராக்கியத்துடன் சென்னை வந்து, திருவான்மியூர் "கலாக்ஷேத்ரா"வில் திருமதி ருக்மணி அருண்டேல் அம்மையாரின் ஆதரவில் படிப்பை முடித்து, அம்மையார் நிறுவிய ஆலமரம் போன்ற கலாக்ஷேத்ரா தொண்டு நிறுவனத்தில், தன்னையும் இணைத்துக்கொண்டு சிறு வயது முதலே தொண்டு மனப்பான்மையுடன் வளர்ந்தவர்கள்.

அச்சுக் கலையின் நுணுக்கங்களை ஜெர்மன் நாட்டுக்குச் சென்று பயின்று கலாக்ஷேத்ராவின் ஓர் அங்கமான "கலாக்ஷேத்ரா அச்சகம்' மற்றும் பப்ளிகேஷன்ஸ் நிர்வாகியாக நீண்டகாலம் பணியாற்றி பின்னாளில் அம்மையாரின் ஆசியோடு அதன் உரிமையாளராக ஆனார்கள்.

அச்சுக் கலையிலும், புகைப்படக் கலையிலும் கைதேர்ந்த நிலையில், வெளிநாட்டு நூல்களுக்கு இணையாக இங்கு சென்னையில் பதிப்பித்து நூல்களை அமெரிக்கா போன்ற மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தமது அயராத உழைப்பின் மூலம் பெரும் பொருள் ஈட்டினார்கள்.

கோவிலூர் ஆதீனமாக தாம் பொறுப்பேற்று இருப்பது தமக்குக் குருநாதர் இட்ட கட்டளை என்ற பணிவோடும், கோவிலூர் மடத்தை மகாதேவ ஞானதேசிகர் காலத்தில் இருந்தது போல் ஆன்மீகக் கல்வி வழங்கும் தலைசிறந்த மடமாக விளங்கச் செய்ய வேண்டும் என்ற துடிப்போடும் நிர்வகித்து வருகிறார்கள்.

திருநெல்லையம்மை தம்மை இந்த நோக்கம் நிறைவேற ஒரு தொண்டனாகவே பணி செய்ய வாய்ப்புத் தந்திருக்கிறார் என்று நம்பிப் பல பணிகளைத் தொடங்கியிருக்கிறார்கள் சுவாமிகள்.

சுவாமிகள் மடாதிபதியாகப் பதவி ஏற்ற தினமே கோவிலூரில் ஒரு சிறுவர் பள்ளி தொடங்கப் பெற்றது.

குழந்தைக் கல்வியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட நாச்சியப்ப சுவாமிகள், சின்னஞ் சிறுவயதில் வெறும் ஏட்டுக் கல்வி கற்றுக் கொடுப்பது மட்டும் போதாது நல்லொழுக்கம், தெய்வபக்தி, கலைத் திறமை, கைவினைத் திறன், இவற்றையும் சொல்லிக் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும் என்பதில் அசைக்க முடியாத உறுதி உடையவர்கள்.

கோவில்கள் இருக்கின்றன. மக்களுக்குப் பக்தியும் இருக்கிறது, ஆனால் கோவிலில் பணி செய்வோர் குறைந்து வருகிறார்கள். போதிய ஊதியம் இன்மைதான் காரணம், பல்லாயிரம் ஆண்டுகளாகத் தழைத்து வேரூன்றிய கோவில் கலாசாரம் நம் கண் எதிரே மங்கிக் கொண்டு வருகிறதே எனக் கவலை கொண்ட சுவாமிகள், மேல் நாட்டினர் பலர் பொருளாதார வளர்ச்சியினால் மட்டுமே வாழ்க்கை செம்மையாக அமைய முடியாது என்பதை உணர்ந்து ஆன்மீக அனுபவத்தைத் தேடி பாரத நாட்டை நோக்கி வருகிறார்கள் என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறார்கள்.

அப்படி இருக்கும்போது நமது நாட்டில் ஆன்மீகம் தழைத்தோங்க என்னென்ன செய்யவேண்டும்?

தவத்திரு நாச்சியப்ப சுவாமிகள் மடாதிபதியாக பதவி ஏற்ற மூன்று மாதத்துக்குள் கோவிலூரில் வேதாகம பாடசாலை, திருமுறைக் கல்லூரி, நாதசுர தவில் இசைக் கல்லூரி எல்லாம் தொடங்கப் பெற்றுள்ளது. மேலும் தேர் செய்யும் பயிற்சிக் கூடம், வாகனங்கள் செய்முறை, திருவாபரணங்கள் செய்முறை போன்றவை கற்றுக் கொடுக்க வசதிகள் செய்து தர ஏற்பாடு செய்துள்ளார்கள். தேர்வாகனக் கல்லூரி, சிற்பக்கல்லூரிகள் தொடங்கப் பெற்றன.

தென் நாட்டுக் கோவில்களும் கோவில்களைச் சார்ந்து வளர்ந்த எல்லா கலைகளும் மிக உயர்ந்த

நிலையை அடைய வேண்டும், நாட்டில் ஆன்மிகம் தழைக்க வேண்டும், இந்தியப் பண்பாடு நிலைபெற வேண்டும் என்பதை எல்லாம் குறிக்கோளாகக் கொண்டு ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப சுவாமிகள் பாடுபட்டு வருகிறார்கள்.

மேலும் கோவிலூர் மடாலயம் ஒரு பல்கலைக் கழகமாக திகழ வேண்டும் என்று பெரு விருப்பம் கொண்டு செயலாற்றி வருகிறார்கள்.

இந்த எண்ணத்தைச் செயலாக்கும் பொருட்டு முதலில், இந்தியப் பண்பாடு – ஆராய்ச்சி நிறுவனம் (Indian Institute of Indology) என்ற ஆய்வு மையத்தை நிறுவியுள்ளார்கள். இதன் மூலம் நாடு தழுவிய பண்பாடுகளையும், மரபுகளையும் ஆராய்ச்சி செய்யவும் நூல்கள் வெளியிடவும், அறிஞர்களை ஊக்குவிக்கவும் மொழிகளையும் மற்ற பல வேறுபாடுகளையும் கடந்து இந்த ஆராய்ச்சிகள் நடைபெறவும் தவத்திரு நாச்சியப்ப சுவாமிகள் திருவுளம் கொண்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

இதற்கு அடுத்து "சனாதன தர்ம உலகப் பல்கலைக்கழகம்' ஒன்றை கோவிலூரில் 250 ஏக்கர் நிலப்பரப்பிலும் ஆரம்பிக்க பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சனாதன தர்மத்துக்கு உட்பட்ட எல்லாக் கலைகளையும், மொழிகளையும் இலக்கியங்களையும், பழம் பெரும் சின்னங்களையும் ஆராய்ந்து வெளியிட இப் பல்கலைக்கழகம் ஊக்குவிக்கும்.

இந்திய நன்னாட்டின் மேம்பாட்டுக்காகவும் சனாதன தர்மத்தை நிலைநிறுத்தவும் கோவிலூர் தவத்திரு நாச்சியப்ப சுவாமிகள் மேற்கொண்டுள்ள இந்தப் பணிகளுக்கு உலகம் முழுவதிலும் உள்ள அன்பர்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டுகிறோம்.

கோவிலூர் ஆதீன ஞானாச்சார்ய பரம்பரை

பரம்ஆக ஒளிர்சக்தி தானந்தம் ஆம் விண்டு
பங்கயன் விசிட்டர் சத்தி
பராசமா முநிமகா வியாசர்சீர் சுகர்கௌட
பாதர் கோவிந்த யோகி
அருளுருவம் ஆம்சங்க ராசாரி யார் இறைவன்
அமரபதம் பாதர் உயர்அத்
தாமலகர் தோடகா சிரியர்வார்த் தீகர்வித்
தியாரண்யர் ஆகும் உரவோர்
இருள் உருவம் அற்ற அவர் மரபு அதனில் வந்த
சுப்பிரமணிய தேவன் நயின
ஈசன் அழ கப்பஆ ரியன்வீர பத்ரகுரு
இன்பமுத்தைய அடிகள்
தெருளுருவம் ஆம் உகர் தையன் நன்மைகளிலாத
தீயனேன் தனையும் ஆண்ட
சீர்முத்தி ராமலிங்கேசதே சிவன் இவர்கள்
திகழ்பதம் இறைஞ்சுவோமே.

1. பரம்பொருளான சச்சிதானந்தம் 2. விஷ்ணு 3. பிரம்மா 4. வசிஷ்டர் 5. சத்தி 6. பராசரர் 7. வியாசர் 8. சுகர் 9. கௌட பாதர் 10. கோவிந்தயோகி 11. சங்கராச்சாரியர் 12. பத்மபாதர் 13. அஸ்தாமலகர் 14. தோடகாச்சாரியர் 15. வார்த்திகாச்சாரியார் 16. வித்தியாரண்யர்.

அவர்கள் மரபில் வந்தவர்கள்

1. சுப்பிரமணிய தேசிகர் 2. நயிநதேசிகர் 3. அழகப்ப தேசிகர் 4. வீரபத்திர தேசிகர் 5. முத்தைய தேசிகர் 6. உகந்த லிங்க ஞான தேசிகர்.


1. ஸ்ரீ ல ஸ்ரீ முத்திராமலிங்க ஞான தேசிகர்
2. ஸ்ரீ ல ஸ்ரீ துறவு ஆண்டவர் என்னும் அருணாசல ஞான தேசிகர்
3. ஸ்ரீ ல ஸ்ரீ கருணாநிதி என்னும் சிதம்பர ஞான தேசிகர்
4. ஸ்ரீ ல ஸ்ரீ சின்னத்துறவு சுவாமிகள் என்னும் கண்டனூர் அருணாசல சுவாமிகள்
5. ஸ்ரீ ல ஸ்ரீ இராமசாமி ஞான தேசிகர்
6. ஸ்ரீ ல ஸ்ரீ திருக்களர் ஆண்டவர் (தவத்திரு வீர சேகர ஞான தேசிக சுவாமிகள்)
7. ஸ்ரீ ல ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிகர்
8. ஸ்ரீ ல ஸ்ரீ மகாதேவ ஞான தேசிகர்
9. ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர ஞான தேசிகர்
10. ஸ்ரீ ல ஸ்ரீ இராமநாத ஞான தேசிகர்
11. ஸ்ரீ ல ஸ்ரீ காசி விஸ்வநாத சுவாமிகள்
12. ஸ்ரீ ல ஸ்ரீ நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் ஆதீனத்தில் அருள் ஆட்சி செய்த அருளாளர்கள்


பட்டம் வ. எண்.	அருள் ஆட்சி செய்த ஆதீனகர்த்தர் பெயர்	தொடக்கம்	பரிபூரணம்
முதல்	குரு முதல்வர் (மடம் தோற்றம்) ஸ்ரீ ல ஸ்ரீ முக்திராமலிங்க ஞான தேசிக சுவாமிகள் (கோவிலூர் ஆண்டவர்) (காரைக்குடி)	1818	1847
இரண்டாவது	ஸ்ரீ ல ஸ்ரீ அருணாசல ஞான தேசிக சுவாமிகள் (துறவாண்டவர்) (தேவகோட்டை)	1847	1849
மூன்றாவது	ஸ்ரீ ல ஸ்ரீ சிதம்பர ஞான தேசிக சுவாமிகள் (கருணாநிதி சுவாமிகள்) (தேவகோட்டை)	1849	1876
நான்காவது	ஸ்ரீ ல ஸ்ரீ இராமசாமி ஞான தேசிக சுவாமிகள் (காரைக்குடி)	1876	1883
ஐந்தாவது	ஸ்ரீ ல ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் (திருக்களர் ஆண்டவர்) (புதுவயல்)	1883	1911
ஆறாவது	ஸ்ரீ ல ஸ்ரீ அண்ணாமலை ஞான தேசிக சுவாமிகள் (தேனிப்பட்டி)	1911	1919
ஏழாவது	ஸ்ரீ ல ஸ்ரீ மகாதேவ ஞான தேசிக சுவாமிகள் (தேவகோட்டை)	1919	1946
எட்டாவது	ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர ஞான தேசிக சுவாமிகள் (காரைக்குடி)	1946	1971
ஒன்பதாவது	ஸ்ரீ ல ஸ்ரீ ராமநாத ஞான தேசிக சுவாமிகள் (காரைக்குடி)	1971	1982
பத்தாவது	ஸ்ரீ ல ஸ்ரீ அரு. ராமநாத ஞான தேசிக சுவாமிகள் (அரிமளம்)	1982	1986
பதினொன்று	ஸ்ரீ ல ஸ்ரீ காசி விஸ்வநாத சுவாமி (பள்ளத்தூர்)	1986	1995
பனிரெண்டு	ஸ்ரீ ல ஸ்ரீ நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் (காரைக்குடி)	1995	




நிறுவனர் : ஸ்ரீ-ல-ஸ்ரீ முக்தி ராமலிங்க ஞானதேசிகர் - கோவிலூர் ஆண்டவர் (முதற் பட்டம்)




ஸ்ரீ-ல-ஸ்ரீ அருணாசல ஞானதேசிகர் (துறவு ஆண்டவர்)
(இரண்டாவது பட்டம்)




ஸ்ரீ-ல-ஸ்ரீ சிதம்பர ஞானதேசிகர் (கருணாநிதி சுவாமிகள்)
(மூன்றாவது பட்டம்)



ஸ்ரீ-ல-ஸ்ரீ இராமசாமி ஞானதேசிகர் (நான்காவது பட்டம்)




ஸ்ரீ-ல-ஸ்ரீ வீரசேகர ஞானதேசிகர் (திருக்களர் ஆண்டவர்) (ஐந்தாவது பட்டம்)




ஸ்ரீ-ல-ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிகர் (ஆறாவது பட்டம்)




ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாதேவ ஞானதேசிகர் (ஏழாவது பட்டம்)




ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிகர் (எட்டாவது பட்டம்)




ஸ்ரீ-ல-ஸ்ரீ இராமநாத ஞானதேசிகர் (ஒன்பதாவது பட்டம்)



ஸ்ரீ-ல-ஸ்ரீ அரு. இராமநாத ஞானதேசிகர் (பத்தாவது பட்டம்)



ஸ்ரீ-ல-ஸ்ரீ காசி விஸ்வநாத ஞானதேசிகர் (பதினொன்றாவது பட்டம்)



ஸ்ரீ-ல-ஸ்ரீ நாச்சியப்ப ஞானதேசிகர் (பனிரெண்டாவது பட்டம்)

இருள் அகற்றும் ஈசான்ய மடம், திருவண்ணாமலை

ரமண மகரிஷிக்கும், ஈசான்ய மடத்திற்கும் உள்ள தொடர்பு குறித்து, ஒரு சமயம் தவத்திரு இராமநாத அடிகள் செவி வழிச்செய்தி ஒன்றை என்னிடம் குறிப்பிட்டார். கடுந்தவம் கிடந்த ரமணர், தம் கடும்பசிக்கு உணவு கிடைத்தால் மிதமாக உண்டு உடம்பைப் பாதுகாத்துகொண்டார் என்பது சாதாரண இயற்கை நிகழ்ச்சிதான். அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ஈசான்ய மடத்திற்கும் வந்து, அங்கே கிடைத்த பிரசாதத்தை உண்டு களைப்பாற்றினாராம்.

இம் மடத்துடன் ரமணர் கொண்ட தொடர்பு குறித்து வேறொரு செவி வழிச் செய்தியையும் ஸ்ரீ இராமநாத அடிகள் வெளியிட்டதாக ஆனந்த விகடனில் 'அருணாசல மகிமை' என்ற தலைப்பில் வந்த தொடர்கட்டுரை ஒன்றில் ''பரணீதரன்' குறிப்பிட்டிருக்கிறார். மடத்திலேயே பகவத் கீதையைப் பற்றிய ஆரய்ச்சி வகுப்பு ஒன்று நடந்துகொண்டிருந்த சமயம், அப்பொழுது எழுந்தருளிய ரமண பகவான், இராமநாத சுவாமிகளுக்கு முன்பு தலைவராக இருந்த தவத்திரு நடேச சுவாமிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, இரண்டு மூன்று கீதை சுலோகங்களுக்கு புதுமையான பொருள் கூறி கேட்போரை வியப்பில் ஆழ்த்தினாராம்.

'இருளே உலகத்து இயற்கை' என்று தொடங்கும் பிரசித்தமான ஒரு பாட்டை தமிழறிஞர்கள் நினைவு படுத்திக்கொள்ளலாம். அப்பாட்டிலே, 'இருள் அகற்றும் கைவிளக்காகக் கற்ற அறிவுடைமை'யைச் சுட்டிக் காட்டுகிறார், ஆசிரியர். ஈசான்ய மடம் போன்ற மடாலயங்களில் தலைவர்களும் ஞானக் கைவிளக்குகளாகத் திகழ்ந்து, இருளுடே மருண்டு திரிந்து அல்லற்படுவோருக்கு நெறி காட்டியதுண்டு,

ஞானக் கைவிளக்குகள் சில ஈசான்ய மடத்தில் தோன்றுவதற்கு முன் காரணர் கந்தப்ப தேசிகர் என்ற ஞான தீபம்தான். இத்தேசிகர் பிள்ளைப் பிராயத்திலேயே 'குழந்தை மனிதனின் தந்தை' என்ற புதைபொருளோடு கூடிய ஆங்கில வாக்கிற்கு ஓர் இலக்கியமாகத் திகழ்ந்தாராம். ஆழ்ந்து அகன்ற நுண்ணறிவு அப்பொழுதே மிளிரத் தொடங்கி விட்டது.

'குழந்தைக் குருநாதன்' என்று டாக்டர் மாண்டிசோரி கூறுகிறரே,அத்தகையதொரு சிறப்புக் குருநாதனாக இருந்தாராம் கந்தப்ப தேசிகர். சாதாரண அறிவு வளர்ச்சியில் மட்டும்மல்ல. தவயோகப் பற்றிலும் ஓர் இயற்கை மேதையாகத் திகழ்ந்தார். இக்குழந்தைக் குருநாதர் என்பர்.

அதிசயச் சிறுவரின் உள்ளம் சிவயோகத்திலும் விச ஞானத்திலும் சிவ பூஜையிலும் ஈடுபடலாயிற்று.

தீவிர வேதாந்த மனப்பான்மையும் கந்தப்பருக்கு வாய்த்திருந்தது.

'24 மணி நேரமும் வாழ்வதெப்படி?' என்பது குறித்து ஓர் அருமையான சிறு நூல் ஒன்றை நான் ஒரு சமயம் வாசிக்க நேர்ந்தது. கந்தப்ப தேசிகரோ அல்லும் பகலும் அனவதரமும் ஞானவாழ்வு வாழத் தொடங்கிவிட்டாராம். தமது அன்னையாரின் அனுமதிபெற்றுக் கந்தப்பர் தீர்த்த யாத்திரை செய்து தம் அறிவையும் அனுபவங்களையும் பெருக்கிக்கொண்டு, பாச பந்தங்களைக் கடந்து சென்று ஞானப்பெரு நெறியிலே மேலே மேலே சென்று கொண்டிருந்தார் எனத் தெரிய வருகிறது.

நடராஜப் பெருமானின் அருளால், இவர் குருதரிசனம் பெற்றார். ஒரு சித்த புருஷரான ஸ்ரீ மௌன சுவாமிகளை அடைந்து, தம்மை முழுக்க முழுக்க அவர் பணிக்கு அர்ப்பணம் செய்தார். தம் குருவிடம் விடைபெற்றுக்கொண்டு, முடிவில் மௌன தவம் இயற்றுவதற்கு இசைந்த இடமாகத் திருவண்ணாமலையைத் தேர்ந்தெடுத்தார்.

இவர் திருவண்ணாமலையைத் தேர்ந்தெடுத்தார் என்று கூறுவதைக் காட்டிலும் திருவண்ணாமலையே இவரைப் போன்ற ஞானிகளைத் தேர்ந்தெடுத்து 'வாருங்கள் வாருங்கள்' என்று வரவழைத்துக் கொண்டது எனக் கருதலாம்.

கந்தப்ப தேசிகர் மலைக்குகை ஒன்றில் தவம் கிடந்து மனக் குகையில் ஒடுங்கி வாழும் இரகசியத்தைத் தெரிந்து கொண்டாராம். இவருக்குப் பணி செய்தவர்கள் பலவகைப் பேறுகள் பெற்றதாக இவரது வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் கிடைத்திருக்கின்றன. அப்பேறுகளைப் பெறலாம் என்ற பேராசையால் இவருக்குத் தொந்தரவு கொடுத்த லௌகிகர்களைக் கண்டு அஞ்சியது தேசிகரின் ஞான உள்ளம். இந்த நிலையில் ஸ்ரீதேசிகர் திருவண்ணாமலைக்கு தென்மேற்கிலுள்ள ஒரு குளக்கரையில், நிஷ்டை கூடியிருந்தார். அங்கே மாடு மேய்ப்பவர்களின் பராமரிப்பைப் பெருஞ்செல்வர்களின் உபசாரங்களைக் காட்டிலும் உவந்து ஏற்றுக் கொண்டார்.

ஞான தேசிகர் சமாதி நிலையில் இருக்கும் போது ஒரு புலி வந்து பாதுகாப்பாக இருந்ததென்றும், புலியை இவர் 'அண்ணாமலையாரே!' என்று அன்புடன் அழைப்பார் என்றும் சொல்லுகிறார்கள் புலிக்கு அஞ்சாத ஞான இதயம் லௌகிகப் புலிகளுக்கு அஞ்சிச் சமாதியில் ஆழ்ந்திருந்தது! இதைக் காட்டிலும் என்ன அதிசயம் இருக்க முடியும்?

ரமண ரிஷியின் ஞானம் வெள்ளையரையும் வசீகரித்தது என்பதை நாம் அறிவோம். அப்படியே அக்காலத்துக் கலைக்கடராக இருந்த ஒரு வெள்ளைத்துரையையும் கவர்ந்தன ஈசான்ய ஞான தேசிகரின் ஞானமும் அருளும்.

இந்த ஞான பரம்பரையில் வந்திருக்கும் ஸ்ரீ இராமநாத அடிகளின் சீரிய நன்முயற்சியால் இப்பொழுது நடைபெற்று வரும் சேவாஸ்ரமத்தின் சமூகப் பணிகளைக் காலத்திற்கு ஏற்ற நல்லறப் பணிகளாக நாம் வரவேற்கிறோம். இந்த ஆசிரமம், அநாதைப் பிள்ளைகளுக்கு ஓர் இல்லம் அமைத்துள்ளது. இங்கே உலகியலுடன் தெய்வ நெறியும் இணைந்து அறிவுடன் அறப்பற்றும் வளர்ந்து வருகிறது. இது அண்ணாமலையாருக்கு மிகவும் உவப்பான அருமைப் பணிகளில் ஒன்றாக அறிஞர்கள் மதிப்பர்.

இங்கு பட்டத்தில் இருந்த மடாதிபதிகள் விவரம்:

1. தவத்திரு. இராமலிங்க சுவாமிகள்
2. தவத்திரு. சச்சிதானந்த சுவாமிகள்
3. தவத்திரு சொரூபானந்த சுவாமிகள்
4. தவத்திரு மகாதேவ சுவாமிகள்
5. தவத்திரு. சதானந்த சுவாமிகள்
6. தவத்திரு மகாதேவ சுவாமிகள் (பிறகு கோவிலூரில் ஆதீன கர்த்தராக எழுந்தருளியவர்கள்)
7. தவத்திரு. நடேச சுவாமிகள்
8. தவத்திரு இராமநாத சுவாமிகள் (1971 முதல் கோவிலூர் ஆதீனகர்த்தராக எழுந்தருளி இருந்தவர்கள்)
9. தவத்திரு. சந்தசாமி சுவாமிகள்

இங்கு சாதுக்களுக்கு அன்னம் பாலிக்கப்படுகிறது.

திருக்கார்த்திகைத் திருவிழாவின்போது நகரத்தார்களுக்கு விருந்தும் நடத்தப்படுகின்றன.

சேவாசிரமம் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் பாலர் பள்ளியும் தொடக்கப்பள்ளியும் நடத்தப்பட்டு வருகின்றன.

நகரத்தார்களுக்கு திருவண்ணாமலைக் கோவிலில் தொன்றுதொட்டு இருந்து வரும் ஈடுபாடு மிகுதியாவதற்கு, ஈசான்ய மடம் பெரும் காரணமாக இருந்து வருகிறது எனலாம்.

ஆறாவது பட்டம் மடாதிபதியாக இருந்த சதானந்த சுவாமிகள், மடத்தைப் பெரிதும் வளர்ச்சி பெறச் செய்தார்கள். ஒன்பதாவது பட்டம் மடாதிபதியாக இருந்த ஸ்ரீ–ல–ஸ்ரீ இராமநாத சுவாமிகள் வேதாந்தம் பயின்றது இந்த மடத்தில்தான். இவர்கள் 23 ஆண்டுகள் இங்கு மடாதிபதியாக இருந்த காலத்தில், மடம் பெரிதும் வளர்ச்சியடைந்தது. அண்ணாமலையார் கோவில் திருப்பணிகளுக்கும், சேவாசிரமம் மூலம் உண்டி கொடுத்து உயிர் கொடுக்கவும் இந்த மடம் நிலைக்களனாக இருந்திருக்கிறது.

கந்தசாமி சுவாமிகள் பரிபூரணம் அடைந்தபின் கோவிலூர் மடாதிபதிகள் நேரடி மேற்பார்வையில் இருந்து வருகிறது.

நம்மடத்தின்பால் ஈடுபாடுடைய அன்பர்களால் பௌர்ணமி அன்றும் உண்டி வழங்கப்படுகின்றது.

பவழக்குன்று அழகானந்த மடம்

திருவண்ணாமலை

பவழக்குன்று மண்டபத்திற்கு உள்ளடங்கி, படாடோபம் ஏதுமின்றி பார்க்க மிகச் சாதாரணமாக இருக்கிறது. இந்த மடம் தோன்றக் காரணமாயிருந்தவர் அழகானந்தர்.

வேட்டைவலத்திற்கு அருகில் கண்டாச்சி புரம் என்ற சிற்றூர் ஒன்று இருக்கிறது. அவ்வூரில் தோன்றியவர் அழகானந்தர். அவர் நல்லொழுக்கமும், தெய்வ பக்தியும் கொண்ட ஆசார சீலர். இயல்பாகவே பற்றற்றவராக இருந்தார். ஒரு நாள் அவர் தெருவில் தறிநெய்து கொண்டிருந்தபோது, தீண்டப்படாத பெண்மணி ஒருத்தி கொண்டுவந்து கொடுத்த உணவை வாங்கிச் சாப்பிட்டுவிட்டார். அதைக் கண்ட உறவுக்காரர்கள் அவர்மீது ஆத்திரம் அடைந்தனர். ஒருவர் அழகானந்தர் கன்னத்தில் ஓங்கி அறைந்தே விட்டார். அந்த ஆகாரத்தைத் துப்பிவிடும்படி எல்லோரும் அவரைக் கட்டாயப்படுத்தினர். அவரும் துப்பினார். அவர் வாயிலிருந்து நறுமணம் கமழும் மலர்கள் கீழே விழுந்தன! அவரை அடித்தவர் இதைக்கண்டு மிக்க வேதனைப்பட்டார். சுற்றியிருந்தவர்கள் அவர் காலில் விழுந்து வணங்கினர். அவர் ஒரு மகான் என்பதை அறிந்து தங்களை மன்னித்தருளும்படி வேண்டினர்.

தக்க குரு ஒருவரிடம் உபதேசம் பெற்று அழகானந்தர் திருவண்ணாமலைக்கு வந்து துறவியாகப் பவழக்குன்றின் அடிவாரத்தில் 1850 முதல் பரிபூரணம் அடைந்த 1884 வரை வாழ்ந்து வந்தார்.


ஒரு நாயரின் வயிற்றுவலியை, அழகானந்தர் தீர்த்து வைத்தார். நாயர் பெரும் செல்வந்தர். பணத்தைக் கொண்டுவந்து அழகானந்தரின் காலடியில் கொட்டினார். சுவாமிகள் அதைத் தொடவில்லை. மாறாக, பவழக்குன்றின் மீதுள்ள பவழகிரீசுவரர் ஆலயத்திற்குத் திருப்பணிகள் செய்யும்படி நாயரிடம் கேட்டுக்கொண்டார். அப்படியே செய்து வைத்தார் நாயர். பின்னர் ஆண்டுதோறும் கோயில் ஆராதனைக்காக நெல் மூட்டைகளும் அனுப்பி வைத்தார்.


இந்த மடம் கோவிலூர் ஆதீனத்துக்கு உட்பட்டது.






ஈசான்ய மடாலயம் - திருவண்ணாமலை





ஈசான்ய மடாலயம் - திருவண்ணாமலை



ஈசான்ய மடாலயம் - திருவண்ணாமலை

ஸ்ரீமத் குட்டைய சுவாமிகள் மடாலயம்

டாக்டர் சுப. அண்ணாமலை, முதல்வர், தியாகராசர் கல்லூரி, மதுரை

கோவிலூர் ஆதீனத்தோடு தொடர்புடையதாய் மதுரை மாநகரில் அமைந்தது ஸ்ரீமத் குட்டையைய சுவாமிகள் மடாலயம் ஆகும். இதன் தோற்றமும் சிறப்பும் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

மதுரையம்பதியில் தெற்கு வீதியின் தென்பால் 164ஆம் கதவு இலக்கம் கொண்டு அமைந்துள்ளது ஸ்ரீமத் குட்டையைய சுவாமிகள் திருமடம். இதனை நிறுவியவர் பெயரே இதற்கு அமைந்தது. ஸ்ரீமத் குட்டையைய சுவாமிகள் கி. பி. 1847 ஆம் ஆண்டு அளவில் இத்திருமடத்தை நிறுவினர். 25 ஆண்டுகள் அதன் தலைவராக இருந்து மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் பல திருப்பணிகள் செய்து 1972 ஆம் ஆண்டு பரிபூரணம் அடைந்தனர். பின்னர் ஸ்ரீ சின்னையா சுவாமிகள், ஸ்ரீ கண்ணப்ப சுவாமிகள், ஸ்ரீ செல்லப்ப சுவாமிகள், ஸ்ரீ சிவானந்த சுவாமிகள், ஸ்ரீ சிதம்பர சுவாமிகள், ஸ்ரீ அருணாசல சுவாமிகள் ஆகிய பெரியோர்கள் முறையே மடாதிபதிகளாக வீற்றிருந்து பரிபூரணம் அடைந்தனர். இப்பொழுது ஸ்ரீ அரு. இராமநாத சுவாமிகள் தலைவராக வீற்றிருந்து வருகின்றார்கள்.

ஸ்ரீ குட்டையைய சுவாமிகள், கோவிலூர் மடாலயத்தில் ஸ்ரீ முத்திராமலிங்க தேசிக சுவாமிகள் சீடராக விளங்கியவர். அவர் பூர்வாசிரமத்தில் தேவகோட்டையில், நகரத்தார் குலத்தில், நகரக் கோவில் ஒன்பதனுள் ஒன்றாகிய இலுப்பைக் குடிக்கோயிலைச் சேர்ந்த 'ஐந்து வீட்டார்' என்னும் குடும்பத்தில், முத்து ராமன் செட்டியார் என்பவரின் நான்காவது மைந்தராகப் பிறந்து வளர்ந்தவர் ஆவார். அவருடைய பூர்வாசிரமப் பெயர் ஆதப்பன் என்பது. அவர் இளமையில் கற்பன கற்று, இறைவனை அறியும் ஞான வேட்கை உடையவராய்க் கோவிலூர்க்குச் சென்று, அங்கு வேதாந்த மடாலயம் நிறுவி அருள் ஆட்சி செலுத்திவந்த முத்திராமலிங்க தேசிக ஆண்டவரின் திருவடிகளைப் பணிந்து அவரால் துறவும் பிரம்மோபதேசமும் அளிக்கப்பெற்றுச் சீடராயினார். அங்கேயே குருபணியும் இறை பணியும் ஞானவேள்வியும் இயற்றிக் கொண்டு இருந்தார்.

அந்நாள்களில் ஒருநாள், கோவிலூர் ஆண்டவரைத் தரிசிக்க வந்த வேம்பத்தூர்ப் புலவர்கள், 'சிவரகசியம்' என்ற நூலில் கூறிய வாறு 25 மூர்த்தம் வைப்பது சிறந்த சிவப்பணி என்று கூறினர். அதைக் கேட்டருளிய ஆண்டவர், அச் சிவப் பணியை மதுரையம்பதியில் செய்ய வேண்டும் என்று திருவுள்ளத்து அனைத்துப் புலவர்களிடம், "இது என்ன பிரமாதம்? நமது குட்டையனை அனுப்பினாலும் செய்து விடுவான்' என்று கூறித் தம் சீடர் ஸ்ரீ குட்டையைய சுவாமியை அழைத்து, அதனைப் பணிக்க, அவரும் தம் ஞானசிரியரின் பணியைத் தலைமேற் கொண்டு, மதுரையம்பதிக்குப் புறப்பட்டார்.

மதுரையில் தெற்கு வெளி வீதியில் திருமடம் நிறுவினார். அங்குத் தலைவராக வீற்றிருந்து, ஞானவேட்கையுடன் தம்மை வந்தடையும் சீடருக்குப் பிரம்மோபதேசம் செய்தவண்ணம் மதுரைத் திருக்கோயில் திருப்பணியை மேற்கொண்டனர். ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானே தம்மைத் திருப்பணி செய்ய அருளாணையிட்டு அழைத்ததாக உணர்ந்து, மிக்க ஆர்வத்துடன் சிறப்பாகத் திருப்பணியைத் தொடங்கி நந்தி மண்டபத்தில் விசித்திரக்கால் விசேடச் சித்திர வேலை, அம்மை, அப்பர் மூலஸ்தான விமானங்கட்குப் பொன் தகடு வேய்தல், கொடி மரத்திற்குப் பொற்கவசம் அமைத்தல், சுவாமி கோயில் இரண்டாம் பிராகாரத்தில் கல் தள வரிசை அமைத்தல், ஆடிவீதி முன்புறம் கல் தளவரிசை அமைத்தல் முதலிய திருப்பணிகளைச் செய்தனர். சுவாமி சந்நிதியில் கொடிமரத்தைச் சூழச் சிறப்புக் கலை எழிலுடன் அமைந்துள்ள மண்டபமே நந்தி மண்டபம். இது நகரத்தார் செய்த திருப்பணியில் அமைந்ததாகும். இதற்குத் தூண்டுகோலாக இருந்து, நகரத் தார்களுக்கு

வழிகாட்டியாகவும் அமைந்து, இம்மண்டபத்தை உருவாக்கியவர் ஸ்ரீ குட்டையய சுவாமிகளே ஆவர். இப்பொழுது இம் மண்டபத்தைக் கம்பத்தடி மண்டபம் என்று அழைப்பர். இந்த இடத்தில் முன்பு கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் நான்கு தூண்கள் கட்டியஅளவில், துவாரபாலருடன் கூடியதாக மட்டுமே இருந்தது. 1877 ஆம் ஆண்டு நகரத்தார்கள் பொருள் உதவி செய்து, எட்டுத் தூண்கள் புதியனவாகச் சிற்பக் கலையெழில் பொங்க அமைத்து, அவற்றின் மேல் கருங்கல் விதானம் அமைத்து, இடைவெளியை நிரப்பி மண்டபம் உருவாக்கினர். இதற்குக் காரணபுருடராக விளங்கியவர் ஸ்ரீ குட்டையைய சுவாமிகளே ஆவர்.

இந்த மண்டபத்தில் 25 மூர்த்திகள் உள்ளன. அவையாவன:

1. கயிலாச ரூடர்
2. சந்திரசேகரர்
3. இடபாந்திகர்
4. இலிங்கோற்பவர்
5. சாமதகனர்
6. நடராசர்
7. சுகாசனர்
8. காலசம்மாரர்
9. மார்க்கண்டேயர்
10 சோமசுந்தரர்
11. கலியாண சுந்தரர்
12. திரிபுராந்தகர்
13. கங்கர நாராயணர்
14. அர்த்த நாரீசுவரர்
15. இடபாரூடர்
16. ஏகபாத மூர்த்தி
17. சக்ரதரர்
18. சலந்தரானுக்கிரர்
19. தட்சிணா மூர்த்தி
20. கஜசம்மாரர்
21. சண்டே சானுக்கிரர்
22. சோம சுந்தரர்
22. சோம சுந்தரர்
23. கிராதார்ச்சுனர்
24. உருத்திரர்
25. பிட்சாடனர்

ஸ்ரீ சுவாமிகள் மதுரைக் கோயிலில் திருப்பணிகளை முடித்து, கும்பாபிடேகம் செய்து வைத்தருளுமாறு கோவிலூர் மடாலயத்தில் அப்பொழுது தலைவராக விளங்கிய ஸ்ரீ கருணாநிதி சுவாமிகளை வேண்டிக் கொண்டனர். அவர்கள் ரெங்கூனுக்குத் தந்தி அனுப்பி, பர்மாவெங்கும் இருந்த நகரத்தார் பெருமக்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு மாத ஊதியம் நன்கொடையாகத் தருமாறு குறிப்பித்து, அவ்வண்ணமே பெற்றுத் தாமே முன் நின்று மதுரைத் திருக்கோயில் கும்பாபிடேகத்தை நிறைவேற்றியருளினர். ஸ்ரீ குட்டையைய சுவாமிகள் இத்திருப்பணிகளை முற்றுவித்ததோடு, ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் அஷ்ட மிப் பிரதட்சிணத்தில், தெற்கு வெளி வீதிக்கு எழுந்தருள்வதற்கு என வெள்ளி இடபவாகனம் செய்வித்துத் திருக்கோயிலுக்கு அளித்தனர். சுவாமிகள் இத் திருப்ணியில் பல லட்சம் ரூபாய்களை ஈடுபடுத்தினார்.

மதுரைத் திருக்கோயிலில் மேலும் எஞ்சிய திருப்பணிகளைச் செய்யுமாறு சுவாமிகள், அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தினரை வேண்டிக் கொண்டனர். அவர்கள் திருக்கலியாண மண்டபம், ஆடிவீதிக் கல் தள வரிசை, வடக்குக் கோபுர நிறைவு முதலிய திருப்பணிகளை மிகவும் சிறப்பாக அந்நாளில் 25 இலட்சரூபாய் செலவில் செய்து அமைத்தனர்.

ஸ்ரீ குட்டையைய சுவாமிகள் வேதாந்த நூல்களில் விற்பன்னர் ஆவார். அவர் மதுரைத் திருமடத்தில வீற்றிருந்தபோது பிரம்மவித்தாய், பல முமுட்சுக்களுக்குப் பிரம்ம வித்தையை உபதேசித்துக்கொண்டு அருளாட்சி செய்தனர். அவரது ஆட்சிக் காலம் காலயுக்தி வருடம் (கி. பி. 1847) முதல் ஆங்கீரச வருடம் (1872) வரை ஆகும். சுவாமிகள் ஆங்கீரச ஆவணி 5 ஆம் நாள் திங்கட்கிழமை, கிருஷ்ண பட்சம், பிரதமை திதி, சதய நட்சத்திரத்தில் விதேக கைவல்லியமாகிய பிரம்மப் பிராப்தி அடைந்தனர்.

நாயக்க மன்னர்களின் வழித் தோன்றலான அன்பர் ஒருவர், சுவாமிகளின் சமாதியினை அமைக்கத் தம் தோட்டத்தை வழங்கினார்.

ஸ்ரீ குட்டையைய சுவாமிகள் திருமடத்தின் மூன்றாவது தலைவர் ஸ்ரீ கண்ணப்ப சுவாமிகள், 16 ஆண்டுகள் பட்டத்தில் வீற்றிருந்து, ஒரு இலட்ச ரூபாய் செலவு செய்து திருமடத்தையும் ஸ்ரீ குட்டையைய சுவாமிகளின் சமாதிக் கோயிலையும் கல் திருப்பணியாக அமைத்தனர். திருமடத்தில் துறவிகளுக்கு உணவிற்காக, குருந்தனி, சம்பக்குளம் என்ற இரு சிற்றூர்களில் உள்ள நிலங்களை விலைக்கு வாங்கினர்.

ஸ்ரீ மீனாட்சி அம்மைக்கு நாள்தோறும் நிகழும் அர்த்தசாமக் கட்டளையில் மூக்குத்தி மாலை ஸ்ரீ குட்டையைய சுவாமிகள் மடாலயத்திலிருந்து அனுப்பி அணிவிக்கப்படுகிறது.

ஸ்ரீ அருணாசல சுவாமிகள் 11–12–1970 இல் பரிபூரணம் அடைந்த பின் இப்பொழுது ஸ்ரீ அரு. இராமநாத சுவாமிகள் அதிபதியாக இருந்து திருமடத்தைப் பரிபாலித்து வருகின்றார்கள்.

பதிப்பாசிரியர் குறிப்பு:

மதுரைக் கோயிலில் பார்ப்போர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் சிற்பங்கள் நிறைந்த பகுதி, கட்டுரையில் குறிக்கப்பெற்றிருக்கும் கம்பத்தடி மண்டபமே.

கோவிலூரர் ஆதீனகர்த்தர் விரும்பிய வண்ணம் உருவான இந்தக் கலைக்கூடம், சுவாமி சந்நிதியில் இரண்டாம் சுற்றில் உள்ளது. நந்தி மண்டபம், பலி பீடம் (பிற்காலத்தில் தங்கத் தகடு போர்த்தப்பட்ட) கொடி மண்டபம் ஆகியவற்றை 1494ல் கிருஷ்ண வீரப்ப நாயக்கர் என்ற மதுரை மன்னர் அமைத்தார். இவற்றை நகரத்தார் பிரித்து, திருத்தியமைத்து, இவற்றைச் சுற்றி, உயரமான எட்டுக் கருங்கல் தூண்களை நிறுத்தி அவற்றில் சிவபெருமானின் பல்வகைத் தோற்றங்களைக் கவினுறு சிற்பங்களாக வடித்தனர்.

மீனாட்சியம்மன் திருமணக் கோலத்தைச் சித்தரிக்கும் சிற்பமாக இப்பொழுது எங்கும் புகழுடன் பரவியுள்ள காட்சி, இங்கேதான் அமைந்துள்ளது. அதில் மணமகன் கோலத்தில் நிற்கும் சிவபெருமானின் எடுப்பான தோற்றமும், மணமகள் கோலத்தில் நிற்கும் அங்கயற் கண்ணியின் நாணமும் புன் சிரிப்பும் இயல்பான ஆண் பெண் மனநிலைகளைக் காட்டுவதோடு, மண நாளில் இவ்வாறு இருப்பீர் என்று வருங்கால மண மக்களுக்குக் கற்பிக்கும் ஒளிக்காட்சிப் பாடமாகவும் உள்ளன.

ஒவ்வொரு தூணிலும் நாற்புறங்களிலும் சிற்பங்கள் வடிக்கப்பெற்றுள்ளன. திருமணக் காட்சி தரும் தூணில் சோமசுந்தரரைக் காணுகிறோம்; தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி, என்னும் முப்புர அசுரர்களையும் சிவபெருமான் எரித்தார் என்பதை நினைவூட்டும் சித்திரத்தையும் காணுகிறோம்.

வலப் புறமாக வந்தால் இரண்டாவது தூணில் மார்க்கண்டேயனுக்காகக் காலனைக் கொல்லும் காட்சியே வெளிப்புறத்திலும், சுக ஆசனர் திருவுருவத்தை உட்புறத்திலும் காணலாம்.

அடுத்த தூணில் நடராசரும் காமதகனரும் உள்ளனர். நான்காவது தூணில் சந்திரசேகரர், காளைவாகனத்தில் சிவபெருமான், மாலடி காணாச் சிவபெருமான், இராவணன் கயிலையைத் தூக்கும் காட்சி ஆகியவை இடம்பெற்றுள்ளன.

இனி, வட வரிசையில் உள்ள தூண்களைக் காணலாம். சந்நிதிக்கு அருகேயுள்ள தூணில் சங்கர நாராயணர், அர்த்த நாரீசுவரர், ரிஷிபாரூடர், ஏகபாத மூர்த்தி, சக்ரதரர் முதலிய மூர்த்திகளின் வடிவங்கள் உள்ளன.

அடுத்த தூணில் வெளிப்புறத்தில் சலந்திர அனுக்கிரகரும் உட்புறத்தில் தட்சிணா மூர்த்தியும் உள்ளனர்.

அடுத்த தூணில் வெளிப்புறத்தில் யானைத் தோல் போர்த்திய சிவபெருமானும் (கஜசம்மாரர்). உட்புறத்தில் சண்டேசுவரர்க்கு மாலையிடும் சிவபெருமானும் சித்திரிக்கப்பெற்றுள்ளனர்.

எட்டாவது தூணில் சோமாஸ்கந்தர், கிராத அர்ச்சுனர், உருத்திரர், பிட்சாடனர் முதலிய மூர்த்திகளின் கோலங்கள் இருக்கின்றன. இதன் அடியில் நவக்கிரகச் சிற்பங்கள் உள்ளன. திருமாலின் பத்து அவதாரக் காட்சிகள் தூண்களின் உட்புறங்களில் அமைக்கப்பெற்றுள்ளன.

சிவபெருமானுக்கு உரிய பல மூர்த்தங்கள் இந்த எட்டு தூண்களிலும் அழகாக வடிக்கப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு மூர்த்தமும் ஒரு கதையைச் சொல்லுகிறது. மேலும், இம்மண்டபத்தில் பிட்டுக்கு மண் சுமத்தல், நாரைக்கு முத்தி கொடுத்தல் போன்ற திருவிளையாடல் நிகழ்ச்சிகளும் காட்டப்பெற்றுள. ஒரு தூணில் யானையின் தலையும் பெண்ணின் உடலும், புலியின் காலும் கொண்ட சிற்பம் உள்ளது. இம் மண்டபத்தின் கலை நயங்களைக் கண்டின்புறக் கண்கள் பல வேண்டும்.

இவ்வளவு நுண்ணிய சிற்பங்களைப் படைத்தவர்களால் ஹளேபேடு, பேலூர், கொனரக் போன்று விரசமான காட்சிகளையும் வடித்திருக்க இயலும், ஆனால் இம் மண்டபம் கோவிலூர்த் துறவிகளின் மேற்பார்வையில் அவர்கள் ஆணையின்படி அமைக்கப்பெற்றது அல்லவா?


குட்டைய சுவாமிகள் மடத்தின் மடாதிபதிகள்

1. ஸ்ரீ ல ஸ்ரீ குட்டைய சுவாமிகள்
2. ஸ்ரீ ல ஸ்ரீ சின்னைய ஞான தேசிக சுவாமிகள்
3. ஸ்ரீ ல ஸ்ரீ கண்ணப்ப ஞான தேசிக சுவாமிகள்
4. ஸ்ரீ ல ஸ்ரீ செல்லப்ப ஞான தேசிக சுவாமிகள்
5. ஸ்ரீ ல ஸ்ரீ சிவானந்த ஞான தேசிக சுவாமிகள்

இதன் பின்னர் இம்மடத்தை இதன் கிளை மடமான காளையார் கோவில் மடத்தில் இருந்து கொண்டு மடாதிபதிகள் நிர்வகித்து வந்துள்ளார்கள்.

தற்போது இம்மடம் கோவிலூர் மடாலயத்தின் நேரடிப் பார்வையில் உள்ளது.

இம்மடத்தைப் புதுப்பித்து வருவாய் அதிகரிக்கும் வகையில் விரிவாகக் கட்ட கோவிலூர் ஆதீனம் ஸ்ரீ ல ஸ்ரீ நாச்சியப்ப சுவாமிகள் அருள் ஆணை இட்டுள்ளார்கள்.





ஸ்ரீமத் குட்டையய சுவாமி மடாலயம்





ஸ்ரீமத் குட்டையய சுவாமி மடாலயம்

தில்லையில் ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் மடம்

பத்தென்பதாம் நூற்றாண்டில் தில்லைப் பதியில் வாழ்ந்த புலவர் பெருமக்கள் பலர், வேதாந்த நூல் விற்பன்னர்களும் சைவசித்தாந்த நூல்களில் வல்லவர்களும் ஆகிய இவர்கள் வடமொழி தென்மொழி வல்லுநர்களாய்த் திகழ்ந்தார்கள். அவர்களில் ஒருவராய் மிக்க கீர்த்தியுடன் விளங்கியவர்கள், ஸ்ரீ. பொன்னம்பல சுவாமிகள் ஆவார்கள். இவர்கள் கோவிலூர் மடத்தில் இளமைக்காலம் முதல் அம்மடாலய சீடராய் விளங்கியிருந்து, பின்னர்ச் சிதம்பரம் வந்தமையால் இவரைக்கோவிலூர்ப் பொன்னம்பல சுவாமிகள் என்னும் தொடர்புடன் வழங்குவர். இவர்கள் கோவிலூரிலிருந்த காலத்தில், வடநாட்டு யாத்திரை சென்று அந்நாட்டில் சிலகாலம் தங்கியிருந்து அங்குள்ள வித்துவசிகாமணிகளிடம் வடமொழி இந்தி முதலிய நூல்களில் சிறப்புற்று விளங்கும் வேதாந்த நூல்களை ஓதி உணர்ந்து விளங்கினார்கள். கோவிலூரில் தங்கியிருந்த காலத்து அம்மடாலயப் புகழ்விளங்கும் அரும்பணி பல புரிந்து திருமடத்தினை விளக்கம்பெறச் செய்தார்கள்.

பிறப்பு

அமிழ்தினும் இனிய தமிழகமதனில் பல்வளஞ் சிறந்தோங்கு பாண்டி நன்னாட்டிற் சிறந்து விளங்கும் இராமநாதபுரத்தைச் சேர்ந்த அனுமந்தக்குடி என்னும் சிற்றூரில் வாழ்ந்த பெற்றோர்கள், வட நாட்டிலுள்ள விஜயநகரில் போர்வீரராய்ப் பணியாற்றி வாழ்ந்துவரும் நாள் சுவாமிகள் தோன்றினார்கள். தந்தையார் பெயர் தெரியவில்லை. தாயார் பெயர் அங்கம்மாள் என்பதாம். தோன்றியகாலம் கலியாண்டு 4934க்குச் சரியான கர வருடமாகும்.

இளமை

மிக்க இளமைப் பருவத்திலேயே தந்தையார் பிரிவுற்றனர். ஆதலினால் தாயார் அரவணைப்பிலேயே வாழ்ந்து வரலானார்.

"வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வெனும் தன்மையோடும் சைலமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது"
என்னும் திருவாக்கிற்கியைய முன்னூழ் கூட்டியிடும் அதனால்.
சைவமாஞ் சமயஞ் சார்ந்திட வாய்த்த தன்றி
சால உயர்சிவஞானத்தாலே போளின மதியிருளைப் போற்றுவார் அருள் பெற்றாரே"

என்பதற்கேற்ப, ஞானநிலை கைவர இறைவன் பால் அன்பும் வளர்ந்தது. இறைவனைப் பூசை செய்யும் பேரார்வங் காரணமாகப் பள்ளியிற் பயின்றுவரும் அந்நாளிலேயே தனக்குத் தேய்த்துக் கொள்ள அன்னையார் அளித்துவரும் எண்ணெயைக் குளக்கரையிலுள்ள ஆனைமுகக் கடவுளுடைய திருவுருவிற் சாத்தித் திருமுழுக்காற்றி மலரிட்டு வழிபட்டு வருவர். இதனால் தம் குழவியின் மேனி எண்ணெய்ப் பசையற்று வரண்டு காணப்படுவது கண்டு அன்னையார் வினவுங்கால், சிகைக்காயை வரளத் தேய்த்தமை காரணம் என அன்னையார் முனிவுறாவண்ணம் கூறித் தப்பித்துக்கொள்வர். இவர் தம் பாலப்பருவம் கல்வி கற்பதிலும் தெய்வ பக்தியிலும் கழிந்து குமாரப் பருவம் வரும் பதினாறாட்டை வயது எய்தினார்.

தில்லைப் பதிமேவி திருத்தொண்டியற்றுதல்
வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்

பார்த்தற்குப் பாசுபதம் அருள செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரம் தீயணைத்தான் தில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன் றோ நந்தங்கூழைமையே

என்னும் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்திற் கூறியபடி, அவருக்குப் பிறவியின் அருமையும், திருவம்பலவன் பெருமையும், அவனுக்காட்பட்டிடவேண்டும் என்னும் நியதியும் முன்னை நல்வினையாற் றோன்றுதலும், அன்னையார்க்குத் தெரியாமலே சிதம்பரம் வந்து பெருமானைக் கண்டு வணங்கி அவனுக்குத் திருவாலயத்தில் திருவலகிடுதல், மலர் தொடுத்துக்கொடுத்தல், திருவிளக்கேற்றுதல் முதலிய நற்பணிகளிலேயே பொழுது போக்கி ஆறுகால பூசையும் தெரிசிக்கும் நியமம் உடையவராய் வசித்து வந்தனர்.

துறவு நிலை யெய்துதல்

"விளக்கினார் பெற்ற இன்பம் மழுக்கினாற் பதற்றியாகும்
துளக்கில்நன் மலர்தொடுத்தால் தூயவிண் ஏறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில நீதம்சொன் னார்க் கடிகள்தாம் அருளுமாறே"

என்னும் அப்பர் திருவாக்கின்படி இத்திருத்தொண்டு செய்த நற்பயனால், இவருக்கு உலக இன்ப உவர்ப்புத் தோன்றுதலும், அத்தில்லைப் பதியில் கோட்டையூரிலிருந்து வந்து தங்கியிருந்த தனவணிக மரபினராகிய திரு. பெத்தாச்சி அடிகள் என்பார்பால் துறவு பெற்றுக் கல்லாடை புனைந்து திருவீதியில் ஐயம் ஏற்றுண்டு தவம் இயற்றிக் கொண்டிருந்தார்.

ஞானாசாரியாரை அடைதல்

இவர் செய்து வரும் தவம் காரணமாகத் தன்னையும், தனக்காதாரத் தலைவனையும் காண வேண்டும் என்னும் ஞான நன்னெறியில் நாட்டம் தலைப்படலாயிற்று. இதனை அறிந்த பெத்தாச்சி அடிகள், கோவிலூர் மேய குருபரனாய் ஒளிரும் கருணாநிதியென்னும் காரணப் பெயரினராகிய சிதம்பரம் ஞான தேசிகர் தில்லைப் பதிக்கு இறை வழிபாட்டிற்காக எழுந்தருளிவந்த ஞான்று இப்பொன்னம்பலவராம் சீரிய இளைஞரை அழைத்துச்சென்று, அவரை வணங்குவிக்கச் செய்து இவ்விளைஞரைத் தேவரீர் மாணாக்கனாக ஏற்றுக்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்தபோது, அவர்களும் இவர் தம் முகப் பொலிவு முதலியவற்றினைக் கண்டு உள்ளம் பூரிப்புடையராய், அவ்வாறே ஆகுக எனத் தம் அடியார் கூட்டத்திற் சேர்த்துக் கொண்டு கோவிலூருக்கு அழைத்துச் சென்றனர்.

ஞான நூற் பயிற்சி

கோவிலூர்க்குச் சென்று அடியவர் கூட்டத்துள் அமர்ந்துறையும் நாள் மாணாக்கட்குரிய ஆத்தம், அங்கம், தானம், சற்பாவம் என்னும் நான்கும் இவர்பால் சிறந்துவிளங்குவதாயிற்று சிதம்பர ஞானதேசிகர் என்னும் குருபரன் இவருக்குச் சசிவன்ன போதம் என்னும் நூலை முதற்கண் பாடமாகச் சொல்லிவைத்ததும் அன்றி, இவர்தம் கூர்த்த மதிகண்டு மேலும் உள்ள வேதாந்த நூல் முற்றும் ஒன்றன்பின் ஒன்றாக ஓதுவித்து, ஞானவாசிட்டம் என்னும் இறுதி நூலையும் பாடம் பொல்லி முடித்து தாம் மாணாக்கர்கட்கு ஓதிவரும் பாடநூலை இரண்டாம் முறையில் மாணாக்கர்கட்கு விளக்கச் சொல்லும் இரண்டாம் பாடம் சொல்வது என்னும் உயர்பணியையும் கொடுத்து நன்மதிப்பையும் பெருக்கி வைத்திருந்தனர்.

சொல் வன்மை

"எத்துணைய வாயினும் கல்வி இடம் அறிந்து
உய்த்துணர் வில்லெனின் இல்லாகும்"

என்னும் நீதி நெறி விளக்க நூலாசிரியர் கூறியாங்கு தக்க நல்லாசிரியாரை அடுத்துப் பாடம் கேட்டுப் பண்பாடுற்றிருந்தாரேனும்,

... உய்த்துணர்ந்தும்
சொல்வன்மையின்றெனின்
என்றாம் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்றம் உடைத்து”

என்பதனால் பிறர்க்கு விளங்க எடுத்துரைக்கும் பெரும் பெற்றிமை இல்லையானால் பயன் இன்னாகுமே. இவர்பால் போதிக்கும் திறம், மன எழுச்சியோடு விளக்கிச் சொல்லும் சொல்லாற்றல் மிக்க இருந்தது. இவர் மடாலயத்தில் இருந்துவரும் மாணாக்கர்கட்கு அரிய அவிநயங்களுடன் பொருட் செறிவோடு கூடிய சொற்களை எளிதின் வழங்கி கேட்போர் மனதில் பசுமரத்தாணி போற் பதியும்வண்ணம் இனிமை ததும்ப ஓதிவருதலைக் கண்டு இதனால் உலகில் இவருக்கும் கண்ணேறுபடுமோ என்று அடியார்கள் அஞ்சுவார்களாம்.

வடநாட்டுக்குச் சென்று வடமொழி பயின்று வருதல்

“ஆயுந்தொறுந் தொறும் இன்பந்தருந்தமிழ்....”

என்பதற்கேற்ப பலகாலும் நூல் பயிலும் தோறும் இன்பெய்தி வந்தனரேனும்

“அறிதோ றறியாமை கண்டற்றால்...”

என்னும் திருவள்ளுவர் வாக்கிற்பேற்ப புதுப்புது நூல்கள் ஆயும்போதும், பயின்ற நூல்களிலும் அரிய பெரிய நுணுக்கங்களை உய்த்துணர்ந்திடும்போதும், பற்பல புதுக்கருத்துக்கள் புலப்பட, அதனால் தன்பால் முன்பிருந்த அறியாமையையும் காண்பாராயினர். இதனால் மேலும் பலவாகிய நூல்களைக் கற்கவேண்டும் என்னும் அவா மீக் கூர்ந்து வளர்வதாயிற்று.

இதனால் இவர் காசிப் பதிக்கேகி அங்கு கங்கைப் புனலாடி விசுவநாதரைத் தெரிசித்துக்கொண்டு வருவதற்கும், அந்நாட்டிற் சென்று வடமொழி, இந்தி முதலிய மொழிகளையும் அம்மொழிகளிலுள்ள பற்பலவாய வேதாந்த நூல்களையும் கற்று வருவதற்கும் அவாக் கொண்டிருந்தனர். ஆயினும் நாள் சிக்கல் காரணமாக நல் ஆசானை விட்டுப் பிரிய மனம் இன்றி சின்னாட் கழித்தனர். எனினும் காசிக்குச் செல்லும் அவா மேம்பட்டிருங்காரணத்தால் ஒரு நாள் குருபரன்பால் எய்த “அடியேன் காசிக்குச் சென்று ஆரியமும் இந்தியும் கற்று விரைவில் சேர்கின்றேன்” என்று விண்ணப்பிக்க அவரும் பிரிவிற்கு வருந்திப் பின் விடையளித்துத திருநீறு கொடுக்கப்பெற்று அணிந்து கொண்டு காரைநகர் – மெ. செ. சபாபதி ஐயா முதலிய அன்பர்கள் துணைவரக் காசிக்குச் சென்று கங்கைப் புனலாடி விசுவநாதரைச் சேவித்து ஆங்குறையும் நாள் தவசிரேட்டாகிய ஸ்ரீ கிருஷ்ணசுவாமிகள் என்னும் பெரியாரை அணுகி ஸ்ரீ நிச்சலததாஸர் என்னும் பெரியரால் இந்தி மொழியில் இயற்றப் பெற்றுள்ள விசாரசாகரம் என்னும் நூலைத் தெளிவுறக் கேட்டபின் மற்றும் சில நூல்களும் கேட்டுத் தெரிந்து மீண்டும் கோவிலூர்க்குத் திரும்பினார். திரும்புங்காலத்து கோவிலூர் திருநெல்லை நாயகிக்குக் குதிரைவீரர்போல் குதிரை வாகனத்தெழுந்தருளுங்கால் அலங்கரிக்க சட்டை தலைப்பாகை முதலியவற்றை பொற்சரிகை விரவத்தைத்து எடுத்துக்கொண்டு, தனக்குப் பாடம் சொல்லிய ஸ்ரீ. கிருஷ்ணசுவாமிகளிடம் விடைபெறுங்கால் அப் பெரியார் ஸ்ரீ. நிச்சலதாசர் என்னும் பெரியார் 27 லட்சம் கிரந்தங்களில் மூழ்கித் திரட்டி ஆக்கிய விருத்திப் பிரபாதி காரம என்னும் நூலைக் கையில் கொடுத்து உனது தெளிவுறுமுளத்தில் எளிதிற் புலரும் ஆதலின் நீயே படித்துணருதி என்று வாழ்த்துக் கூறி அனுப்ப மீண்டனர்.

நூல் வெளியீடு

காசியினின்றும் மீண்டு சென்னைக்கு வந்த போது சில பகல் அங்கு தங்கியிருந்து வித்தியாரணிய முனிவர் என்னும் பெரியாரால் வடமொழியிலியற்றப் பெற்ற பஞ்சதசி என்னும் நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு நூலை ஆய்ந்து அச்சியற்றுதவினர். இஃதன்றி ஸ்ரீ. பட்டனார் என்பரால் இயற்றப்பெற்ற பகவத்கீதை என்னும் கவி வடிவில் உள்ள நூலுக்கு தெள்ளிய உரை ஒன்று ஆக்கினர். அதில் மது சூதன சரசுவதி என்பவரால் வடமொழி நூலுக்கு கூடார்த்ததீபிகை என்னும் பெயரோடு எழுதிய வடமொழி வியக்கியானத்திற்கண்ட நுண்கருத்துக் களையும், ஸ்ரீ சிற்கறாவனந்தகிரி சுவாமிகள் என்பவரால் அந்நூலுக்கு வடமொழியிலியற்றி இருந்துவரும் மது சூதுனி, ஸ்ரீதரி, சங்கரானந்தி முதலிய வியாக்கியானங்களையும் அனுசரித்து அக்கருத்துக்களையும் இயைவித்து, அவர் வைத்த அப்பெயரையே நம் தமிழுரைக்கும் கூடார்த்த தீபிகை என அமைத்து, எழுதி முடித்து வெளியிட்டனர். ஈடு வடமொழி உரை நூற்கருத்துக்கள் பலவும் இயைவித்து அமைந்தமையின் இவ்வுரை நூல் மற்ற உரைகளிலும் சிறந்து விளங்குவதாயிற்று.

மேலும் நன்னிலம் தாண்டவராய சுவாமிகள் என்னும் பெரியார் தாமே தண்டமிழில் கவி வடிவில் இயற்றிய "கைவல்ய நவநீதம்" என்னும் அருமந்த நூற்கு ஸ்ரீவியாசூத்திரத்திற்கு ஸ்ரீ சங்கரபாஷியம் போல உரைவகுக்க எண்ணி விசாரசாகரம் என்னும் அரிய நூலின் கருத்துக்களை சாரமாகத் திரட்டி இந்நூலுரையில் அமைவித்து இவ்வுரைக்கு தத்துவார்த்த தீபம் என்னும் பெயரிட்டு வெளியிட்டனர். இவ்வுரை நூல் புலவர்களின் ஆராய்ச்சி அறிவிற்கோர் நல்விருந்தாகும். இன்னும் கவிராஜசிங்கம் என்னும் பெயரால் உலகு போற்றிவரும் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய வேதாந்தசூடாமணி என்னும் வேதாந்த நூற்கு மறை பொருள் விளக்கம் என்னும் பெயரல் ஓர் உரையியற்றினர். இவ்வுரை நூல்களே அன்றி வசிட்ட முனிவர் ஸ்ரீ ராமபிரானுக்கு உபதேசித்த வகுயோக வாசிட்டம் என்னும் அருந்தமிழ் நூலினை ஆய்ந்தும அச்சியற்றுவித்தனர். பஞ்ச தசி நீங்கலாக ஏனையவை பிற்காலத்தில் செய்யப் பெற்றவையாம். காசிப் பதியினின்றும் மீண்டபின் தனதாசிரியர் கட்டளைப்படி பிரமகீதைகளுக்கு மூலத்திற்கியைய அரும்பதவுரையும் விரிவுரைச்சாராமும் இயைபுற எழுதி முடித்தனர். இவையன்றி இவரால் பார்வையிடப் பட்டதும் வெளியிடப்பட்டதுமான நூல் மேலும் சில உண்டு.

கோவிலூரில் குரு மூர்த்திகளின் விவேக முத்தி

காசியினின்றும் மீண்டு கோவிலூர் வந்து குருமூர்த்திகளைத் தெரிசித்து அவரது அநுமதிப்படி இரண்டாம்பாட மாணவர்கட்குச் சொல்லியும் நூல்உரை எழுதியும் இருந்துவந்த காலத்து கலியாண்டு 4977க்குச் சரியான தாது வருடம் ஆடி மாதம் நான்காம் நாள் ரோகினி நட்சத்திரத்தன்று ஆசிரியப் பெருந்ததையாகிய ஸ்ரீ. சிதம்பர ஞான தேசிகர் இனிப் பிறவா முடிவான விவேக முத்தி எய்தினர். அப்பெருமானது திருமேனியை எல்லாவிதச் சிறப்புக்கும் அமைய விழாக் கொள்வித்து கோவிலூர் மடம் ஆதிகுருமூர்த்திகளான ஸ்ரீ முத்திராமலிங்க ஞானதேசிகர் சந்நிதி முன் சமாதி செய்வித்துறையும் நாள் அம்மடாலயத் தலைமைக்குரிய பெருமை முதலியவற்றால் தனக்குத் தகுதியிருந்தும் அம்மடாலய மரபுப்படி தனவணிக மரபின்கண் உதித்த ஸ்ரீ இராமசாமி ஞானதேசிகரை அம்மடாலயத் தலைவராய் பீடத்தின்கண் இருத்தி அவ்விடம் விட்டகன்று சிக்கல் பொருள்வைத்த சேரி மடத்திலும், பின்னர், திருவாரூர் திருமழபாடி, புனவாசல் என்னும் இடங்களிலும் சிறிது சிறிது காலம் தங்கியிருந்தனர். புனவாசல் என்னும் ஊரில் தங்கியிருந்தபோது அங்குப் பெரியதோர் மடம் இயற்ற எண்ணி செங்கற்சூளை போட்டு முடிந்த நிலையில் சுவாமிகட்குச் சூலை நோய் வந்தது.

தில்லைப் பதிக்கு வருதல்

சூலை நோய்க்குத் தக்க மருத்துவர்கள் வாயிலாக மருந்துண்டும் நோய் தீராமையால், தில்லைக்கேகிச் சிற்றம்பலவன் சேவடி வழுத்த வேண்டும் என்னும் எண்ணம் தோன்ற அந்நிலையில் தில்லை வாழ்ந்தணர் வந்து ஸ்ரீ நடராஜப் பெருமான் குஞ்சிதபாதத்திற் சாத்தும் மலர் மாலை தந்து திருநீறு கொடுத்த அளவில் சூலை

நோய் குணமடைவதாயிற்று. தில்லையையே நினைத்து இருந்தபடி இதனால் விரைவில் புறப்பட்டு தில்லையை அடைந்து அங்குள்ள ஸ்ரீ மௌன ஞானதேசிகர் திருமடத்தில் தங்கி யிருந்து நாளும் தனது குருமூர்த்திகளாகிய ஸ்ரீ சிதம்பர ஞானதேசிகர் திருவடிப் பாதுகையைத் தாபித்துப் பூசித்து வணங்கிக் கொண்டு நான்காண்டுகள்வரை இங்குள்ள அடியவர் திருக்கூட்டத்திற்கு வேதாந்த நூல் போதித்துக் கொண்டிருந்தனர்.

தில்லையில் புது மடாலயம் தாபித்தல்

தனக்கெனத் தனிமடம் ஒன்றும் வேண்டாது தங்கியிருப்பதை அறிந்த காரைக்குடி திருவாளர் மு. ராம. ஆவிச்சி செட்டியார் மடம் இயற்றுவதற்கு வாக்களித்திருந்த 15,000.00 பதினையாயிரம் ரூபாயையும் அவர் காலமானபின் அவர் மகன்பால் பெற்று அரிய தோர் மடம் இயற்றி கலியாண்டு 4983க்குச் சரியான சுபாநு வருடம் சித்திரை 14ஆம் தேதி குருவாரத்தில் கோவிலூர் மடத்தின் தலைவராய் அஞ்ஞான்று இருந்து வந்த ஸ்ரீ இராமசாமி ஞானதேசிகரை வரவழைத்து மடாலயப் பிரவேசம் சிறப்பாக நடத்தி அதில் தனது குருமூர்த்திகளின் திருவடிப் பாதுகையைத் தாபித்து வழிபட்டு வந்தனர். அன்று கோவிலூர் மடத்தின் தொடர்பு இம்மடத்திற்குத் தொடர்ந்து இருந்து வரவேண்டும் என்னும் நினைவுடன் கோவிலூர் மடாதிபதிகளைக் கொண்டே காசிவாசி சிதம்பர சுவாமிகட்கு பஞ்சதசி என்னும் நூலை பாடம் சொல்விக்கச்செய்தனர்.

அன்றியும் அம்மடத்திற்கு தன் ஆசிரியர் கோவிலூர் சிதம்பர ஞான தேசிகர் பெயரைச் சுருக்கியமைத்து கோ. சித. மடம் என்றும் பெயரிட்டு விளங்க வைத்தனர்.

ஆலயத் திருப்பணியாற்றுதல்

தில்லைக்கு வந்த பின் அம்மடாலயத்தில் தங்கி வேதாந்த பாடநூல் முறையாக ஓதுவித்தும பல நூல்கட்கு உரை எழுதி அச்சிவித்தும் சில நூல்களைப் பிழையறப் பரிசோதித்து வெளிவரச் செய்தும் நற்பணிகள் பலவாற்றி வந்த தன்றி இறைவர் திருவாலயங்களை புதுப்பித்துத் திருப்பணிகள் செய்தும் செய்விக்கச் செய்தும் வந்தனர்.

சிதம்பரம் ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவாலயத்துச் சிற்சபைக்குப் பொற்றகடுவேயும் பொருட்டுத் தன்பால் நூல் கற்ற கானாடுகாத்தான் திருவாளர் அருணாசல ஐயா, சிதம்பர ஐயா, முத்தையா செட்டியார் முதலிய தனவணிக அன்பர்களுடன் தேவிகோட்டை முதலிய வணிகப் பெருமக்கள் வாழும் பதிகளுக்குச் சென்று சேகரித்து பெரும் பொருள் கொண்டு சிற்சபைக்குப் பொற்றகடு வேய்ந்தும் மற்றும் பல திருப்பணிகள் செய்வித்தும் கும்பாபிஷேகம் நடத்துவிக்கச் செய்தனர்.

இன்னும் இளமையாக்கினார் கோவில் என்னும் திருப்புலிச்சரமுடையார் திருக்கோயிலை முற்றும் பிரித்துப் புதுப்பிக்க எண்ணி காரைக்குடியில் இளையாத்தக்குடி கோவில், ஒக்கூருடையார் மரபில் பொய் சொல்லார் மனைக்கண் தோன்றிய சின்னையா செட்டியார் வாயிலாகத் திருப்பணியை விரிவாகவும் அழகாகவும் இயற்றுவிக்கச் செய்து கும்பாபிஷேகம் நடத்துவித்தன்றி அவ்வாலயத்தின் முன்புறறதும் திருநீலகண்ட நாயனார் தம் மனைவி கையைப் பிடித்து மூழ்கி இளமை பெற்ற திருக்குளமுமாகிய யௌவன தீர்த்தத்தினை ஆழப்படுத்தி வெட்டி எடுத்து நாற்புறமும் கருங்கல்லினாற் சுவர் எடுத்து சீருற விளங்கச் செய்தனர்.

இதுவன்றி உய்யக் கொண்டான் சிறுவயல் திரு. சுப்பிரமணியச் செட்டியார் என்பாரை விளித்து அவருக்கு வந்த கண்ணோயையும் திருநீறளித்து மாற்றி அவர்தம் பெருமுயற்சியால் பர்மா நாட்டிற் சென்று ஈட்டித் தந்த பெரும்பொருள் கொண்டு எறும்பூர் என வழங்கும் இறும்பூதூர் ஸ்ரீ தத்துவராய சுவாமிகள் ஆலயத்தையும் அழகுறத் திருப்பணி செய்து கும்பாபிஷேகமும் நிகழ்த்துவித்தனர். நித்திய பூசைகுக்கும் ஏற்பாடு செய்து மடம் ஒன்று தாபித்ததன்றி அவ்வாலய பூசகர்கட்கும் தனி இல்லம் கோசாலை, திரு நந்தனவனம் முதலியவும் சீர்பெற அமைத்திடச் செய்தனர்.

உய்யக் கொண்டான் சிறுவயல் சுப்பிரமணியன் செட்டியாருக்குற்ற கண்ணோயைத் திருநீறளித்துத் தீர்த்திட்டபோது அதனைக் கண்ட அன்பர் ஒருவர் பின் வரும் பாடலைப் பாடினர் என்ப.

வாடும் சிலவினை நாமிருந்தால் இடர் வந்திடும் என்(று)
ஓடும் சிலவினைஎங்ஙனஞ் செல்வமென் றோட வழி,
தேடும் சிலவினை மீட்டும் வரேன் என்று செப்பி அங்கை
போடும் சிலவினை பொன்னம்பலவர் வெண்பூதி கண்டே

மாணவர் குழாம்

இவரிடம் பாடம் கேட்ட பல துறவிகள் மற்றும் நகர தனவைசியப் பெருஞ் செல்வர்கள், ஏனையவர்கள் என எண்ணில்லாதவர் இருந்தனர். இவர்களில் கோவிலூர் மடத்தின் தலைவராய்ப் பிறகாலம் இருந்து வந்த திருக்களர் ஆண்டவர் என்னும் வீரசேகர ஞான தேசிகர், திருவளர் சோலை சுப்பராய சுவாமிகள் ராமானுஜ ஐயர்வாள் என அழைக்கப்பெறும் குஞ்சிதபாத சுவாமிகள் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர் ஆவார்கள்.

தில்லை நடராசர் தேர்மீது வேறுகிறார்
தொல்லை வினை யெல்லாம் தொலைக்கவே-ஒல்லை
வடம் பிடிக்க வாருங்கள் வந்துசிவ லோகத்
திடம்பிடிக்க வாருங்கள் இன்று

என்னும் வெண்பாவைப் பாடி மடத்திலுள்ள அன்பர்களை வழிபாட்டுக்கு அழைத்துச சென்றனர் என்பது செவிவழிச் செய்தியாகும்.

மறைவு

இவர்கள் இருபத்திரண்டாண்டுகள் அம்மடாலயத்தின்கண் இருந்து பலமுறை வாசிட்ட பாடம்வரை நடத்தி இருந்தனர் என்ப. இவ்வாறு சிலகாலம் இருந்து கலியாண்டு 5006 க்குச் சரியான குரோதி ஆண்டு ஐப்பசித் திங்கள் 22ஆம் தேதி சித்திரை திருநட்சத்திரத்தில் விதேக முத்தி பெற்றனர்.

இவர்கள் திருமேனி இம்மடாலாயத்தின் தென்பாகத்தில் அடக்கம் செய்யப்பெற்றது. அவ்விடத்தே சிவலிங்கந்தாபித்து பின்பு அம்மடாலாயத்தின் தலைவராய் இருந்து வந்த காசி வாசி சிதம்பர சுவாமிகளால் அரிய கருங்கற்றிருப்பணி ஆலயம் அமைக்கப் பெற்றிருந்து வருகிறது.

காசி வாசி சிதம்பர சுவாமிகள் இருபதாண்டுகள்வரை இருந்து விரிவாக விளைநிலங்கள் சேர்த்தனர். மடாலாயத்தில் கீழ்பாலுள்ள இடங்களை விலைக்கு வாங்கிப் பசுமடம், சமையல் கட்டிடம், கட்டுத்தறி அடியவர் உறையுள் முதலியவும் அமைத்து, மடத்திற்குப் பெரும் புகழ் ஈட்டினர்.

இவர்கள் கலியாண்டு 5026க்குச் சரியான ரக்தாட்சி ஆண்டு தைத் திங்கள் 24ம் நாள் விதேக கைவல்லியம் எய்தினர். இவர்கள் ஆடசி செய்து வந்த 20 ஆண்டுகள் வரை இவர்கள் செய்துவந்த திருப்பணிகள் பலவாகும். இவர்கட்குச் சீடராய் வந்த துறவிகளும் அடியவர்களும் பலராவர். பரஞ்சோதி சுவாமிகள், பரமசிவ சுவாமிகள், சங்கத்து நாராயண சுவாமிகள், திருநீலகண்ட சுவாமிகள், சின்ன சுப்பையா சுவாமிகள் முதலிய பலர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள்.

எறும்பூர் மடம் பஞ்சமூர்த்தி துதி
முத்தியை யுதவும் கணேசனைக் குகனை
முதன்மை பெற்றொளிர் இறும் பூதூர்
நித்திய வடிவாம் நடநவில் இறையை

நிகழ் சிவகாம சுந்தரியை

சித்துருப் பொன்னம் பலவனார் பணிசெய்

சிவகரந் தனிவெழுந் தருளிப்

பத்தர்கட் கருளும் தத்துவராயப்

பனவரா முனிபத பணிவாம்.

பொன்னம்பல ஞான தேசிகர் திருப்பள்ளி யெழுச்சி என்னும் பத்துப பாடல்களுடைய அரிய நூலைச் சங்கத்து நாராயண சுவாமிகள் என்பார், குச்சலூர் முந்தைய சுவாமிகள் விருப்பப்படி பாடியுள்ளார்கள்.

பதிப்பாசிரியர் குறிப்பு:

சிதம்பரம் மௌன சுவாமிகள் மடம் சிதம்பரத்தில் சபாநாயகர் தெருவில் இருக்கிறது. இது 17ஆம் நூற்றாண்டு அளவில் ஏற்பட்ட மடம் என்பர். எனவே, காலத்தால் கோவிலூர் ஆதீனத்திற்கு முந்தியது. பொன்னம்பல சுவாமிகள், கோ. சித மடாலயத்தை ஏற்படுத்தியதற்கு முன்னர் கோவிலூர் ஆதீனத்துடன் தொடர்புடைய துறவிகள் பலர் பொன்னம்பல சுவாமிகள் உள்பட – சிதம்பரத்திற்குத் தல யாத்திரையாகச் சென்றபொழுது மௌன சுவாமிகள் மடத்தில் தங்கி வந்தனர் என்று தெரிகிறது.

மடாதிபதிகள்

1. ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள்
2. ஸ்ரீ காசிவாசி சிதம்பர சுவாமிகள்
3. ஸ்ரீ பரஞ்சோதி சுவாமிகள்
4. ஸ்ரீ பரமசிவ சுவாமிகள்

இவர்கள் பரிபூரணம் அடைந்த பின்னர் கோவிலூர் மடாலயத்தின் எட்டாவது பட்டம் சோமசுந்தர சுவாமிகள் பொறுப்பேற்றார்கள். அது முதல் இம்மடம் கோவிலூர் மடாதிபதிகளின் நேரடி மேற்பார்வையில் உள்ளது. இப்போது திருமண மண்டபம், விருந்தினர் விடுதி உள்ளன.





ஸ்ரீ பொன்னம்பல சுவாமி மடாலயம் - சிதம்பரம்



ஸ்ரீ பொன்னம்பல சுவாமி மடாலயம் - சிதம்பரம்

திருக்களர் கோ. ஆ. வீர. மடம்

திருக்களர் — மன்னார்குடி வட்டம் — தஞ்சை மாவட்டம்

கோவிலூர் ஆதீனத்தின் கிளை மடங்களில் இது தனிச் சிறப்பு உடையது. இத்தலத்தின் பெயரால், கோவிலூர் ஆதீன கர்த்தர்களுள் ஒருவரான வீரப்ப ஞானதேசிகர் அவர்கள், கோவிலூர் ஆண்டவரென வழங்கப்பெறுகிறார்கள். திருக்களர் ஆண்டவருடைய சமாதிக்கோயில் திருக்களரில் உள்ளது.

கோச்சடைய வன்மரான திரிபுவனச் சக்ரவர்த்திகள் சீவல்லபதேவற்கு யாண்டு இருபத்தஞ்சாலு மேவுநாயிற்றுப் பூர்வபக்ஷத்து ஏகாதிசியும் சனிக்கிழமையும் பெற்ற மகத்து நாள் பாண்டிமண்டலத்து மிழலைக்கூற்றத்து "ஒக்கூருடையார்' என்று திருக்களர்க் கல்வெட்டு ஒன்றில் காணப்படுகிறது. எனவே நகரத்தார்க்கும் திருக்களர்க்கும் தொன்மையான தொடர்பு இருந்தது என்று தெரிகிறது.

இந்த மடம் சிறந்த முறையில் இயங்கி வருகிறது. ஸ்ரீ கிருஷ்ணாநந்த சுவாமிகள் அவர்கள் மடாதிபதியாக இருந்து மடத்திற்குச் சொந்தமான நில வளங்களைப் போற்றிக் காத்து வளர்த்தார்கள்.

திருக்களர் ஆண்டவர் அதிஷ்டானத்திற்கும் அருள்மிகு அமிர்தவல்லி உடனாய பாரிஜாத வனேஸ்வரர் திருக்கோவிலுக்கும் திருப்பணிகள் செய்து 1971ல் கும்பாபிஷேகம் செய்துவைத்தார்கள்.

மருதவனம் அருள்மிகு மருத வனேஸ்வரர் திருக்கோவிலுக்கும் 1973ல் கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள்.

இவர்க்குப்பின் தஞ்சாவூர் கிருஷ்ணசுவாமிகள் மடத்தின் தலைவராக இருந்து பரிபாலித்தார்கள். தற்போது இம்மடம் கோவிலூர் மடாதிபதி அவர்களின் நேரடி மேற்பார்வையில் உள்ளது.

திருக்களர் ஆண்டவர் எனப்படும் மகான் வீரப்ப சுவாமிகள்

நடமாடும் தெய்வமாக நம்மிடையே நூறாண்டுகள் வாழ்ந்த காஞ்சிப் பெரியவர், 1972 கல்கி தீபாவளி மலரில் கோவிலூர் மகான் வீரப்ப சுவாமிகள் என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்கள்.

புண்ணியம் செய்தவர்களைப் பற்றி எண்ணுவதாலும் பேசுவதாலும் கேட்பதாலும் நமக்கும் அவர்கள் புண்ணியத்தில் பங்கு கிடைக்கிறது. இந்தக் கதை கேட்பதால் வீரப்ப சுவாமிகளின் சிவ புண்ணியத்தில் எல்லோருக்கும் பங்கு கிடைக்கிறது.

இப்படிப் பாராட்டி வணங்கப் பெற்றவரும் கோவிலூர் ஆதீனத்தை ஐந்தாம் பட்டமாக பொறுப்பேற்று அலங்கரித்தவரும் ஆகிய வீரப்ப சுவாமிகள் புதுவயலில் (1848 ஆம் ஆண்டில்) கீலக ஆவணி 12 ஆம் நாளில் அருணாசலம் செட்டியாருக்கும் உமையாள் ஆச்சிக்கும் ஒரே தவமகனாகப் பிறந்தார்கள்.

பத்தாவதாண்டில் வெளிநாடு சென்று பொருளீட்டத் தொடங்கி, பொருளிலும் அதைத்தேடும் வழிகளிலும் விருப்பமின்றி, பொய்ப்பொருளை விட்டு மெய்ப்பொருள் தேட விழைந்து தாய்நாடு திரும்பி புதுவயல் வீரப்பையா, அழகப்பையா ஆகியோருடன் தொடர்பு கொண்டார்கள். அழகப்பையா கொடுத்த பட்டினத்தார் பாடலகளும், அஞ்ஞவதைப் பரணி என்ற வேதாநத் நூலும் ஆன்ம பக்குவத்துக்கு அடிப்படையாக அமைந்தன.

இல்லற விருப்பின்றித் துறவு வாழ்க்கை வாழ நினைத்து, மணமாகாமல், துறவியாகக் கோவிலூர் சென்றார்கள். மடாலயத்தில் சிறுவர்களைச் சேர்ப்பதில்லை என்ற வழக்கத்தை மாற்றி, மூன்றாவது மடாதிபதியான கருணாநிதி என்ற சிதம்பர ஞானதேசிக சுவாமகள், இவரைச் சேர்த்துக்கொண்டார்கள். இதற்குப் பெரிதும் காரணமாக இருந்தவர் பொன்னம்பல ஞான தேசிகர். இவர் வீரப்ப சுவாமிகளுக்குப் பாடம் சொல்லி விளையும் ஞானத்தை முளையிலேயே அறிந்து கொண்டவர்.

தக்கவயதில் பொருள் வைத்த சேரியில் உள்ள உகந்தலிங்க ஞானதேசிகர் மடத்தில் தலைமை ஏற்றிருந்த சட்டையப்ப சுவாமிகளிடம் துறவறம் பெற்றுப் பிச்சை ஏற்றுக் கோவிலூரை அடைந்த வீரப்ப சுவாமிகள், வேதாந்தப் பாடநூல்கள் பதினாறையும் பாடம் கேட்டார்கள். கால்நடையாகக் காளையார் கோயில்சென்றம் சிதம்பரம் சென்று வணங்கியும் சிதம்பரம் ஞான தேசிக மடத்தில் பிச்சை ஏற்றுண்டும், இடையறா நிடைடையில் ஆழ்ந்தும 12 ஆண்டுககளில் தவசீலராகத் திகழ்ந்தார்கள்.

திருவாடுதுறை ஆதீனகர்த்தர் தவத்திரு சுப்பிரமணிய தேசிகர் சிதம்பரம் வந்தபோது, வீரப்ப சுவாமிகளைப் பாராட்டி, வேதாந்தம் கேட்டுத் திருநீற்றுப்பை வழங்கி ஆசீர்வதித்தார்.

இந்நிலையில் கோவிலூர் மடத்தின் நான்காவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த இராமசாமி ஞானதேசிகர் 1883 ஆம் ஆண்டில் பரிபூரணம் அடைந்தார்கள். அப்பொழுது அவர்கள் கோவிலூர் ஆண்டவர் அருள்வாக்கின்படி, தமக்குப் பின் வீரன் வருவான் என்று குறிப்பால் உணர்த்தினார்கள்.

இதையறிந்த பொன்னம்பல சுவாமிகள் வீரப்ப சுவாமிகளிடம் கோவிலூர் ஆதீனத்தைப் பாதுகாத்து வளர்க்க வீரமா முனிவராகிய தங்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? என்று கேட்டுத் தலைமை ஏற்கக் கூறினார்கள். என் துறவு வாழ்க்கைக்கு இத்தலைமைப் பதவி ஒரு பொன் விலங்கு என்று மறுத்த வீரப்ப சுவாமிகள், சிதம்பரத்தில் இருந்தால் தம்மைக் கட்டாயப்படுத்துவார்கள் என்று நினைத்து வளவனூரில் சண்முக

ஞானதேசிகர் மடத்தில் ஒளிந்து கொண்டார்கள். தலைமைப்பதவி அவருக்காகத் தவம் செய்தது. பொன்னம்பல சுவாமிகள், தக்க பெரியவர்களை அனுப்பி, அவரைச் சிதம்பரத்துக்கு அழைத்து வந்தார்கள். கோவிலூர் ஆதீனத்தைக் கொண்டடல்லவோ நாம் கடைத்தேறினோம். அதை நாம் வேணாமல் கைவிட்டால் நாம் கடைத்தேற நல்வழி கிடைக்குமா எனக் கேட்டு, வீரப்ப சுாவாமிகளைச் சம்மதிக்கச் செய்து கோவிலூரில் பட்டம் கட்டி, பொன்னம்பல சுவாமிகள் புண்ணியம் பெற்றார்கள். இராமனுக்கு இலக்குவனாக இருந்த விரப்ப சுவாமிகளுக்கு உயிர்த்துணைவராக விளங்கினார்கள்.

வீரப்ப சுவாமிகள் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளாகப் பட்டமேற்றபின் கோவிலூரில் பல திருப்ணிகள் செய்தார்கள். கைலாசக் கொட்டகை, பிரம்ம சபை, குருபூஜைக் கட்டு, நெற்களஞ்சியம், மலர் மண்டபம் ஆகியவற்றைத் தமக்கே உரிய களையுணர்வோடு கட்டினார்கள். ஊருணியில் கற்படித்துறைகள் கட்டி, அடியார்கள் வசிக்க ஆசிரமங்களும் கட்டினார்கள்.

சிருங்கேரி மடாதிபதி சச்சிதானந்த சிவாபிநவ நரசிம்ம பாரதி சுவாமிகள் இராமேசுவர யாத்திரை வந்து இராமநாதபுரத்தில் தங்கியிருந்த பொழுது, அவர்ளைக் கோவிலூருக்கு அழைத்து வந்து ஒருமாத காலம் தங்கச் செய்து சிறப்பாக உபசரித்தார்கள். அப்பொழுது அவர் சிருங்கேரி சாரதாம்பாள் ஆலயத்தைக் கருங்கற் பணியாக நீங்கள் ஆக்கித் தரவேண்டும், இது உங்கள் கடமை என்று கூற வீரப்ப சுவாமிகள் நகரத்தார்களை வரவழைத்து ரபாய் ஐம்பதாயிரம் சேர்த்து சிருங்கேரி மடத்தில் கொடுத்துக் கருங்கல் திருப்பணி செய்து திருக்குட நன்னீராட்டும் செய்தார்கள். இதனால் வீரப்ப சுவாமிகளுக்குச் சிருங்கேரி மடத்தில், சிருங்கேரி சுவாமிகளுக்குச் சமமாகப் பொற்பீடம் அளித்துப் பாராட்டினார்கள்.

வீரப்ப சுவாமிகள் கோவிலூரில் கொற்றவாளீசர் திருக்கோயிலைப் புதுப்பித்து தம்முடைய அறுபதாவது வயதில் 1908 இல் திருக்குட நன்னீராட்டும் செய்தார்கள்.

கோவிலூர்த் திருப்பணியை மேற்பார்வை செய்தபோது ஒரு நிகழ்ச்சி நடத்தது. அவர்கள் காலுக்கடியில் ஒரு கருநாகம் சீறிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்தவர்கள் வீரப்ப சுவாமிகளிடம் ஐயா தங்கள் காலடியில் கருநாகம் படமெடுத்து ஆடுகிறது, தங்களைத் தீண்டிவிடும போலத் தெரிகிறது, பாதுகாப்பாக இருங்கள் என்று கூறினார்கள். பாம்பு தீண்டியது. அதன் ஆயுள் முடிந்தது. சுவாமிகள் எழுந்து வந்தார்கள். பாம்பு பிறவிப் பெருங்கடலில் கரையேறி விட்டது.

கோவிலூரைக் கலைமலிந்த ஊராக மாற்றிய வீரப்ப சுவாமிகள் இணையற்ற செயல்திறன் உயைவர்கள். அவரை ராஜரிஷி என்று மாணாக்கர்களுக்கு முறையாகக் கற்பித்தார்கள். கோவிலூர் மடத்தின் ஆறாவது பட்டம் ஏற்ற தேனிப்பட்டி அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளும் ஏழாவது பட்டம் ஏற்ற தேவகோட்டை மகாதேவ ஞான தேசிக சுவாமிகளும், வீரப்ப சுவாமிகளின் சீடர்களே ஆவர். இவர்கள் கோவிலூரில் வேதாந்த மணம் பரப்பியர்வள். அண்ணாமலை ஞானதேசிகர் காலத்தி 18 புராணங்களும் வடமெழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. தமிழ் இலக்கிய வரலாற்றில் கோவிலூர் மடம் தனியிடம் பெற்றது. வீரசேகர ஞானதேசிகர் காலத்தில் கோவிலூர் மடத்தில் தங்கிப் பாடம் கேட்ட அடியார் கூட்டம கிமவும் அதிகமாக இருந்தது.

வீரப்ப சுவாமிகளின் மாணார்ககர்களில் சாதி இன வேறுபாடின்றிப் பல சான்றோர்கள் குறிப்பிடத்தக்க புகழ்பெற்றனர். மண்டபப்பட்டு வேங்கமபசலரெட்டியார், சித்தலக்கரை வெள்ளியங்கிரி முனிவர், வேட்டைக்காரன் புதூர் சுப்பையா சுவாமிகள், மலையாளத்து நாராயண சுவாமிகள், வேதாரண்யம் வியாகரண பண்டித சிவானந்த சுவாமிகள், மதுரை பிரம்மானந்த சுவாமிகள் மடாதிபதி சோமசுந்தர சுவாமிகள், பசுபதி கோயில் சிதம்பர சுவாமிகள், மழபாடி சதாசிவ சுவாமிகள், வேப்பஞ்சேரி சூராவளி சொக்கலிங்க சுவாமிகள், பஞ்சநதிக்குளம் வைத்திய;நக சுவாமிகள், சின்னம ரெட்டிபட்டி அருணாசல சுவாமிகள், நாட்டரசன் கோட்டை

மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள், திருப்புவனம் காசிகானந்த ஞானசார்ய சுவாமிகள், முதலிய எண்ணற்ற துறவிகள், வீரப்ப சுவாமிகளிடம் பாடம் கேட்டார்கள். இவர்களில் பலர் தங்கள் ஊர்களில் மடங்களை நிறுவினார்கள். இல்லறத்தில் இருந்தவர்களும் வீரப்ப சுவாமிகளிடம் வேதாந்தப் பாடம் கேட்கும் பேறு பெற்றார்கள். காரைக்குடி வேங்கடாசலய்யா, சுப்பிரமணியய்யா, குடைஜயா, குமரப்பையா, மெய்யப்பய்யா, கோட்டையூர் அழகப்பையா, தேனிபட்டி அடைக்கப்பய்யா ஆகியோர் இல்லற அடியார்களாகப் புகழ்பெற்று விளங்கினார்கள்.

இவ்வளவு புகழ்பெற்ற வீரப்ப சுவாமிகள் விருப்பு வெறுப்பு இல்லாதவர். ஆனால் அவருக்குத் திடீரென்று கோபம் வந்துவிடும். அப்பொழுது அவர் கொடுக்கும் சாபம் பலித்துவிடும். இதனால் அவரைத் துர்வாசமுனிவர் என்பார்கள். இந்தக் கோபம் தீர என்ன வழி? என்று தம் நண்பர் சுப்பராய அய்யரிடம் கேட்டார் சுவாமிகள். பதினெட்டுப் புராணங்களையும் படித்த சுப்பராய அய்யர், துர்வாசமுனிவர் தம்முடைய கோபத்தைப் போக்கி கொள்ளத் தவம் செய்து சாந்தம் பெற்ற திருத்தலம் தஞ்சை மாட்டத்தில் திருதுறைப் பூண்டிக்கு அருகில் உள்ளதிருக்களர் என்ற தலம் என்று அந்த ஊர்த்த தல புராணத்தின் அடிப்பயைில் கண்டுபிடித்தார். வீரப்ப சுவாமிகளிடம் கூறினார். வீரப்ப சுவாமிகள் அங்கே சென்று பார்த்தார். அம்பல வாணார் முன்னால் துர்வாசர் சினமின்றிச் சிரித்தபடி இருப்பதைக் கண்டார். மனம் ஈடுபட்டது. ஆலயத் திருப்பணிக்கு வழி பிறந்தது. வீரப்ப சுவாமிகள் கட்டளையிட்டார்கள். இயல்பாகவே திருப்பணிக்கு அள்ளிக்கொடுக்கும் நகரத்தார்கள், சுவாமிகள் கட்டளையிட்டதால் இன்னும் அதிகமாகக் கொடுத்தார்கள்.

நீருளார்கயல் வாவிசூழ்பொழில் நீணமடமாவயல் ஈடுமாமதில்

தேரினார் மறுகில் விழமல்கு திருக்களருள்

ஊருளார் இடு பிச்சைபேணும் ஒருவனேஒளிர் செஞ்சடைம்மதி

ஆரநின்றவனே அடைந்தார்க் கருளாயே.

என்று திருஞானசம்பந்தர் பாடிய திருக்களர் ஆலயத்தின் திருப்பணியைத் தொடங்கிய வீரப்ப சுவாமிகள், தம் திருக்கரங்களால் உளிகொண்டு கொத்திக் தச்சுவேலை தொடங்கி அருளினார்கள். மூன்றாண்டுகளில் சுமார் நான்கு இலட்ச ரூபாய் செலவில் திருப்பணி நிறைவேறித் திருக்குட நன்னீராட்டும் (1911) செய்யப் பெற்றது. இதன்பிறகு வீரப்ப சுவாமிகள் கோபத்தை வீரபத்திரர் வாங்கி கொண்டு விட்டார். சுவாமிகள் அமைதியே வடிவமாக ஆலயத்தில் பணி செய்தார்.

திருக்களர் ஆலயத்தில் திருவிழா நடத்தத் தீர்மானித்த சுவாமிகள் அதற்காக மரத்தேர் செய்ய ஏற்பாடு செய்தார். தேர் செய்த பின் தேர்த் திருவுழாவுக்கு ஏற்பாடும் செய்யப்பெற்றது. மரத்தச்சர்கள் தேரை இழுக்குமுன் ஆட்டைப் பலிகொடுக்க வேண்டும் என்றார்கள். சுவாமிகள் மனம் ஒப்பவில்லை. நான் சொல்கிறபடி தேரை இழுங்கள், இடையூறு வந்தால் பார்த்துக்கொள்ளலம் என்றார்கள். மக்கள் கூடித் தேர் இழுக்கத் தேர் கிளம்பியது. திருக்கோயிலே அசைந்து வருவது போலத் தெரிந்தது. எந்த வேற்றுமையுமின்றி ஊர்மக்கள் அனைவரும் கூடி இழுத்தார்கள். சமுதாய ஒற்றுமைக்கு அடிப்படை அமைத்த தேர்த்திருவிழாவில், குலுங்கி வந்த திருத்தேர், பாதி வழியில் திடீரென்று நின்றுவிட்டது. நகரவில்லை. எல்லா முயற்சிகளும் தேற்றுப் போய்விட்டன. எல்லோரும் சுவாமிகளிடம் வந்தார்கள் பரம்பரைப் பழக்கம் பலிகொடுப்பது. அதைச் செய்யாததால் தடை ஏற்பட்டுவிட்டது. இனிமேலாவது பலிகொடுக்கச் சம்மதியுங்கள் என்றார்கள். கருணையே உருவான சுவாமிகள் நீங்கள் ஓர் ஆட்டைப் பலி கொடுத்தால், அழுவதற்கு ஆட்டுக்குட்டி இரக்கும். ஆட்டுக்குட்டியைப் பலியிட்டால் அழுவதற்கு ஆட இருக்கும். ஈர் உயிர் போகும்பொழுது இன்னொரு உயிர் துக்கத்தை அனுபவிக்கும். இது இறைவன் திருவுள்ளத்துக்குச் சம்மதமாக இருக்காது. எனவே எல்லோரும்

சென்று இறைவனிடம் முறையிடுங்கள். மறுபடியும் இழுத்துப் பாருங்கள் தேர் ஓடவில்லையானால் பலி கொடுங்கள். ஆட்டையோ, கோழியையோ பலிகொடுக்க வேண்டாம். என்னைப் பலியிடுங்கள். ஈசனுக்குப் பலியாக இந்த வாழ்வு முடிந்து போகட்டும். எனக்காக அழுவதற்கு அம்மாவும் இல்லை. குழந்தையும் இல்லை. தேரைச் செய்வதற்குக் காரணமான நானே அது ஓடுவதற்கும் பொறுப்பாகிறேன். என்றார். எல்லோருக்கும் மனம் உருகிவிட்டது. சுவாமிகள் பலியாகக் கூடாது என்ற எண்ணம் தீவிரமாகியது. பிரார்த்தனை செய்து தேரை இழுத்தார்கள். தேர் நகர்ந்தது. வேகமாக வந்து நிலை சேர்ந்தது. இறைவன் கருணையை நினைத்துக் கதறி அழுது கண்ணீர் விட்டார் சுவாமிகள். தேரில் கற்பூர ஆராதனை நிகழ்ந்தது. சுவாமிகள் கண்களில் அருவி பெருகியது. ஆனந்தமும் பக்தியும் கரைகடந்தன. சுவாமிகள் இந்த உணர்வோடு இறைவனிடம் இரண்டறக் கலந்துவிட்டார்கள். அரகர மகாதேவ என் மங்கல முழக்கத்துடன் அந்த ஆன்மாவைப் கொற்றவாளீசர் இணைத்துக்கொண்டார். விரேதிககிருது (1911) ஆண்டு வைகாசி மாதம் 12ஆம் நாள் விசாகத் திருநாளில் இந்த அற்புதம் நிகழ்ந்தது. அப்பொழுது சுவாமிகளுக்கு வயது 63. அறுப்பத்துமூவரின் பக்தியும் வைராக்கியமும் தொண்டும் சுவாமிகளிடம் இணைந்திருந்ததைக் காட்ட இந்நிகழ்ச்சி 63 ஆம் ஆண்டில் நடந்ததோ என்னவோ, யார் அறிவார்? எல்லாச் செயல்களுக்கும் ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா? ஆண்டவன் இரத யாத்திரையைத் தொடர்ந்து அடியவர் இரதயாத்திரை நகிழ்ந்தது. திருக்களரில் சுவாமிகளுக்குச் சமாதி கோயில் கட்டப்பெற்றது. ஆண்டுதோறும் வைகாசி விசாகத்தில் குருபூசை நிகழ்ந்து வருகிறது. தேர் இழுத்த திருக்கரங்கள் சிவபெருமான் திருவடிகளைப் பற்றிக் கொண்டு, அடியார்களுக்கு ஆசி கூறி வருகின்றன. தம் உயிரையே பணயம் வைத்துத் தேர்த்திருவிழா நடத்திய வீரசேகரர் வரலாறு உண்மையிலேயே ஒரு வீர(ன்) வரலாறாகத் திகழ்கிறது. எனக்காக அழுவதற்கு அம்மாவும் இல்லை குழந்தைகளும் இல்லை என்று கூறிய சுவாமிகள் மறைந்தபோது பல்லாயிரக்கணக்கான அம்மாகளும் குழந்தைகளும் சான்றோர்களும் கதறி அழுதார்கள். ஒர வீட்டுக்காக வாழாமல் உலகத்துக்காக வாழும் உத்தமர்களுக்கு, அவர்களால் பயன்பெற்ற உலகம், கண்ணீர் விடுவதைத் தவிர, வேறென்ன கைம்மாறு காட்டமுடியும்?






கோவிலூர் ஆதீன வீரப்ப சுவாமிகள் மடாலயம் - திருக்களர்





கோவிலூர் ஆதீன வீரப்ப சுவாமிகள் மடாலயம் - திருக்களர்





கோவிலூர் ஆதீன வீரப்ப சுவாமிகள் மடாலயம் - திருக்களர்

வளவனூர் சண்முக சுவாமிகள் மடம்

விழுப்புரம் – புதுச்சேரி முதன்மைச் சாலையில் விழுப்புரத்தில் இருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள அழகான அமைதியான ஊர் வளவனூர். இதன் மையப்பகுதியில் முதன்மைச் சாலையில் அமைந்துள்ள திருமடம் நமது சண்முக சுவாமிகள் திருமடம்

இத்திருமடத்தை ஸ்தாபித்தவர், கோவிலூர்த் திருமடத்தின் இரண்டாவது மடாதிபதி ஸ்ரீமத் துறவாண்டவருடைய மாணாக்கர் ஸ்ரீமத் சண்முக ஸ்வாமிகள். இது ஏறக்குறைய 150 ஆண்டுகள் பழமையானது. மரமும் செடி கொடிகளுமாக ஆனந்தமான சூழலில் சாதுக்கள் சாதனை செய்வதற்கேற்ப அமைந்துள்ள அற்புதமான மடம்.





சண்முக சுவாமிகள் மடாலயம் - வளவனூர்





சண்முக சுவாமிகள் மடாலயம் - வளவனூர்

மேட்டுப்பாளையம் சபாபதி சுவாமிகள் மடம்

திருவண்ணாமலை – வேலூார் சாலையில் கலசப்பாக்கம் கிராமத்தின் அருகில் செய்யாற்றங்கரையில் அமைந்திருக்கும் சிற்றூர் தென்பள்ளிப்பட்டு (மேட்டுப்பாளையம்).

ஆற்றங்கரையில் அழகான சோலைக்கட்டு நடுவே ஸ்ரீமத் சபாபதி சுவாமிகளின் அதிஷ்டானத் திருக்கோவிலும் மடமும் அமைந்துள்ளன.


இது பிராமண சந்நியாசியான சபாபதி சுவாமிகளால் ஏறுக்குறைய 150 ஆண்டுகட்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்ட மடம்.

சபாபதி சுவாமிகள் கோவிலூார் குருமூர்த்திகள் யாருடைய சீடர் இவர் என்பது தெரியவில்லை. ஆனால் இவர் கோவிலூார் மரபு வேதாந்தப்பாடம் குறைவற நடத்திப் பல ஞானிகளை உருவாக்கியுள்ளது தெரிகிறது. அங்கு உள்ள பல மடங்கள் இவருடைய சீடர்களால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

இது தற்போது திருவண்ணாமலை ஈசான்ய மடத்தின் பொருளாதார ஆதரவால் நடைபெற்று வருகிறது.



சபாபதி சுவாமிகள் மடாலயம் - மேட்டுப்பாளையம்







சபாபதி சுவாமிகள் மடாலயம் - மேட்டுப்பாளையம்

மானாமதுரை நாராயண சுவாமிகள் மடம்

கோவிலூர் மடாதிபதி சிதம்பர சுவாமிகளின் மாணவரான நாராயண சுவாமிகள் மானாமதுரையில் துறவியாக இருந்து பிச்சை ஏற்று வந்தார்கள். 14 ஆண்டுக்காலம் மானாமதுரையில் இருந்து அங்கேயே 1901 இல் பரிபூரணம் அடைந்தார்கள். நாராயண சுவாமிகளின் மாணவர்கள் அங்கு அவ்வூரில் ஒரு மடம் அமைத்து அதற்குத் தம் ஆசிரியரின் பெயரை இட்டார். அவருக்குப்பின் கோவிலூர் மடாதிபதி திருக்களர் ஆண்டவரின் மாணவரான சதாசிவ சுவாமிகள் 1912 முதல் மடாதிபதியாக இருந்தார்கள்.

அவர்கட்குப் பின்னர் ரங்கநாத சுவாமிகளும் பின்னர் பொன்னம்பல சுவாமிகளும் மடத்தை நிர்வாகம் செய்துவந்தார்கள். 2006ல் ஸ்ரீமத் பொன்னம்பல சுவாமி பரிபூரணம் அடைந்ததும் கோவிலூர் மடத்தின் நேரடி நிர்வாகத்தில் உள்ளது.

1. நாராயண சுவாமி
2. சதாசிவ சுவாமிகள்
3. ரங்கநாத சுவாமிகள்
4. பொன்னம்பல சுவாமிகள்

2006ல் பரிபூரணம், அதுமுதல் கோவிலூர் ஆதீனத்தின் நேரடிப்பார்வையில் இருந்து வருகிறது.

இப்பொழுது மடத்தை மராமத்துச் செய்து, புதிய அறைகள் கட்டவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

அத்துடன் முதன்மைச் சாலைப் பக்கம் உள்ள இடத்தில் கடைகள் கட்டி வாடகைக்கு விடவும் வடபுறத்தில் ஒரு பாலர் பள்ளி (மாண்டிசோரி முறையில்) தொடங்கவும் கட்டிடங்கட்குத் தேவையான அனுமதிகள் பெறப்பட்டுள்ளன. விரைவில் கட்டிடப் பணி தொடங்கப்பெறும்.







நாராயண சுவாமிகள் மடாலயம் - மானாமதுரை

திருப்புவனம் காசிகாநந்த சுவாமி மடம்

மானாமதுரை – மதுரைச் சாலையில், மதுரைக்கு அருகில் வைகைக் கரையில் அமைந்துள்ள திருப்புவனம், பாடல் பெற்ற சிவத்தலம். முக்தித் தலங்களுள் ஒன்று.

இங்கே கோவிலூர் மடாலயத்தின் ஐந்தாவது மடாதிபதியான ஸ்ரீமத் வீரசேகர ஞானதேசிகரின் சீடரான ஸ்ரீமத் காசிகாநந்த சுவாமிகள் வேதாந்தம் கற்பிக்கவும் பயிலவும் வசதியாகத் திருமடம் ஒன்று 1930ல் அமைத்தார்கள். இவர்கள், தமிழ் வட மொழி இந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் வல்லுனர். காசி முதலிய பல நகரங்களில் ஒன்பது ஆண்டுகள் தங்கி பற்பல சாத்திர நூல்களையும் உபநிஷத்துக்களையும் கற்றுத் தேர்ந்தவர். நூற்றுக்கும் மேலான வேதாந்த நூல்களையும் உரை நூல்களையும் எழுதியவர்.

இவர்கள் தம் காலம் வரையிலும் வேதாந்த சாத்திரங்களை நூற்றுக்கணக்கானவர்கட்கும் கற்பித்தும் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியும் வந்தார்கள்.

இம்மடம் தற்போது கோவிலூர் மடாலயத்தின் நேரடிப் பார்வையில் உள்ளது.





காசிகாநந்த சுவாமி மடாலயம் - திருப்புவனம்

காளையார் கோவில் செல்லப்ப சுவாமி வேதாந்த மடம்

(கா.செ. வேதாந்த மடம்)

செந்தமிழ் நாட்டிலே சங்கக்காலம் முதற்கொண்டு சிறப்புற்று விளங்கும் சிவத்தலங்களில் காளையார் கோவிலும் உள்ளது. இது தேவாரப் பாடல் பெற்ற தலம். பாண்டிய மன்னர்கள் வேங்கையார்ப்பன் உக்கிரப் பெருவழுதி ஆகியவர்களாலே ஆட்சி செய்யப்பெற்று வரலாற்றில் இடம் கொண்ட தலம். அன்மைக்காலங்களில் மருது சகோதரர்களின் வரலாற்றாலும் புகழ்பெற்ற இடம்.

இத்தலத்திலே கோவிலூர் மடாலயத்தின் நான்காவது மடாதிபதியான ஸ்ரீலஸ்ரீ இராமசாமி ஞான தேசிகரின் சீடரும் பின்னர் மதுரை குட்டைய சுவாமிகள் மடத்தின் மடாதிபதியாகப் பொறுப்பேற்று இருந்த வரும் ஆன ஸ்ரீமத் செல்லப்ப சுவாமி அவர்கள் பற்பல நகரத்தார்களின் வேண்டுகோளின்படி ஒரு திருமடம் நிறுவினார்கள்.

காளையார்கோவிலில், யானை மடு என்னும் திருக்குளத்தின் தென்புறம் அழகிய தோற்றப் பொலிவுடன்கூடிய அளவிலும் பெரிய திருமடம் அமைத்து வேதாந்தப்பாடம் கற்பித்துவந்தார்கள். இவர்கள் குறிப்பாக வேதாந்த சூடாமணி நூலை வெகுதெளிவாகப் பாடம் சொல்வார்களாம்.

அந்நூல் கற்பிக்கும் காலத்தே எல்லா நூல்களின் சாரத்தையும் பிழிந்து தந்து விடுவார்களாம்.

இவர்கட்கு சீடர்கள் மிக அதிகம். அதில் பலர் பின்னர் பல இடங்களில் கோவிலூர் மரபு வேதாந்தப் பாடம் கற்பித்தும் மடங்கள் தோற்றுவித்தும் உள்ளனர்.

இவர்கட்குப் பின்னர்,

உலகம் பட்டி இலக்குமண சுவாமிகள்

நாட்டரசன் கோட்டை (சிக்கல்) மெய்யப்ப சுவாமிகள்

முத்தையா ஞானதேசிக சுவாமிகள்

ஜமீன்தார் அருணாசல சுவாமிகள்


தேனிப்பட்டி அருணாசல சுவாமிகள்

அரு. இராமநாத சுவாமிகள்

அரு. ராமநாத சுவாமிகள் கோவிலூரில் பத்தாவது மடாதிபதியாக இருந்தவர்கள். இவர்கள் காலத்தில் காளையார் கோவில் மடமும் கோவிலூர் மடத்தின் நேரடிப்பார்வையில் இருந்தது.

இவர்கட்குப்பின்னர்,

சிவாநந்த சுவாமிகளும், நாராயண சுவாமிகளும், நிர்வாகம் செய்து வந்தனர். 2003ல் நாராயண சுவாமிகள் பரிபூரணம் எய்திய பின்னர், திரும்பவும் கோவிலூர் மடாதிபதிகள் மேற்பார்வையில் உள்ளது.





செல்லப்ப சுவாமி வேதாந்த மடாலயம் - காளையார் கோயில்

பிரம்மானந்த சுவாமிகள் மடம், மதுரை

கோவிலூர் ஆண்டவரின் மாணாக்கரான அரசப்ப சுவாமிகளின் சமாதி ஆலயம், மதுரையில் தெற்கு வெளிவீதி 164ஆம் எண் உள்ள கட்டிடத்துககுத் தென்பால் இருக்கிறது. அரசப்ப சுவாமிகளுடைய மாணாக்கரான பிரம்மானத்த சுவாமிகள் கி. பி. 1850 அளவில் மதுரை தெற்கு வாசலுக்கு அப்பால் அருப்புக் கோட்டைச் சாலையில் ரயில்பாதை அருகே ஒரு மடாலயத்தை நிறுவினார்கள்.

பிரம்ம நாமாவளி சுலோகம், பஞ்சதசி பதவுரை, பிரம்மானந்த அநுசந்தான யுக்தி ரத்நாகரம் முதலிய நூல்களை பிரம்மானந்த சுவாமிகள் ஆக்கியுள்ளார்கள்.

இந்த மடாலயத்தில் அதிபர்களாக இருந்தவர்கள்.:

1. பிரம்மானந்த சுவாமிகள்
2. பாலானந்த சுவாமிகள்
3. சுந்த பிரம்மானந்த சுவாமிகள்
4. சங்கரானந்த சுவாமிகள்
5. அத்வைதாநந்த சுவாமிகள்
6. சோமசுந்தர சுவாமிகள்
7. சின்மயானந்த சுவாமிகள்

1977 சூன் திங்களில் சின்மயானந்த சுவாமிகள் பரிபூரணம் அடைந்த பிறகு, காசி வாசி ஸ்ரீ சுவாமி யோகானந்த கிரி சுவாமிகள் இந்த மடாலயத்தில் தலைமையேற்று பட்டத்தில் இருந்து வருகிறார்கள். இவர்கள் பல்லாண்டுகள் காசியில் ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்திலே தங்கி சமய சாத்திரங்களையும் வடமொழியையும் முறையாகப் பயின்றிருக்கிறார்கள்.

இப்போது சத்சங்கம் நடத்தியும் வேதாந்த பாடங்களைக் கற்பித்தும வருகிறார்கள். புது மாகாளிப்பட்டிச் சாலையில் சங்கர ஆசிரமம் நிறுவி அதில் ஆதி சங்கரருடைய வெண்பளிங்குப் படிமத்தை நிலை நாட்டியுள்ளார்கள்.

வீர. சுப்பைய சுவாமிகள் மடம், சென்னை

விளக்கினை யேற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே. -திருமூலர்

"இறைவனை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒவ்வோர் உயிரும் இறுதிப் புகலிடமாக இந்நாட்டிலே வந்து சேரவேண்டும். மனித குலத்தின் மென்மை, இரக்கம், தூய்மை, அமைதி ஆகிய பண்புகளின் உயர்ந்த நலங்கள் இங்கே ஓங்கி வளர்ந்துள" எனச் சுட்டிக் காட்டியுள்ளார் விவேகானந்த சுவாமிகள். இந்த நிலைக்கு ஓர் அடிப்படை காரணம் பிறநாடுகள் அறிவு பெறாததற்கு முன்னரே மெய்ஞ்ஞானிகள் பலர் நம் நாட்டில் தோன்றி மக்களுக்கு நல்லுபதேசம் செய்ததுமன்றி, அவ் வுபதேச உரைகளை ஏட்டின் வடிவிலே நமக்கு விட்டுச் சென்றுள்ளார்கள். இத்தகைய மெய்ஞ்ஞானிகள் வாழையடி வாழையாக வந்த திருமரபில் உதித்துள்ளார்கள். அத்தகைய திருமரபில் தோன்றியவர் வீர. சுப்பையா சுவாமிகள். பின்னர், இவர்கள் ஸ்ரீ ஜகத்குரு பீடம்நியாய சந்திர வேதாந்த பாஸ்கர மகா மண்டேஸ்வர ஸ்ரீ வீர. சுப்பைய ஞான தேசிகேந்திர சுவாமிகள் என்னும் அரும்பெரும் பெயருடன் விளங்கினார். அறிவுடையோர் ஒருவர் ஒரு விளக்கினைக் கொண்டு பல விளக்குகளை ஏற்றி எங்குமே ஒளியைப் பரப்புவார். இது போன்றே முற்றறிவுடையவராகிய கடவுள் மெய்ஞ்ஞானி ஒருவரைக் கொண்டு மற்றவர்களுக்கு ஞானம் புகட்டுகின்றார். இவ்வகையில் நெடுந்தொலைவிலுள்ள ஊர்கள் உட்படப் பல இடங்களிலுள்ள மக்களுக்கு ஞானோபதேசம் புரிந்தும் ஞான நூல்களை மொழி பெயர்த்தும் பல நூல்களுக்கு உரைகண்டும் செயற்கரியவற்றை யெல்லாம் செய்தவர்கள் வீர. சுப்பைய சுவாமிகள் ஆவார்கள்.

1. தோற்றம்

உலகப் படைப்பில் முதலில் தோன்றியது தமிழகம் என்பது ஆன்றோர் கருத்து.

"வழங்குவ துள் வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப் பிரிதல் இன்று"

என்னும் திருக்குறளுக்கு உரை கண்ட பரிமேலழகர் "தொன்றுதொட்டு வருதல், சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்" எனக் குறிப்பிட்டுள்ளார். மதுரை மீனாட்சி யம்மையாருக்கும் சுந்தரேசுவாருக்கும் நிகழ்ந்த திருமணத்திற்கு முதல் முதலில் முதன்மையாக வந்திருந்தவர் கொங்குநாட்டரசர் எனப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் காட்டுகின்றார். எனவே, தமிழ் மக்களது தொன்மை காலவரம்பிற்குட்டடதன்று என்பது உணர்ந்துகொள்ளத் தக்கது. இத்தகைய பெருமைசார் மக்களில் ஒரு பகுதியினர் வாழ்ந்தது கொங்கு நாடாகும். இதில் தற்போதுள்ள கோவை மாவட்டப்பகுதி மையமாகவும் நீலகிரி, சேலம், திருச்சிராப்பள்ளி மதுரை ஆகிய மாவட்டங்களின் பகுதிகள் சுற்றிலுமாகவும் சேர்ந்துள்ளன. இக் கொங்கு நாட்டில் மலைவளமும் புனல் வளமும் அணிகளாக உள்ளன.

"இருந் தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்னும் குறளில் உள்ள வேளாண்மை என்னும் சொல்லுக்கு உபகாரம் என்பது பொருளாகும். விருந்தோம்பும் வகையில் உபகாரம் (வேளாண்மை) செய்வதற்காக அமைந்தது இல் வாழ்க்கை இது போன்றே எல்லாருக்கும்

உணவு அளிக்கும் வகையில் அமைந்தது வேளாண்மைப் பணி. இவ் வேளாண்மையில் மெய்யாக உழைப்பவர்களாகிய வேளாளர்கள் மிக்க நாடு கொங்கு நாடு. இதில் முருகப் பெருமான் கோயில்கள் பலவுள. சிவபெருமான் திருக்கோயில்களும் ஆங்காங்கு உள, எனத் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இவ்வுண்மைகளை விளங்குகிறார்.

மக்கள்தமை முதலளித்த
மாண்புடைய தமிழ் நாட்டில் மன்னு நாடு!
மிக்கமலை புனல் வளமும்
வேளாளர் மெய்வளமும் மேவு நாடு!
எக்கலையும் உடை நாடென்று
இசைப் புலவர் திருக்கூட்ட மெய்து நாடு!
குக்குடத்தான் கோயிலொடு
குழைக்காதன் கோயில் கொளும் கொங்கு நாடே!

இத்தகைய தெய்வ வழிபாடுடைய சைவ வேளாளர் நற்குலத்தில் தோன்றியவர் சுப்பைய சுவாமிகள், இவர்கள் தந்தையார் மருதாசலம் பிள்ளை. இவரது ஊர் கோயம்புத்தூருக்கு மேற்கே எட்டுமைல் தூரத்திலுள்ள தொண்டாமுத்தூராகும். இவர் தம் துணைவியர் பெரிய அம்மணி அம்மாள் ஊர் கோயம்புத்தூர் ஆகும். திருமணம் செய்துகொண்ட பின்னர் மருதாசலம் பிள்ளை கோயம்புத்தூரில் வசிக்கத் தொடங்கினார். பெரிய அம்மணி அம்மாளின் பெற்றோர்கள் கோவையில் வசித்து வந்த சின்னக் கடைத் தெருவில் மருதாசலம் பிள்ளையும் தம் மனைவியாருடன் இல்லறம் நடத்தினார். இவர்கள் இவ்வாறு வாழ்க்கை நடத்தியது கோயம்புத்தூர் நகரத்தில் இடையர் தெருவும் சின்னக் கடைத்தெருவும் சந்திக்குமிடத்திலிருந்து அரை பர்லாங்கு தெற்கே சின்னக்கடை வீதி முனையிலே இருந்த இல்லமாகும். தொண்டாமுத்தூருக்கு வடக்கே ஏழு மைல் தொலைவில் வட வழி மருதமலை என்னும் குன்றுள்ளது. இதில் இயற்கைச் சுனையுடன் சோலை வளமுள்ளது. இதன் பேரில் முருகப் பெருமான் கோயிலை மருதமலை ஆண்டவன் கோயில் எனக் கூறுவார்கள். இப்பெருமான் பெயரே சூட்டப்பெற்ற மருதாசலம் பிள்ளை தாம் நடத்தி வந்த இல்லறமாகிய நற்றவ வாழ்க்கையில் தோன்றிய ஆண்மகவுக்கு முருகப் பெருமானின் திருப்பெயராகிய சுப்பிரமணியன் என்னம் பெயர்ச் சுருக்கமாகிய சுப்பையன்என்னும் பெயரைச் சூட்டினர். (இப் புனிதமான பெயரை நம் சுவாமிகள் எக்காரணங்கொண்டும் மாற்றிக் கொள்ளவில்லை). மருதாசலம் பிள்ளைக்கு செல்வச் சூழ்நிலையில் வாழ்க்கை அமையாவிடிலும் வருத்தமின்றி வாழ்க்கை நடத்துவதற்காக விபாரத்திலும் ஓரளவு வேளாண்மையிலும் வருமானம் அவர் பெற்று வந்தார். தம் அருமை மைந்தன் அக்காலத்திய ஆங்கில முறையில் கல்வி கற்குமாறு ஏற்பாடு செய்தார். தம் பெரிய மாமனார் மைந்தராகிய சுப்பிரமணியன் என்பாரும் தம் மைந்தருடன் கல்வி கற்று வந்தது அவருக்கு மகிழ்ச்சி யளித்தது. பின்னர் தொடர்ந்து மேல் படிப்பு மேற்கொள்ள நிதி வசதியும் மற்ற வசதிகளும் கிடைக்கவில்லை. ஆதலால் பள்ளிப்படிப்புடன் நிறுததிக்கொண்ட தம் மைந்தன் மருந்து கலக்கிக் கொடுக்கும் பணிக்குரிய பயிற்சி பெருமாற்று ஏற்பாடு செய்தார். இப்பயிற்சியைச் சுப்பிரமணியனும் மேற்கொண்டார். சுப்பிரமணியத்தின் தம்பி நாராயணசாமி என்போர் அங்கிலக் கல்வி பயிலாது தமிழ்ப் படிப்புடன் அக்காலத்தில் துறவியாக இருந்த வந்த திருமுடி சுவாமிகள் என்பாரிடம் மாணவராக இருந்து அவரிடமிருந்து தமிழ்ச் சித்த மருத்துவம் கற்றுக்கொண்டார். நாராயணசாமியுடன் கொண்ட தொடர்பாலும் திருமுடி சுவாமிகள் அருளாலும் சித்த வைத்தியத்திலும் சுப்பைய சுவாமிகளுக்கு ஓரளவு அனுபவம் கிடைத்தது. மருந்த கலக்கிக் கொடுக்கும் பயிற்சிக்குரிய கால அளவு ஓராண்டுக்கும் சற்றுக் குறைந்ததே. இப் பயிற்சியை சிறந்த முறையில் பெற்றுக்கொண்ட பின்னர் இப் பயிற்சிக்கேற்ற பணியை நாடினார். இக்காலத்தில் இவர் ஈட்டக்கூடிய வருமானத்தைப் பெற்றோர்கள் பெரிதும் எதிர்ப்பார்த்தார்கள். இக்காலத்திற்குச் சற்றுமுன் மருதாசலம் பிள்ளையின் உறவினர் இராயப்ப பிள்ளை தல நிதிப் பொறியளர் அலுவலக மேலாளராகப் (Manager Local

Fund Engineer's Office) பணியாற்றியிருந்தார். அதற்குப் பின் பல ஆண்டுகள் குப்புசாமி பிள்ளை என்பார் தாலுகாத் தலைமை எழுத்தராகப் பணியாற்றியிருந்தார். இவர்களுக்கு அக்காலத்தில் செல்வாக்கு மிகுதியாக இருந்தது. இத்தகைய சூழ்நிலைகளில் சுப்பையா சுவாமிகள் வேட்டைக்காரன்புதூர் தலநிதி மருத்துவமனையில் (Local Fund Dispensary at Vettakaranudur) மருந்து கலக்கிக் கொடுக்கும் அலுவலராகச் சுலபமாக நியமிக்கப் பட்டார். இப்போது அவருக்கு வயது பதினாறு. இந்நியமனத்தின் விளைவாக இவர்கள் தம் பெற்றோர்களும் வேட்டைக்காரன் புதூரில் வசிக்கத் தொடங்கினார்கள்.

2. வேட்டைக்காரன் புதூர் வாழ்க்கை

வேட்டைக்காரன் புதூரில் சுவாமிகள் நான்கு ஆண்டுகள் மருந்து கலக்கிக் கொடுப்பவராகப் பணி ஆற்றி வந்தார்கள். இக்காலத்தில் இவர்கள் வேட்டைக்காரன் புதூருக்கு ஒரு மைல் தூரத்தில் ஆனைமலையில் உள்ள தம் உறவினர்கள் இல்லத்திற்குச் சென்று வருவதுண்டு. முன்பு திருமுடி சுவாமிகள் மீது கொண்டிருந்த அன்பின் விளைவாகப் பின்னர் வேட்டைக்காரன் புதூரில் புகழ்கொண்ட அழுக்கு சுவாமிகள் என்ற பெரியார் மீது பெருமதிப்புக் கொள்வாராயினர். இப்பெரியார் சித்திகள் கைவரப் பெற்றவர். குளிக்கவே மாட்டார். தம் நேரில் வந்தவர்களுக்கு அருள் பாலிப்பார். இத்தகைவர் வரவைப் பலர் எதிர்ப்பார்த்துக்கொண்டே இருப்பார்கள். அழுக்குச் சுவாமிகள் முத்தி அடைந்தது வேட்டைக்காரன் புதூரில், இவர்களுக்கு ஆண்டு தோறும் இவ்வூரில் குருபூசை விமரிசையாக நடைபெற்று வருகிறது.

மருந்து கலக்கிக் கொடுக்கும் பணிபுரிந்து வருங்காலத்தில், மருத்துவமனை நோக்கி வருபவர்களுக்குத் தக்க வகையில் கருணை பூத்த முகத்துடன் உதவி அளித்து ஆறுதல் கூறுவது வழக்கமாகச் சுவாமிகள் கொண்டிருந்தார். திருக்குறள் மருந்து அதிகாரத்தில் நான்கு கூறுகள் விளக்கம் பெறுகின்றன. 1. நோயுற்றவர், 2. நோய் தீர்க்கும் மருத்துவர், 3. நோயுற்றவருக்கு மருந்து முதலியவற்றைக் கொடுத்து உதவி புரிபவர், 4. நோயுற்றவருக்கு மருத்துவர் கொடுக்கும் மருந்து ஆகிய நான்கு மாகும்.

"உற்றவன், தீர்ப்பான், மருந்துழைச் செல்வானென்று
அப்பானாற் கூற்றே மருந்து"

என்னும் குறட்பா கூறுகிறது. இவற்றில் மூன்றாம் நிலையில் உள்ளவர் மருந்து கொடுத்துதவுபவர். இவர் "மருந்துழைச் செல்வான்" ஆவார். அக்காலத்தில் மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை பெறுவோர்களுக்கும் (Inpatients) வந்து சென்று சிசிச்சை பெறுவோர்களுக்கும் (Outpatients) மருந்து கொடுப்பவர் ஒருவரே, இக்காலத்தில், தங்கிச் சிகிச்சை பெறுவோருக்கு உதவி அளிப்பதற்கெனவே செவிலியர் (Nurse) என்னும் பெயர் தாங்கிப் பணியாற்றுபவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். சிற்சில சமயங்களில், மருத்துவருக்குச் சிந்தித்துப் பார்ப்பதற்கு நேரமில்லாத நிலை ஏற்படலாம். அப்போது மருந்துழைச் செல்வான் தக்க முறையை மேற்கொள்ள வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு கதை கூறுவதுண்டு,

கார்கோடகன் என்னும் கொடிய நச்சுப் பாம்பிற்கு ஒரு காலத்தில் வயிற்று வலி ஏற்பட்டது. அவனுக்கு அந்நோய்க்காக அகத்தியர் மருந்து கொடுத்தார். அம் மருந்தை உட்கொண்டதும், கார்கோடனுக்கு முன்னினும் வயிற்றுவலி மிகுந்தது.

இதைப் பொறுக்க மாட்டாத கார்கோடகம், அகத்தியர் மாணவராகிய தேரையரை அணுகினான், மருத்துவத்துறையில் தேர்ந்தவர் தேரையர் என்பது அவரது பெயரிலிருந்தே தெரியவரும். தேரையரும் தம் குருநாதர், கார்கோடனுக்குத் தந்த மருந்தையே மீண்டும் தந்தார். ஆனால் அம் மருந்தை ஒரு மூங்கில் குழலில் இட்டு அதனுடன் தண்ணீரும் சேர்த்து அந் நீருடன் கூடிய மருந்து கார்கோடகன் பற்களில் படாதவாறு கார்கோடகன் தொண்டை வழியே செலுத்திவிட்டார். இவ்வாறு செய்ததால் கார்கோடகன் நச்சுப் பற்களிலிருந்து நஞ்சு மருந்தினுட் கலக்கவில்லை, கார்கோடகனும் வயிற்றுவலி நீங்கப் பெற்றான். தேரையர்

கையாண்ட முறைகளைப் போன்ற வழிகள் பலவற்றில், மருந்துமைச் செல்வானுக்குரிய அரும்பெரும் பணிகளை நம் சுவாமிகள் ஆற்றினார்கள். இத்தகைய வியத்தகு பணிகளை ஆற்றி வரும்போது "இவர்கள் மருத்துவருக்குரிய கல்வி கற்காமல் இருந்துவிட்டார்களே, இத்தகைய கல்வி கற்றிருந்தால் எவ்வளவோ பரோபகரமாக இருக்குமே' எனச் சிலர் வருந்தியதுண்டு. இச் சமயம் இவர்களுடன் பயிற்சி பெற்ற சுப்பிரமணியனும் மருந்து கலக்கிக் கொடுக்கும் பணியேற்றார். நாராயணசாமி மட்டும் தமிழ்ப் படிப்புடன் மேற்கொண்டு சித்த மருத்துவப் பணியைத் தொடங்கினார்.

வேட்டைக்காரன்புதூரில் தம் பெற்றோர்கள் மகிழும் வண்ணம் சுவாமிகள் பணியாற்றி வந்தார்கள். ஒழுக்க நெறியினின்றும் ஒரு சிறிதும தவறாமல் இளம் தவயோகிபோல் தம் கடமைகளை ஆற்றி வந்தார். உற்கட்டுடன் உள்ளத் தூய்மையுடையவராயும் இறை வழிபாட்டில் திளைத்தவராயும் இருந்துவந்தால், அனைவரும் இவர்களை நன்கு மதித்தார்கள். விநாயகப் பெருமான் இவர்களுக்குத் தோன்றாத் துணையாகவும் வழிபடு தெய்வமாகவும் வழி காட்டிவந்தார்.

3. துறவும் பின்நிகழ்வுகளும்

சுவாமிகளுக்கு ஏறத்தாழ 21 வயது இருக்கலாம். அது சமயம் அவருக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென அவர் தம் பெற்றோர்கள் விரும்பினார்கள். இவருக்கு வாழ்க்கைத் துணைவியாக இருக்கத்தக்க பெண் இன்னார் என்பது பற்றிப் பேச்சு எழுந்தது. தக்கவர் ஒருவர் தம் புதல்வியை இவருடைய இல்லக்கிழத்தியாக்க முன் வந்தனர். இதையறிந்த சுவாமிகள் திருமணம் செய்துகொள்ளத் தமக்கு விருப்பமில்லையெனத் தெரிவித்தார். ஆனால் திருமணம் செய்து கொள்ள வேண்டும் எனப் பெற்றோர்கள் இவர்களை வற்புறுத்தினார்கள். அதைத் தொடர்ந்து தாங்க மனம் இசையவில்லை; இல்லத்தை விட்டுத் துறந்தார்கள்.

விநாயகப் பெருமானே தமக்கு வழிபடு தெய்வமாகக் கொண்டவர் ஆனதால், அவ்வூர் விநாயகர் கோயிலில் இறுதியாகக் காணப்பட்டவர், பின்பு அவ்வூர் வாசிகள் பார்வைக்குத் தென்படவில்லை நேராகத் திருக்குற்றாலம் சேர்ந்தார். ஆங்கு வீற்றிருந்த விநாயகப் பெருமானை வணங்கித் திரும்பும்போது திருக்கோவிலூரில், ஸ்ரீ விரசேகர ஞான தேசிக சுவாமிகளின் மாணவராகிய பழையூர்ப்பட்டி அருணாசல சுவாமிகளைச் சந்தித்தார் சுப்பைய சுவாமிகளின் தீவிரமான ஆர்வத்தை உணர்ந்துகொண்ட அருணாசல சுவாமிகள் கோவிலூர் வேதாந்த மடாலயம் உள்ளது. அங்கு நீவிர் சென்று நன்மை யடைக' என அறிவுறுத்தினார். அவ்வாறே கோவிலூர் மடத்தை அடைந்த சுப்பைய சுவாமிகள், அம்மடத்தின் அதிபராகிய ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக சுவாமிகளிடம் தமது விருத்தாந்தத்தைத் தெரிவிக்க ஞான தேசிக சுவாமிகளும் சுப்பைய சுவாமிகளை ஏற்றுக்கொண்டார். வேதாந்த நூல்களை முறையாக கற்கத்தொடங்கினார்.

இந்நிலையில் சுப்பைய சுவாமிகளின் பெற்றோர்கள் தம் அருமை மைந்தன் பிரிவைத் தாங்க இயலாமல், தங்கள் மைந்தனைக் கண்டுபிடிக்கும் வகையில் துறவிகள் பலரையும் விசாரித்த வண்ணமாக இருந்தார்கள். இதற்காகத் துறவிகள் பலரை வரவழைத்து அவர்களை விசாரித்துப் பின்னர் தங்கள் மைந்தன் இருக்கக்கூடிய இடம் இன்னதெனத் தெரிவிக்குமாறு அவர்களிடம் கேட்பது வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். ஒரு சமயம் துறவிகள் சிலர் தந்த தகவலின் பேரில், சுவாமிகளின் பெற்றோர்கள் திருக்கோவிலூருக்குச் சென்று அங்குள்ள மடத்தில் சுவாமிகளைச் சந்தித்தார்கள் அங்குள்ளவர்கள் தம்மை விசாரித்தபோது "குடியிருந்த வீடு" எனத் தம் தாயாரைச் சுவாமிகள் சுட்டிக் காட்டினாராம். மைந்தன் தம்மை விட்டு ஓடி விடக் கூடுமே என அஞ்சி அன்னையார் கண் விரியாது அன்றிருவு முழுவதும் இருக்கத் தொடங்கினார். ஆனால் தாயார் சற்றுக் கண் அயர்ந்த வேளையில் சுவாமிகள் அங்கிருந்து ஓடிவட்டார்கள். பின்னர் மைந்தனால் கைவிடப்பட்ட தாயார் வருத்தத்துடன் தம் கணவருடன் வேட்டைக்காரன்புதூர் திரும்பிவிட்டார்.

இனித் தம் ஊருக்கு அருகிலோ சற்று தூரத்திலுள்ள ஊரிலோ தங்கியிருந்தால் பெற்றோர்கள் தமது முயற்சிக்குத் தடையாக இருப்பார்கள் என உணர்ந்து சுப்பைய சுவாமிகள் வடக்கே சென்றுவிட்டார். காசி அடைந்தார். அங்குள்ள மடங்களில் தங்கிப் பல ஆண்டுகள் வரை வடமொழிகற்று விற்பன்னராகனார். நிஷ்டை கைவரப்பெற்று ஞானியாயினார்.

இதுசமயம் தந்தையார் மருதாசலம் பிள்ளை இறந்தார். அப்போது சுவாமிகளுக்கு இருபத்தைந்து ஆண்டு வயதிருக்கலாம். பின்னர் சுவாமிகள் தெற்கே வந்தார். சுவாமிகளைக் கண்ணுள்ள பெருமக்கள் தங்கள் தங்கள் ஊர்களுக்குச் சுவாமிகளை அழைத்துச செல்வதும் அவர்களிடமிருந்து உபதேசம் பெறுவதும் வழக்கமாக கொண்டிருந்தார்கள்.

சுவாமிகள் துறவு பெறுவதற்கு முன்பும் பின்பும் கொண்டிருந்த நண்பர்கள் வேட்டைக்காரன்புதூர் சாம்பசிவ முதலியார், அவர் தமையனார் சதாசிவ முதலியார் அவர்கள் சகோதரி கண்ணம்மாள், லண்டன் மாணிக்கம், சித்தூர் கோபால முதலியார் முதலிய பெருமக்கள். இவர்களுக்கு நன்கு தெரிந்தவர்களும் உறவினர்களுமாகியோர் களருக்கு அண்மையில் ஐந்து மைல் தொலைவிலுள்ள விசுவநாதபுரியில் உள்ளவர்கள் இவர்களது விருப்பத்திற்கிணங்க, சுப்பைய சுவாமிகள் விசுவநாதபுரிக்குச் சென்று சிலநாள்கள் அங்கிருந்தாக்ள். இது விவரம் எவ்வாறோ தெரிந்துகொண்ட அன்னையார் சுவாமிகளைத் தேடிச் செல்ல முயற்சி செய்தார். தம் கணவனை யிழந்த நிலையில் சிறு வியாபாரம் செய்து கொண்டு தம் வாழ்கையை நடத்தி வந்த அன்னையாருக்குப் பல ஊர்களுக்குச் செல்லப் பணவசதி கிடைக்கவில்லை. இதற்காக தம்முடைய தங்க நகைகளைக் கோவையிலுள்ள ஒரு பாங்கில் அடைமானம் வைத்துப பணம்பெற்றுக்கொண்டு விசுவநாதபுரியை அடைந்தார். தம் அன்னையார் வந்தது தெரிந்தோ அவர்கள் வருவதற்கு முன்னதாகவோ சுவாமிகள் விசுவநாதபுரியை விட்டுச் சென்றுவிட்டார். தம் மைந்தனைக் காணாது தாயார் அங்குத் தங்கினார். தங்கிய இடம் ஒரு கோயில் கட்டிடத்தருகில். அன்றிரவே வயிற்றுப்போக்குக் காரணமாக விசுவநாதன் திருவடியடைவார் போன்று அங்கே உயிர் விடுத்தார். அவர்களுடன் சென்றிருந்தவர்களும் அவ்வூரிலுள்ளவர்களும் சேர்ந்து அவரது உடலை அவ்வூரிலே அடக்கம் செய்தார்கள்.

சில ஆண்டுகள் கழிந்தன. சுவாமிகள் மறு முறையாக கோவைக்கு வந்திருந்தார். அதுசமயம், கோவைப் பாங்கியில் தம் தாயார் அடைமானம் வைத்திருந்த நகைகளைப் பற்றித் தம் சிற்றன்னை தெரிவக்க விவரம் தெரிந்து கொண்டார்கள். சுவாமிகள் கோரிக்கை : செய்யாத வகையில், அந்நகைகள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா என்ற நிலை ஏற்பட்டது. இதைத் தெரிந்த சுவாமிகள், தம் பூர்வாசிரமத்துச் சிற்றன்னை யாகிய சின்ன அம்மணி அந்நகைகளைத் தம் தமக்கையார் (சுவாமிகள் தாயார்) வாரிசாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதாக தமது இசைவைத் தெரிவித்தார்கள். அவ்வாறே சிற்றன்னையும் அவற்றைப் பெற்றுக்கொண்டாள்.

இதன் பின் சுவாமிகள் சென்னையில் கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகளிடம் தொடர்ஸப கொண்டார். தம் காத்தையே பாத்திரமாகக் கொண்ட கடுந் துறவியாதலால் இப்பெயர் அவர்களுக்கு அமைந்தது. இச் சுவாமிகள் சுப்பைய சுவாமிகளுக்கு முழு ஆதரவு அளித்தார்கள். இக்காலத்தில் சுப்பைய சுவாமிகளுக்குச் சிறந்த மாணவர்களாக அமைந்தவர்கள் ஸ்ரீசண்முகானந்த சுவாமிகள், அனந்தானந்தசுவாமிகள் அகிய இருவோரும் ஆவார்கள்.

சென்னையில் சூளையில் ஒரு மடத்தை நிறுவி, ஆயிரக்கணக்கில் அடியார்கள் அன்பர்கள் எல்லாருக்கும் சொற்பொழிவாற்றும் வகையில் ஞான உபதேசம் தொடர்ந்து செய்து வந்தார்கள். ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளாக இவர்கள் இவ்வாறு அரும் செயல்களை மேற்கொண்டார்கள். இவர்கள் சென்னை, சூளையில் ஆனந்த ஆசிரமத்தில் தலைவராக இருந்ததோடன்றி. திருவாரூரில் மடப்புரத்திலுள்ள தட்சிணாமூர்த்தி

மடத்திற்கு அதிபதியாக இருந்துள்ளார், ஆயிரத்தில் ஒருவர் பேச்சால் புகழ்பெறுகிறார். இலட்சத்தில் ஒருவர் செயலால் புகழ் பெறுகிறார், பேச்சாலும் செயலாலும் புகழ் பெறுபவர் மிகச் சிலரே. இவ்வாறு பேச்சாலும் செயலாலும் காசி முதல் கன்னியாகுமரி வரையிலும் சென்று ஆங்காங்கு வேதாந்தம் மட்டுமின்றி ஒழுக்க நெறி உலக வாழ்க்கை முதலிய பல பொருள் பற்றி தேன்மழை சிந்துவதுபோலத் தெவிட்டாத இயல்போது,

கேட்டார்ப் பிணிக்கும் தகைவாய் கேளாரும்
வேட்பமொழிவதாம் சொல்"

என்ற உண்மைக் கிணங்கச் சொற்பொழிவு ஆற்றியவர்கள் சுவாமிகள், சுவாமிகள் பேச்சில் அடுக்கு மொழிகளோ துடுக்குச் சொற்களோ இரா. மிக மிகத் தெளிவான நடையில் சிக்கலித்தாத உச்சரிப்பு முறையில் வேகமாகவோ மந்தமாகவோ இல்லாதவாறு பேசுவார்கள் சுவாமிகள். சுவாமிகள் கருத்துக்களைக் கூறி வரும்போது கேட்போர்கள் தங்கள் தங்களுக்குத்தான், தங்கள் திருத்துவதற்காகத் தங்கள் செயல்களை ஞானத்தினால் அறிந்து கொண்டு கூறுகிறார்களோ என எண்ணி அவர்களது உபதேசத்தினால் திருந்தியவர்கள் பலர்.

ஒரு சமயத்தில் காரைக்குடி பிரம்ம வித்தியா பிரசார சபையில் துவைதிகள் தோல்வி யுறுமாறு சொற்பொழிவாற்றி வெற்றி கண்டார்கள்.

சுவாமிகள் வடமொழியிலிருந்து 25 நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்கள். இந்தியிலுள்ள பெரிய நூல்கள் இரண்டைத் தமிழில் எழுதியுள்ளார்கள். தமிழில் 20 நூல்கள் இயற்றியுள்ளார்கள். ஆயிரம் கவிகள் அருளியுள்ளார்கள். இப்பெரும் செயல் அற்புதமாகவும் கொள்வார்கள் பலர். இந்நூல்களின் பட்டியல் பிறிதோரிடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

1931 ஆம் ஆண்டு பிரசோற்பத்தி ஆண்டு புரட்டாசி மாதம் 26ம் நாள் திங்கட்கிழமை சென்னை சூளை, ஆனந்தா சிரமத்தில் தம் மாணவர்கள் பலர் சூழ்தரச் சுவாமிகள் விதேக கைவல்யம் அடைந்தார்கள்.

சுவாமிகளுக்குப் பின்னர் அவர்கள் தம் மாணவராகிய ஆனந்தானந்த சுவாமிகள் சென்னை சூளை வீரசுப்பைய சுவாமிகள் மடத்தின் அதிபதியாகத் தம் கடமை ஏற்றுக்கொண்டார்கள். 1956ஆம் ஆண்டு வரை தம் கடமை ஆற்றினார்கள். அவர்கள் விதேக முக்தி யடைந்த பின் ஸ்ரீ வித்யானந்த கிரி சுவாமிகள் அத்தலைமையை ஏற்றுக்கொண்டுள்ளாக்ள்.

சுப்பையசுவாமிகளின் முதல் சீடராகவிளங்கயி ஸ்ரீஷண்முகானந்த சுவாமிகள் தற்சமயம் திருவாரூர் மடப்புரம் தட்சிணாமூர்த்தி திருமடத்தின் அதிபராக உள்ளார்கள்.

சொல்லுறுங் கலியை யாயிரத் தோடு
தோயுமுப் பத்திரண்டதனில்
துதைந்தடும் பிர ஜோத பத்தியாம் ஆண்டு
துனும் புரட் டாசியாம் மாதம்

புல்லுறு மிருபத்தா றாதாந் தேதி
புகன்றிடுஞ் சோமவா ரத்தே
பொருந்திடும் பூர்வ பிரதமை திதியார்
புனிதசு வாதியாம் உடுநாள்

நல்லுத யாதி இருபத்தா றே கால்
நாழிகை வேளையில் சென்னை

நகருறு சூளை நியாய சந்திரமும்
ஞாநவே தாந்தபாஸ் கரரும்

வெல்லுமா மகிமை மண்ட லேகரரும்
விளங்கு சொன் முகிலுமாம் திருவார்
வீரசுர்ணைய ஞானதே சிகனார்
விதேக முத்திபெற் றனரே.

கலியுக ஆண்டு 5032, பிரஜோத்பத்தி வருடம், புரட்டாசி மாதம், 27ம் திங்கட்கிழமை, உதயம் நாழிகை 26.1/4 (பிற்பகல் 4 1/2 மணி) ஆங்கில ஆண்டு 12.10.1931 பூர்வ பட்சப் பிரதமை திதி சுவாமி நட்சத்திரம் விதேக முக்தி அடைந்தார்கள்.

சாக்கோட்டை வீரப்ப சுவாமிகள் மடம்

சாக்கோட்டை என்னும் ஊர் புதுவயலிலிருந்து ஒரு கல் தொலைவில் உள்ள சிற்றூர். வீர சேகரர் உமையாம்பிகை ஆலயமும் இவ்வூரில் இருக்கிறது. வீரவன புராணமும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய ஒரு புராணமும் இவ்வூருக்கு உண்டு.

கோவிலூர் இராமசாமி ஞான தேசிக சுவாமிகளின் மாணவரான சர்க்கோட்டை வீரப்ப சுவாமிகள் இவ்வூரில் ஒரு லட்சம் ரூபாய்ச் செலவில் வேதாந்த மடம் நிறுவி 22 ஆண்டுகள் நடத்தினார்கள். அவர்களுக்குப் பிறகு முத்துக்கருப்ப சுவாமிகள் வேதாந்தம் கற்பித்தும் மடத்தை விரித்துக் கட்டியும் வந்தார்கள்.

பின்னர் செல்லப்ப சுவாமிகள் சங்கர சுவாமிகள் ஆகியோர் இந்த மடத்தின் அதிபதிகளாக இருந்தனர்.

புதுச்சேரியில் தம்பெயரால் மடம் நிறுவிய ஸ்ரீ வேதானந்த சுவாமிகள் சாக்கோட்டைக்குச் சென்றார்கள். அவ்வூர் மடத்துத் தலைவர் வீரசேகர ஞானதேசிக சுவாமியாவர் வேதானந்த சுவாமிகளைச் சாப்பிடச் சொல்லி அங்கேயே படித்திருக்கக் கட்டளையிட்டார்கள். அவர்கள் படித்ததும் முறைமைப்படி சந்நியாசம் பெற்றதும் சாக்கோட்டையில்தான்.

வீரசேகர சுவாமி ஒழுக்கம், கல்வி முதலியவற்றில் சிறந்து விளங்கிவந்தார்கள். அவரைக் குருவாகக் கொண்டு வேதானந்த சுவாமிகள் வேதநூல்களை ஐயந்திரிபறப் பாடங் கேட்டார்கள். செல்வரங்கசாமி, முத்துக் கருப்பசாமி முதலியோர் வேதானந்த சுவாமிகளுடன் படித்து வந்தார்கள். படிக்கும்போது வீர சேகர சுவாமிகள், வேதானந்த சுவாமிகளின் அறிவு நுட்பத்தையும் நினைவாற்றலையுங் கண்டு வியப்படைந்தார்கள். ஒரே தினத்தில் பல செய்யுட்களை மனப்பாடஞ் செய்யும் ஆற்றலிலிருந்தது. இதைக் கண்ட மற்றைய மாணவர்கள் பொறாமை கொள்வதும் உண்டு.

மேலும் வீரசேகர சுவாமி வேதானந்த சுவாமிகளிடம் மிகுந்த அன்புகொண்டிருந்தார். சுவாமிகள் தலை மாணாக்கராகத் திகழ்ந்து வந்தார்கள். ஒரு சமயம் வீரசேகர சுவாமிகள் சுவாமிகளைப் பார்த்து நீ எங்குச் சென்றாலும் அத்வைதத்தை விடாதே எனக் கூறினார்கள்..

ஸ்ரீலஸ்ரீ வே. சுப்பைய சுவாமிகள் சித்தாந்த நூல்களை யெல்லாம் ஆராய்ச்சி செய்தபின் சாக்கோட்டைக்கு வேதாந்த நூல்களை ஆராய வந்தார்கள். அப்போது வேதானந்த சுவாமிகள் வழி காட்டியாயிருந்து கோயிலூரிற் சென்று படிக்கலாம் எனக் கூறினார்கள். சுப்பைய சுவாமிகள் அப்படியே செய்தார்.

ஜகத்குரு ஸ்ரீ சித்தாரூட சுவாமிகள் ஸ்ரீ சித்தாரூட மடம்,

ஹுப்ளி

கர்நாடக மாநிலம், தார்வார் மாவட்டத்தைச் சார்ந்த ஹுப்ளியில் அவதரித்து, ஸ்ரீ சைலத்தில் தமது ஞான குருவாகிய ஸ்ரீ கஜதண்ட யோகியிடம் கோவிலூரர் மரபு வேதாந்தப் பாடங்கள் கற்று அங்கே மடம் நிறுவினார். ஸ்ரீ ஸ்ரீ சித்தாரூட மடம் புகழ்வாய்ந்த மாபெரும் ஸ்தாபனமாகத்திகழ்கிறது. ஸ்ரீ சித்தாரூட சுவாமிகள் சமாதி அடைந்து சுமார் 50 ஆண்டுகள் ஆகின்றன.

கோவிலூர் மடாலயம் சாதுக்கள் ஹுப்ளி செல்லும்போது அவர்களை சித்தாரூட சுவாமிகள் அன்போடு வரவேற்றுப் பக்கத்தில் வைத்து உபசரிப்பார்கள்.

அனந்த பத்மனாப சுவாமி மடம், மைசூர்

திருக்களர் ஆண்டவரின் சீடர், கேரளத்தைச் சேர்ந்த அனந்தபத்மனாப சுவாமிகள், திருக்களர் ஆண்டவர் பரிபூரணம் அடைந்த பிறகு, மைசூர் நகரின் எல்லையாக உள்ள சாமுண்டி மலையின் அடிவாரத்தில் ஒரு குகையில் சாந்தா ஆசிரமம் என்ற பெயரில் ஒரு மடத்தை நிறுவினார். குகைக்குள் இருப்பதால் இது குண்டகவி மடம் என்றும் பெயர் பெற்றது.

இங்கு இந்த மடத்தை நிறுவிய அனந்தபத்மனாப சுவாமிகளின் சமாதிக் கோயிலும் அமிர்தவல்லியுடன் கூடிய பாரிஜாதவனேசுவரர் கோயிலும் உள்ளன.

இந்த மடம் இப்போது கர்நாடக மாநிலம் பெங்களூர் கெஞ்சனஹள்ளி ஸ்ரீ கயிலாச ஆசிரமம் மகா சமஸ்தானத்துடன் இணைந்துள்ளது.

ஸ்ரீ பிரம்மானந்த சுவாமி மடம், பெங்களூர்

கோவிலூர் ஆதீனகர்த்தர் தேனிப்பட்டி அண்ணாமலை ஞானதேசிகரின் மாணாக்கரான ஸ்ரீ பிரம்மானந்த சுவாமிகள் இந்த மடத்தை சுமார் 35 ஆண்டுகளுக்கு முன் பெங்களூர் 27ல் ராஜாராம் மோகன்ராய் விரிவு என்ற பகுதியிலுள்ள சீனிவாசா குடியிருப்பில் நிறுவினார்கள், வேதாந்த பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

இப்போது இந்த மடம் கர்நாடக மாநிலம் பெங்களூர் கெஞ்சனஹள்ளி ஸ்ரீ கயிலாச ஆசிரமம் மகா சமஸ்தானத்துடன் இணைந்துள்ளது.

கோவிலூர் மடாலயம்

மேற்கு மாம்பலம் , சென்னை

தமிழகத்தின் தலைநகரமான சென்னை நகரத்தில் நகரின் மையப்பகுதியான மாம்பலத்தில் பேருந்து நிலையத்திற்கு மிக அருகாமையில் அமைந்துள்ளது நம் கோவிலூர் மடாலயத்தின் சென்னைக் கிளை மடம். இத்திருமடம் நம் குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகளின் பெரும் பொருள் உதவியுடன் கட்டப்பட்டது. குளிர்சாதனத்துடன் கூடிய அரங்கம் ஒன்றும் உணவுக்கூடம் ஒன்றும் அலுவலக வளாகம் ஒன்றும் பத்து விருந்தினர் அறைகளும் கூடிய வசதிகள் நிறைந்த திருமடம்.

இத்திருமடத்தை 21.02.1999 அன்று ஸ்ரீமத் காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீமத் ஜெயேந்திர சரஸ்வதி அவர்களும் இளையவர் விஜயேந்திர சரஸ்வதி அவர்களும் திறந்துவைத்தனர்.

இத்திருமடத்தில் பல்வேறு விதமான கலை மற்றும் கல்விக்கூடங்களும் சேவைகளும் நடைபெற்று வருகின்றன. திருமுறை வகுப்புகள், இசை நடன வகுப்புகள், யோகா வகுப்புகள், ஓவியம் மற்றும் தஞ்சாவூர் ஓவிய வகுப்புகள் முறையாக நடைபெற்று வருகின்றன. நகரத்தார் திருமண சேவை மையமும் இங்கு செயல்பட்டு வருகின்றது.

இங்கு பல்துறைக் கலை நிகழ்சிகளும், சமய இலக்கியக் கூடங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இம்மடத்தால் இப்பகுதி மக்களும் மாணவர்களும் மிகுந்த பயன் அடைந்து வருகிறார்கள்.

கோவிலூர் வேதாந்த மடம் – ரிஷிகேஷ்

இமயமலையின் அடிவாரத்தில், ஆதிகாலம் தொட்டு, ஞானிகளும் ரிஷிகளும் தவம் செய்து புகழ்பெற்ற ஞான பூமியாக விளங்கும் ரிஷிகேஷத்தில், நம் குருமகா சந்நிதானம் அவர்களின் அருள் உள்ளத்தாலும் பொருள் உதவியாலும் ஒரு அழகான அமைதியான ஆஸ்ரமம் "கோவிலூர் வேதாந்த மடம்" என்ற பெயரில் 2000 ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் தேதி அன்று பூஜ்ய ஸ்ரீ தயானந்த சரஸ்வதி அவர்களால் தொடங்கிவைக்கப்பெற்றது.

ஆரம்பத்தில் ஏறக்குறைய முக்கால் ஏக்கர் நிலத்தில் 24 அறைகள், உணவுக்கூடம், சொற்பொழிவுக்கூடம், பிரார்த்தனை மண்டபம் ஆகியவற்றுடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 75 அறைகள், அன்னதான மண்டபம், நூலகம், பிரார்த்தனை மண்டபம், அலுவலகம், மாண்டிசோரிப்பள்ளி, ஆயுர்வேத ஹோமியோபதி மருத்துவ சாலை, பசுமடம் என எல்லா வசதிகளையும் கொண்டு திகழ்கிறது.

இத்திருமடத்தின் சூழல் மிக அற்புதமானது. வெயிலின் கொடுமை எக்காலத்திலும் தெரியா வண்ணம் மரம் செடிகொடிகள் நிறைந்து வனம்போல் இதமான சூழல். இங்கு படர்ந்திருக்கும் பழமையான ஆலமரமும் அதன் கீழ் அமர்ந்து அருள்பாலிக்கும் அருள்மிகு கற்பகப் பிள்ளையாரும் கண்கொள்ளாக் காட்சி. அருள் பொழியும் கற்பக மூர்த்தி அருளால் இத்திருமடம் ஏழு ஆண்டுகளில் மிகப் பெரிய வளர்ச்சி கண்டுள்ளது.

இங்குள்ள சூழல் தவம் செய்வதற்கும் அமைதியாகக் கற்பதற்கும் ஏற்ற சூழல். கவலைகளை, பதட்டங்களை அறவே அகற்றக்கூடிய அற்புதமான அமைதியான திருத்தலம். இங்கு வேதம், சம்ஸ்கிருதம் வேதாந்தம் ஆகியவை கற்பிக்கப்படுகின்றன. மழலையர்க்கான இயல்பான செயல்முறைக் கல்வியான மாண்டிசோரிக்கல்வி 3 வயது முதல் 6 வயது வரைக்கான குழந்தைகட்காக மிகக்குறைந்த கட்டணத்துடன் நடந்து வருகின்றது. இதில் ஏறக்குறைய 60 குழந்தைகள் படிக்கின்றனர். இலவச மருத்துவமனை மாலைநேரங்களில் நடைபெற்று வருகின்றது. அவ்வப்போது யோகா வகுப்புக்களும் சிறுவர்கட்கான முகாம்களும் நடைபெற்று வருகின்றன.

சாதுக்களுக்கு அன்னம் பாலிக்கப்படுகிறது.



யாத்திரிகர்கள் தங்குவதற்கும் உண்பதற்கும் நிறைந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஏராளமான தென்னக யாத்திரிகர்கள் வந்து தங்கிப் பயன்பெறுகிறார்கள். இங்குள்ள வசதியும் விருந்தோம்பலும் மேலும் மேலும் பெரும் யாத்திரிகர்கள் கூட்டத்தை ஈர்க்கின்றன.


பூஜ்ய ஸ்வாமி தயானந்த சரஸ்வதி, ஸ்ரீஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமிகள், பரமஹம்ஸ நித்யானந்த கிரி சுவாமிகள் போன்ற ஞானிகளின் முகாம்களும் ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன.

அவ்வப்போது சாதுக்களுக்கும் குழந்தைகட்கும் அன்னதானம் (பண்டாரா) மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.








1. Koviloor Mutt building built in West Mambalam in Chennai 2. Inauguration of Koviloor Mutt building at West Mambalam by Poojya Sri Jayendra Saraswathi Swamigal of Kancheepuram 3. Sri. Nachiappa Swamigal at Koviloor Mutt in West Mambalam 4. Sri. Nachiappa Swamigal at Koviloor Mutt in West Mambalam 5. Poojya Sri Dayananda Saraswathi being received at the Koviloor Mutt on West Mambalam 6. Feeding of the Sadhus at the Koviloor Mutt in Rishikesh 7. Koviloor Mutt at Rishikesh 8. Inauguration of our Koviloor Mutt in Rishikesh




















1. Koviloor Mutt Ashramam at Rishikesh 2. Dayanandaji and Nachiappa Swamigal at the Rishikesh Ashram 3. Rishikesh Ashram 4. Rishikesh Ashram 5. Rishikesh Ashram 6. Rishikesh Ashram 7. Dayanandaji, Nachiappa Swamigal and Sudhanandaji at the Koviloor Ashram at Rishikesh 8. Dayanandaji, Nachiappa Swamigal and Sudhanandaji at the Koviloor Ashram at Rishikesh



Sri-la-Sri Nachiappa Gnana Desika Swamigal on the banks of Gangs at Rishikesh



Afternoon sunlit tree on the banks of Gangs at Koviloor Ashram in Rishikesh



Sri Maha Ganapathi installed under the Banyan tree in Rishikesh

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களின் 'மக்கள் பதிப்பை' வெளியிட்டார் கலாம்

கோவிலூர் மடாதிபதி முயற்சிக்கு பாராட்டு



சங்க இலக்கியம் எனப்படும் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்களை எளிய மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள 'மக்கள் பதிப்பை' குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் வியாழக்கிழமை வெளியிட்டார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடந்த எளிய நிகழ்ச்சியில், கோவிலூர் மடத்தில் 12–வது பட்டமாகிய நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் தலைமையில், தமிழண்ணல், சுப. அண்ணாமலை உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள் கலந்துகொண்டனர்.

மொழி, கலை, இலக்கியம், பண்பாடு சார்ந்த நிறுவனங்களை தமிழகத்தில் மட்டுமன்றி இந்தியாவின் பல பகுதிகளிலும், அமெரிக்காவிலும் நிறுவ முயற்சி எடுத்து வருபவர் ஞானதேசிக சுவாமிகள்.

தமிழில் உள்ள பல செவ்வியல் இலக்கியங்கள் சாதாரண மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், தொன்மை மிக்க, சங்க இலக்கியம் எனப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களை எளிய மக்களும் புரிந்து கொள்ளும்படி மக்கள் பதிப்பாக வெளியிட எண்ணினார் அவர்.

அதற்காக, தமிழண்ணல், சுப.அண்ணாமலை ஆகிய இருவரையும் பொதுப் பதிப்பாசிரியர்களாக நியமித்து, அந் நூல்களில் ஆராய்ச்சி செய்து பட்டம் பெற்ற பத்துப் பேராசிரியர்களைக் கொண்டு, இந்த இலக்கியத்தை கலைக் களஞ்சியம் போல வெளியிட்டுள்ளார்.

இவை பதினொரு தனி நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

ஞானதேசிக சுவாமிகளின் முயற்சியையும், நூல்களை எழுதிய ஆசிரியர்களையும் பாராட்டினார் குடியரசுத் தலைவர் கலாம்.

புறநானூறில், 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்ற அடியைச் சுட்டிக்காட்டி, இதுபோன்ற கருத்துக்கள் அடங்கிய நூல்கள் எல்லோரையும் சென்றடைய வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார் கலாம்.

இந்த நூல்களின் தெளிவுரை விளக்கம் எழுதிய தமிழண்ணல், சுப. அண்ணாமலை, சிங்காரவடிவேலன், மேலூர் கதிர் மகாதேவன், தெ. முருகசாமி, இரா. இளங்குமரன், இரா. சாரங்கபாணி, ச.வே. சுப்பிரமணியன் உள்ளிட்ட 10 தமிழறிஞர்களும் கோவிலூர் மட நிர்வாகிகள் நாராயணன், மெய்யப்பன், விசாலட்சி மெய்யப்பன் ஆகியோரும் உடனிருந்தனர்.

ஒருமணிநேரத்துக்கும் மேலாக அறிஞர்களிடம் அந்த நூல்களைப் பற்றிய விளக்கங்களைக் கேட்டார் கலாம்.

அத்துடன், தன்னிடம் இருந்த சில ஓலைச் சுவடிகளை அளித்து, அவற்றின் விவரங்களைக் கண்டு படித்து, உரையாக எழுதித்தருமாறு கேட்டுக்கொண்டார்.

கோவிலூர் மடத்தைப் பற்றி விளக்கமாகக் கேட்ட கலாம், தமிழகம் வரும்போது அங்கு வருவதாகத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக ஞானதேசிக சுவாமிகள் கூறியதாவது:

காரைக்குடி அருகில் உள்ள கோவிலூர் மடம் 200 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்டது. இங்கு அத்வைத வேதாந்தம் தமிழில் கற்பிக்கப்பட்டு வருவது இதன் தனிச்சிறப்பு. வேதாந்தம் மட்டுமின்றி, படிப்பு, ஏழைகளுக்கு உதவி என சமூக மேம்பாட்டுப் பணிகளிலும் கவனம் செலுத்தி வருகிறோம்.

இங்கு வேதம், ஆகமம், சைவத் திருமுறைகள், நாகஸ்வர இசைக்கலை, தவில் ஆகியவற்றுக்குத் தனித்தனிக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளது. அத்துடன், சிற்பக் கலை, கோயில் தேர்கலை போன்றவையும் பயிற்றுவிக்கப்படுகிறது. இக் கல்லூரிகள் அனைத்தையும் இணைத்து, கோயில் கலை பற்றிய நிகர்நிலைப் பல்கலைக் கழகம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிராமங்களில் 100 மாண்டிசோரி பள்ளிகள் நிறுவ, மடத்தின் சார்பில் ரூ. 1.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே 6 பள்ளிகள் துவங்கப்பட்டுவிட்டன என்றார் அவர்.

'தமிழில் மக்கள் பதிப்பாக வெளியாகியுள்ள எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களை இந்தியிலும் வெளிக்கொண்டுவர நிதியுதவி செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அப்பணிக்கு சரியான ஒருவரை அடையாளம் காண நீங்கள் உதவ வேண்டும் என ஞானதேசிக சுவாமிகள் குடியரசுத் தலைவரிடம் கோரிக்கை விடுத்ததாக தமிழண்ணல் தெரிவித்தார்.

தினமணி சென்னை

மேதகு குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் வருகை

நம் கோவிலூர் திருமடத்தின் செம்பதிப்பான சங்க இலக்கிய நூல்களை 2005ம் ஆண்டு அன்று புது டில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையில் நம் சுவாமிகள் மற்றும் நூல் ஆசிரியர்கள் முன்னிலையில் குடியரசுத் தலைவர் மேதகு அப்துல்கலாம் அவர்கள் வெளியிட்டுப் பெருமைப்படுத்தினார்கள். அது சமயம் நம் சுவாமிகள் மேதகு அப்துல்கலாம் அவர்களை நம் திருமடத்திற்கு வருகை தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

அதற்கிணங்க மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் 2006ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ம் தேதி நம் திருமடத்திற்கு வருகை புரிந்தார்கள். நம் திருமடத்தில் நடைபெற்று வரும் அனைத்து கலைக்கல்லூரிகளின் மாணவர்கள் செய்துள்ள பொருட்களையும் பார்வையிட்டு மகிழ்ந்தார்கள். நம் இசைக்கல்லூரி மாணவர்களின் இசைகளைக் கேட்டுப் பாராட்டினார்கள். நம் மழலையற் பள்ளி மாண்டிசோரிக் குழந்தைகளுடன் அளவளாவினார்கள்.

நம் சந்நிதானத்துடன் பேசிச்சிரித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்து மகிழ்ந்தார்கள். தனது வருகை மிகவும் மகிழ்ச்சிக்குரியது என்று கூறி நம் மாணவர்கள் யாவரையும் பாராட்டினார்கள். தொடர்ந்து நம் திருமடத்துடன் இணைந்து கலைகளை, மாண்டிசோரிக் கல்வியை வளர்க்க உதவுவதாகக் கூறினார்கள்.

கோவிலூர் மடத்தில் ஜனாதிபதி அப்துல் கலாம்

மாணவர்களிடம் திருவாசகம் பாடச்சொல்லிக்கேட்டடார்

காரைக்குடி, செப்.25– காரைக்குடி அருகே உள்ளே கோவிலூர் மடத்திற்கு ஜனாதிபதி அப்துல்கலாம் சென்றார். அங்கு மாணவர்களிடம் திருவாசகம் பாடச்சொல்லி கேட்டார்.

3 நாள் சுற்றுப்பயணம்

தமிழகத்தில் 3 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி அப்துல்கலாம், முதல் நாள் கன்னியாகுமாரி மற்றும் நெல்லை மாவட்டங்களில் நடந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். சுற்றுப்பயணத்தின் இரண்டாம் நாளான நேற்று முன்தினம் கொடைக்கானலில் அன்னைதெரசா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழவில் கலந்து கொண்டுவிட்டு, அன்று பிற்பகல் சொந்த ஊரான ராமேசுவரம் வந்தார். தொடர்ந்து தனது வீட்டிற்கு சென்ற அப்துல்கலாம், பின்னர் மாலையில் மதுரை புறப்பட்டு சென்றார்.

சுற்றுப்பயணத்தின் மூன்றாம் நாளான நேற்று சிவகங்கை மாவட்டம் காரைக்குடிக்கு வருகை தந்தார். காலை 8.52 மணிக்கு அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் அகைக்கப்பட்டிருந்த ஹெலிபேடில், ஹெலிகாப்டர் மூலம் வந்திறங்கிய ஜனாதிபதி அப்துல்கலாமை, தமிழக அறநிலையத்துறை அமைச்சர் பெரியகருப்பன், சிவகங்கை மாவட்ட கலெக்டர் சித்திக் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். ஜனாதிபதியுடன் தமிழக கவர்னர் சுர்ஜித்சிங் பர்னாலாவும் வருகை தந்தார்.

கோவிலூர் மடம் வருகை

பின்னர், ஜனாதிபதியும், தமிழக கவர்னரும் காரைக்குடி அருகே உள்ள கோவிலூர் மடாலயம் சென்றனர். அங்கு கோவிலூர் ஆதீனம் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள், மடலாய நிர்வாகிகள் மெய்யப்பன், நாராயணன் ஆகியோர் ஜனாதிபதியை பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்றனர்.

கோவில் சார்ந்த கலைகள் அழிந்துவிடாமல் இருப்பதற்காக கோவிலூர் மடாலயம் நடத்தி வரும் சிற்ப, இசைக் கல்லூரிகளை ஜனாதிபதி அப்துல்கலாம் பார்வையிட்டார். பஞ்சலோகத்தால் செய்யப்பட்டிருக்கும் சிலைகளைக்கண்டு விளக்கம் கேட்டார். பின்னர், அங்கு பயின்று வரும் மாணவர்களிடம் இந்த சிலையினை வடிவமைக்க எவ்வளவு காலமாகும் என்றும் கேட்டறிந்தார்.

சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தேர் வாகனத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். பின் அங்கிருந்த சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்த ஒரு பொருளை 100 ரூபாய் விலை கொடுத்து வாங்கினார் அப்துல்கலாம்.

பின்னர், வேத ஆகம பாடசலலை சென்றார். அங்கு பயின்றுவரும், மாணவர்களை சந்தித்து வேத–சுலோகங்களை கூறச்சொல்லி அதை கேட்டார். பிறகு, தேவாரம், திருப்புகழ் பாடிய மாணவனை அழைத்து திருவாசகம் தெரியுமா? எனகேட்டார். அந்த மாணவன் கொஞ்சம் தெரியும் என்று சொல்ல, முழுவதுமாக அதனை படிக்குமாறு கூறினார்.

போட்டோ எடுத்த கலாம்

பின்னர், இசைக்கல்லூரி சென்று மாணவர்கள் தவில், நாதஸ்வரம் வாசிப்பதைக் கேட்டார். பின் அவர்களுடன் நின்று போட்டோ எடுத்துக்கொண்டார். அதன் பின் குருநாதர் கோவிலூர் ஆண்டவர் நினைவிடம் சென்று மரியாதை செய்தார்.

பிறகு மடாலயத்தால் நடத்தப்பட்டு வரும் மாண்டிச்சோரி பள்ளிக்குச் சென்று குழந்தைகளைப் பார்த்தார். அங்கு செயல்முறை விளக்க கருவிகளாக வைக்கப்பட்டிருந்த எண்களில் 6–ஆம் எண்ணை எடுக்குமாறு ஒரு குழந்தையைக் கூற, அந்த குழந்தை 6–ஐ சரியாக எடுத்தது. பின் வட்டம் எடு, முக்கோணத்தை எடு என்று கூறி குழந்தைகளோடு பேசி மகிழ்ந்தார். மடாலயத்தில் உள்ள தஞ்சை ஓவியங்களையும் ஜனாதிபதி அப்துல்கலாம் பார்த்து ரசித்தார். தொடர்ந்து, மடாலயம் சார்பில் சில நூல்களையும் சிறிய தேர் வாகனம் ஒன்றையும் அவருக்கு பரிசாக அளித்தனர்.

தினத்தந்தி – மதுரை–25–09–2006



குடியரசுத் தலைவர் கேட்டு மகிழ்ந்த இசை



குடியரசுத் தலைவர் கண்டுமகிழ்ந்த சிற்பங்கள்



பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்பு




மாண்டிசோரிக் குழந்தைகளுடன் மேதகு கலாம்



புதுப்பிக்கப்பட்ட திருக்கோவில்



திருக்குட நீராட்டு விழா



பூஜ்யஸ்ரீ ஸ்வாமி தயானந்த சரஸ்வதிகளுடன் மகா சந்நிதானம்



பத்மஸ்ரீ முத்தையா ஸ்தபதியைக் கௌரவித்தல்

கோவிலூர் ஆண்டவர் உடற்பயிற்சிக் கல்லூரியில் நடந்த அனைத்து உடற்பயிற்சிக் கல்லூரிகளின் தடகளப் போட்டி விழா



சுவாமிகள் தொடங்கிவைக்கிறார்கள் – உடன் அழகப்பா பல்கலைக்கழகத் துணை வேந்தர், முனைவர் ஞ. துரைசாமி அவர்கள்



வீரர்கள் அணிவகுப்பு



முனைவர் மூர்த்தி வரவேற்புரை, சுவாமிகள், தமிழ்நாடு உடற்பயிற்சிப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆர். திருமலைசாமி– அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ஆர். தண்டபாணி, அண்ணாமலைப் பல்கலைக்கழக– உடற்பயிற்சித்துறைத் தலைவர் முனைவர் கே. வைத்யநாதன்



கோவிலூர் ஆண்டவர் உடற்பயிற்சிக் கல்லூரி மாணவர்கள்

1008 கலசாபிஷேக நிகழ்ச்சிகள்



திருக்கல்யாணம்



திருக்கல்யாண உற்சவம்

1008 கலசாபிஷேக நிகழ்ச்சிகள்



கலை நிகழ்ச்சி



ஞானிகள் பிரகாரம் வருதல்




அன்னதானம் – மஹேஸ்வர பூஜை



1008 கலசாபிஷேகம் – கலை நிகழ்ச்சி – ஹரிகதா – துக்காராம் கணபதி





அன்னை மீரா அவர்கள் நூலகத்தை துவங்கி வைத்தல்





குரு மகா சந்நிதானம் – 80 வது பிறந்த நாள் விழா






குரு மகா சந்நிதானம் – 80 வது பிறந்த நாள் விழா







திருக்களர் ஆண்டவர் கோவில் கும்பாபிஷேகம்





மருதவனம் ஸ்ரீ மருதவனேஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேகம்





நம் கல்லூரிகளின் மாணவர்கள்






நம் கல்லூரிகளின் மாணவர்கள்



வித்வத் சதஸ் – 2000



வித்வத் சதஸ் – 2004

CREATION OF MUTT AND TEMPLE IN NEW YORK U.S.A.

A 23 acre plot has been acquired in New Jersey, U.S.A. in a place called Hope Well to locate Koviloor Mutt and to build Vedanta Centre and Cultural Centre for the benefit of all those who are interested in our culture. It is proposed to build a mutt with facilities for 50 sanyasis and a temple like that of Chidambaram in 2.5 acres of site. The temple will be a replica of Chidambaram with Nataraja shrine and Vishnu shrine. We propose to maintain personnel needed like Agama Pandits, Nagaswaram Players, Oduvars who sing Devaram and Thiruvachagam for the daily ritual in the temple besides teaching Vedas, Vedanta, Dance and Music needed for temple worship. The mutt is headed by Swami Saswathananda.


SREE LA SREE NACHIAPPA GNANADESIKA SWAMIGAL

Swamiji is the present head and the twelfth pontiff of the Koviloor Mutt. He is a direct descendant of Koviloor Aandavar, the founder-head of the Mutt. Swamiji made a mark in the field of photography and printing technology and has been part of the 'Kalakshetra', founded by Mrs. Rukmini Arundale for nearly six decades. Swamiji earned a lot of wealth and now as the head of the Mutt makes use of his wealth in the service of the Lord for the benefit of the people. Among the very many initiatives of swamiji is the Koviloor Aadheenam Vedanta Center in New Jersey established in 2000, to keep the Indian cultural heritage alive in the West.

SREE SWAMI SASVATANANDA

With a commitment to his own spiritual growth swamiji pursued the study of the spiritual literature in Sandeepany Sadhanalaya, Mumbai, and then served as a spiritual teacher in Chinmaya Mission, Chennai, and under the same organization in the U.S.A. for further independent study and meditation swamiji went to Rishikesh and lived there from 1999 to 2005. As a full-fledged spiritual teacher swamiji has taught in Chennai in the last couple of years. Swami Sasvatananda is a mature person of compassion who knows what he teaches. Academically Swamiji has a Masters in physics and also a Bachelors degree in teaching. Swami Sasvatananda present with us in KAV Center.

ADDRESS:
Koviloor Aadeenam Vedanta Centre Inc.
145 Route 31
Pennington NJ 08534
Phone: 609 - 466 - 2000 (ext) 142
e-mail: koviloorusa@yahoo.com



Mutt and Temple in Hopewell, New York. U.S.A.



Mutt and Temple in Hopewell, New York. U.S.A.

















Mutt and Temple in Hopewell, New York. U.S.A.



This is a hand book of Koviloor Madalayam embracing all activities and branch Mutts with historical information about the mutt.